2943

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: 26 NO: ~~2~~ 3

May - 8 - 1986

V2ll, 31 N86
N86.26.3
136488

வெளியீடு 11-3-1987 Issued 11-3-1987

808/87.
2943

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை மே 8, 1986—தொகுதி 26 எண். 3
Thursday the May 8, 1986—Volume 26 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

V211,31 N86
N86.26.3
136488
சென்னை-600 008.

உள்ளடக்கம்

8—5—1986

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்.—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 528—568

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 568—596

அறிவிப்புகள்—

(அ) மதிப்பீட்டுக்குழு—உறுப்பினர்கள் தேர்தல் 596,597—700

(ஆ) நிதி ஒதுக்க (எண்.4) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.) .. .. 170

கவன ஈர்ப்புகள்—

(அ) காமராசர் மாவட்ட வனச்சரகப் பகுதியில் வன இலாகா மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டப்படுவது 598—605

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலையின் விலை சரிவு .. 605—609

அரசினர் சட்ட முன்வடிவு—

அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு 1986 .. .. .. 609

வரவு—செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)—

(அ) கோரிக்கை எண். 7 — மாநிலச் சட்ட மன்றம்.
(ஆ) கோரிக்கை எண். 8 — தேர்தல்கள்
(இ) கோரிக்கை எண். 9 — மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ..
(ஈ) கோரிக்கை எண். 42— ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்
(உ) கோரிக்கை எண். 43—பல்வகை
(ஊ) கோரிக்கை எண். 58 — பல்வகை மூலதனச் செலவு .. ..
(எ) கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் .. .. ..

610—699

பக்கங்கள்

| | |
|---|---|
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் .. | 610—615<br>688—696 |
| திரு. எஸ். சிவராமன் .. | 615—622 |
| திரு. கே. குப்புசாமி .. | 623—633 |
| திரு. கி. மனோகரன் .. | 633—648<br>687—688 |
| திரு. ப. ந. இராமச்சந்திரன் .. | 648—653 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. | 653—657 |
| டாக்டர் கே. சமரசம் .. | 658—664 |
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. | 664—668 |
| திரு சைதை. சா. துரைசாமி .. | 668—674 |
| திரு. பொ. உத்திராபதி .. | 674—679 |
| திரு. எஸ். என். இராமசாமி .. | 679—681 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. | 681—687 |
| (ஏ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள்—அச்சுத்துறை .. | 699 |

6. அரசினர் சட்ட முன்வடிவு—
நீதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1986 .. 700

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 701—70[illegible]

2943

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மே 8, வியாழக்கிழமை.

சித்திரை 25, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது

உணர விரித்துரையா தார்"

தாம் கற்ற நூற்பொருளைப் பிறர் உணருமாறு விரித்துரைக்க முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்தபோதிலும் மணம் கமழாத மலரைப் போன்றவர்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சேர்வலார் மின் திட்டம்.

700. (*வினா எண் 4378) திரு. க. வெ. வீராசாமி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சேர்வலார் மின் திட்டத்தின் மூலம் எவ்வளவு மின்சாரம் உற்பத்தியாகும்?

(ஆ) எப்போது முதல் செயல்படும்?

(இ) இத்திட்டத்தின் மூலம் மதுரை மாவட்டத்தின் தேவை நிறைவுச் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** (அ) இத்திட்டத்தின் நிறுவனத் திறன் 20 மெ.வா. இது ஆண்டொன்றுக்கு 7.5 கோடி யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யும்.

(ஆ) 26-2-86 அன்று இயக்கப்பட்டு முழு அளவு இயந்திர ஓட்டம் நடத்தப்பட்டது. நீரோட்டம் கிடைக்கும்பொழுது மின் உற்பத்தி துவங்கும்.

(இ) இம்மின்திட்டத்தின் மின் உற்பத்தி தமிழ்நாடு மின் அமைப்புடன் இணைக்கப்படும். குறிப்பிட்ட ஒரு மாவட்டத்திற்கு மட்டும் தனியாக வழங்கப்படுவதில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது நீரோட்டம் கிடைக்கும் நேரத்தில் இது இயங்கும் என்று சொன்னார்கள். எந்த எந்த மாதங்களில் இது இயங்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது? இந்தத் திட்டம் தவிர வேறு எந்த எந்த திட்டங்கள் மதுரை மாவட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீர் மின் திட்டம் என்பதால் நீர் கிடைக்கும்போது இயங்கும். நீர் எந்த எந்த பருவக் காலத்தில் கிடைக்கிறதோ அதைப் பொறுத்து இந்தத் திட்டம் இயங்கும். குறிப்பாக தென் மேற்கு பருவ மழை மூலம் நீர் வேகமாக நமக்குக் கிடைக்கும். வேறு எந்த எந்த திட்டங்கள் என்ற விவரம் தற்போது இல்லை.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேர்வலார் மின் திட்டத்தைப் போல் 7-வது ஐந்தாண்டு திட்டத்திற்குள் தொடங்கும் புனல் மின் திட்டங்கள் எவை? எவை? அவைகள் மூலம் எவ்வளவு மின் உற்பத்தி கிடைக்கும்? ஏதாவது தமிழகத்தில் புதிதாக புனல் மின் திட்டம் ஆரம்பிக்கின்ற சாத்தியக் கூறு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல கேள்வி: தனியாகப் போடவும்.



**திரு ஆர். எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திற்குத் தேவையான மின்சாரத்தை எல்லாம் கொடுத்த பிறகு அடுத்த இடத்திற்கு கொடுக்கப்படுமா என்பதை நான் அறியலாமா?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தித் திட்டங்கள் தமிழகம் முழுவதற்கும் பொதுவானது. இவ்வாறு மின் உற்பத்தி செய்யப் படுவது பொதுவான கிரிட்டில் இணைக்கப்படுகிறது. பிறகு ஆங்காங்கு வினியோகம் செய்யப்படுகிறது. மாவட்டத்திற்கு என்று தனியாக வரையறை செய்வது இயலாது.

**திரு ச. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அனல் மின் திட்டமும், மேட்டூர் கீழ் மின் திட்டமும் எப்போது மின் உற்பத்தியை துவக்கும் என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சேர்வலார் மின் திட்டம் பற்றிய கேள்வி.

## இராசாக்கமங்கலதில் அனல் மின் நிலையம்.

701 (*வினா எண் 9067) **திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் குளச்சல் அருகே இராசாக்கமங்கலம் என்ற இடத்தில் அனல் மின் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய அரசு நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ) இதுகுறித்து மின் வாரியம் விரிவான ஆய்வுப் பணிகளை செய்து வருகிறது.

[1986 மே 8

**திரு எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கன்னியாகுமரி மாவட்ட மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் அருகில் இராசாக்கமங்கலம் அனல் மின் நிலையத்தினுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு? அது எத்தனை மெகா வாட் மின் உற்பத்தியைக் கொண்டதாக அமையும்? இந்தத் திட்டத்திற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா? அல்லது அதற்கான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றிக்கு என்னுடைய நன்றி. குளச்சல் துறைமுகத்திற்கு அருகில் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இராசாக்கமங்கலம் என்ற பகுதியில் 500 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு அனல் மின் நிலையம் உருவாக்குவதற்கு உண்டான திட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. மேற்கொண்ட விவரங்கள் ஆய்வுப் பணிகள் முடிந்த பின்தான் கிடைக்கும்.

**திரு ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மற்ற ஏதேனும் மின் நிலையம் 7-வது ஐந்தாண்டு திட்டத்தில் துவக்குவதற்கு அரசின் பரிசீலனையில் திட்டம் உள்ளதா? ஏற்கனவே பாளியாறு மின் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அமைப்பதற்கு மத்திய அரசினுடைய அனுமதிக்காக அனுப்பப்பட்டது. அந்த அனுமதி வழங்கப்பட்டதா? அதனுடைய நிலை என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இதுவே மிகப் பெரிய திட்டம். 500 மெகாவாட் முதலிலும், அதற்குப் பிறகு இரண்டு 500 மெகாவாட், அதாவது 1000 மெகா. வாட், 1000 மற்றும் 500 சேர்ந்து 1500 மெகாவாட் போடுவதற்கான சாத்தியக்கூறு இருக்கிறது. ஒரு மெகாவாட்டிற்கு ஒரு கோடி ரூபாய் செலவாகும். 500 மெகாவாட் என்கிறபோது 500 கோடி ரூபாய். அதற்குப் பிறகு 1000 மெகாவாட் என்றால் 1000 கோடி ரூபாய். ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள தேவைகளை நிறைவு



1986 மே 8]

செய்வதற்கு அது பெருமளவுக்கு உதவும். 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதற்கான அனுமதியைப் பெற்று, 8-வது ஐந்தாண்டு திட்டத்திலேயாவது அதை இயக்குவதற்கான வகையில் அரசாங்கம் முயற்சியை மேற்கொண்டு வருகிறது. பாளியாறு பற்றிய திட்ட விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

**திரு எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜாக்கமங்கலம் அனல் மின் நிலையத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாநில அரசே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுமா? அல்லது மத்திய அரசு இத்திட்டத்திற்கு உதவிட பரிந்துரைகள் ஏதேனும் அனுப்பப் படுமா? என்பதை அறிய விரும்புவதோடு, இவ்வாண்டு, இந்த நடப்பு நிதியாண்டிலே இத்திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த திட்டம் மாநில அரசால் மேற்கொள்ளப்படுகின்றது. மத்திய அரசு திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்கிறபோது, இத்திட்டத்தையும் நாம் சேர்த்துக்கொள்ளச் சொன்னால், மொத்த ஒதுக்கீட்டில் அதனுடைய முதலீட்டில் ஒரு பங்கு இதிலே அடங்கும். ஆனால் திட்டத்திற்கு இப்போது இன்வெஸ்டிகேஷன் தான் செய்து வருகிறோம். அதைப் பற்றி பரிசீலனை எல்லாம் செய்து வருகிறோம். இவ்வாண்டே அதற்கான நிதி ஒதுக்குவது, மற்றவைகள் செய்வது என்பது இயலாது. இன்வெஸ்டிகேஷன் முடிந்த பிறகு அதற்கு வேண்டிய நிலக்கரிக்கு மத்திய அரசு அனுமதி எல்லாம் கொடுக்கதற்குப் பிறகு இத்திட்டம் முழு வடிவம் பெறும்.

**திரு மா. சுந்தரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக 5 ஆண்டு, 7 ஆண்டு காலமாக, 'ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ்'—மற்ற இன்டஸ்ட்ரிகளுக்கு கரண்ட் கனெக்ஷன் கொடுக்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா? ஆகையால் அதை மனதிலே கொண்டு, இத்திட்டத்தை இந்த நிதியாண்டில், விரைவாக வேலையைத் தொடங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, எவ்வளவுக்கெவ்வளவு விரைவுபடுத்தமுடியுமோ அவ்வளவுக்கெவ்வளவு விரைவுப்படுத்தப்படும்.

### குடந்தை மகாமகம் திருவிழா.

702 (*வினா எண். 1472) திரு கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமகம் திருவிழாவை "தேசிய திருவிழாவாக' அறிவிப்பது குறித்து திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### சிறியூர்—தெங்குமரஹாடா இணைப்பு சாலை.

703 (*வினா எண். 3603) திரு கே. உச்சி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி, சிறியூர் என்ற இடத்திலிருந்து தெங்குமரஹாடாவை இணைக்கும் புதிய சாலை அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டு தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூரிலிருந்து, உதகை, மேட்டுபாளையம் வழியாக பவானி சாகர் செல்லும் வழி கிட்டத்தட்ட 125 கிலோ மீட்டருக்கு மேல் ஆகிறது. இந்த சிறியூர் வரை செல்லக்கூடிய வழியில் ஏற்கனவே





15, 20 கிலோ மீட்டர் செப்பனிடப்பட்டு, புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அங்கு பெருநதுகள் விடப் பட்டுள்ளன. இன்னும் மீதியுள்ள 15 கிலோ மீட்டர் தான் பவானி சாகரை இணைக்கிற பாதையாகவுள்ளது. அதையும் இணைத்தால் மக்கள், 125 கிலோ மீட்டர் செல்லக்கூடிய பாதை, 60 கிலோ மீட்டராக குறைக்கப்படும். ஆகவே, மக்கள் நன்மையைக் கருதி, அதனை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சிறியூர்—தெங்குமரஹாடா சாலைப் பகுதி என்பது, மிகுந்த முக்கியமான வனப்பகுதியாக அமைந்திருக் கிறது. அந்தப் பகுதியிலே தான் வனவிலங்குகள், குறிப்பாக யானைகள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட பகுதியில் சாலைகள் அமைத்து, போக்குவரத்தை ஏற்படுத்தத் தொடங்கினால் மக்களுடைய நடமாட்டமும், அதைத் தொடர்ந்து பல்வேறு வாழ்க்கை முறைகளும் அங்கே ஏற்பட்டு விடும். அது வன விலங்குகளுக்கும் பாதுகாப்பாக இராது, அதையொட்டிய அந்தக் காட்டுப் பகுதியும் பாதுகாப்பாக அமையாது என்று வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், வன விலங்குகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கின்ற இன்றைய அந்தத் தத்துவத்தையும், அந்தக் கருத்தையும் அடிப்படையாகக் கொண்டு இந்தப் பகுதியிலே சாலைகள் அமைப்பது உசிதம் அல்ல என்று முடிவெடுத்திருக்கிறது.

### காற்றுச் சக்தியிலிருந்து மின் உற்பத்தி.

704 (*வினா எண். 7742) திரு. டி. ஆர். வேங்கடராமன்: மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், முல்லைக்காட்டில், நிறுவப் பட்டுள்ள காற்றியக்கி மின் உற்பத்தி நிறுவனம் எப்பொழுது செயல்படத் துவங்கும்?

(ஆ) அதற்கு மத்திய அரசு அளித்துள்ள மானியத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு க. இராசாராம்:** (அ) நெல்லை மாவட்டத்திலுள்ள, முல்லைக்காட்டில் நிறுவப்பட்டுள்ள காற்றுச் சக்தியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் பத்து காற்றாலைகள் 18—1—1986 ஆம் நாளிலிருந்து செயல்பட துவங்கியுள்ளன.

(ஆ) சுமார் ஒரு கோடி திட்டச் செலவில் அமைக்கப்பட்டிருக்கும் இத்திட்டத்திற்கு ரூ. 75 இலட்சம் மத்திய அரசு (DNES ) மானியமாக வழங்கியுள்ளது.

(முற்பகல் 9-10)

**திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றின் விசையிலிருந்து மின் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ள இடங்களில் தமிழகத்தில் எந்தெந்தப் பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன? இதில் கோவை மாவட்டம், பாலக்காடு கணவாயின் வாயிலிலுள்ள பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; இது ஒரு உத்தேசமான திட்டமாக இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. மத்தியப் பேரரசு அதற்கான உதவிகளை அளித்து வருகிறது. காற்று எப்போதும் கிடைத்துக் கொண்டு வருகின்ற தூத்துக்குடி பகுதியில்தான் இதை முதலிலே நிறுவியிருக்கிறோம். அந்த தூத்துக்குடியில் 40 ஏக்கர் திறந்த வெளியில் ரூ. 1 கோடி மூலதனத்தில் இது நிறுவப்பட்டிருக்கிறது. இது 18—1—1986-லிருந்து 10—3—1986 வரையில் இயங்கி நல்லபடி பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் மின்சாரத் தேவை பெருகியும், மின் உற்பத்தி அருகி வருகின்ற இந்த நேரத்திலே, இது ஒரு நல்ல வரப்பிரசாதமாக, வரவேற்கக் கூடிய ஒரு திட்டம். இதற்கு ரூ. 1 கோடி செலவாகும் என்றும், இந்தியப் பேரரசு இதற்காக ரூ. 75 இலட்சம் கொடுக்கிறது என்றும் சொன்னார்கள். எனவே இதுபோன்ற திட்டத்தை தமிழகத்தில் பல்வேறு இடங்களில் ஏற்படுத்துவோமானால், இந்தியப் பேரரசு இதற்கு மானியம் கொடுக்கத் தயாராக இருக்கிறதா? தமிழகத்தில் பல்வேறு



இடங்களில் அதிகமாக காற்று இருக்கின்ற காரணத்தினால், இதனால் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தினுடைய அளவு ஒரு கணிசமான அளவில் இருக்கின்ற காரணத்தினால், இதை உத்தேசித்து, பரிசீலித்து, வேறு இடங்களில் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 மாநிலங்களில் மத்தியப் பேரரசு இப்படிப் பரீட்சார்த்தமான முறையில் இது எப்படி செயல்படுகிறது என்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை இது நல்லபடியாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. நான் ஏற்கனவே சொன்னது போன்று இந்த முயற்சியில் அதிகமாக அக்கறை காட்டுவதற்கு தமிழக அரசு யோசித்து வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

18—1—1986-லிருந்து 10—3—1986 வரையில் இந்த மூன்று மாநிலங்களில் 1,35,000 யூனிட்டுகள் மின்சாரத்தை உற்பத்தி செய்து, தமிழக கிரிட் மின் துறைக்கு வழங்கியிருக்கிறது. ஒரு வருடத்திற்கு கிட்டத்தட்ட 10 இலட்சம் மின்சார யூனிட்டுகளை இந்த பண்ணை வழங்குகிறது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் மேலே இருக்கின்ற பகுதியான தஞ்சாவூர், திருச்சி போன்ற இடங்களில், ஆற்றுப் படுகைப் பகுதிகளிலே, ஜெர்மன் நாடுகளில் உள்ளதைப் போன்று இந்த விண்ட் மில்கள் மூலமாக 3 குதிரை விசையிலிருந்து 10 குதிரை விசை அளவில் மோட்டார் பம்புகளை இயக்கமுடியும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் நேரிலே கண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

அதேபோன்று 50 அடி வரை ஆழத்திலிருந்து தண்ணீரை வெளியே எடுத்து, ஊற்றுவதற்கு அந்த விண்ட் மில்களை உபயோகப்படுத்தலாம். இப்படிப்பட்ட விண்ட் மில் மூலமாக விவசாயிகள் பயன்படக்கூடிய அளவில், பரீட்சார்த்தமாக முதலில் 10 விண்ட் மில்களை அல்லது மோட்டார் பம்புகளை இயக்குவதற்கு வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்குமா? அதற்கு மத்திய அரசை இவ்வரசு அணுகுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சியில் தமிழக அரசு தற்போது ஈடுபட்டுக் கொண்டு வருகிறது. ஜெர்மனியில் 450 கிலோ வாட் வரையில் உற்பத்தி செய்கிறார்கள். 3 மெகாவாட் வரையில் உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களை அங்கே தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே செய்யப்படுகின்ற விண்ட் மில், விசிறி, மிக மெல்லியதாகவும், எந்தக் காற்று அழுத்தத்தையும் தாங்கக் கூடியதாகவும், குறைந்த காற்று அழுத்தத்தையும் சுமார் 5 கிலோ மீட்டர் காற்று அடித்தாலும் சுழலக் கூடியதாகவும் இருக்கிறது. அப்படிப்பட்ட வகையிலே, இங்கேயிருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். அதிலே இந்த அரசு அக்கறை கொண்டு, அந்த ஜெர்மன் நாட்டோடு தொடர்பு கொண்டு வருகிறது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகிறது என்று கேட்க இருந்தேன். அமைச்சரவர்கள் பதில் சொல்லி விட்டார்கள். எந்த முறையில் அந்தக் காற்றைச் சேமித்து மின்சாரம் ஏற்படுத்துகிறீர்கள்? மின்சாரத்தை காற்றின் மூலமாக எடுப்பதாகச் சொல்கிறீர்களே, எந்த முறையில் எடுக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, காற்று சுற்றுவதால் கீழே இருக்கின்ற டைனமோ சுற்றி மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மற்றபடி இயற்கையான முறையிலே தான். ஆனால் செலவு அதிகமாக இல்லை. குறைந்த செலவிலே தான் ஆகிறது. காற்றுதான். முதலிலே நாம் நிறுவுவதில்தான் கொஞ்சம் அதிகம் செலவு ஆகிறதே தவிர, அதற்குப் பிறகு நிர்வாகச் செலவு மிகக் குறைவாக இருக்கிறது.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே சித்திரையில் சீர் கூட்டி, ஆடியில் அம்பி தூக்கி, புரட்டாசியில் புரண்டு போகின்ற தென்மேற்குப் பருவக்காற்று வீசுகின்ற ஆண்டிப்பட்டி, தேனி ஆகிய பகுதிகளில் இத்தகைய காற்று இயந்திரங்களை நிறுவுகின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, ஏற்கனவே சொன்னதைப்போல முதன் முதலாக இது ஒரு பரீட்சார்த்தமாகப் பார்க்கப்படுகின்ற திட்டம். இது வெற்றிகரமாக வந்து கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய யோசனையை அரசு ஏற்கலாம்.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** பேரவைத் தலைவரவர்களே, காற்று வீசும் இடமான கயத்தாற்றிலே காற்று இயக்கி மூலமாக நல்ல முறையிலே வெற்றிகரமாக தண்ணீர் பம்பு இயங்கி வருகிறது. எனவே, அங்கே இதையும் ஆரம்பிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல் இது பரீட்சார்த்தமாக, தூத்துக்குடியிலே இப்போது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இது நல்லபடியாக வெற்றி பெற்றுக் கொண்டு இருக்கிறது. மத்தியப் பேரரசு நல்ல உதவிகளைச் செய்கிறது. ஆகவே, அதை வைத்து தமிழகம் முழுவதும் எங்கெங்கே காற்று அதிகமாகக் கிடைக்கிறதோ அந்தக் காற்றை வைத்து மின் உற்பத்தியைச் செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

## சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்தி.

705 (*வினா எண். 7960)—**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயார் செய்து காற்றாலைகள் மற்றும் நீரிறைக்கும் பம்புகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு க. இராசாராம்:** தஞ்சை மாவட்டத்தில். சூரிய ஒளிசக்தியை மின்சக்தியாக மாற்றி அதன் மூலம் நீர் இறைக்கும் சாதனங்கள் (பம்புகள்) 10 விவசாயிகளின் நிலங்களில் செயல் விளக்க முறையில் நிறுவப்பட்டுள்ளன.

[1986 மே 8

அவற்றின் செயல்திறனைக் கண்டறிந்த பின்புதான் மேற்கொண்டு இவ்வாறான சூரிய ஒளி மின் நீர் இறைக்கும் சாதனங்களை நிறுவுவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

மேலும், தஞ்சை மாவட்டத்திலேயும், தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களிலேயும் தேசிய காற்றாலை செயல் விளக்கத் திட்டத்தின் கீழ் காற்று சக்தியை பயன்படுத்தி நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. இவ்வகைக் காற்றாலைகள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திட்டத்தை தஞ்சை மாவட்டத்திலே பயன்படுத்துகின்ற இந்த அமைச்சரவைக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, தஞ்சை மாவட்டத்திலே எந்த எந்தப் பகுதியிலே இப்படிப்பட்ட சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற இந்தத் திட்டம் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயார் செய்து நீர் இறைக்கும் சாதனங்கள் கீழ்க்கண்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன:—

திரு. ராமசாமி உடையார் அவர்கள், தஞ்சாவூர்,
திரு. தமிழ்ச் செல்வன், மன்னார்குடி,
திரு. எ. பழனிவேல், குருவிக்காம்பை,
திரு. ஆர். கோவிந்தராசு, கபிஸ்தலம்,
கற்பனை மங்கலத்தில் ஒருவர்,
என். அபிராமி, கீழையூர்,
திரு. கே. சிவவடிவேல் உடையார், பெருஞ்சேரி,
திரு. ஆர். சாம்ராஜ், வேளாங்கண்ணி,
திரு. ஆர். குலசேகரன், வேளாங்கண்ணி,
திரு. எல். நடராஜ், கும்பகோணம்



1986 மே 8]

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தினுடைய முக்கியமான விவசாயப் பகுதியாக அமைந்திருப்பது நன்னிலம். நன்னிலமாக காட்சியளித்த அந்த நன்னிலம் இன்றையதினம் வறண்ட பகுதியாகக் காட்சியளிப்பதை முன்னிட்டு, இப்படிப் பட்ட சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற இந்தத் திட்டத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற மின் பம்புகள் நன்னிலம் தாலுக்காவிலே இந்த ஆண்டு ஏதாவது விவசாயிகளுக்குப் பரீட்சார்த்தமாக அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நன்னிலம் தாலுக்காவிலே தற்போது அப்படிப்பட்ட ஏற்பாடு இல்லை. ஆனால் தமிழகம் பூராவிற்கும் ஒருங்கிணைந்த கிராமப்புற செயல் திட்டத்தின் கீழ் 130 காற்றாலைகளை 5 பேரூராட்சி ஒன்றியங்களிலே நிறுவத் திட்டம் இடப்பட்டிருக்கிறது. அவற்றிற்கான வேலை மட்டும் தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

**திரு. துரை. கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சூரிய ஒளியிலிருந்து தண்ணீர் இறைக்கின்ற மின்சாரக் கருவி தஞ்சை மாவட்டத்தினுடைய பல்வேறு பகுதிகளிலேயும் தரப்பட்டு இருப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அடிப்படைத் தரப்பட்டிருக்கிற அந்தக் கருவியினுடைய விலை என்ன என்பதையும் அது மானிய விலையிலே வழங்கப்பட்டு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது சுமார் 44,000 ரூபாய் அடக்க விலை ஆகும். இதற்கு பழங்குடியிலே உள்ள விவசாயிகளுக்கு 4,000 ரூபாய் விலையிலேயும், சாதாரண விவசாயிகளுக்கு 5,000 ரூபாய் விலையிலேயும் மானியமாகவே இது வழங்கப்படுகிறது.

(முற்பகல் 9-20)

அதோடு, நம்முடைய முன்னாள் அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் மகன் கூட ஒரு இயந்திரத்தை உருவாக்கியிருக்கிறார். கழிவுப் பொருள்களில் இருந்து மின்சாரத்தை எடுப்பதற்கு ஒரு இயந்திரத்தைச் சென்னையிலே நிறுவி இருக்கிறார்கள். அதுவும் வெற்றிகரமாக நடக்கிறது என்பதை நாங்கள் பார்த்து விட்டு வந்திருக்கிறோம். அதைக் கூட நாம் பயன்படுத்தலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து, அதிலிருந்து பம்ப் செட் இயக்குவது என்பதில் சாதாரணமாக முக்கால் அங்குலம் குழாயில் கூட தண்ணீர் வரவில்லை. அதனாலே, விவசாயத்திற்கு அது பெயிலூர் ஆகி இருக்கிறது. பணக்காரர்கள் வீட்டிலே, தோட்டத்திற்கு வேண்டுமென்றால், நான்கு தென்னை மரங்களுக்குத் தண்ணீர் விடுகின்ற அளவுக்குக் கிடைக்கிறது. அது மட்டுமல்ல, அந்தத் திட்டம் பெயிலுயூர் ஆகி, பல பேர்கள், மனு கொடுத்தவர்கள் எல்லாம், வேண்டாம் என்று தஞ்சை மாவட்டத்திலே பின்வாங்கியதன் காரணமாக, இந்தத் திட்டத்தை அறவே மாற்றி, காற்றின் மூலமாக நீர் இறைக்கிற அமைப்பிற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, காற்றின் மூலமாக நீர் இறைக்கிற காற்றாடிகள் நிறுவுவதிலும் நாங்கள் கவனம் செலுத்தி இருக்கிறோம் என்று சென்ற கேள்வியிலேயே நான் சொன்னேன். ஒரு காற்றாடியினுடைய விலை ரூ. 12,500 ஆகிறது. மத்திய அரசு காற்றாடிகளின் விலை முழுவதையும் மானியமாக வழங்குகிறது. நிறுவுவதற்கு அடித்தளம், தொட்டி கட்டுதல் போன்ற செலவுகளை மட்டும் விவசாயிகள் ஏற்க வேண்டும். இதைத் தவிர ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் 130 காற்றாடிகள் நிறுவ மானியம் அளித்துள்ளது





### சேத்தியாதோப்பில் சர்க்கரை ஆலை.

706—(* வினா எண் 8049)—**திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1985-86 ஆம் நிதியாண்டில் தென்னாற்காடு மாவட்டம் சேத்தியாதோப்பில் சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன ?

(இ) எப்போது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, (அ) தென்னாற்காடு மாவட்டம், சேத்தியாதோப்பு பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்கும் பொருட்டு தனியார் துறையிடமிருந்து பெறப்பட்ட இரண்டு விண்ணப்பங்களும் மற்றும் கூட்டுறவுத் துறையில் பெறப்பட்ட ஒரு விண்ணப்பமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) 1,250 டன் பிழிதிறன் கொண்ட ஒரு புதிய சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு சுமார் ரூ. 1,300 இலட்சம் (ரூ. 13 கோடி) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ) நேற்று, நான் புரட்சித் தலைவருடைய ஆணையின்படி டெல்லிக்குப் போயிருந்தேன். அங்கே, பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களை நான் சந்தித்தேன். சந்தித்து, தமிழகத்திலே எவ்வளவுதூரம் சர்க்கரை உற்பத்தியாகியிருக்கிறது என்பதையும் மேற்கொண்டு ஆலைகள் இருந்தால், மேற்கொண்டு அன்னியச் செலாவணியை நாம் மிச்சப்படுத்த முடியும் என்பதையும், தமிழகத்திலே 1 இலட்சத்து 1 ஆயிரம் டன் அதிகமாக உற்பத்தி செய்ததன் மூலமாக, ரூ. 30 கோடி அன்னியச் செலாவணியை நாம் மிச்சப்படுத்தி இருக்கிறோம் என்கிற செய்தியை அவரிடத்திலே விரிவாக, தெளிவாக்குகிற வாய்ப்பினை பெற்றிருந்தேன். தெளிவாக்கிய பிறகு அவர்கள் உடனடியாக தக்க நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தக்க நடவடிக்கைகள் எடுத்திருப்பதற்கான அறிகுறிகளை நேற்றே, நான் டெல்லியிலேயிருந்து வந்த பிறகு, அங்கேயிருந்து எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, வெகு

[1986 மே 8

விரைவில் சர்க்கரைக் கொள்கை பற்றி மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களாலே, இந்தப் பாராளுமன்றக் கூட்டத் தொடரில்,— லோக் சபா இன்று முடிவடையவிருக்கிறது. இன்னும் நான்கு, ஐந்து நாட்கள் ராஜ்ய சபா நடக்கவிருக்கிறது. அதற்குள்ளாக, அறிவிப்பாக வரும் என்ற நல்ல செய்தியினை நான் பெற்றிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களிடத்திலே சொல்லி, தமிழக அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, இந்தியா பூராவுக்கும் நல்ல சர்க்கரைக் கொள்கை வெகு விரைவிலே கிடைக்கவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சேத்தியாதோப்பு பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க கூட்டுறவுத் துறையிலிருந்து ஒரு மனு வந்ததாகச் சொன்னார்கள். இந்தியப் பிரதமர் அவர்கள், சில நாட்களிலே அறிவிப்பார்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு அறிவிப்பு வந்தவுடன், சேத்தியாதோப்பு சர்க்கரை ஆலையைத் துவங்குவதற்கு அதற்குண்டான பங்குத் தொகையை வசூல் செய்ய தனி அதிகாரி போடப்படுவாரா? அதோடு, அந்த ஆலை 1986-87 ஆம் ஆண்டுக்குள் துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சேத்தியாதோப்பில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்ற விண்ணப்பம் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. நான் ஏற்கெனவே சொன்னது போல், பாரதப் பிரதமர் அவர்கள் எடுக்கிற வேகமான நடவடிக்கையின் காரணமாக, வெகு விரைவிலே சர்க்கரை கொள்கை நாட்டுக்கு அறிவிக்கப்பட்டு, அதன் விளைவாக நமக்குக் கிடைக்கிற உரிமங்களின் மூலமாக, சேத்தியாதோப்பு பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க மாநில அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. பொ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் புதிதாக சர்க்கரை ஆலைகள் எங்கெங்கு அமையப் பெற இருக்கின்றன என்பதை இந்த அரசு அறிவிக்குமா?



1986 மே 8]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு அமைய இருக்கிறது என்பதை அரசாங்கம்தான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் 'பி' யூனிட் போன்றவை எல்லாம் சேலத்தில் மோகனூரில் போட இருக்கிறது. திருக்கோயிலூரில் சங்கராபுரத்தில் உள்ள கூட்டுறவு ஆலையில் 'பி' யூனிட் போட இருக்கிறது. பெரம்பலூரில் 'பி' யூனிட் இருக்கிறது. இராமநாதபுரத்தில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் ஒரு 'பி" யூனிட் போட இருக்கிறது.

## மத்திய பாட புத்தக வங்கி.

707—(*வினா எண் 5014) திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலவசப் பாடப் புத்தங்கள் வழங்கும் திட்டத்தை மையமாக வைத்து 'மத்திய பாடபுத்தக வங்கி' (Central Text Book Bank) ஏற்படுத்த அரசிடம் ஏதேனும் செயல்திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தற்போது முதலமைச்சர் சத்துணவு திட்டத்தின்கீழ் 1 முதல் 8 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்குவதாலும், பெரும்பாலான பள்ளிகளில் தனித்தனியாக புத்தக வங்கிகள் செயல்பட்டு வருவதாலும் இலவச பாட திட்டத்தை மையமாக வைத்து மத்திய பாடப் புத்தக வங்கி (Central Text Book Bank) என்று தனியாக ஏற்படுத்த அவசியமில்லை என அரசு கருதுகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பள்ளிக்கூடங்களிலேயே இப்படிப்பட்ட பாடப் புத்தக வங்கிகள் செயல்பட்டு வந்தாலும் அது அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிற மாணவர்களின் தேவையை ஓரளவுக்குத்தான் பூர்த்தி செய்யமுடியும் என்று நான் கருதுகிறேன். நான் கேட்க விரும்புவதெல்லாம் இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஆண்டுதோறும் இப்படிப்பட்ட இலவசப் பாடப்புத்தகங்களை ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு கொடுத்து

வருகிறார்கள். இப்படி ஆண்டுதோறும் வழங்கப்படும் புத்தகங்கள் சிறிதளவுக்காவது சர்ப்ளஸாக இருக்கக்கூடிய நிலைமை நிச்சயமாக இருக்கும். எனவே அந்தப் புத்தகங்களைப் பயன்படுத்தி அதோடு சேவை நிறுவனங்களிலிருந்து கிடைக்கிற அந்தப் புத்தகங்களையும் பயன்படுத்தி மாவட்டங்கள்தோறும் மைய நூலகம் இருப்பதுபோல் இதிலே கூட இப்படிப்பட்ட ஒரு சென்ட்ரல் புக் பாங்கை அமைத்து அபபடி பள்ளிக்கூடங்களில் புத்தகங்கள் கிடைக்கிற வாய்ப்பு இல்லாதவர்களுக்கு அல்லது கிடைக்காதிருப்பவர்களுக்கு வேண்டுமென்றால் பதிவுபெற்ற அதிகாரியிடமிருந்து அல்லது அந்தப் பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து சான்றிதழ் பெற்று வருகிற மாணவ மாணவியருக்கு மாவட்டந்தோறும் அப்படிக் கொடுத்து உதவுகிற திட்டத்தை, தேவைப்பட்டால், சிறந்தது என்று கருதினால் அதுபற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்டதொரு திட்டம் அரசினுடைய ஆய்விலே இல்லை. இப்போது தரப்படுகிற இந்த இலவசப் பாடப் புத்தகங்களை நாம் மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டு வருகிறோம். ஆகவே இப்படிப்பட்ட புக் பாங்கினை பள்ளிக்கூடங்களில் நாம் வைத்து செயல்படுத்துகிற யோசனை எதுவும் இல்லை.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக்கூடங்களிலே செயல்படுத்தப்பட்டு வருகிற இந்தப் பாடப் புத்தக வங்கித் திட்டம் ஒரு அருமையான திட்டம். அந்தத் திட்டம் கல்வி அமைச்சர் அவர்களின் முயற்சியால் கொண்டுவரப்பட்டிருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் மட்டுமே செயல்படுத்தி வருவதாக அல்லது அமல்படுத்தப்பட்டு வருவதாக அறிகிறேன். தனியார் நடத்துகிற பள்ளிக்கூடங்களில் இப்படிப்பட்ட பாடப் புத்தக வங்கிகளை நடத்துவதற்கு அவர்களை அறிவுறுத்துவார்களா? அதற்கு ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கவில்லை. அவரவர்கள் இஷ்டப்படுகிற பள்ளிக்கூடங்களில் அதை அவர்கள் நடத்துவதற்கு நாம் எதுவும் தடை விதிக்கவில்லை.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரையில் இலவசமாகப் புத்தகங்கள் கொடுப்பது நல்லதொரு திட்டமாகும். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்தப் புத்தகங்கள் வழங்குகிறபோது சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் தமிழ் புத்தகம் கிடைத்தால் ஆங்கிலம் கிடைக்கவில்லை, ஆங்கிலப் புத்தகம் கிடைத்தால் தமிழ் கிடைக்கவில்லை என்று இப்படி தொடர்ச்சியாக இந்தப் புத்தகங்கள் கொடுப்பதில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக மாணவ மாணவியர் படிப்பதில் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. எனவே இதைக் கருத்தில்கொண்டு இந்த ஆண்டு கல்விக்கூடங்கள் திறந்தவுடன் ஜூனில் திறந்தால் குறைந்தபட்சம் ஜூலை மாதம் 15-ம் தேதிக்குள்ளாக தனித் தனியாக இல்லாமல் மொத்தமாக எல்லாப் பாடப் புத்தகங்களும் கிடைக்கக்கூடிய அளவிற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இந்த ஆண்டு அப்படி வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுதான் முதன்முதலாக இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தோம். அதன் காரணமாக பல குறை பாடுகள் இருந்தன. இந்த ஆண்டு அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லாமல் குறித்த காலத்திலே இந்த மாணவர்களுக்கு இந்தப் புத்தகங்கள் கிடைக்க அரசாங்கம் ஆவன செய்யும்.

## மேல்நிலைப் பள்ளிகளில் புவியமைப்பியல்.

708—(*வினா எண். 5057) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிகளில் புவியமைப்பியல் (ஜியாலஜி) பாட திட்டத்தை கொண்டுவரும் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## தமிழ்நாட்டின் வரலாறு.

709—(*வினா எண். 6267) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்க காலத்திற்கு முதற்கொண்டு இன்று வரையிலான தமிழ்நாட்டின் வரலாற்றை தொகுக்க ஏதேனும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டின் வரலாற்றை ஆறு தொகுதிகளாக வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் முதல் இரண்டு தொகுதிகள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன. அவை:

(1) தொல்பழங்காலம்.

(2) சங்க காலம் வாழ்வியல் மற்றும் அரசியல்.

எஞ்சிய தொகுதிகளை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றை ஆராய்ந்த நேரத்தில் தமிழ் உணர்வு குறைவாக இருந்த காரணத்தினால், தமிழக வரலாற்றை மறைக்க வேண்டுமென்று ஒரு சில கூட்டங்கள் முயற்சி செய்த நேரத்தில், சில ஆதாரங்கள் மறைக்கப்பட்டதாக சில வல்லுநர்



கள் பேசிவருவதாக அறிகிறேன். அப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிடப்படுகின்ற புத்தகங்களில் ஏதேனும் குறைபாடுகள் இருக்குமானால், அரசின் கவனத்திற்கு அல்லது துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால், அவை ஆராயப்பட்டு, குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், இரண்டாவது உலகத் தமிழ் மகாநாட்டை தமிழ் நாட்டின் தலைநகரில் நடத்தியபோது, இதுபோல் முறையாக ஆராய்ந்து தமிழ்நாடு வரலாற்றைத் தொகுக்க வல்லுநர் குழு அமைக்கப்பட்டதாக எனக்கு நினைவு. அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில், இரண்டு தொகுப்புகள் வெளியிட்டிருப்பதாகவும், ஒன்று தொல்பழங்காலம் என்றும், அதையடுத்து இன்னொன்றையும் வெளியிட்டிருப்பதாகவும், இன்னும் 4 தொகுப்புகள் வெளியிட இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இது தமிழ் நாட்டுக்கு மிக முக்கியமான ஒரு காரியம். எனவே அமைச்சர் அவர்கள் இந்த நல்லுநர் குழுவை வற்புறுத்தி, விரைவில் உலகம் முழுவதும் தமிழ்நாட்டு வரலாற்றைத் தெரிந்துகொள்ளும் வகையில் இந்த தொகுப்புகள் முழுவதையும் வெளியிடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமா? எந்த கால வரையறைக்குள் இந்தத் தொகுப்புகள் வெளியிடப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இரண்டு தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒன்று தொல்பழங்காலம், மற்றொன்று சங்க காலம் வாழ்வியல் மற்றும் அரசியல். இந்த இரண்டு தொகுதிகளும் 1983 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. மூன்றாம் தொகுதி பல்லவர், பாண்டியர் காலத்தின் கட்டுரைகள் எழுதப்பட்டு,

அச்சிடுவதற்கு அனுப்பும் நிலையில் உள்ளன. அடுத்து, சோழர் காலத்தைப் பற்றிய தொகுதி நான்காம் தொகுதியாக வெளியிட வரலாற்று அறிஞர்களால் கட்டுரைகள் எழுதப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. இப்படி ஒவ்வொரு தொகுதியும் எழுதி முடிந்தவுடன் அச்சிடப்பட்டு வெளியிடப்படும்.

### மயிலாடுதுறை அரசு மருத்துவமனை.

710—(*வினா எண். 3637) திரு. மு. தங்கமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவுக்கு தனிக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.

திரு. மு. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட செயற் குறிப்பு இல்லையென்று சொன்னார்கள். மயிலாடுதுறை மருத்துவமனையானது ஒரு டிவிஷன் மருத்துவ மனை. அங்கே நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான வெளி நோயாளிகள் வந்து செல்கிறார்கள். அப்படி வருகின்ற வெளி நோயாளிகளுக்கு உடல் பரிசோதனை செய்து நல்ல முறையில் சிகிச்சை அளிப்பதற்கு வெளி நோயாளிகள் பிரிவிற்கான கட்டடத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, இந்த ஆண்டிலாவது அப்படிப்பட்ட ஒரு நிலையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் புற நோயாளிகள் சராசரியாக ஒரு நாளைக்கு 1,850 பேர்கள் வருகிறார்கள் உள் நோயாளிகளைப் பொறுத்த வரையில் 215 ஆக இருக்கிறது. ஆக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்தின் அடிப்படையில், இதை மீண்டும் பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



### மணலி இந்தியன் ஆர்க்கானிக் கெமிக்கல்ஸ் ஆலையிலிருந்து வெளிவரும் வாயு.

711—(*வினா எண் 4211) திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலியில் உள்ள இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் என்ற இரசாயன இழை தயாரிக்கும் ஆலையில் இருந்து வெளிப்படும் வாயுவினால் உடல் நலம் பாதிக்கப்படுவது குறித்து அரசுக்கு புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில்; அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மணலியில் உள்ள இந்தியன் ஆர்க்கானிக் கெமிக்கல்ஸ் என்ற இரசாயன இழை தயாரிக்கும் ஆலையில் இருந்து வெளிப்படும் வாயுவினால் உடல் நலம் பாதிக்கப்படுவதாக புகார் எதுவும் இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகார்களை மணலியில் உள்ளவர்கள் அளித்திருக்கிறார்கள். அரசுக்கு வரவில்லை என்று அமைச்சர் பெருமான் குறிப்பிடுகிறார்கள். இருந்தாலும் இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸிலிருந்து அசெட்டிலின் என்ற நச்சு தன்மை பொருந்திய வாயு, தண்ணீரில் கலக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள தண்ணீர் பாழாக்கப்படுகின்றது. விவசாய நிலங்கள் பாழாக்கப்படுகின்றன. ஏற்கனவே பேரவையில் இதைப் பற்றி நான் குறிப்பிட்டேன். அங்கே கெமிக்கல்ஸ் கம்பெனிகள் நிறைய இருக்கின்றன. கோத்தாரி, எம். ஆர். எப். பெர்ட்டிலைசர் போன்ற தொழிற்சாலைகள் வெளியிடுகின்ற தண்ணீர் அந்தப் பகுதி நிலங்களை பாழாக்குகின்றன. எனவே பொல்யூஷன் கன்ட்ரோல் துறையின் பிரிவு ஒன்றை அந்தப் பகுதியிலே அமைத்து அந்த பகுதியினுடைய நல்வாழ்விற்கு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல வாய்ப்பினை அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இல்லையென்றால் அது

[1986 மே 8

போபாலாக மாறிவிடும் என்ற எச்சரிக்கையை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே ஒரு நல்ல நிலையை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இண்டஸ்ட்ரீஸ் பொறுத்த வரையில் இது 1972 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு தொழிற்சாலையாகும். இதிலே 1,000 டன் ஒரு மாதத்திற்கு பாலிஸ்டர் பைபர்ஸ், 300 டன் மெத்தனால் தயாரிக்கப்படுகின்றன.

'The sources of emission are the gases emitted from three boilers, emissions from the heat transfer liquid heating section and the dust emission from the chips cutting section.'

ஆகவே இந்த பகுதியிலே மேலே ஆகாயத்திலே ஒரு பைப் மூலமாக அவைகளையெல்லாம் விடுகிறார்கள். ஆகவே நாம் ஒரு நோட்டீஸ் கொடுத்து உடனடியாக கன்சன்ட் அதாவது அனுமதி வாங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதுபோல் அவர்கள் கன்சன்ட் அப்ளிகேஷன் போட்டார்கள். 4—7—1985 அன்று சில நிபந்தனைகளுக்குட்பட்டு பிறகு இந்த அனுமதி கொடுத்திருக்கிறோம். இதில் முக்கியமான ஒரு நிபந்தனை இருக்கிறது. அது

'subject to the condition that the Industry shall achieve the ambient air quality standards as prescribed by the Board'

நம்முடைய போர்டு என்ன தகுதி இருக்க வேண்டும் என்று சொல்கிறதோ

'ambient air quality standards'

அதற்கு பிறகுதான் நாம் அனுமதி கொடுக்கின்றோம் என்று 4-7-85 அன்று அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருந்தகை அவர்கள் சிறப்பான செயல்களை குறிப்பிட்டிருந்தாலும்கூட புதியதாக அந்தப் பகுதியிலே ஒரு அனெக்ஸ் கட்டியிருக்கிறார்கள். அசெட்டிலின் வெளியிடுகின்ற அதிகமான புகையினால் புகையை அந்தப் பகுதி மக்கள் சுவாசிக்கின்ற சூழ்நிலையினால் அவர்களுக்கு ஆஸ்த்துமா போன்ற வியாதிகள் ஏற்படுவதை தாங்கள் அறிவீர்கள். அது



1986 மே 8]

தடுக்கப்படுமா? தொழிலாளர் வர்க்கங்கள் 58 ஆண்டுகள் உழைக்க வேண்டியவர்கள் 45 ஆண்டுக்குள் ஓய்வு பெறுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. இதை முன் அறிவிப்பாக வைத்து அந்த இயக்குநர்களை கடுமையாக விசாரித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே இன்னொரு குறிப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

'The industry has provided stacks of 27.0 metres. . . '

27 மீட்டர் உயரம் இருக்கக்கூடிய அந்த ஃபுனல் மூலமாக அவர்கள் அந்த காஸை வெளியே விடுகிறார்கள்.

'The industry has provided stacks of 27.0 metres height above ground level for the release of blue gas emissions from each of the three boilers. Three stacks each of 27.0 metres height have also been provided in the heat transfer liquid heating unit to discharge the emissions. Bag filters have been installed in the chips cutting section to control the dust emission.'

இவைகளையெல்லாம் சொல்லியிருக்கிறோம். இன்னும் இவை போதாது என்று நாங்கள் நிபந்தனை விதித்திருக்கிறோம். நாம் இந்தஇந்த கண்டிஷன்ஸ் நீங்கள் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

'If you don't satisfy the following conditions we will be taking action'. . . .

என்று சொல்லியிருக்கிறோம். இந்த நிபந்தனையை நீங்கள் செய்யவில்லை என்றால் நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம் என்று சொல்லியிருக்கிறோம். இன்னும் 3, 4 மாதம் அவகாசம் கொடுத்து, இந்த நிபந்தனைக்கு உட்பட்டு அவர்கள் செயல்படவில்லையென்றால் நாம் அந்த ஃபேக்டரியை மூடவேண்டிய ஒரு நிர்பந்தத்திற்கு தள்ளப்படுகிறோம்.

## பெருந்துறை கூட்டுறவு நெசவாளர் சங்கம்.

712—(*வினா எண் 4744) திரு. கு. ரமணி: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பெருந்துறையில் உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கம் (இ. ஹெச். நெ. 40) கடந்த இரண்டாண்டு களாக செயல்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பெரியார் மாவட்டம் பெருந்துறையில் உள்ள காமாட்சி அம்மன் நெசவாளர் கூட்டுறவு சங்கம் அதனுடைய தலைவர் சங்க மேலாளர் இருவரும் 3 இலட்சத்திற்கு மேல் கையாடல் செய்ததால் கடந்த ஓராண்டு காலமாக செயல்படாமல் இருந்தது.

(ஆ) சங்கத்தினை நல்ல முறையில் இயங்க வைக்க தேவை யான நடவடிக்கைகள் எடுக்கும் நோக்குடன் 1961 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவு சட்டம் 53 பிரிவு 119 "(எ)"-ன் கீழ் துறை அலுவலர் ஒருவர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிதாக ஒரு சில உறுப்பினர்களை சேர்த்து தக்க முறையில் கைத்தறி தீவிர வளர்ச்சி திட்டத்திலிருந்து மூலப்பொருட்கள் பெற்று வரவு—செலவு செய்ய துறை செயலாளருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 9-40)

திரு. டி. என். முருகானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சாரம் கூட்டுறவு நூற்பாலை நலிவுற்று சிக் யூனிட்டாக மாறும் நிலைமையில் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் அரும் முயற்சியால் தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அந்தக் கூட்டுறவு நூற்பாலை தொடர்ந்து நடத்தப்பட்டு இலாபம் ஈட்டப்பட வேண்டும் என்றால் நிதியுதவி அதற்குத் தேவையாகும்.





எனவே அந்தச் சாரம் கூட்டுறவு நூற்பாலைக்கு வேஸ் அண்ட் மீன்ஸ் அட்வான்ஸ் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு முன்வரும் என்பதை நான் தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரி யார் மாவட்டத்திலுள்ள பெருந்துறையில் இருக்கின்ற கூட்டுறவு நெசவாளர் சங்கத்தில் சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தெளிவாகக் கூற வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை காமாட்சியம்மன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 23—3—1978-ல் பதிவு செய்யப்பட்டது. அந்தச் சங்கத்திலுள்ள தலைவர் மற்றும் மேலாளர் 3,16,787 ரூபாய், 79 பைசா கையாடல் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு 18—1—1984-ல் வழக்கு தொடரப்பட்டது. 24—2—1984-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் இருக்கிறது. சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்புத் தொகையை ஈடு செய்ய தமிழ்நாடு கூட்டுறவு சட்டம் 71-வது விதியின் கீழ் தண்ட வசூல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமை பெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்விதான் 15 நாட்களுக்கு முன்பு இதே அவையில் வைக்கப்பட்டது. இதிலேயிருந்து தெரிகிறது அந்தச் சங்கம் செயல்படாமல் போய் அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் எல்லாம் எவ்வளவு தூரம் அல்லல் படுகிறார்கள் என்று. அவர்களுடைய குறையைத் தீர்க்க புதிதாக சங்கம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பி யிருக்கிறார்கள். எனவே இதுபோன்ற கோரிக்கையை அரசு உடனடியாகப் பரிசீலனை செய்து புதிய சங்கம் அமைக்க முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சங்கம் அமைப்பது அவசியம் என்று துணை இயக்குநர் பரிந்துரை செய்து அனுப்பினால் அரசு ஆய்வு செய்து முடிவு எடுக்கும்.

**சாத்தூர் வட்டத்தில் தொழிலியல் நெசவுக் கூடங்கள்.**

713—(*வினா எண். 7364) **திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசித் தொகுதி, தா. ராமலிங்காபுரம், வி. துரைச்சாமிபுரம் என்ற விஜயரெங்கபுரம் கிராமங்களில் கட்டப்படும் தொழிலியல் நெசவுக் கூடங்களின் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) எப்பொழுது வேலை முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காமராஜர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இராமலிங்காபுரத்திலும் மற்றும் வி. துரைச்சாமிபுரத்திலும் கட்டப்பட்டு வரும் தொழிலியல் நெசவுக் கூடங்கள் முறையே ரூபாய் 6 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டிலும் 12 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு வருகிறது.

(ஆ) (1) தா. இராமலிங்கபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தொழில் கூட கட்டுமானப் பணி கூரை மட்டம் வரை முடிக்கப்பட்டு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பெறப்பட வேண்டிய ரூ. 2.80 இலட்சம் பெறப்படாமையால் நிலுவையில் உள்ளது. இந்நிதியுதவி பெறப்பட்ட பின் இரண்டு அல்லது மூன்று திங்களில் முடிக்கப்பட்டு விடும்.

(2) வி. துரைசாமிபுரத்திலுள்ள சௌடாம்பிகை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தொழில்கூட கட்டுமானப் பணி கூரை மட்டம் வரை முடிக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்திற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திலிருந்து ரூ. 2.80 இலட்சம் வழங்கப்படுமானால் இச்சங்க கட்டுமானப் பணி 30—6—1986-க்குள் முடிவு பெற்று விடும்.





**திரு வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு சங்கங்கள மூலமாகக் கட்டப்படுகிற கூடங்களின் வேலைகள் தாமதமாக நடைபெறுகின்றன. அவை உடனடியாக நடைபெறுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கூடியவிரைவில் கட்டி முடிக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

**கோ-ஆப்டெக்ஸ் நிறுவன இரவு காவலர்கள்.**

714—(*வினா எண். 9058) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களில் பணிபுரியும் இரவு காவலர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** இல்லை.

**திரு. சைதை. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றியமைக்கின்ற செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மத்திய குடோனில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் இரவு காவலர்களுடைய சம்பள விகிதம் 350 ரூபாயிலிருந்து குறைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு குறைக்கப்பட்ட அந்தச் சம்பள விகிதத்தை மாற்றி அதிகரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? ஐந்தாண்டு, ஏழாண்டுக் காலங்கள் அங்கே தற்காலிகமாகப் பணி புரிகிற தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த தகவலின் மீது அறிக்கை பெறப்பட்டு, இலாக்கா ஆய்வு செய்து அவசியமானால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. சைதை சா. துரைசாமி: தலைவர் அவர்களே, கைத்தறி வார கண்காட்சியில் விற்பனைக்கென்று தற்காலிகப் பணியாளர்களை நியமிக்கிறார்கள். அந்தப் பணிக்கு ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட வேண்டும்.

## தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரி.

715—(*வினா எண். 7312) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரியிலிருந்து வரிவிலக்கு அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. ஆர். ரெங்கசாமி: தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிலுக்கு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் காலத்தில் சேல்ஸ் டாக்சிலிருந்து விலக்கு கொடுத்தார்கள். அது முக்கியமான குடிசைத் தொழிலாகும் என்பதுதான் காரணம். ஆகவே அரசாங்கம் பரிசீலனை செய்து தீப்பெட்டித் தொழிலுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது பெருந்தலைவர் காமராசர் காலத்தில் என்று சொன்னார்கள். அதுவல்ல, பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது 1-4-1966 முதல் 4-9-1979 வரையில் தீப்பெட்டித் தொழிலுக்கு 13 ஆண்டுகள் வரிவிலக்கு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 4-3-1982 முதல் இரண்டு விழுக்காடு ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. முன்பு பலமுனை வரி விதிக்கப்பட்டது.



அப்போது 10 ஆயிரத்திற்குள்ளே டர்ன் ஓவர் இருப்பவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இப்போது 50 ஆயிரம் வரையில் டர்ன் ஓவர் இருப்பவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. எனவே அப்படி வரி விலக்கு அளிக்கிற உத்தேசம் அரசுக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஆர். ரெங்கசாமி: தலைவர் அவர்களே, அப்படி வரிவிலக்கு அளிக்க இயலாமல் போனால் எக்சைஸ் டியூட்டியை உயர்த்தி விட்டு இந்த வரியை எடுத்துவிடலாம். அது கன்வீனியன்டாக இருக்கும். அப்படி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தலைவர் அவர்களே, எக்சைஸ் டியூட்டி போடுகிற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 4 விழுக்காடு வரி விதிக்கலாம். அப்படி சட்டமிருந்தாலும் கூட சலுகை முறையில் இரண்டு விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தீப்பெட்டித் தொழிலை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மறைமலை நகரில் பிளாஸ்டிக் தொழிற்பேட்டை.

716—(*வினா எண் 6424)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அருகே உள்ள மறைமலை நகரில் பிளாஸ்டிக் தொழிற்பேட்டை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு முதலீட்டில் இது தொடங்கப்படும்?

(இ) இதன் மூலம் வேலை வாய்ப்பு பெறுவோரின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடம் இல்லை.

[1986 மே 8

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த கேள்விக்கு உண்டு என்று பதில் சொல்வார்கள் என்று நினைத்து தான் வந்தேன். ஆனால் இல்லையென்று பதில் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் பாவாயில்லை. வேறு யாராவது சென்னை அருகே இருக்கிற மறைமலை நகரில் பிளாஸ்டிக் தொழிற்சாலை அமைக்க வந்தால் அவர்களை ஊக்குவிப்பார்களா? அப்படி அவர்களை ஊக்குவிப்பதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, இல்லாத கேள்வியைக் கேட்கிறபோது இல்லையென்றுநான் பதில் சொல்கிற அவசியம் ஏற்படுகிறது. மறைமலை நகரைப் பொறுத்த வரையில் இப்போது ஏராளமான தொழில் கூடங்கள் கட்டி முடித்திருக்கிறோம். ஏறக்குறைய 60 தொழில் கூடங்கள் அங்கே இருக்கின்றன. மேலும் 20 தொழில் கூடங்களை இந்த ஆண்டு கட்ட உத்தேசித்திருக்கிறோம். ஆனால் பிளாஸ்டிக் தொழிலை துவங்க வேண்டுமென்று யாரும் தொழில் கூடம் கோரி விண்ணப்பிக்கவில்லை. அப்படி விண்ணப்பித்தால் அவசியம் நடவடிக்கையெடுத்து அவர்களுக்கு உதவி செய்யப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஹரியானா போன்ற மாநிலங்களில் இப்படி சிறுதொழில்களைச் செய்யும் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் விற்பனையாகாவிட்டால் அந்த அரசே அந்தப் பொருள்களை எடுத்து விற்பனை செய்கிறது. அந்த அடிப்படையில் இப்படி பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் செய்யக்கூடிய பொருள்களாக இருந்தாலும், மற்ற சிறு தொழில்கள் மூலம் செய்கிற பொருள்களாக இருந்தாலும், அவை விற்பனையாகாவிட்டால் அந்தப் பொருள்களை நமது அரசே எடுத்து விற்பனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1986 மே 8]

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனைக்கான எல்லா ஏற்பாடுகளையும் சிட்கோ நிறுவனம் செய்து வருகிறது. உற்பத்தி செய்யப்படுகின்ற இந்த பொருட்களை விற்பதற்கான தகுந்த ஏற்பாடுகளை மாநிலத்திற்கு உள்ளேயும் மாநிலத்திற்கு வெளியிலேயும் தொடர்ந்து செய்து வருகிறது. ஆகவே விற்பனை இல்லை என்று சொல்வதற்கு இடம் அளிக்காமல் சிட்கோவிலே பதிவு செய்து கொண்டால், நிச்சயம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பழனியில் பழ தொழிற்பேட்டை.

717—(*வினா எண். 7908)—திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியில் பழம் பதப்படுத்தும் தொழில் உட்பட அதன் தொடர்பான தொழில்களுக்கு தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

## தேசிய கூட்டுறவுச் சங்கம் மூலம் வெங்காய ஏற்றுமதி.

625—(*வினா எண். 8968)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84, 1984-85 ஆண்டுகளில் NAFED நிறுவனம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தமிழகத்தில் கொள்முதல் செய்த வெங்காயத்தின் அளவு எவ்வளவு?

(ஆ) அதை அதிகரிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

[1986 மே 8

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.** (அ) நாஃபெட் நிறுவனம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தமிழகத்தில் டான்ஃபெட் மூலம், 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 64.38 லட்சம் மதிப்புள்ள 3,348 டன் வெங்காயத்தையும் 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 233.48 லட்சம் மதிப்புள்ள 21,086 டன் வெங்காயத்தையும் கொள்முதல் செய்திருக்கிறது.

(ஆ) ஏற்றுமதி அதிகரிக்க பல்வேறு அயல்நாடுகளிடம் தீவிர தொடர்பு கொண்டு வருவதாகவும் ஏற்றுமதிக்கு அதிக ஆர்டர்கள் கிடைக்கும் பட்சத்தில் ஏற்றுமதிக்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் நாஃபெட் தெரிவித்துள்ளது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருட்கள் ஏற்றுமதியில் இந்த விவசாய மேம்பாட்டுக் கழகம் என்ற மத்திய அரசினுடைய நிறுவனம் ஒரு சுய ஆதிக்கத்தை செலுத்தி வருகிறது. மோனாப்பலியாக இருந்து வருகிறது. கடந்த 10 நாட்களுக்கு முன்பு கூட ரஷ்யாவோடு 25 ஆயிரம் டன் வெங்காயத்திற்கான ஒப்பந்தத்தை மத்திய அரசு போட்டிருக்கிறார்கள். இப்படி பல்வேறு வெளிநாடுகளோடு ஒப்பந்தங்களைப் போடுகிறபோது, அவர்கள் தமிழகத்திலே இருந்தும், அதிலும் குறிப்பாக தென் மாவட்டங்களில் உள்ள விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற வெங்காயத்தை—இந்த சிறிய வெங்காயத்திற்கு நல்ல மருத்துவ குணம் எல்லாம் இருக்கிறது என்று சொல்கிறார்கள்—விரும்பி வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் வெங்காயம் என்று மட்டும் பொதுவாக அக்கிரிமென்ட் போடுகிற காரணத்தால், இந்த நாஃபெட் நிறுவனம் வட மாநிலங்களில் இருந்து ஏராளமான பெல்லாரி வெங்காயத்தை ஏற்றுமதி செய்கிறார்கள். இந்த மாநிலத்திலே இருந்து ஏற்றுமதிக்கான பொருட்களை வாங்குவதில்லை. எனவே இதைச் சுட்டிக்காட்டி, இங்கே உற்பத்தியாகின்ற சிறிய வெங்காயத்தை வாங்க வேண்டும் என்று அந்த நிறுவனத்தை நம்முடைய அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.



1986 மே 8]

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் துணைத் தலைவருடைய நல்ல கருத்தை ஏற்றுக் கொண்டு, வருங்காலத்திலே நம்முடைய சிறிய வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நம்முடைய நிறுவனம் செய்யும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்):** பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல இந்த தேசிய விவசாய வளர்ச்சிக் கழகம் பல விவசாய விளை பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏராளமான அளவில் ஏற்றுமதி செய்கிறது. வெளி நாட்டிலே இருப்பவர்களும் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக ஏராளமான அளவில், மிளகாய், மிளகு, எள் போன்றவைகள் எல்லாம் வெளி நாடுகளுக்கு அதிகமான அளவிலே இந்த நாஃபெட் நிறுவனம் ஏற்றுமதி செய்து கொண்டு இருக்கிறது. ஆனால் எனக்குத் தெரிந்த தகவல் வரை, இதுநாள் வரையில் இந்த மாநிலத்தில் இருந்து ஒரு கிலோ மிளகாயைக் கூட அது வாங்கவில்லை என்கிறபோது, இந்த மாநிலத்தில் உள்ள விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிற சந்தர்ப்பம் கிடைக்காத நிலைமை ஏற்படுகிறது. எனவே இதை மாற்றி அந்த நாஃபெட் நிறுவனம் இங்கே இருக்கிற டான்பெட் நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய டான்ஃபெட் நிறுவனம், நாஃபெட் நிறுவனத்தின் மூலமாக பாக்கு, மிளகாய், எள், மஞ்சள், மக்காச்சோளம், புளி போன்ற பொருட்களை விற்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்துக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துக்களை எல்லாம் நல்ல முறையில் ஏற்றுக் கொண்டு, இந்த ஏற்றுமதியில் நம்முடைய விவசாயிகளுடைய விளை பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடிய நடவடிக்கைகளை நிச்சயமாக இந்த அரசு மேற்கொள்ளும்.

[1986 மே 8

**திரு. டி. என். முருகானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாஃபெட் நிறுவனம் மொனாப்பலியாக செயல்படுவதாகச் சொன்னார்கள். அவ்வாறு அந்த நிறுவனம் எங்குமே செயல்பட்டதாகத் தெரியவில்லை. நம்முடைய இந்தியாவைப் பொறுத்தவரையில், இரண்டு வகையான வெங்காயத்திற்குத்தான் வெளிநாட்டிலே கிராக்கி இருக்கிறது. ஒன்று திண்டுக்கல் பொடிசு. இரண்டாவது ரோஸ் ஆனியன் என்ற இரண்டு வகைக்குத்தான் அதிக அளவு கிராக்கி இருக்கிறது. இந்த திண்டுக்கல் பொடிசு நம்முடைய தமிழகத்தில் பயிராகின்றது. ஆனால் அந்தப் பயிரினுடைய உற்பத்தி விலை, கொள்முதல் விலையைவிட அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இங்கேயிருந்து வாங்க மறுக்கிறார்கள். இரண்டாவது இந்த ரோஸ் ஆனியனுக்கு அதிக அளவில் கிராக்கி தமிழகத்திலே இருந்தும், நாம் பயிர் செய்யப்படாத நிலைமை இருந்து வருகிறது. எனவே கர்நாடகத்திலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் இந்த நாஃபெட் நிறுவனம் வாங்கி ஏற்றுமதி செய்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த திண்டுக்கல் பொடிசு அதிகமான விலையில் இங்கே உற்பத்தி ஆகிறது. அதற்குக் காரணம் தண்ணீர் பற்றாக்குறையும், மற்ற பல பிரச்சனைகளும் தான். எனவே இங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு அரசாங்கமானது முன் பணம் கொடுக்க முன்வருமா, என அறிய விரும்புகிறேன். அத்தோடு இந்த 'ரோஸ் ஆனியன்' பயிர் செய்வதற்கு இந்த தமிழக அரசானது 'நாஃபெட்' நிறுவனத்தோடு சேர்ந்து இங்கே பயிர் செய்வதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வெங்காயத்தை கொள்முதல் செய்யச் சொல்கிறாரா, இல்லையா? என்பது புரியவில்லை. நாங்கள் கடந்த 1983-84 ஆம் ஆண்டிலே நிறைய கொள்முதல் செய்திருக்கிறோம். இருந்தாலும் வட மாநிலங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள் என்ற உணர்வோடு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்திலே அதிகமாக உற்பத்தியாகின்ற சிறிய வெங்காயத்தையும் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றும்கூட



1986 மே 8]

அவர்கள் சொன்னார்கள் ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் எடுக்க முடியும். இன்னொன்று அதிகமாக விலை வருகிறது என்று சொன்னால் விவசாயத் துறையோடு கலந்து செய்ய வேண்டிய அந்த முறையிலே நிச்சயமாக செய்ய முடியுமேயொழிய 'நாஃபெட்' நிறுவனத்தோடு சேர்ந்து உற்பத்தியிலே நாம் ஒன்றும் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற வெங்காயம் ஏற்றுமதியாக 'நாஃபெட்' நிறுவனத்தின் மூலமாக தமிழகத்தில் வாங்கப்படுவது 'டான்பெட்' நிறுவனத்திலேயிருந்தா அல்லது தனியாரிடத்திலேயிருந்து வாங்கப்படுகிறதா? தனியாரிடத்திலிருந்து வாங்கப்படுவதால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதனாலே 'டான்பெட்' நிறுவனத்தின் மூலமாக வாங்குவதற்கு அரசு வழிமுறைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'டான்பெட்' நிறுவனத்தின் மூலமாகவும், தனியார் நிறுவனத்தின் மூலமாகவும், இன்றைக்கு இரண்டு வழியாக 'நாஃபெட்' நிறுவனம் வாங்கிக் கொண்டிருக்கிறது. நாம் இன்றைக்கு மத்திய அரசிடம் இங்கே நடக்கின்ற கொள்முதல் எல்லாம் நம்முடைய 'டான்பெட்' நிறுவனத்தின் மூலமாகத்தான் செய்யப்பட வேண்டுமென்று இன்றைக்கும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அது வெற்றி பெறுகிற நேரத்தில் நிச்சயமாக 'டான்பெட்' நிறுவனத்தின் மூலமாக கொள்முதல் செய்யப்படும்.

[1986 மே 8

நிலக்கோட்டையில் தக்காளி பதனிடும் தொழிற்சாலை.

718—(*வினா எண்: 9119) திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதியில் வத்தலக்குண்டு பகுதியிலும் நிலக்கோட்டையிலும் அதிகமான தக்காளி உற்பத்தியாவதால் இங்கு தக்காளி பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** இல்லை.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே இல்லையென்று கூறிவிட்டார்கள். அந்தப் பகுதிகளில்—வத்தலக்குண்டு, நிலக்கோட்டை பகுதிகளில் மிகவும் கஷ்டப்பட்டு தக்காளி உற்பத்தி செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகையினால் அந்த விவசாயிகளின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் தக்காளி பதனிடும் தொழிற்சாலையை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விவசாயம் மீது பாசம் இருக்கிறதோ, இல்லையோ தக்காளி மீது அதிகமாகப் பாசம் இருக்கிறது. ஆகவே நாம் அங்கே தக்காளி பதனிடும் தொழிற்சாலையை உண்டாக்குகின்ற அளவுக்கு அந்த இடத்திலே தக்காளி பயிர் ஆகிறதா என்பதை சரிபார்த்து மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும்.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்ற அத்தனை பேர்களுமே விவசாயக் குடும்பத்தில் இருந்து வந்திருக்கிறவர்கள்தான். ஆகையினால் விவசாய மக்களுடைய நலன் கருதி அந்தப் பகுதியில் அமைப்பதற்கு ஆலோசிக்கப்படும் என்று கூறினார்கள். அந்தப் பகுதியில் பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று உறுதியாகச் சொல்லி,



1986 மே 8]

இந்த ஆண்டே அந்தப் பகுதியில் தக்காளி பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பித்து அந்தப் பகுதி மக்களுக்கு இந்த நலனை ஏற்பட செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆராய்ந்து பார்க்காமல் முடிவு எடுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியபடி மிக வேகமாக ஆராய்ந்து பார்த்து வேண்டிய நடவடிக்கைகள் இந்த ஆண்டிலேயே எடுப்பதற்கு முயற்சிகள் செய்யப்படும்.

குடவாசல் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி

(*வினா எண். 9254) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலைப் படிப்பில் ஆசிரியர் பயிற்சி பிரிவில் மாணவிகளை சேர்க்க ஒவ்வொரு வரிடமும் இப்பள்ளி தலைமை ஆசிரியையும் மற்றும் தனிநபர் ஒருவரும் ரூபாய் ஆயிரம் வீதம் கூடுதலாக ரூ. 40 ஆயிரம் வரை வசூல் செய்யப்பட்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இத்தகைய புகார் ஏதும் இது நாள்வரை மாணவிகளிடமிருந்தோ அல்லது தனி நபரிடமிருந்தோ பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான், சென்ற ஆண்டு என்னுடைய கோரிக்கையின் பேரிலே அந்த மக்களுக்கு இந்த ஆசிரியர் பயிற்சி தந்தார்கள். நானும் அந்த வளர்ச்சிக் குழு பொறுப்பிலே இருக்கிறேன். ஆனாலும் ஒவ்வொரு மாணவியரும் இப்படி அரசுக்கு தனியாக ஒரு பெட்டிஷனோ

[1986 மே 8

அல்லது ரிப்போர்ட்டோ கொடுத்தால் அந்தத் தலைமை ஆசிரியை ஏதாவது அந்த மாணவியர்கள்மீது நடவடிக்கை எடுத்து விடுவார்கள் என்று பயந்து என்னிடம் நேரில் தெரிவித்திருக்கிறார்கள். எனக்கும் நன்றாகத் தெரியும். எனவே என்னுடைய குற்றச்சாட்டை ஆதாரமாக வைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(முற்பகல் 10-00)

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

1—

வேளாண்மை பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள்

**வினா 720—திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) எந்தெந்த இடங்களில் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகள் செயல்படுகின்றன?

(இ) பயிற்சி பெற்ற மாணவர்களில் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டது?



1986 மே 8]

விடை—

(அ) பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை.

| ஆண்டு. | வேளாண்மை. | தோட்டக்கலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1983–84 | 241 | 74 |
| 1984–85 | 300 | 80 |

(ஆ) வேளாண்மை பயிற்சிப் பள்ளிகள் செயல்படும் இடங்கள்.

1. காஞ்சிபுரம்.
2. நவ்லாக்.
3. குடுமியாமலை.
4. காருப்பம்.
5. ஆடுதுறை.
6. பாப்பாரப்பட்டி.
7. கிள்ளிகுளம்.
8. பரமக்குடி.
9. பவானி.
10. மேலூர்.
11. திருப்பதிகாரம்.
12. மேட்டூர் அணை.
13. தாமணி (சென்னை) (தோட்டக்கலை).
14. உதகமண்டலம் (தோட்டக்கலை).

(இ) தோட்டக்கலை பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற 19 நபர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

வயல் விளக்க அலுவலர் நியமனம் குறித்து உச்ச நீதி மன்றம் விதித்திருந்த இடைக்கால தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு துறையை அணுகி பட்டியல் பெற்று மேற்படி பதவிகளை நிரப்ப ஆவன செய்யுமாறு வேளாண்மை இயக்குநரால் அறிவுறுத்தப்பட்டுள்ளார். வேளாண்மை இணை இயக்குநர்கள் இது குறித்து தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் எனவும், வேளாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

[1986 மே 8

2—

### ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு வசதி திட்டங்கள்

வினா 173—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், பொம்மியம்பட்டி ஆதி திராவிடருக்கு "தாட்கோ" மூலம் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட இருக்கிறது ?

(ஆ) எப்போது இந்தப் பணி தொடங்கப்படும் ?

விடை—

அரசின் ஆய்வில் உள்ளது.

3—

வினா 1652—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், அஞ்சுக்குழிப்பட்டி மற்றும் கன்னியாபுரம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

விடை—

இல்லை.

4—

வினா 2245—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

நத்தம் தொகுதி, ராஜக்காபட்டி பஞ்சாயத்து, தம்பகுளத்துப்பட்டி ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா ?

விடை—

இல்லை



1986 மே 8]

5—

### சுந்தரமகாலிங்கம் கோயிலுக்கு சதுரகிரி மலையில் படிக்கட்டு வேலை.

வினா 2509—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு அருகே சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயிலுக்கு, மலைகள் மீது படிக்கட்டுகள் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திருக்கோயிலுக்குச் செல்லும் சதுரகிரி மலைப் பாதையில், முதற்கண், அத்தி ஊத்துப்பாறையில் சுமார் 130 மீட்டர் உயரத்திற்கு படிக்கட்டுகள் கட்டும் வேலை செய்வதென, திருப்பணிக் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டு, இப்பகுதி பணிக்கு ரூ. 10,000-க்கு (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணியை துவக்க துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6—

### வேட்டையாடுதல் மூலம் சுடப்பட்ட யானைகள்.

வினா 2543—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வனங்களில் 1982-83-84-ல் வேட்டையாடுதல் மூலம் எத்தனை யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டன ?

(ஆ) வர்சநாடு, திருவில்லிப்புத்தூர், இராஜபாளையம், சேத்தூர், மேற்கு தொடர்ச்சி மலை காடுகளிலும் மற்றும் கொடைக்கானல் காடுகளிலும் எத்தனை யானைகள் சுடப்பட்டன ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் வனங்களில் 1982—83 ஆம் ஆண்டில் 12 யானைகளும், 1983—84 ஆம் ஆண்டில் 5 யானைகளும் சுடப்பட்டன. இது சம்பந்தமாக வழக்குகள் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன.

(ஆ) வர்சநாடு, திருவில்லிப்புத்தூர், இராஜபாளையம், சேத்தூர், கொடைக்கானல் வனப்பகுதிகளில் 1982—83, 1983—84 ஆம் ஆண்டுகளில் யானைகள் ஏதும் சுடப்படவில்லை. மதுரை மண்டலம் மேற்கு தொடர்ச்சி மலைக் காடுகளில் மட்டும் 1982—83 இல் ஒரு யானையும், 1983—84-ல் இரண்டு யானைகளும் சுடப்பட்டன.

7—

**மதுரையில் கொசு ஒழிப்புப் பணி.**

வினா 2588—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகராட்சியில் கொசு தொல்லையைப் போக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது?

விடை—

ஓர் விவர அறிக்கை* அவையின் முன் தகவலுக்காக வைக்கப் படுகிறது.

8—

**கூடலழகர் பெருமாள் கோயில் தெப்பக்குளம்.**

வினா 2593—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கூடலழகர் பெருமாள் கோயிலைச் சேர்ந்த டவுன் ஹால் ரோட்டிலுள்ள தெப்பக் குளத்தை சீர்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

* 703—705-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





விடை—

(அ) மற்றும் (ஆ): மதுரை கூடலழகர் பெருமாள் கோயிலைச் சார்ந்த டவுன் ஹால் ரோடு தெப்பக்குளத்திற்கு தண்ணீர் வரும் கால்வாய்ப் பாதைகளில் பலமாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு தண்ணீர் வர மார்க்கம் இல்லாததால் தெப்பக் குளத்தினை சீர்ப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை. ஆனால், மூன்று மாடிக் கட்டிடம் கட்டி கடைகளுக்கு வாடகைக்கு விட்டு ஆலய வருமானத்தைப் பெருக்கும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது.

9—

**சிறுமலைப் பகுதியில் மூலிகைப் பண்ணை அமைத்தல்.**

வினா 2606—திரு. இரா. தாமரைக்கனி: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதியில் சிறுமலை, கறந்தமலைப் பகுதிகளில் மூலிகைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

10—

**மணப்பாறை அருள்மிகு மாரியம்மன் கோயில் திருப்பணி.**

வினா 3011—திரு. க. சோலைராசு: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு யளிப்பாரா:—

தீயினால் பாதிக்கப்பட்ட மணப்பாறை அருள்மிகு மாரியம்மன் ஆலய புனரமைப்பிற்கு உதவித் தொகை எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம் மற்றும் நகரில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் திருப்பணிக்காக 17—7—1982 நாளிட்ட ஆணையர் அலுவலக அனுமதியின்படி ரூ. 98,850 அரசு மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

**11—**

**வனவிலங்குகளை வேட்டையாடுவோர் மீதான வழக்குகள்.**

வினா 3034—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனவிலங்குகளை வேட்டையாடுகிறவர்கள்மீது சென்ற ஆண்டு தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(ஆ) அவைகளில் தண்டனைகள் முடிந்தவை எத்தனை?

**விடை—**

(அ) வனவிலங்குகளை வேட்டையாடுகிறவர்கள்மீது சென்ற ஆண்டு (1984—85) தொடரப்பட்ட வழக்குகள் மொத்தம் 123.

(ஆ) அவற்றில் தண்டனை முடிந்தவை 59 வழக்குகள். மீதமுள்ள 64 வழக்குகள் புலனாய்வு மற்றும் நீதிமன்ற விசாரணை போன்ற காரணங்களால் நிலுவையில் உள்ளன.

**12—**

**மைலாப்பூர் தெற்குக் கால்வாய்கரை சாலையில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.**

வினா 3257—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூர் வட்டத்தில் ஓசியானிக் ஹோட்டல் அருகில் தெற்கு கால்வாய் கரை சாலையில் (South Canal Bank Road) சென்னை மாநகராட்சியால் புதியதாக உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் ஒன்று கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**13—**

**சிறைச்சாலைக்கு அனுப்பப்படும் கைதிகளுக்கு உணவுப்படி.**

வினா 3375—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதிமன்றங்களில் தண்டனை வழங்கப்படும் கைதிகளுக்கு சிறைச்சாலைக்கு கொண்டு போகும் முன் உணவுக்கென்று கைதிக்கு அரசு அனுமதித்துள்ள தொகை எவ்வளவு?

(ஆ) அதை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

(அ) அரசின் ஆணை எண். 1157, உள்துறை, நாள் 23—5—1981-ல் குறிப்பிட்டுள்ளபடி, போலீஸ் காவலில் உள்ள கைதிகளுக்கு உணவுக்காக ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ. 5.50 அனுமதிக்கப்படுகிறது.

நீதி மன்றங்களில் தண்டனை வழங்கப்பட்ட கைதிகளுக்கு சிறைச்சாலைக்கு கொண்டு போகுமுன் உணவுக்காக செலவு செய்ய நீதிபதி ஒரு தண்டனைக் கைதிக்கு ஒரு ரூபாய் வீதம் படியாக வழங்குகிறார்.

(ஆ) இல்லை.

**14—**

**குற்றாலத்தில் திருமணக் கூடம்.**

வினா 3473—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலத்தில் அறநிலையத்துறை சார்பாக திருமணக் கூடம் கட்ட எவ்வளவு ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது?

(ஆ) திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான காலி யிடத்தில் ரூ. 6,50,000 மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்ட 19—12—1985-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அறநிலைய சட்ட விதிகளின்படி செயல் அலுவலரால், கல்யாண மண்டபம் கட்டுமான வேலையைத் துவக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15—

கடசோலை-சோலூர் இணைப்புச் சாலை.

வினா 3608—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உல்லத்தி ஊராட்சியை சேர்ந்த கடசோலையையும் சோலூர் பேரூராட்சியையும் இணைக்கும் புதிய சாலை அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) மற்றும் (ஆ): இச்சாலை அமைக்கும் திட்டம் எவ்வித அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும் இதுவரை இடம் பெறவில்லை.

16—

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆறு-கால்வாய்கள் சீரமைப்பு.

வினா 3622—திரு. மு. தங்கமணி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஆறு, கால்வாய்களை அகலப்படுத்தி தூர் எடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தஞ்சை மாவட்டத்தில் காவிரி ஆற்றின் பிரிவுகள் பல உள்ளன. இவற்றிலிருந்து பிரித்து பயனளிக்கும் கால்வாய்கள் (ஏ வகுப்பு வாய்க்கால்) 1,505 உள்ளன. இவைகளை அகலப்



படுத்தி சீரமைத்தல் போன்ற வேலைகள் காவிரி மேம்பாடு திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் காவிரி வளர்ச்சி பணிகள் வட்டம் மூலம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதை தீவிரமாகச் செயல்படுத்த உலக வங்கியின் உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், வாய்க்கால்களில் தூர் எடுப்பது குடிமராமத்து அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் வேலை யாகும்.

17—

குறிஞ்சிப்பாடி ஒன்றிய டிராக்டர்.

வினா 3839—திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள குறிஞ்சிப்பாடி பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமான டிராக்டர் பழுது ஏற்பட்டு பல காலமாக செயற்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): இவ்வூராட்சி ஒன்றிய டிராக்டர் பயன் படுத்துவதற்குத் தகுதியில்லை என்று கருதப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

18—

மேலூரில் மின் கோட்ட அலுவலகம்.

வினா 4374—திரு. க. வெ. வீராணம்பலம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூரில் மின் கோட்ட அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) அவ்வாறு திட்டம் எதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

19—

குரும்பப்பட்டி ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

வினா 4434—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், கூவனூத்து கிராமம், குரும்பப்பட்டியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனை இருந்தும், கட்டிடம் கட்டப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

(அ) 1985—86 ம் ஆண்டில் தேசீய வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கூவனூத்து குரும்பப்பட்டியில் 35 ஆதி திராவிடர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

20—

உடுமலை, பொள்ளாச்சி நகரங்களில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணிகள்.

வினா 4472—திரு. கு. ரமணி: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி நகரங்களில் எத்தனை திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) அவைகளில் முடிவடைந்த திட்டங்கள் எத்தனை?

(இ) செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?



விடை—

(அ) சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உடுமலைப் பேட்டை நகரத்தில் 7 திட்டங்களும், பொள்ளாச்சி நகரத்தில் 7 திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) அவற்றுள் ஒவ்வொரு நகரத்திலும் மூன்று திட்டங்கள் வீதம் 6 திட்டங்கள் முடிவடைந்து விட்டன.

(இ) 21—10—1985 முடிய ரூ. 127 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

21—

திருமலைராஜன் ஆற்றின் கடைமடைப் பாசனம்.

வினா 4569—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருமலைராஜன் ஆற்றிலிருந்து பாசனம் பெறும் நன்னிலம் வட்டம் அருண்மொழித்தேவன், ஆலத்தூர் ஆகிய பகுதிகளில் தண்ணீர் சரியாக ஏறி பாயாததால் விவசாயிகள் இடர்ப்படுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள அருண் மொழித்தேவன், ஆலத்தூர் ஆகிய பகுதிகள் திருமலைராஜன் ஆற்றின் கடைமடைப் பாசனப் பகுதியாகும்.

திருமலைராஜன் ஆறு வடிகால் ஆறு. எனவே பாசனக்கால் வாய்கள் அடைப்புக்காலம் முடிந்து பாசனத்திற்கு நீர் விடப் பட்டதிலிருந்து சுமார் மூன்றிலிருந்து நான்கு வாரங்களுக்கு பிறகே, வடிநீர் இவ்வாற்றில் வரப்பெறுகிறது.

பாசனத்திற்குத் தேவையான அளவு நீர் கிடைக்கப் பெறாத காலத்தில், வடிகால் ஆற்றில் கிடைக்கும் வடிநீர் அளவும் பாதிக்கப்படும். வடிகால் ஆறுகளைப் பொறுத்தமட்டில் இது தவிர்க்க இயலாது.

22—

புத்தலாற்றில் ரெகுலேட்டர் கட்டும் திட்டம்.

வினா 4572—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் வட்டம் குடும்பநயினார் என்ற இடத்தில் புத்தலாற்றில் ரெகுலேட்டர் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

23—

வேடசந்தூரில் சலவைத் துறை கட்டும் திட்டம்.

வினா 4589—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமனியன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் நகரில் சலவையாளர்களுக்கு சலவைத்துறை கட்டும் திட்டம் பேரூராட்சியால் அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளதா ?

விடை—

வேடசந்தூர் நகரில் சலவையாளர்களுக்கு சலவைத்துறை கட்டும் பிரேரணையேதும் அரசுக்கோ, பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கோ பேரூராட்சியிடமிருந்து வரப்பெறவில்லை.



24—

கோவை நகர சாலைகளில் லாரிகளால் போக்குவரத்துப் பாதிப்பு.

வினா 4647—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை மாநகர எல்லைக்குள் பிரதான சாலைகள் எல்லாவற்றிலும் நடுரோட்டில் 24 மணி நேரமும் லாரிகள் நிறுத்தப்பட்டிருப்பதால் மணிக்கணக்கில் சாலைப் போக்குவரத்து தடைப்பட்டு நிற்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் யாது?

விடை—

(அ) கோவை மாநகராட்சி எல்லைக்குள் பிரதான சாலைகள் எல்லாவற்றிலும் நடுரோட்டில் 24 மணி நேரமும் லாரிகள் நிறுத்தப்படுவதில்லை. சில நேரங்களில் சரக்கு ஏற்றி இறக்குவதற்காக ஒரு சில சாலைகளில் லாரிகள் நிறுத்தப் பட்டிருந்தால், போக்குவரத்து காவல் துறையினர் அப்புறப் படுத்தி விடுகின்றனர்.

(ஆ) முக்கிய போக்குவரத்து அதிகமுள்ள நகர் பகுதிக்குள் லாரிகள் குறிப்பிட்ட நேரங்களில்தான் வந்து போக முடியும். போக்குவரத்து அதிகமுள்ள பகல் நேரங்களில் நகருக்குள் வர காவல் துறையினர் தடை விதித்துள்ளனர். புதியதாக மேட்டுப்பாளையம் சாலையில் மாநகராட்சி இடத்தில் ஒரு லாரி நிலையமும், பொள்ளாச்சி ரோட்டில் பெரியகுளத்தில் ஒரு லாரி நிலையமும் அமைக்க மாநகராட்சி உத்தேசித்துள்ளது.

25—

வடவாறு மேல்கரை மேம்பாடு.

வினா 4734—திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோயில் வட்டத்தைச் சேர்ந்த வடவாறு மேல்கரை மேம்பாடு செய்யும் பணி துவக்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(இ) எப்போது வேலை முடிவு பெறும்?

[1986 மே 8

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ): இக்கேள்விக்கு இடமில்லை.

26—

மீனவர்களுக்கு கட்டப்பட்ட வீடுகள்.

வினா 4763—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன் வளத் துறையில் மீனவர்களுக்காக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

(இ) பட்டுக்கோட்டை தொகுதியில் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் கடலோர கிராமங்களில் வாழும் மீனவர்களுக்கு பாதுகாப்பான வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்கும்பொருட்டு அரசு எடுத்துக் கொண்ட கொள்கை முடிவின் அடிப்படையில் மீனவர் வீட்டு வசதி திட்டத்தினை அமுல்படுத்தும் திட்டம் 1975-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன்படி 1975-76 முதல் 1983-84 வரையிலும் தமிழ் நாட்டின் 116 கடலோர மீனவர் கிராமங்களில் 11,404 வீடுகள் கட்டும் பொருட்டான ஒப்புதல் அளிக்கப்பட்டது. அவற்றுள் 1984-85 ஆம் ஆண்டு முடிய 9,211 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள வீடுகள் குறித்த பணி 1985-86 ஆம் ஆண்டில் செயல்படுத்தப் பட்டு வருகின்றது.

(இ) பட்டுக்கோட்டை தொகுதியினைப் பொறுத்த மட்டில் இத்திட்டம் ஏற்கனவே மல்லிப்பட்டினத்திலும், சேதுபாவாசத்தி ரத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



1986 மே 8]

27—

பார்வையற்றோருக்கு இலவச ஊன்றுகோல் வழங்கல்

வினா 5107—திரு. க. நரசிம்ம பல்லவன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்பார்வையற்றவர்கள் நடந்து செல்ல இலவசமாக ஊன்றுகோல் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

28—

ரம்ஜான் பண்டிகைக் காலத்தில் கைத்தறித் துணிகளுக்கு சிறப்புத் தள்ளுபடி.

வினா 5380—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரம்ஜான் பண்டிகைக் காலத்தில் கைத்தறித் துணி விற்பனைக்கு தள்ளுபடி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ): "நடப்பு ஆண்டில் (1985-86) 15—6—1985 முதல் 19—6—1985 வரை 5 நாட்களுக்கு ரம்ஜான் 1985 பண்டிகை காலத்திற்கு பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சில்லறை விற்பனை மீது 20 சதவீதமும் மொத்த விற்பனை மீது 15 சதவீதமும் சிறப்புத் தள்ளுபடி வழங்கப் பட்டது.

29—

சென்னை அல்லிக்குளம் பகுதியில் கடைகள் கட்டும் திட்டம்.

வினா 5468—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மத்திய இரயில் நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் மூர் அங்காடிக் கடைகளுக்குப் பதிலாக அல்லிக்குளம் பகுதியில் கடைகள் கட்ட அரசு தீர்மானித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்த அளவில் உள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கட்டிட வடிவமைப்புகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சியால் மேல் நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது.

30—

சிறைவாசிகளுக்கான கலை நிகழ்ச்சி மற்றும் படக்காட்சிகள்.

வினா 5469—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு அவர்களைத் திருத்தும் வகையிலும், அவர்களை மகிழ்வூட்டும் வகையிலும், கலை நிகழ்ச்சி, படக்காட்சி போன்றவை காட்டப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ): சிறைவாசிகள் பயன்பெறும் வகையில் எல்லா மத்திய சிறை, மாநில மகளிர் சிறை, வேலூர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவைகளில் பண்பாட்டுக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உள்ளூர் கல்லூரிகளில் பணிபுரியும் பேராசிரியர் அல்லது விரிவுரையாளர், அரிமா சங்க அங்கத்தினர், ரோட்டரி சங்க அங்கத்தினர்



முதலியவர்கள் அடங்குவர். இக்குழு அரசாணை எண் 237, உள்துறை, நாள் 23—1—1971-ன் மூலம் அமைக்கப்பட்டது. இக்குழு சிறையில் அவ்வப்பொழுது கூடி, சிறையில் நடத்த வேண்டிய கலை நிகழ்ச்சிகளை விவாதிக்கிறது. மேலும், சிறைவாசிகளைக் கொண்டு நாடகங்களும், வெளிக்குழு மூலம் நாடகங்களும் மற்றும் பள்ளிச் சிறார்களைக் கொண்டும், கல்லூரி மாணவ மாணவியர்களைக் கொண்டும் கலை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்கிறது.

2. இப்பண்பாட்டுக் குழுக்களை அமைக்க அரசு முதலில் இதற்காக ஒரு தொகையை ஒதுக்கியது. இச்செலவினத்திற்கான தொகை அரசாணை எண் 931, உள்துறை, நாள் 16—4—1985 மூலம் எல்லா மத்திய சிறைகள், மாநில மகளிர் சிறை, வேலூர் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவைகளுக்கு தலா ஆண்டுக்கு ரூ. 1,000-ம் திறந்த வெளிச்சிறை, சிங்காநல்லூருக்கு ரூ. 750-ம் ஆக உயர்த்தப்பட்டது.

3. எல்லா மத்திய சிறைகள், மாநில மகளிர் சிறை, வேலூர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவைகளில் 35 எம்.எம். அல்லது 16 எம்.எம். திரைப்படக் கருவி உபயோகத்தில் உள்ளது. மாதம் ஒன்றுக்கு 2 திரைப்படங்களுக்குக் குறையாமல் சிறைவாசிகளுக்கு காண்பிக்கப்படுகிறது. பண்பாட்டுக் குழுவிற்கு அரசால் ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லையாதலால் உள்ளூரிலுள்ள சமூகத் தொண்டில் ஆர்வங்கொண்டவர்கள் மூலமும், திரைப்பட வினியோகஸ்தர்கள் மூலமும் மற்றும் சிறைவாசிகளின் நலனில் அக்கறை கொண்ட முக்கிய பிரமுகர்கள் மூலமும் திரைப்படங்கள், அரசிற்கு எந்தவித செலவுமில்லாமல், சிறைக் கண்காணிப்பாளர்களால் காண்பிக்கப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு ஆண்டும் தேசத் தந்தை காந்தி பிறந்த தினமான அக்டோபர் 2-ந் தேதி சிறைவாசிகள் நல தினமாக கொண்டாடப்படுகிறது. அந்நாளில் சிறைவாசிகளுக்கு விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இம்மாதிரி நிகழ்ச்சிகள் பண்பாட்டுக் குழு மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

31—

**தஞ்சை கிருஷ்ணா தியேட்டர் விபத்தில் பலியானோருக்கு நிவாரணத் தொகை.**

*வினா 5505—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சாவூர் கிருஷ்ணா தியேட்டர் விபத்தில் உயிர் பலியான நபர்களுக்கு அரசு நிவாரணத் தொகை எல்லோருக்கும் வழங்கப்பட்டுவிட்டதா?*

*(ஆ) இல்லையெனில், காரணம் யாது?*

*(இ) அய்யம்பேட்டை நகரைச் சேர்ந்த இரண்டு பேருக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?*

**விடை—**

(அ) 12 குடும்பங்களைச் சார்ந்த 14 நபர்கள் இரண்டு குழந்தைகள் உட்பட கிருஷ்ணா தியேட்டர் சுவர் இடிந்து விழுந்த விபத்தில் இறந்து போனார்கள். நிவாரணத் தொகை இறந்தவர்களின் 12 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு விட்டது.

(ஆ) எழவில்லை.

(இ) அய்யம்பேட்டை நகரைச் சேர்ந்த யாரும் இவ்விபத்தில் இறக்கவில்லை.

32—

**கோவை நகரில் கட்டணக் கழிப்பிடங்கள்.**

*வினா 5556—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவை மாநகராட்சி எல்லைக்குள் இயங்கிவரும் பொதுக் கழிப்பிடங்களைக் கட்டணக் கழிப்பிடங்களாக மாற்றப்பட என்ன விதிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது?*

*(ஆ) இதன் விவரம் என்ன?*

**விடை—**

(அ) மற்றும் (ஆ): பொதுக் கழிப்பிடங்களைக் கட்டணக் கழிப்பிடங்களாக மாற்ற விதிதங்கள் எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. தற்பொழுது, கோவை மாநகராட்சி எல்லைக்குள்



272 பொதுக் கழிப்பிடங்கள் உள்ளன. அதில் 15 நவீன பொதுக் கழிப்பிடங்கள் மட்டும் கட்டண முறையில் இயங்க குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. கட்டணமின்றி இயங்கி வரும் பொதுக் கழிப்பிடங்களை கட்டணக் கழிப்பிடங்களாக மாற்றும் உத்தேசம் இல்லை. கடந்த மூன்றாண்டுகளில் கட்டண முறையில், இயங்கி வரும் பொதுக் கழிப்பிடங்களின் மூலம் மாநகராட்சி, கீழ்க்கண்ட வருமானம் பெற்றுள்ளது:—

| வருடம். | வருமானம். |
|---|---|
| (1) 1982—83 | ரூ. 5,56,398.00 |
| (2) 1983—84 | ரூ. 5,41,515.00 |
| (3) 1984—85 | ரூ. 10,71,104.00 |

33—

**தஞ்சை மாரியம்மன் கோயில் திருப்பணி.**

*வினா 5592—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சை மாரியம்மன் கோயில் திருப்பணி செய்வது குறித்து திட்டம் ஏதும் உள்ளதா?*

*(ஆ) அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது?*

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) திருப்பணி வேலைகளை உபயதாரர்கள் மூலம் ரூ. 2,48,000 செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

34—

தஞ்சை மாவட்டத்தில் யானைக்கால் வியாதி ஒழிப்பு.

**வினா 5644—டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் யானைக்கால் வியாதி தற்போது எத்தனை சதவீதம் உள்ளது?

(ஆ) 1977 இல் இருந்ததற்கு எத்தனை சதவீதம் குறைந்துள்ளது?

(இ) என்ன தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(ஈ) தற்போது என்ன மருந்து உபயோகப்படுத்தப்படுகிறது?

விடை—

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ): தஞ்சை மாவட்டத்தில் யானைக்கால் நோய்த் தடுப்பு குறித்து ஒரு விவர அறிக்கை* இணைக்கப்பட்டுள்ளது.

35—

நிரந்தர சினிமா கொட்டகைகள்.

**வினா 5782—டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1984-85 இல் கணக்குப்படி நிரந்தர சினிமா கொட்டகைகள் எத்தனை?

(ஆ) டூரிங் தியேட்டர்கள் எத்தனை?

* 706—708-ம் பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



விடை—

(அ) மற்றும் ஆ):

| நிரந்தர திரையரங்குகள். | பகுதி நிரந்தர திரையரங்குகள். | உலவும் திரையரங்குகள். | திறந்த வெளி திரையரங்குகள். | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1,151 | 184 | 970 | 8 | 2,313 |

36—

கூடலூரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி.

**வினா 5957—திரு. கே. உச்சி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பஜாரில் ஆதி திராவிடர் நலத்துறையால் கட்டப்படும் மாணவர் விடுதியின் மதிப்பீடு தொகை எவ்வளவு?

(ஆ) அப்பணி எப்போது துவங்கப்பட்டது?

(இ) எப்போது முடிக்கப்படும்?

விடை—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பஜாரில் ஆதி திராவிடர் நலத் துறையால் கட்டப்படும் மாணவர் விடுதியின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.80 இலட்சம்.

(ஆ) இப் பணி டிசம்பர் 1982 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது.

(இ) இப்பணி இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

37—

சென்னையிலுள்ள ஆதி திராவிடர் மாணவர் விடுதிகள்.

**வினா 5981—திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"சென்னையில் உள்ள கல்லூரிகள் உரிய காலத்தில் திறக்கப்பட்டும் 5—8—1985 வரை ஆதி திராவிட மாணவர் விடுதிகள் திறக்கப்படாததற்கான காரணம் யாது?

[1986 மே 8

விடை—

1985-86 ஆம் ஆண்டிற்கு சென்னையில் உள்ள கல்லூரி மாணவர் விடுதிகளைத் திறப்பதற்கு மாணவர்களிடமிருந்து விடுதியில் சேர்ந்து கொள்வதற்கு புதுப்பித்தல் மனுக்கள் போதுமான அளவு வந்து சேரவில்லை இருப்பினும், 1—8—1985 முதல் விடுதிகள் திறந்து வைக்கப்பட்டு இருந்தன. ஆனால் ஒரு குறிப்பிட்ட அளவு மனுக்கள் 5—8—1985 அன்றுதான் வந்து சேர்ந்தன. எனவே, விடுதிகள் 5—8—1985 முதல் நடைபெற ஆரம்பித்தன.

38—

## தமிழகக் காடுகளிலுள்ள யானைகள்.

வினா 6003—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் காடுகளில் உள்ள யானைகள் எத்தனை?

(ஆ) சத்தியமங்கலம் பகுதியில் எத்தனை யானைகள் உள்ளன?

விடை—

(அ) 1983 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி தமிழகக் காடுகளில் உள்ள மொத்த யானைகள் 2,179 ஆகும்.

(ஆ) 1983 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சத்திய மங்கலம் பகுதியில் உள்ள யானைகள் 251 ஆகும். இதில், ஆண் யானைகள் 61, பெண் யானைகள் 137. ஐந்து அடி உயரத்திற்குட்பட்ட குட்டிகள் 53.

39—

## சூச்சனி கிராம ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

வினா 6006—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தொகுதியில் சூச்சனி என்ற கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1986 மே 8]

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தொகுதியில் சூச்சனி என்ற கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்டித் தரக் கோரி விண்ணப்பம் எதும் வரப்பெறவில்லை.

40—

## ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.

வினா 6007—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் இயங்கி வரும் மாவட்டங்கள் எவை எவை?

(ஆ) மற்ற மாவட்டங்களில் இத்திட்டம் எப்பொழுது கொண்டு வரப்படும்?

விடை—

(அ) தமிழகத்தில் 9 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் இயங்கி வருகிறது. அவை மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், அண்ணா, புதுக்கோட்டை, வட ஆற்காடு, திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்கள்.

(ஆ) மற்ற மாவட்டங்களில் இத்திட்டம் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு மத்திய அரசின் மூலம் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

41—

## டி. சுக்காம்பட்டியில் மாணவர் விடுதி.

வினா 6066—திரு. சு. சோலைராசு: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதியில் உள்ள டி. சுக்காம்பட்டியில் மாணவர் விடுதி ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருச்சிராப்பள்ளி மாவட்டம் மருங்காபுரி தொகுதியிலுள்ள டி. சுக்காம்பட்டியில் புதிய மாணவர் விடுதி 17—10—1985 ஆம் நாளன்று திறக்கப்பட்டு ஐம்பது மாணவர்களுடன் இயங்கி வருகிறது.

42—

விதவைகள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயன்பெற்றோர்.

வினா 6146—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலத்துறை மூலம் விதவைகள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 31—5—1985 முடிய பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் பெற்றுள்ள பயன்கள் யாவை?

விடை—

(அ) சமூக நலத்துறை மூலம் விதவைகள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 31—5—1985 முடிய 25,349 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

(ஆ) இத்திட்டத்தின் மூலம் அவர்கள் சிற்றுண்டிக்கடை வைத்தல், பிளாஸ்டிக் கூடை பின்னுதல், பூ, பழம், காய்கறி, மீன், புடவை, கட்பீஸ், அரிசி, எவர்சில்வர் பாத்திரம் விற்றல் போன்ற சிறுசிறு தொழில்கள் செய்ய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் பெற்றுத்தரப் படுகிறது.

43—

மதுக்கரையில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை.

வினா 6208—திரு. அ. நடராசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரையில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன?



விடை—

(அ) ஆம்

(ஆ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் கட்ட மேற்படி கிராமத்தில் ச. எண். 242-ல் 1.25 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு மேற்படி நிலத்தை 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் எடுக்கப்பட்ட பின்னர், மருந்தகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்படும்.

44—

மதுக்கரை-குனியமுத்தூர் மேல்நிலைப் பள்ளி ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதிகள்.

வினா 6211—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுக்கரை-குனியமுத்தூர் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு விடுதிகள் துவக்க அரசு பரிசீலிக்கிறதா?

(ஆ) ஆம் எனில், காலதாமதம் ஏற்பட காரணம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

45—

கோ-ஆப்டெக்ஸ் மூலம் பெண்களுக்கான உடைகள் தயாரித்தல்.

வினா 6411—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்களுக்கு தேவையான அனைத்து உடைகளையும் தயாரிக்க கோ-ஆப்டெக்ஸ் முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பருத்தி, பட்டு பாலியஸ்டர் மற்றும் செயற்கைப் பட்டு ஆகிய நூல்களில் பெண்களுக்குத் தேவையான சேலை இரகங்கள் கோ-ஆப்டெக்ஸால் பிரதம நெசவாளர்கள் சங்கங்கள் மூலம் தயாரிக்கப்படுகின்றன. பருத்தி நூல் 2/100 மற்றும் 2/80 ஆகியவற்றில் மகளிர்க்குத் தேவையான ரவிக்கைத் துணிகள் பல கலர்களில் தயாரிக்கப்படுகின்றன. மேலும் காடா துணிகள் மகளிரின் உள்ளாடைகளுக்காக (பாவாடை) தயாரிக்கப்படுகின்றன. கல்விக்கூடம் மற்றும் கல்லூரி செல்லும் மாணவியர்க்காக, பாவாடை, சட்டை, தாவணி, சுரிதார் முதலான உடைகள் தைப்பதற்காக பாலியஸ்டர், பாலினாசிக், பருத்தி பட்டுத் துணிகள் தயாரிக்கப்படுகின்றன. மேலும் சேலைகளின் விளிம்புகளில் வைத்து தைப்பதற்காக (சாரி ஃபால்ஸ்) மற்றும் பாலினாசிக் கைக்குட்டைகளும் தயாரிக்கப்படுகின்றன.

46—

**கோவையில் கலையரங்கம்.**

**வினா 6437—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் குளு குளு வசதியுடன் கலையரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

47—

**வடுவூர் ஏரி.**

**வினா 6467—திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் வடுவூர் ஏரி தூர்ந்து விட்டதால் தூர் எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

1983-84-ம் ஆண்டிலேயே இந்த ஏரியில் தூர் ஓரளவு அகற்றப் பட்டது.

48—

**சென்னை மாநகராட்சி சாலைகள் பராமரிப்புக்கு நிதி உதவி.**

**வினா 6604—திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சிப் பகுதியில் சாலைகளை பராமரிக்க அரசு வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

(ஆ) மான்யத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) கடன் தொகை ரூ. 320 இலட்சங்கள்.

(ஆ) மான்யத் தொகை ரூ. 695 இலட்சங்கள்.

49—

**அரியூர் சோளக்காடு பகுதியில் புதிய ஏரி.**

**வினா 6663—திரு. சீ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொல்லிமலையில் சிறிய நீர்வீழ்ச்சிகளை பயன்படுத்தி அரியூர் சோளக்காடு பகுதியில் உள்ள பெரியசாமி கோயில் அருகே அழகான ஏரி அமைக்கும் பணியினை அரசு மேற் கொள்ளுமா?

விடை—

இப்பணியை மேற்கொள்ள வாய்ப்பு இருப்பின் இதனை ஆய்வு செய்த பிறகே அரசு நிதிநிலையைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படலாம். வாய்ப்பு இருக்கிறதா என்பது பரிசீலிக்கப்படும்.

50—

### பண்ணைப்பட்டி ஆதி திராவிடருக்கு வீடுகள்.

வினா 6467—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பொதுப் திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் விடையளிப்பாரா—

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் பண்ணைப்பட்டி ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று 1 மணிக்கு கில்லட்டின் இருக்கிறது. அதற்குள் இன்றைய மானியக் கோரிக்கைகளை முடிக்க வேண்டும். அதனால்தான் வேகமாகப் போகிறேன்.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1986—87 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on estimates) தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்



பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :—

1. திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்
2. திரு. சோ. மா. இராமச்சந்திரன
3. திரு. பொன் முத்துராமலிங்கம
4. திருமதி டி. யசோதா
5. திரு. ஜி. கே. ஜெ. பாரதி
6. திரு. சு. சிவராஜ்
7. திரு. பெ. செங்கோட்டையன்
8. திரு. எம். இராசரத்தினம்.
9. திரு. கே. குப்புசாமி
10. திரு. செ. செம்மலை
11. திரு. துரை கோவிந்தராசன்
12. டாக்டர் அ. பொன்னுசாமி
13. திரு. க. நரசிம்ம பல்லவன்
14. திரு. சைதை சா. துரைசாமி
15. திரு. எஸ். பாலசுப்பிரமணியன்
16. திரு. ஏ. தங்கராசு

முறையான வேட்புத் தாள்கள் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய வர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1986-87 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழு தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர் களாவர்.

இப்பேரவையின் 223-வது விதியின் கீழ் திரு. கே. குப்புசாமி குப்புசாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

### காமராசர் மாவட்ட வனச் சரகப்பகுதியில் வன இலாகா மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டப்படுவது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்திலுள்ள ராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் வனச் சரகப் பகுதியில் தனியார் தோப்புகளும் உள்ளன. அத்தோப்புகளில் வன இலாகாவிற்குச் சொந்தமான மரங்களைப் பலர் வெட்டி வைத்துக் கொண்டு, வன இலாகா அதிகாரிகளிடம் தங்களின் தோப்புகளிலுள்ள பட்டுப் போன மரங்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதி பெற்று, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள மரங்களை அழித்து வருவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

#### அறிக்கை.

காமராசர் மாவட்டத்தில் திருவில்லிப்புத்தூர் மற்றும் இராஜபாளையம் என்ற இரு வனச்சரகங்கள் உள்ளன. அப்பகுதியில்தான் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியும் அதன்பால் அடங்கிய காப்பு காடுகளும் உள்ளன. இம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள காப்புக் காடுகளை ஒட்டி, 136 தனியார் தோப்புகள் அல்லது பட்டா நிலங்கள் உள்ளன.

2. கடந்த 1985-ம் ஆண்டில், காப்பு காடுகளுக்கு அருகிலுள்ள தனியார் தோப்பு மற்றும் பட்டா நிலங்களில் இருந்து மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு விண்ணப்பம் செய்தவர்கள்





பற்றிய விபரம், விண்ணப்பத்தின்மீது வனத்துறை எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விபரம் பின்வருமாறு உள்ளன:

(அ) கான்சாபுரம் கிராமத்தில் உள்ள ச. முனியாண்டித் தேவர் குமாரர் முனியாண்டித் தேவருக்குச் சொந்தமான சர்வே எண் 1317, 1318, 1319, 1324/1 ஆகிய நிலங்களில் உள்ள வாகை, வேம்பு, உசில், தணக்கு போன்ற மரங்களை வெட்டி எடுத்துச் செல்வதற்கு கிரைய ஆவணங்களை கூமாப்பட்டிக் கிராமம் திரு. காதர் ராவுத்தர் மகன் திரு. சிக்கந்தர் பெற்று 14—11—1985 அன்று காமராசர் மாவட்ட கோட்ட வன அலுவலருக்கு, படிவம் II அனுமதிச் சீட்டு கோரி விண்ணப்பம் அனுப்பினார். திருவில்லிப்புத்தூர் வனச் சரகர் 12—12—1985-ல் புலத்தணிக்கை செய்து அனுமதிச்சீட்டு வழங்க பரிந்துரை செய்தார். 27—12—1985 அன்று மாவட்ட வன அலுவலர், சரக அலுவலருடன் அப்பகுதியினைத் தணிக்கை செய்து, 12 (பன்னிரண்டு) டன்கள் விறகு உள்ளதென அறிந்து, 30—12—1985 அன்று இரண்டு படிவம் அனுமதிச் சீட்டு தருவதற்கு மாவட்ட வன அலுவலர் அனுமதி அளித்துள்ளார். 2—1—1986 மற்றும் 6—1—1986 ஆகிய தேதிகளில் விறகு அப்புறப்படுத்தப்பட்டது.

(ஆ) திருவில்லிப்புத்தூரில் விறகு வியாபாரம் செய்துவரும் திரு. ஏ. எ. ஆனந்தன், வாழைக்குளம் கிராமம், செண்பக தோப்புக்கு மேல் பக்கம் சர்வே எண் 1569-1 : 1569-2 ; 1566-2 ; 1566-4-ல் உள்ள 5 ஏக்கர் 10 செண்ட் பகுதியில் 2.55 ஏக்கர் நிலப் பரப்பில் உள்ள மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி, அப்பகுதியில் எலுமிச்சை தோப்பு உண்டாக்கக் கருதி, விறகினை அப்புறப் படுத்துவதற்கு 30—12—1985 அன்று விண்ணப்பம் செய்துள்ளார். அதன்மீது காமராசர் மாவட்ட கோட்ட வன அலுவலர் 25—4—1986-ல் இப்பகுதியினைத் தணிக்கை செய்து, திரு. ஆனந்தன் அவரது பட்டா நிலத்தில் மரங்களை வெட்டிக் கொண்டிருந்ததைப் பார்வையிட்டார். விறகுகள் பெரும்பாலும் பெருவிரல் அளவுள்ள சிறிய குச்சிகளாகத்தான் இருப்பதாகவும், அரசு காட்டில் மரம் எதுவும் வெட்டி பட்டா நிலத்தில் வைக்கப்படவில்லை எனவும் கண்டறியப்பட்டிருக்கிறது. இதுவரை படிவம் II அனுமதி அன்னாருக்கு வழங்கப்படவில்லை.

3. காமராசர் கோட்டத்தில் உள்ள இராஜபாளையம் வனச் சரகத்தில் 8—10—1985 முதல் 9—4—1986 வரையிலான காலத்தில் விறகுகள் அனுமதிப் படிவமின்றி எடுத்துச் சென்றமைக்காக 6 (ஆறு) வனக் குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு ரூ. 800 (எண்ணூறு மட்டும்) இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு, குற்றங்களில் சம்பந்தப்பட்ட வனப் பொருட்கள் விடுவிக்கப்பட்டன. மேற்படி ஆறு வனக்குற்றங்களில் திரு. சிக்கந்தரோ அல்லது திரு. ஆனந்தமோ சம்பந்தப்படவில்லை.

4. தனியார் தோப்புகள்/பட்டா நிலங்களில் இருந்து மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு அனுமதி கோருபவர் மரத்தின் உரிமையாளரிடம் கிரய சான்றிதழ், பட்டா நிலம் என்பதற்கு தேவையான வருவாய்த்துறை ஆவணங்கள், வருவாய் ஆய்வாளரின் சான்றிதழ், பட்டா நிலத்தின் வரை படம் போன்றவைகளை அனுப்புதல் வேண்டும். மேற்படி ஆவணங்களை கொண்டு வனச்சரகர் அப்பகுதியினை தணிக்கையிட்டு பட்டா நிலத்தில்தான் மரங்கள் வெட்டப்பட்டுள்ளன, என்று சான்றிதழ் வழங்கிய பின்னரே, மரம் கொண்டு செல்வதற்கு வனத்துறை படிவம் II அனுமதி வழங்குகிறது. மேற்கண்ட முறையினை காமராசர் மாவட்ட கோட்ட வன அலுவலர் பின்பற்றி வருகிறார்.

5. மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இராஜபாளையம், திருவில்லிப்புத்தூர், வனச்சரகப் பகுதிகளில் வன இலாக்காவிற்குச் சொந்தமான மரங்களை வெட்டி எடுத்துச் செல்ல தனியார் தோப்பு உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. மேலும் வன இலாகாவுக்குச் சொந்தமான மரங்களைப் பாதுகாக்க தக்க கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள குறிப்பில் இந்த மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள அந்த காடுகளுக்கு அருகில் 136 தனியார் தோப்புகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தனியார் தோப்புகள் இருக்கிற காரணத்தால்தான் மரங்களை வெட்டி அவர்கள் தோப்பில் உள்ள பட்டுப்போன மரங்கள் என்று சொல்லி அதிகாரிகளிடம் சர்ட்டிபிகேட் வாங்கி மரங்களை கடத்திச் செல்கிறார்கள்.



136488

ஆக இந்தத் தனியார்கள் தோப்புகளை எல்லாம் வன இலாகா சொந்தமாக எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? மேலும் நல்ல முறையில் பணி புரியும் பல அதிகாரிகளை அங்கே உள்ள சமூக விரோதிகள் வெட்டிக் கொன்று இருக்கிறார்கள். அது சம்பந்தமாக போலீஸ் அதிகாரிகளிடம் புகார் கொடுத்தும் கூட போலீஸ் அதிகாரிகளையும் அவர்கள் மிரட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

இன்னும் ஒன்று. வன விலங்கு பாதுகாப்புச் சங்கம் என்ற ஒரு சங்கம் அங்கே இருக்கிறது. இந்தச் சங்கத்தில் இருப்பவர்களும், இந்தத் தனியார் தோப்புகளில் இருப்பவர்களும் அங்கே விறகுக் கடை வைத்து இருக்கிறார்கள். இந்த விறகுக் கடையில் மாலை நேரத்தில் பாரஸ்ட்டு அதிகாரிகளும், ரேன்ஜர்களும் உட்கார்ந்து கொள்கிறார்கள். அவர்களுக்கும் இந்தத் தோப்பில் இருப்பவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது. ஆகவே இதைப் போக்குவதற்கு—அந்தப் பகுதியில் மேற்கு தொடர்ச்சி அடிவாரத்தில்தான் திக் பாரஸ்ட்டாக இருக்கிறது.—அங்கே ஒரு ஸ்குவாட் நிறுவுவதற்கு உண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுகாக்கப்படுகிற ஒதுக்கக் காடுகள் ரிசர்வ் பாரஸ்ட்டு என்ற அந்தப் பகுதிகளிலே எப்படியோ அந்தக் காலத்திலே வெள்ளைக்காரர்கள் ஆட்சி செய்தபோது பல தனியார்கள் உரிமை பெற்று ஆங்காங்கே இந்த ஒதுக்க காடுகளுக்கு இடையே திட்டுக்களைப் போல் சொந்த இடங்களை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதனுடைய விளைவாக நாம் இந்தக் காடுகளை பாதுகாக்க எடுக்கின்ற முயற்சிகளில் இந்த சொந்தக் காடுகள், சொந்த நிலங்களை வைத்து இருக்கிறவர்கள் தங்களுடைய உரிமையின் காரணமாக சில தவறுகளை இழைப்பதற்குத் துணிகிறார்கள். அதைத் தடுப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டும், சில நேரங்களிலே தவறுகள் நடைபெறுகின்றன என்கின்ற செய்தி வந்து அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, 2, 3 ஆண்டுகளுக்கு முன்பே ரிசர்வ் பாரஸ்ட் என்று அழைக்கப்படுகின்ற ஒதுக்கக் காடுகளுக்கு இடையில் தனியார் நிலங்கள் இருப்பதைத் தடுத்து, அதை ஒதுக்கக் காடுகளாக, அரசுக் காடுகளாக அறிவிக்க

V2111/3 N86·207

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சட்டத் துறையிடத்திலே ஆய்வு செய்யும்படி அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. இது அரசியல் சட்டத்திற்கு ஏதாவது விரோதமாக இருக்குமா என்கின்ற அந்த அடிப்படைக் கருத்தும் பரிசீலிக்கப்படுகிறது. ஆகவே ரிசர்வ் பாரஸ்டிற்கு இடையில் தனியார் காடுகளை அல்லது நிலங்களை வைத்துக் கொண்டிருப்பது இந்த வனப் பாதுகாப்பிற்கு குந்தகமாக இருக்கிறது என்ற கருத்தை மத்திய அரசிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். விரைவிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தக கருத்தையொட்டி. அரசு ஒதுக்கக் காடுகளுக்கு இடையில் திட்டுக்களைப் போல் ஆங்காங்கே தனியார் காடுகள் அல்லது நிலங்களை வைத்திருப்பதைத் தடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு ஒரு குறிப்பிட்ட வன விலங்குப் பாதுகாப்புச் சங்கத்தினர் என்ற பெயரில் அங்கேபோய் உட்கார்ந்துகொண்டு, சில தவறுகளைச் செய்வதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். அதைப் பற்றிக் குறிப்பாக ஏதாவது குற்றச்சாட்டுகள், நிகழ்ச்சிகள் இருந்து, அதை அவர் எனக்குத் தெரிவித்தால், உடனடியாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுசம்பந்தமாக விவரக் குறிப்புகள் பற்றி நான் ஒரு ஃபைலிலே வைத்திருக்கிறேன். அந்த ஃபைலை நான் மாண்புமிகு அமைச்சரிடம் கொடுக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள்.

அதுமட்டுமல்லாமல், உயர்ந்த அதிகாரிகளிடம், மாவட்ட அதிகாரிகளிடம் புகார் செய்கிறோம். அப்படி புகார் செய்யும் போது, மேல் மட்ட அதிகாரிகளிடம் புகார் செய்கிறோம். அந்த அதிகாரிகள் வெளியூர்களில் தனியார் இடங்களிலுள்ள பங்களாக்களில் தங்குகின்றார்கள். என்னுடைய புகாருக்கு என்ன மரியாதை இருக்கிறது? ஒன்றுமில்லாமல் போகிறது. அதையும் சொல்ல வேண்டும். இன்னொன்று. சட்டசபையில், நான் பேசிவிட்டேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். காய்ந்த விறகுகளை ஏழை எளியவர்கள் காடுகளிலிருந்து எடுத்து வரலாம் என்று அனுமதி வழங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இது முக்கிய-





மான கேள்வி. இவ்வாறு பேசியவுடன் அந்த ஏழை எளிய மக்களிடம் ஒரு சட்டமன்ற உறுப்பினர் இப்படி காய்ந்த விறகுகளை எடுக்கக் கூடாது என்று சொல்லிவிட்டார், அமைச்சர் சொல்லிவிட்டார் என்றெல்லாம் சொல்லி; அந்தப் பொதுமக்களை தூண்டிவிட்டு, அவர்கள் என்னை 'கேரோ' செய்கின்ற அளவிற்கு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் அந்த அதிகாரிகள். ஆகவே இதைப் போக்குவதற்கு, இப்படிப்பட்ட தேச விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அங்கே ஆய்விற்காக அல்லது அரசுப் பணிகளுக்காக செல்கின்ற போது, நம்முடைய அரசு ஓய்விடங்களிலே தான் தங்க வேண்டுமே தவிர, தனியார் இடங்களிலே தங்கக் கூடாது என்ற விதியே இருக்கிறது. அப்படி யாராவது அரசுத் துறை அதிகாரிகள் தங்களுடைய சொந்த செல்வாக்கைக் கொண்டு தனியார் இடங்களிலே தங்குவது பற்றி குறிப்பாக அவர் தெரிவித்தால், அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வனத்துறையில் இருந்து ஏழை எளிய மக்கள் விறகுகளை தங்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு, உபயோகமாகும் காய்ந்த சுள்ளிகளை தலைச் சுமையாக எடுத்துக் கொண்டு வருவதைத் தடுக்க வேண்டாம் என்று கூறியதை உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதையொட்டி இப்படிப்பட்ட ஒரு அறிவுரை வனத்துறை அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அதிலே இரண்டு தவறுகளும் நடக்க ஆரம்பித்து விட்டன. அங்கே அரசின் தரப்பிலே இருந்து இப்படிப்பட்ட அறிவுரை வழங்கப்பட்டதை வைத்துக் கொண்டு, அவர்கள் காய்ந்த சுள்ளிகளை மட்டுமல்ல, பச்சை மரங்களை வெட்டி, அதை விறகுகள் என்றும் காய்ந்த சுள்ளிகள் என்றும் சொல்லி எடுத்துக்கொண்டு போவதை பொதுமக்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அதை ஏன் தடுக்கவில்லை என்று கேட்டால், அரசு தானே அவர்களை வெட்டி எடுத்துச் செல்வதற்கு அனுமதித்திருக்கிறது என்று வனத்துறை அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இரண்டு பக்கத்தினையும் பாதுகாப்பதில் சங்கடங்கள். இப்போது

ஏற்பட்டிருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல்று, இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் பொது நன்மையைக் கருதி, செய்திகளைத் தெரிவிப்பதையொட்டி, அங்கேயிருக்கின்ற வனத் துறை அதிகாரிகள் அதைத் தவறாக, பொதுமக்களிடத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதகமான ஒரு உணர்வை ஏற்படுத்தி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவார்களேயானால், எந்த அதிகாரிகளானாலும் சரி, வனத் துறை அலுவலர்களானாலும் சரி, கடுமையான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். ஏனெனில் இந்தப் பகுதி நீண்ட காலமாகவே ஒரு வனப் பாதுகாப்புப்" பகுதியாகவே கருதப்படாமல் பாதுகாப்பற்ற பகுதியாகவே இருந்தது.

(முற்பகல் 10-10.)

நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு, அதிலும் குறிப்பாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் முயற்சி எடுத்துத்தான் அங்கே இப்போது 2 ரேஞ்சுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. திருவில்லிப்புத்தூர், இராஜபாளையம் என்கின்ற ரேஞ்சுகள். இன்னொரு ரேஞ்சிலே, வனத் துறை காடுகளிலே இருந்து தவறாக வெட்டிக் கொண்டு செல்கிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் தெரிவித்ததற்குப் பிறகு, தீவிரமான கண்காணிப்பு சோதனைகள் செய்து, ஏறத்தாழ 30-க்கும் மேற்பட்ட வனத் துறை அலுவலர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப் பெற்று, கடுமையான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் மீது அங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்கோ அல்லது அடிக்கடி அதை வெட்டிக் கொண்டு செல்கிறவர்களுக்கோ கோபம் வருவது இயற்கை. ஆனாலும், அதைப் பொறுத்தவரை அந்தப் பகுதியில் வனத்தை நாம் காப்பாற்றியாக வேண்டும். நீண்ட காலமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த அந்த மேற்கு மலைத் தொடர்ச்சியினுடைய அடிவாரப் பகுதி. மிக அருமையான காடுகள் நிறைந்த பகுதி. ஒரு காலத்திலே ஜமீன்தார்கள் போன்றவர்களிடத்திலே அது இருந்தது. அது அழிக்கப்பட்டு விட்டது. அந்தப் பழக்கத்தை இன்னும் அந்தப் பகுதியில் இருப்பவர்கள் விடாமல் இருக்கிறார்கள்.



ஆகவேதான் தடுக்கச் செல்கிறவர்களையும் தாக்குகிறார்கள். உயிருக்கே அபாயம் விளைவிக்கிறார்கள். சமீபத்திலே கூட, திருநெல்வேலி மாவட்டத்திலே அம்பாசமுத்திரம் பகுதியில், தடுக்கச் சென்ற ஒரு வனவரை கத்தியால் குத்தி அவருடைய கிட்னியையே எடுக்க வேண்டிய அளவுக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. சட்ட மன்றத்திலே, அப்படி அதிகாரிகள் முயற்சி செய்து, அவர்கள் தாக்கப்படுகின்ற சூழ்நிலைகள் வருகிறபோது இங்கே கவன ஈர்ப்பு எல்லாம் வராது. ஆகவே, அவர்களையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த சிறந்த அக்கறைக்கு நான் வனத் துறையின் சார்பில் நன்றி தெரிவிக்கிறேன். எந்த விதமான அபாயமும் அவருக்கு வராது. வந்தால் அரசு பாதுகாக்கும்.

**(ஆ) நீலகிரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலையின் விலை சரிவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் கே. உச்சி மற்றும் கே. கல்லன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலை விலையில் வீழ்ச்சி அடைந்திருப்பதால் அனைத்து தேயிலை விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

பச்சைத் தேயிலைக்கு தற்போதைய நிலவரப்படி கிலோ ஒன்றுக்கு ரூ. 4.89 (31—3—1986 நிலவரப்படி) சராசரி விலை வழங்கப்படுகிறது. ஒரு எக்கர் தேயிலைத் தோட்டத்திலிருந்து கிடைக்கும் சராசரி பச்சைத் தேயிலை ஆண்டொன்றுக்கு 2,000 கிலோ என வைத்துக் கொண்டால் அதைப் பராமரிக்க சராசரியாக

கிலோ ஒன்றுக்கு ரூ. 1.70 மட்டும் சிறு விவசாயிகள் செலவிட வேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மூலம் பச்சைத் தேயிலைக்கு வழங்கப்பட்ட சராசரி விலை விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

| ஆண்டு | பச்சைத் தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு வழங்கப்பட்ட விலை |
|---|---|
| | ரூ. |
| 1981-82 | 1.78 |
| 1982-83 | 2.59 |
| 1983-84 | 4.27 |
| 1984-85 | 4.89 |
| 1985-86 | 4.89 |

பச்சைத் தேயிலைக்கு 1984-85 மற்றும் 1985-86-ம் ஆண்டுகளைத் தவிர, இதர ஆண்டுகளில் வழங்கப்பட்ட விலை குறைவேயாகும். இதற்கு தேயிலை சந்தையில் ஏற்படும் விலை ஏற்றம் மற்றும் சரிவே முக்கிய காரணமாகும். தேயிலைத் தூளைப் பொறுத்த மட்டில் அதன் விலை, உலக சந்தை விலையை பொறுத்ததாகும். தேயிலைத்தூள் விலை குறையும்போது அதன் மூலப் பொருளான பச்சைத் தேயிலைக்கும் விலை குறைக்கப்படுகிறது. இதனால் பச்சைத் தேயிலையை மட்டும் நம்பி வாழும் சிறு விவசாயிகள் ஒரு நிரந்தரமான வருவாய் இன்றி அல்லல்படுகிறார்கள். இதனை மாற்றியமைக்கவும் தேயிலைத் தூளுக்கு நல்ல விலை கிடைக்கவும் அதன் மூலம் சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், கீழ்க்கண்டவாறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன :—

(1) தென்னிந்தியத் தேயிலைத்தூளுக்கு அதிக ஏற்றுமதி ஒதுக்கீடு வழங்கக் கோரி, ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு நேர்முகக் கடிதம் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(2) தேயிலை சங்கங்களின் தாய் சங்கமான 'இன்கோசர்வ்' மூலம் நேரடியாக ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



(3) சந்தையில் நல்ல விலை கிடைக்க தேயிலை புரோக்கிங் நிறுவனம் ஒன்று நிறுவி அதன் மூலம் நமது தேயிலை மற்றும் டான் டீ தேயிலையை தனி புரோக்கர் மூலம் விற்பனை செய்ய, அரசு ஆணை எண். 339, வனம் மற்றும் மீன் துறை (வனம் 8), நாள் 4—4—1986 மூலம் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின்படி பார்த்தால், இந்த விளக்கக் குறிப்பிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் தென்னிந்தியத் தேயிலைகளுக்கு அதிக ஏற்றுமதி ஒதுக்கீடு வேண்டும் என்று கோரி, அவர்களிடமிருந்து ஒரு நேர்முகக் கடிதம் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அந்தக் கடிதத்திற்குப் பிறகு, அந்நியநாட்டுச் செலாவணியை ஈர்க்க வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு அல்லது மைய அரசின் துறைகளில், ராணுவம் போன்ற துறைகளில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு அதிக ஏற்றுமதியை செய்ய ஏதாவது மத்திய அரசிடமிருந்து உத்தரவு வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடிதம் எழுதியதற்கு இன்னமும் எந்தப் பதிலும் வரவில்லை. இருந்தாலும், தொடர்ந்து அவர்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டு இருக்கிறோம். தென்னிந்திய தேயிலைத் தூளுக்கு அதிக ஏற்றுமதி ஒதுக்கீடு வழங்கவேண்டும், வட மாநிலங்களிலே ஒதுக்கக்கூடிய அளவுக்கு தென் மாநிலங்களிலேயும் தேயிலைத் தூளுக்கு அதிக அளவுக்கு ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசு அதை ஏற்கும் என்று கருதுகிறோம்.

*** திரு. கே. கல்லன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 மாதங்களாக, நீலகிரியில் பச்சைத் தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் இரண்டுக்கு குறைவாக வழங்கப்பட்டு, சிறு தேயிலை விவசாயிகள் பெரிதும் அல்லல்படுகிறார்கள். 1985-86-ல் ரூபாய் 4.89 கொடுக்கப்பட்டது என்று அறிக்கையில் கூறி இருப்பது அவ்வளவு சரியாக இருக்காது என்று கருதுகிறேன். இன்று இந்தியா முழுவதும் தேயிலை உபயோகம் அதிகரித்துள்ளது. ஆனால் விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது என்பது அதிர்ச்சியைத் தருகிறது. உள்நாட்டில் கிலோ

ஒன்றுக்கு 35 ரூபாய்க்கு மேலாக விற்கப்படுகிறது. உதகையில் கிலோ ஒன்றுக்கு 30 ரூபாய்க்கு மேல் விற்றுக் கொண்டிருக்கிறது. தேயிலை விலை சர்வதேசச் சந்தையின் மூலம் நிர்ணயம் செய்யப்படுகிறது என்பது முழுமையாக ஒத்துக்கொள்ள முடியாத ஒன்று. எனவே, சிறு விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் 'சப்போர்ட் பிரைஸ்' ரூ. 20-க்கு மேலாக நிர்ணயிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாக் கேட்க வேண்டும்.

**திரு. கே. கல்லன்:** உதாரணமாக கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய்க்கு மேல் நிர்ணயித்து தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும், அரசுத் துறைக்குத் தேவையான தேயிலை வழங்கவும், இந்தியாவிலே உள்ள பிற மாநிலங்களில் டிப்போக்கள் ஏற்படுத்தி விற்பனை செய்யவும், இந்திய அரசு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யவும், பிளண்டிங் (Blending) யூனிட் ஒன்றை ஏற்படுத்தி அயல் நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்வதற்குத் துறை முன்வருமா என்பதையும் அறிய விரும்புவதோடு புதிதாகத் துவங்கப்படும் நிறுவனம் மூலம் Support விலையில் வாங்கவும் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவாவர்களே, தென்னிந்திய தேயிலைத் தூளுக்கு அதிக ஒதுக்கீடு வழங்கக் கோரி தொடர்ந்து நம்முடைய அரசு வற்புறுத்தி வருகிறது. அதன் மூலமாக ஏற்றுமதியின் ஒதுக்கீடு அதிகமானால் நிச்சயமாக விலை ஏறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. பச்சைத் தேயிலையைப் பொறுத்தவரையில் உலகத் தேயிலை சந்தையினுடைய விலையைப் பொறுத்தே அமைகிறது. உலகம் பூராவும் விலைவீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக நம்முடைய பகுதியிலே இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. பச்சைத் தேயிலையின் விற்பனை குறைந்திருக்கிறது. விலையிலும் நமக்கு மிக்க சரிவு ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்காகத்தான் தேயிலை சங்கங்களினுடைய தாய்ச் சங்கமாக இருக்கக்கூடிய 'இன்கோசர்வ்' மூலமாக நேரடியாக ஏற்றுமதி செய்ய வேண்டிய நடவடிக்கைக்கு அரசாங்கம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைதனை மேற்கொண்டு வருகிறது.



அதுமட்டும் அல்லாமல் இப்பொழுது சந்தையிலே நல்ல விலை கிடைப்பதற்காக ஒரு நிறுவனத்தைப் புதிதாக நிறுவியிருக்கிறோம். இதற்கு முன்னதாக தரகர்கள் மூலமாக 4 பேர் மூலமாக இதை விற்பனை செய்து வந்தோம். ஆனால் இன்றைக்கு அதை மாற்றி இயக்குநர் மற்றும் ஆணையர், தொழில் வணிகத்துறை அவர்களைத் தலைவராகக் கொண்டு, எம்.டி., டான் டீ, எம்.டி. 'இன்கோசர்வ்', மாவட்ட ஆட்சித் தலைவர், பிலிப் ஜான் என்பது போன்று 7 பேர்களைக் கொண்ட குழுவைப் போட்டு, நாம் ஒரு நிறுவனத்தை இன்றைக்கு ஆரம்பித்திருக்கிறோம். அதன் மூலமாக நிச்சயமாக வருங் காலத்தில் நல்ல விலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவு.

### அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்ட மன்றம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,81,26,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு குறிப்பிட்ட அளவு தபால் பில்லைகள் வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,81,26,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986 ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் இரயில்வே கட்டணம் உயர்த்தப்பட்டதால் தற்போது உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இரயில்வே கூப்பன்களை ரூ. 4,000-க்கு அதிகரிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,81,26,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் கூடுகிற நாட்களில் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு எல்லா கட்சிக்காரர்களுக்கும் தனித்தனியே கலந்துரையாட தனி அலுவலகம் ஏற்படுத்தித் தர வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,81,26,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."





(ஆ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 57,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 57,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலில் சுயேச்சைகள் ஒரு முறை போட்டியிட்டு போதுமான வாக்குகள் பெறமுடியாமல் டிபாசிட் இழந்தவர்கள் மறுமுறை போட்டியிட தகுதி அற்றவர்கள் என்ற நிலை குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 57,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 34,98,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

[1986 மே 8

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 34,98,91,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாசில்தார்கள் அலுவலகத்தில் சாதி சான்றிதழ் அளிக்கப்படும் போது மனுதார்களிடம் பள்ளி சான்றிதழில் சாதி குறிப்பிடப் பட்டிருந்து சட்டப் பேரவை உறுப்பினர்களிடம் சாதிசான்றிதழ் பெற்று வந்தால்தான் கொடுக்க முடியும் என்ற நிலையை மாற்ற வேண்டிய நிலை குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 34,98,91,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(முற்பகல் 10-20)

**(ஈ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 74,94,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 74,94,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1986 மே 8]

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களில் பகுதி நேர எழுத்தர்களாக உள்ளவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 74,94,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வழங்கும் இத்தகைய ஓய்வு ஊதியங்களை விலைவாசி உயர்வுக்கேற்றபடி உயர்த்தித் தர வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 74,94,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**(உ) கோரிக்கை எண் 43—பல்வகை**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,04,41,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,04,41,92,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1986 மே 8

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,04,41,92,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஊ) கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,04,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,04,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(எ) கோரிக்கை எண் 59.

மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,01,22,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."



1986 மே 8]

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,01,22,92,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன. பேரவை விதி 211(3)-ன் படி இன்று விவாதம் பிற்பகல் 1 மணிக்குள் முடிவுற்று வாக்கெடுப்பு நடத்த வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கோரப்பட்ட பல்வேறு மானியக் கோரிக்கைகளைப் பற்றிய விளக்கக் குறிப்புகள் @ மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு முன்பே அளிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் அவைக் குறிப்பிலே ஏற்றி, விவாதத்தை தொடங்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கை மாநிலச் சட்டமன்றம், தேர்தல்கள், தலைமையிடப் பணியாளர்கள் போன்ற மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். இன்றையதினம் சட்டமன்றம் என்ற ஒன்று இருக்கிறபொழுது, அந்தச் சட்ட மன்றத்திலே கேட்கின்ற கேள்விகளுக்கெல்லாம் அமைச்சர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், முதலமைச்சருடைய இலாகா சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்கும் போது, அவர் பதில் சொல்லக்கூடிய நிலை இல்லையென்று சொன்னாலும், அவருடைய மானியக் கோரிக்கைகளைப் போன்றவற்றை, அவை முன்னவர் இங்கே எடுத்து விளக்கம் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். இது போன்று முதல்

---

@ 709-766-ம் பக்கங்களில் இணைப்புகள் III, IV, V, VI, மற்றும் VII ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[திரு. எஸ். சிவராமன்] [1986 மே 8

அமைச்சருக்குப் பதிலாக, அவை முன்னவர் அவர்கள் அந்தக் கேள்விகளுக்குப் பதில் அளித்தால், பொதுவாக, அங்கங்கே நடைபெறுகிற சில குறைபாடுகளை நீக்கவும், முதல் அமைச்சருக்குத் தெரிந்துவிட்டது என்று அந்தக் காரியங்களை, உடனடியாகச் செய்து முடிக்க வேண்டுமென்று அரசு அதிகாரிகள் மத்தியிலே ஒரு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டு, அந்தக் காரியங்களைச் சுமுகமாக முடித்து விட வாய்ப்பிருக்கும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்திலே, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிக்குச் செல்கிறபொழுதும், அமைச்சர்கள், சட்டமன்ற தொகுதிகளுக்கு வருகின்றபொழுதும், அங்கே அரசு விழாக்கள் நடத்துகிற நேரத்திலே, முறையாக, சில இடங்களில் நடைபெறுவதில்லை, சட்டமன்ற உறுப்பினர் இல்லாத நேரத்திலும், சட்டமன்ற உறுப்பினருக்கே தெரியாமலும், அமைச்சர் அவர்கள் தொகுதிக்கு வந்துவிடுகிறார்கள். முறையாக தெரியப்படுத்தி வருவதில்லை. சட்டமன்ற உறுப்பினர் அந்த தொகுதியில் இருந்தால் அதை விடுத்து வேறொரு சட்டமன்ற உறுப்பினர் அல்லது அரசு அதிகாரியை வைத்து அந்த விழாக்களை நடத்திவிடுகிறார்கள். இதனால் அந்தந்த தொகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் மரியாதையை இழக்கிறார்கள். அதிகாரிகள் மத்தியிலும் அவர்களுக்கு மரியாதை இல்லை. நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி, பிரதமர் அவர்கள் கூட, ஒரு சட்டமன்ற உறுப்பினர் கடிதம் எழுதினால், அந்தக் கடிதத்திற்கு பதில் எழுதும்போது அவர்களே கையொப்பம் இட்டு பதில் போடுகிறார்கள். உங்களுடைய மனு கிடைக்கப் பெற்றது. அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி. . . . (குறுக்கீடு).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சிவராமன் அவர்கள் பேசும்போது அமைச்சர் அவர்கள் போகும்போது அந்தத் தொகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தி கூறியிருக்கிறார்கள். அதே கருத்து மத்திய அரசிலிருந்து வருகின்ற அமைச்சர்களுக்கும் பொருந்துமா? அவர்களும் அங்கங்கே



1986 மே 8] [திரு. வே. இரா. ஜெயராமன்]

இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் செல்வார்களா? இல்லையென்றால் அதற்கு என்ன வழிவகை வைத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மாநில சட்டமன்றம். நாடாளுமன்றம் அல்ல. அப்படி இருந்தால் அந்தந்தத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாடாளுமன்றத்திலே முறையாக அந்தப் பிரச்சனையை கிளப்பி ஒழுங்காக நடைபெறுவதற்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கலாம். மத்திய அரசிலிருந்து வருகின்றபோது அவர்கள் அந்தந்த மாநிலத்தில் உள்ள முதலமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் தெரியப்படுத்தி விட்டுத்தான் வருகிறார்கள். அவர்களை வைத்துத்தான் நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டு வருகிறார்கள். கடந்த கால நிகழ்ச்சிகளைப் பார்த்தால் மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர் எழுதுகின்ற கடிதங்களுக்கு அமைச்சர்கள் முறையாக பதிலை அனுப்புவது கிடையாது. இதை நான் வன்மையாக கண்டிப்பதோடு அல்லாமல் மிகவும் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர்களுக்கு பி.ஏ.க்கள் இல்லையா? உதவியாளர்கள் இல்லையா? அவர்கள் மூலமாக, குறைகளை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி கையொப்பம் இட்டு ஏன் கடிதம் அனுப்பக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த முறை மட்டுமல்லாமல் 3 முறைகள் இந்த சட்ட மன்றத்திலே, உறுப்பினர்கள் கேட்டும் உரிய மரியாதைகள் வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, சம்பந்தப்பட்ட ஆணைகளை செயலாளருக்கு அனுப்பினால் அவர்களும் கையொப்பமிட்டு தபாலில் அனுப்புவதில்லை. துணை செயலாளர் என்று சொல்லித்தான் கடிதம் அனுப்புகிறார்கள். ஒரு நாடாளுமன்ற அமைச்சராக இருந்தாலும், பிரதம அமைச்சராக இருந்தாலும் பல வேலைகள் இருந்தாலும் அவரே கையொப்பமிட்டு பதில் அனுப்புகிறார்கள். ஆனால் நமது மாநிலத்தில் உள்ள சட்டமன்ற அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும் ஏன் அப்படி கடிதங்களை அனுப்பக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வாறு இல்லாதது வேதனைக்குரியது. நான் இந்த சட்டமன்றத்தில்

[திரு. எஸ். சிவராமன்] [1986 மே 8

இரண்டு அமைச்சர்களை குறிப்பிடுகிறேன். பெயரைச் சொல்ல விரும்பவில்லை. தன்னுடைய சட்டமன்ற உறுப்பினரை கலக்காமல் தொகுதிக்கு வருகிறார் என்று சொன்னால், நான் உங்களுடைய தொகுதிக்கு வருகிறேன். நிகழ்ச்சிகளை அரசு அதிகாரிகளிடம் தந்திருக்கிறேன். அவர்கள் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வார்கள் என்று அமைச்சர் கடிதத்திலே குறிப்பிட்டிருக்கிறார். ஒத்துழையுங்கள் என்று எழுதுகிறார்கள். சட்டமன்ற மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்னென்ன குறைகளைச் சொல்கிறாரோ அந்தக் குறைகளை வகுத்து அத்தனையும் நிவர்த்திக்கப்படும் என்று சொல்லி சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர் இத்தனை குறைகளை சொல்லியிருக்கிறீர்கள், இந்த குறைகள் மீது நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒரு அமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறார். ஆக இதுபோன்ற அமைச்சர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். தண்ணீர் தண்ணீர் படத்திலே பி.ஏ.வை கூப்பிடுவது, கலெக்டரை கூப்பிடுவது, தாசில்தாரை கூப்பிடுவது போன்று சினிமா எடுத்தார்கள். அதுபோன்ற நிகழ்ச்சியைத்தான் நாம் இங்கே பார்த்துக் கொண்டிருக்கிறோம். என்னுடைய தொகுதியிலிருந்து நான் ஒரு மனுவை கொடுத்தேன். அந்த அதிகாரி பி.ஏ. இந்தாருங்கள் என்று சொல்லிவிட்டார். அந்த காரியங்கள் முடிந்தவுடன், அது பற்றிய விழாக்கள் எல்லாம் நடந்து முடிந்தவுடன் தான் அவரிடமிருந்து உங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று கடிதம் வருகிறது. இது நிர்வாகத்திலே எவ்வளவு சீர்கேடான நிலைமை என்பதையும், அந்த நிர்வாகத்தில் எவ்வளவு கவனக் குறைவாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன். இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குச் செல்லும்போதும், சட்டமன்றத்திற்கு வரவேண்டுமென்றாலும் பஸ்ஸிலே வரவேண்டிய நிலை இருக்கிறது. டிரெயினில் வருகின்றவர்களுக்கு 50 காசு கூப்பன் 1 ரூபாய் கூப்பன் என்று கொடுத்துவிடுகிறார்கள். அதைக் கொண்டுபோய் கௌண்டரில் கொடுத்தால் அவர்கள் எங்களால் இப்போது முடியாது, நாளை வாருங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். இதுபோன்ற நிலைமை இருக்கிறது. இதற்கு முன்னால் தி.மு.க. காலத்தில் என்று நினைக்கிறேன். எந்த இடத்தில் பஸ் புறப்பட்டதோ அந்த இடத்திலிருந்து



1986 மே 8] [திரு. எஸ். சிவராமன்]

சட்டமன்ற உறுப்பினருடைய வி.ஐ.பி. சீட் காலியாக வந்து கொண்டே இருக்கும். வழியிலே இருக்கக்கூடிய தொகுதி

(முற்பகல் 10-30)

சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற வேண்டுமென்றால் ஏறிக் கொள்வார்கள். ஒரு நாள் அல்ல; இரண்டு நாள் அல்ல; சட்டமன்றம் நடக்கிறபோது நாங்கள் வரவேண்டும் என்றால் சேலம், கோயம்புத்தூருக்கு டிக்கட் பதிவு செய்யவேண்டும். இடையிலே திடீரென்று வரவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டால் பஸ் ஸ்டாண்டிலே விடிய விடிய காத்துக் கொண்டு இருக்கிற நிலைமை ஏற்படுகிறது. இதை மனதில் கொண்டு வி.ஐ.பி. சீட் காலியாக வரவேண்டுமென்று சொல்லி உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

சட்டமன்றம் முடிந்து ஊர்களுக்குச் செல்ல வேண்டும் என்றால் சட்டமன்ற வளாகத்திற்குள்ளேயே, பார்லிமெண்டில் இருப்பதுபோல் இரயில்வே கவுண்டர் ஒன்று திறக்க வேண்டும். சட்டமன்ற வளாகத்தில் மட்டுமல்ல, அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி இருக்கின்ற இடத்திலும் இரயில்வே கவுண்டரும், தபால் போடுவதற்கும், ஸ்டாம்ப் ஒட்டுவதற்கும் உதவுகின்ற வகையில் தபால் ஆபீஸ் ஏற்பாடு செய்வதோடு ஸ்டாம்ப் ஃப்ரீயாகக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். எனவே அந்த வகையில் அந்தத் தபால்களை முறையாக அனுப்புவதற்கு சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் ஒரு போஸ்ட் ஆஃபீஸ் நிறுவுவதற்கு அரசு வழி காண வேண்டும். இரயில்வே புக்கிங் ஆபீஸ் நிறுவ வேண்டும்.

டெல்லிக்குச் செல்கிறோம் என்றால் அங்கே தமிழ்நாடு இல்லம் என்று ஒன்று இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் தமிழ்நாடு இல்லத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் முன்கூட்டியே அதற்கு இங்கே இருந்து முறையாகத் தகவல் வந்தால்தான் நாங்கள் அறையை ஒதுக்குவோம் என்று சொல்கிறார்கள். ஆனால் திடீரென்று செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அங்கே இருக்கிற அதிகாரியைப் பார்த்துக் கேட்டால் முன்கூட்டியே எங்களுக்குச் செய்தி வரவில்லை, எனவே கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். இதனால் இடம் தேடி அலைகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதை மாற்றி அங்கே சென்றவுடன் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறைகள் ஒதுக்க வழிவகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். சிவராமன்] [1986 மே 8

தமிழ்நாடு இல்லத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகளும், வேலையாட்களும் முறையாக சட்டமன்ற உறுப்பினர்களைப் பராமரிப்பது இல்லை. அவர்களுக்கு ஏதாவது டிப்ஸ் கொடுத்தால்தான் முறையாகப் பராமரிக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. சட்டமன்ற உறுப்பினர்களுடன் துணையாக கணவனோ, மனைவியோ சென்றால் அங்கே அறைகள் ஒதுக்குவதில் சிரமம் இருக்கிறது. உதவிக்கு யாரையாவது அழைத்துச் செல்ல வேண்டும் என்றால் அவ்வாறு உதவிக்குச் செல்லக்கூடிய நபருக்கு 100 ரூபாய் என்று முன்பு வைத்திருந்ததை இப்போது 200 ரூபாய் என்று ஆக்கியிருக்கிறார்கள். இது தேவையில்லாத ஒன்று. உடல்நலம் சரியில்லாத சூழ்நிலையில் துணைக்கு ஒருவரை அழைத்து வருகிறோம் என்றால் அவர்களுக்கு 200 ரூபாய் என்று விதிப்பது தேவையில்லாத ஒன்று. எவ்வளவோ செலவு அரசு செய்கின்ற நிலைமையில் இதைப் போய் பெரிதாக நினைக்க வேண்டியதில்லை. எனவே அதை மாற்றியமைக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் டெல்லிக்குச் செல்ல வேண்டும் என்றால் அங்கே கார் வசதி இல்லை. ஏர்போர்ட்டுக்கு வருவதற்கும் கார் வசதி இல்லை. அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டும் என்றாலும் கார் வசதி இல்லை. எனவே கார் வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் பணியாற்றக்கூடிய அதிகாரிகளும், பணியாட்களும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 23—7—1980 என்று நான் நினைக்கிறேன். சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்கள். அதாவது சட்டமன்றப் பேரவையில் பணிபுரியும் ஆட்களுக்கு இலவச பஸ் பாஸ் வசதி செய்து கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அமைச்சரின் வாக்குறுதி அளிக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகி விட்டன. ஜீ.ஓ. 1001, ட்ரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்ட் உத்தரவு 23—9—1980 அன்று பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அமைச்சரின் உத்தரவு காற்றிலே பறக்கவிடப்பட்டது. ஏன் அது கொடுக்கப் படவில்லை? அவர்கள் எவ்வளவு அவதிக்குள்ளாகிறார்கள் என்பதை நாம் நினைக்க வேண்டும்.



1986 மே 8] [திரு. எஸ். சிவராமன்]

சட்டமன்றத்திலே வருகின்ற அமைச்சர்களின் மானியக் கோரிக்கைகளை ஆய்வு செய்கிறபோது அமைச்சர்களுக்கு என்று தனியாக அரசு அதிகாரிகளை வைத்துக்கொண்டு செயல்படுகிறார்கள். ஒவ்வொரு அமைச்சருக்கும் தனித்தனியாக குழுக்கள் அமைத்து அந்தக் குழுக்களின் மூலமாக அமைச்சர்களுக்கு ஆலோசனை கூறினால் இங்கே அதிகமான விவாதங்களும் கான்ட்ரோவர்சியும் வராமல் இருக்க வாய்ப்பு ஏற்படும். கட்சிப் பாகுபாடு இல்லாமல் இப்போது பொதுக்கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு ஆகியவை அமைக்கப்பட்டிருப்பதுபோல் இந்தக் குழுக்களையும் அமைக்கவேண்டும். அதாவது பெட்டிஷன் கமிட்டி, கமிட்டி ஆன் பேப்பர்ஸ் ப்ளேஸ்ட் ஆன் தி டேபிள் ஆஃப் தி ஹவுஸ், கமிட்டி ஆன் லைப்ரரி என்ற மூன்றும் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு மேலும் மூன்று கமிட்டிகள் அமைக்கின்றபோது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கம் வகிக்கவும், அதிகப்படியான சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கவும் வாய்ப்பு ஏற்படும். அப்படி வாய்ப்பு ஏற்படுகிற போது குறைகளைப் போக்கி, முறையாகச் செயல்பட வாய்ப்பு ஏற்படும். அந்தக் குழுக்களை ஏற்படுத்துகிறபோது அவற்றுக்கென்று தனிப் பிரிவுகளையும் ஏற்படுத்த வேண்டும். அதற்குச் செயலாளர், துணைச் செயலாளர் ஆகிய பதவிகளையும் உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால் பல பிரிவுகளில் பணிபுரிகின்றவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு, 1981-ம் ஆண்டிலிருந்து வரவு-செலவுத் திட்டத்தை தயார் செய்வதற்காக வருடத்திற்கு ஆறு மாதங்களுக்கு நிதித் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. இதைத்தவிர அவர்களுக்கு பாக்கெட் அலவன்சும் வழங்கப்படுகிறது. கேரளம்தான், கர்நாடகா, ஒரிஸ்ஸா, கோவா போன்ற மாநிலங்களில் சட்டமன்றப் பேரவைச் செயலக பணியாளர்களுக்கு அவர்களின் பணியின் தனித்தன்மையைக் கருதி இதுபோன்று வழங்கப்படுகிறது. அதுவே சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நிதித் துறையில் கொடுப்பதைப் போலவும், மற்ற மாநிலங்களில் கொடுப்பதைப் போலவும் ஆறு மாதங்களுக்கு மதிப்பூதியம் கொடுக்கலாம். பணியின் தனித்தன்மை கருதி அடிப்படை சம்பளத்தில்

50 சதவீதத்தை ஆறு மாதங்களுக்கு அவர்களுக்கு வழங்கலாம். அந்தப் பணியாளர்களுக்கு அப்படி கொடுத்தால் பணிகள் முறையாக நடப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே இதனை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு ஆதரவாக தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகிற சுமார் 1,888 பேர்கள் இருந்தார்கள். ஆதரவாக இருந்த அத்தனை அலுவலர்கள் மீதும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அவர்கள் மீது மேல் நடவடிக்கையெடுக்காமல் இருக்கவேண்டுமென்றால் வருத்தம் தெரிவித்து கடிதம் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தி வாங்கப்பட்டது. அப்படி கடிதம் வாங்கப்பட்டு இன்றைக்கு சிலருக்கு மீண்டும் பணி நியமனம் கொடுக்கப்பட்டது. போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் வருத்தம் தெரிவிக்காததால் சுமார் 35 பேர்கள் என்று நினைக்கிறேன், இன்னும் பணியில் அமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். இதுகுறித்து சொல்லப்படுகிற காரணங்கள். போராட்டத்தில் கலந்து கொண்டார்கள், கையொப்பம் போட்டுவிட்டு வேலைக்கு வராமல் அரசு விதியை மீறினார்கள். போராட்டத்தில் பிற அலுவலர்களையும் கலந்துகொள்ளச் செய்தார்கள். ஆகவே இந்தக் காரணங்களைச் சொல்லி அவர்கள் இன்னும் பணியில் அமர்த்தப் படாமல் இருக்கிறார்கள். கேட்டால் விசாரணை வைக்கப் பட்டது என்று சொல்லலாம். விசாரணை வைக்கப்பட்டிருந் தாலும், அந்த விசாரணை முடிந்து மூன்று மாத காலம் ஆகிவிட்டது. இன்னும் 35 பேர்கள் பணியில் சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? நாம் போராட்டம் செய்தவர்களை வேலையில் சேர்த்துவிட்டோம். ஆதரவாக இருந்தவர்களை வேலையில் சேர்த்துவிட்டோம். மீதம் இருக்கிற இவர்களை வேலையில் சேர்க்காமல் இருப்பது வேதனைத் தருவதாக இருக்கிறது. ஆகவே மீண்டும் ஒரு போராட்டம் வெடிக்காமல் இருப்பதற்கு அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். போராட்டம் ஏற்பட்டால் நிர்வாக சீர் கேடுகளும், நிர்வாகம் ஸ்தம்பிக்கக் கூடிய நிலையும் ஏற்பட்டு விடும். அவர்களை உடனே பணியில் நியமிக்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)





**திரு. கே. குப்புசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மானியத்தின் மீது இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் ஒருசில முக்கியமான கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் சமுதாயத்தில் சாதாரண நடுத்தர குடும்பத்திலிருந்து வந்தவர்கள் என்பதை வலியுறுத்தி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வசதிகள் இருக்குமென்று யாரும் சொல்லி விட முடியாது. ஆகவே சட்டமன்றப் பணி சமுதாய முன்னேற்றத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை கருத்தில் கொண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மிக அத்தியாவசியமான தேவைகளை, அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய ஒரு கட்டாய சூழல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அவை முன்னவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**திரு. செ. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. ஆகவே இதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு. கே. குப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் சொன்னதைப் போல, இந்த அவையில் இருக்கிற உறுப்பினர்களின் ஒட்டுமொத்தமான கருத்துக்களைத் தொகுத்தே நான் இங்கே சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சில அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று அவை முன்னவர் அவர்களிடம் கேட்டால், அவை முன்னவர் அவர்கள் சொல்லக் கூடும், சட்ட சபையில் சரியாக உட்காராத உறுப்பினர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவதற்குப் பதிலாக, இருப்பதைக் குறைக்க வேண்டும்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே. குப்புசாமி] [1986 மே 8

என்று கூட அவர்கள் கருதக்கூடும். ஆனால் பாராளு மன்றத்திலே கூட கோரம் இல்லை என்று பலமுறை பாராளு மன்றம் ஒத்திவைக்கப்பட்டதை நாம் பத்திரிகையில் பார்த்திருக் கிறோம். பல சட்டமன்றங்கள் கூட கோரம் இல்லாததால் ஒத்திவைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் நம்முடைய சட்ட மன்றத்தை பொறுத்தவரையில் கோரம் இல்லை என்று சொல்கிற நிலை ஏற்படாத அளவில் உறுப்பினர்கள் எப்போதுமே தாராள மாக இங்கே கூடியிருக்கிறோம். இங்கே உறுப்பினர்கள் பேசு வதற்கு போதிய நேரம் இல்லை என்ற குறை இருக்கிறதே தவிர, இந்த கோரப் பிரச்சனை என்றுமே இங்கே வரவில்லை. அந்த வகையில் இந்த உறுப்பினர்கள் தங்களுடைய பணிகளை, தேர்ந்தெடுத்த மக்களுக்கும், சமுதாயத்திற்கும் நல்ல முறையில் செய்வதற்கு அவர்களுக்கு சில அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டும் என்ற காரணத்தால், நான் சிலவற்றை அவை முன்னவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

சாதாரணமாக இந்த மானியத்தில் மட்டும், ஆண்டாண்டு நம்முடைய நாவலர் அவர்கள் ஏற்கனவே முடிவு செய்து கொண்டு வந்து விடுவார்கள், என்ன செய்வது என்று. ஆனால் இன்று மட்டும் அதற்கு ஒரு விதிவிலக்காக அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகிறேன். உறுப்பினர் களுடைய எண்ணங்களை எல்லாம் கேட்டு, அவற்றை முடிந்த வரையில் நீங்கள் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றே கூட அதற்கு பதில் சொல்ல முடியாவிட்டாலும் கூட நாளைக்குக் கூட முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, சில பிரச்சனைகளுக்குப் பரிகாரம் காணவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நாம் சுற்றுப்புற சுகாதாரச் சூழல் பற்றி எல்லாம் இங்கே சொல்கிறோம். சட்டமன்றத்தில் உள்ள இந்த இருக்கைகள் மற்றும் அந்த இருக்கைகளைச் சுற்றி உள்ள இடங்கள் எல்லாம் சுத்தமாக இருப்பது இல்லை. சில நேரங்களில் துர்நாற்றங்கள் கூட வருகின்றன. எனவே இதை நாள்தோறும் சுத்தம் செய்து, ஸ்ப்ரே போன்றவற்றைத் தெளித்து, இங்கே தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு நாம் முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1986 மே 8] [திரு. கே. குப்புசாமி]

அடுத்து இந்த விடுதியைப் பொறுத்தவரையில், விடுதியில் பல பணியாளர்கள் இருக்கிறார்கள். நிரந்தரம் வேண்டும் என்று கேட்கிறார்கள். 10 ஆண்டுக்காலம் வேலை செய்கிறோம், நிரந்தரம் வேண்டும் என்று சொல்கிறார்கள், ஆனால் அந்த விடுதியில் உள்ள கேட்டுகளில், வாசல்களில் வாட்ச்மேன்கள் நிற்பதே கிடையாது. இதுவரையில் நாங்கள் அந்த வாட்ச் மேனைப் பார்த்ததே கிடையாது. கேட்டுகளில் நிற்கக்கூடிய அந்த வாட்ச்மேன்கள் தங்களுடைய பணிகளைச் செய்வதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய விடுதியிலே பொதுப்பணித் துறை இருக்கிறது. அவர்களிடம் எந்தக் கோரிக்கையைச் சொன் னாலும், 8 மாதத்திற்கு குறைந்து அவர்கள் நடவடிக்கை எடுப்பது கிடையாது. காரணம் அவர்கள் நம்முடைய சட்ட மன்றத்தின் கன்ட்ரோலில் இல்லை. ஆகவே Public Works Department's Wing in the Legislator's hostel should be brought under the control of the Legislature or the Legislative Assembly Secretary. எனவே நம்முடைய கன்ட்ரோலில் அவர்கள் இருந்தால் தான் உரியவற்றைப் பற்றிச் சொல்ல முடியும். உதாரணமாக குழாய்கள் வேலை செய்யவில்லை, மற்றும் பி.டபிள்யூ.டி. சம்பந் தப்பட்ட மற்ற குறைகளைச் சொல்லும்போது அவர்கள் அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு உதவியாக இந்தத் துறையின் முழுமையான கன்ட்ரோலில், நம்முடைய சட்டப்பேரவைச் செயலாளர் அவர்களுடைய நிர்வாகத்தின்கீழ் கொண்டு வர வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காரணம் நம்முடைய ஹவுஸ் கமிட்டி என்று ஒன்று இருக் கிறது. அந்த கமிட்டியிலே பல பரிந்துரைகளைச் செய்திருக் கிறார்கள். ஆனால் ஒரு பரிந்துரையைக்கூட இதுவரை இந்தப் பொதுப் பணித் துறையால் நிறைவேற்றப்படவில்லை, செய்து கொடுக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் "The recommendations of the Committee are always ignored rather than implemented" என்றுதான் சொல்ல வேண்டும். எனவே கமிட்டியை வைத்துக் கொண்டு, அந்தக் கமிட்டியினுடைய பரிந்துரைகளை நாம் இக்னோர் செய்வது சரியாக இருக்காது. எனவே அவற்றுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து ஹவுஸ் கமிட்டியினுடைய பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. குப்புசாமி] [1986 மே 8

அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளுக்குச் சென்று பணியாற்றும்போது, நாள்தோறும் ஏராளமான பொது மக்கள், மற்றும் வாக்காளர்கள் அங்கே வந்து அவர்களிடம் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி பேசுகிறார்கள். எனவே அவற்றை எல்லாம் ஒழுங்குபடுத்தி, அவற்றைச் செய்து கொடுக்கிற அவகாசம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பதில்லை. எனவே அதைத் தொடர்ந்து பணியாற்றி, அவற்றைச் செய்து முடிப்பதற்கு ஒரு உதவியாளர் கிடையாது. மகாராஷ்டிராவில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதற்கு என்று உதவியாளர்கள் கொடுத்து இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுடைய பணியைச் செவ்வனே செய்வதற்கு ''ஒரு மாதம் 500 ரூபாய் சம்பளத்தில் ஒரு உதவியாளரை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். எனவே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பணி, பொதுமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இருக்கிற தொடர்பு நல்ல முறையில் இருப்பதற்கு உதவியாளரைக் கொடுக்க வேண்டும். நாங்கள் இங்குள்ள குழுக்களின் மூலமாக அங்கே செல்லும் போது, இப்படிப்பட்ட விஷயங்களை அறிந்து கொள்கிற வாய்ப்பிருக்கிறது. இது ஒரு நீண்ட கால கோரிக்கை. எனவே நம்முடைய அவை முன்னவர் அவர்கள் இந்த ஆண்டு இந்தக் கோரிக்கையை அன்போடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அதேபோன்று, இப்போது தொகுதிகளிலே இருக்கின்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்குக்கூட குவாட்டர்ஸ் இருக்கிறது. ஆசிரியர்களுக்கு இருக்கிறது; எல்லோருக்கும் இருக்கிறது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் தொகுதியிலே இருந்து பணியாற்றுவதற்கு அவசியம் குவாட்டர்ஸ் வேண்டும். தங்குகின்ற இடம் வேண்டும். பல மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுபோன்று குவாட்டர்ஸ் இருப்பதாக நான் அறிகிறேன். அதுபோன்று, ஒரு குவாட்டர்ஸ், ஒரு உதவியாளர் என்ற நிலை ஏற்படுமேயானால் அவர்கள் அந்த குவாட்டர்சுக்குச் சென்று—அந்த இருப்பிடத்திற்குச் சென்று தொகுதி மக்களை நாள்தோறும் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளைப் பெற்று அவற்றை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படும்.



1986 மே 8] [திரு. கே. குப்புசாமி]

இப்போது, ரயில்வே கூப்பன்களைப் பற்றியெல்லாம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிவராமன் அவர்கள் பேசினார்கள். ரயில்வே கட்டணம் இப்போது உயர்ந்து இருக்கிறது. 4 ஆயிரம் ரூபாய் கொடுத்தீர்களே அதற்கு பின்னாலேகூட உயர்ந்து இருக்கிறது. உயர்ந்த கட்டணத்தை இந்த ஆண்டு நீங்கள் கொடுப்பீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அதிலே ஒன்றை மட்டும் சொல்கிறேன். பிற மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்கள் பலவற்றில் இதை பணமாகக் கொடுத்து விடுகிறார்கள். இந்த ரிசர்வேஷன் செய்வது என்பது மிகக் கஷ்டமான காரியமாக இருக்கிறது. இங்கிருந்து ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று அந்தக் கூப்பன்களைக் கொடுத்து, வாங்கி மீண்டும் 'கன்பார்ம்' செய்து எமர்ஜென்சி கோட்டாவிலே கொடுத்து, ஏகப்பட்ட பிரச்சனைகள் உண்டாகின்றன. இடைத் தரகர்களைப் பிடித்து இடம் பெறுகின்ற ஒருநிலைக்கு சில நேரங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் தள்ளப்படுகிறார்கள். எனவே அந்த நிலையை மாற்றுவதற்கு, இந்த ரயில்வே கொடுக்கிற கூப்பனுக்கு பதிலாக—இந்த ஆண்டு கூப்பன்களைப் பெற்றுவிட்டீர்கள்—அடுத்த ஆண்டிலிருந்து அதற்குரிய கட்டணத்தை பணமாக நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவீர்களேயானால், அவர்களுடைய பணி மிக எளிதாக இருக்கும் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படியில்லாவிட்டால், நாம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு செல்வதற்குப் பதிலாக. விடுதியிலேயே ஒரு ரிசர்வேஷன் கௌண்டரை ஆரம்பிக்க வேண்டும் என்றும், இதுபோன்று பார்லிமெண்டிலேகூட ரிசர்வேஷன் கௌண்டர் இருக்கிறது, ஆகவே ஒரு ரிசர்வேஷன் கௌண்டரை ஆரம்பிப்பது உறுப்பினர்களுக்கு மிகுந்த நன்மை பயக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

போஸ்டல் எக்ஸ்பெண்டிச்சர் — சாதாரணமாக நாள்தோறும் பலவித கடிதங்களுக்கு பதில் எழுத வேண்டியிருக்கிறது. தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. பல மாநில சட்டமன்றங்களில், குறிப்பாக குஜராத் சட்டமன்றத்தில் உறுப்பினர்களுக்கு மாதம் 300 ரூபாய் போஸ்டல் எக்ஸ்பெண்டிச்சருக்காகவே தனியாக கொடுக்கிறார்கள். நம்முடைய சட்டமன்றத்திலே அது நடைமுறையிலே இல்லை. அந்த போஸ்டல் எக்ஸ்பெண்டிச்சரை ஓரளவுக்கு குஜராத்தைப்போல இங்கேயும் கொடுப்பதற்கு நாவலர் அவர்கள் முன்வருவார் என்று நம்புகிறேன்.

[திரு. கே. குப்புசாமி] [1986 மே 8

இதுபோன்று பஸ் பாஸ்—பஸ்ஸிலே செல்வதற்கு பாஸ் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு பஸ்ஸிலே ஸ்லீப்பர் பகுதி சீட் இருக்கிறது. உட்காருவதற்கான இடம் இருக்கிறது. ஆனால் ஒரே பஸ்ஸிலே செல்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஸ்லீப்பரை பயன்படுத்த முடியாது. பின்னாலே சீட்டிலேதான் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். அது ஏதோ ஒரு செகண்ட் கிளாஸ் ரிசர்வேஷனைப் போல இருக்கிறது. இதிலே ஒன்றும் அதிகமான தொகை வந்துவிடப் போவது இல்லை. எனவே 'ஏர்கண்டிஷனிங்' செய்யப்பட்ட கோச்சாக இருந்தாலும், ஸ்லீப்பராக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாக அதில் பயணம் செய்வதற்கு—எல்லா சீட்களையும் ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை—4 சீட்டோ அல்லது 2 சீட்டோ அந்த ஸ்லீப்பரிலும், ஏ.சி.யிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ரிசர்வேஷன் செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்று, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ் பாஸ் வசதி கிடையாது. அவர்களுக்கு மருத்துவ வசதி செய்திருக்கிறோம். சட்டமன்ற விடுதியிலே தங்குகின்ற வசதி இருக்கிறது. பஸ் பாஸ் வசதி இல்லை. அவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கர்நாடக மாநிலத்தில் ஒரு நல்ல பழக்கம் இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள் அந்தத் தலைநகருக்கு வந்த உடனேயே மற்ற இடங்களுக்கு, வீடுகளுக்கு, அமைச்சர்களுடைய இடங்களுக்கு, அரசு அலுவலகங்களுக்கு செல்ல வேண்டுமென்றால் மிக நீண்ட நெடுந்தொலைவில் இருக்கின்ற வீடுகளுக்கு செல்ல வேண்டுமென்றால், அதிக கட்டணம் ஏற்படுகிறது. டாக்சியில் போவது என்றால் 100 ரூபாயாவது வேண்டும். அதைக் குறைக்கின்ற நிலையில், அங்கே கவர்ன்மெண்டிலே, அரசே டாக்சிகளை வைத்திருக்கிறது. சட்டமன்ற வளாகத்தில், சட்டமன்ற விடுதியில், அரசே 5, 6 டாக்சிகளை வைத்திருக்கிறார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதிக் கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறது. அந்த நிலையை இங்கேயும் ஏற்படுத்தினால்,—இங்கே இருந்து கிரீன் வேஸ்-க்கும், அண்ணா நகருக்கும் செல்லும்போது



1986 மே 8] [திரு. கே. குப்புசாமி]

சம்பளத்திலே பெரும்பகுதி அதற்காகவே சென்று விடுகிறது—இந்த நிலை குறையும் என்பதால், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு, மெடிக்கல் ரீ-இம்பர்ஸ்மெண்ட், என்று இருக்கிறது. மற்ற மாநிலங்களிலே, குறிப்பாக மத்திய பிரதேசத்திலே, ஜம்மு—காஷ்மீரிலே எல்லாம் இந்த மெடிகல் ரீ-இம்பர்ஸ்மெண்ட், டாக்டரிடம் சென்று, பில்லை வாங்கி, அதற்குப் பிறகு இங்கே வந்து அதைச் செலுத்தி செக் வாங்குவதற்குப் பதிலாக ஆண்டுதோறும் அதற்கான கணிசமான ரூபாயை கணக்கிட்டு, பணமாக, மாதா மாதம் கொடுத்து விடுகிறார்கள். மெடிக்கல் ரீ-இம்பர்ஸ்மெண்ட் என்பதற்கு பதிலாக பணமாகவே கொடுத்து விடுகிறார்கள். அந்த ஒரு சிஸ்டத்தை இங்கேயும் பின்பற்றுவது மெம்பர்களுக்கு உதவியாக இருக்கும்.

அத்தோடு, கர்நாடகத்திலே இன்னொன்றையும்கூட செய்திருக்கிறார்கள். பிரைவேட் நர்சிங் ஹோம்—இப்போது அரசினர் மருத்துவ மனையிலே நாம் சிகிச்சை பெற்றால்தான் அந்த பில்களை இங்கே நாம் பணமாகப் பெற முடியும். சட்ட மன்ற உறுப்பினர்கள் தனியார் மருத்துவ மனைகளிலே சிகிச்சை பெற்றால் கூட அதற்கான தொகையைக் கொடுத்து விடுகிற ஒரு தன்மை, கர்நாடக சட்ட மன்றத்திலே இருக்கிறது. அதை இங்கே ஏற்படுத்தினால் அது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிகவும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதோடு நம்முடைய சட்டமன்ற விடுதியில் இங்கே சட்ட மன்றம் கூடுகின்ற நேரத்தில் அதை பிரியாக விடுகிறார்கள். மற்ற நேரங்களில் 2½ ரூபாய் வாங்குகிறார்கள். இதனால் அரசுக்கு ஒன்றும் பெரிய தொகை வந்து விடாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அவர்கள் பீரியடு முழுவதற்கும் இலவசமாக வழங்குகின்ற ஒரு நிலையை — சட்டமன்றக் கூட்டம் நடந்தாலும் சரி, நடக்காவிட்டாலும் சரி — ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் Family Pension -ஐ பொறுத்தவரையில் பதவியில் இருப்பவர் இறந்து விட்டால் அவர்கள் பதவி காலம் முடியும் வரை அவர்கள் குடும்பத்தினருக்கு, legal heirs -க்கு

மாதம் 250 ரூபாய் கொடுக்கிற பழக்கம் இருக்கிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் பதவி விலகிய பின்னால் அவர்களுக்கு பென்ஷன் கொடுப்பது அவர்கள் வாழ்க்கை முழுவதும் இருக்கிறது. ஆகவே அவர்கள் இறந்து விட்ட காலத்தில் அவர்கள் குடும்பத்திற்கு வாழ்நாள் முழுமைக்கும் **Pension** கொடுக்கிற வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஸ்டேஷனரி. இங்கே அலுவலகத்தில் கொடுக்கிற பேப்பர்கள், லெட்டர் பேடுகள் மற்றவைகள் எல்லாம் தரமாக இருக்கின்றன. எங்களுக்கு மொத்தமாகக் கொடுக்கிற பேப்பர்களால் பல பேனாக்கள் கெடுகின்றன. எனவே இங்கே கொடுப்பதைபோல தரமாக அங்கே கொடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு உறுப்பினர்களுக்கு அவர் அவர்களுடைய பெயர், தொகுதியின் பெயர் இவற்றை எல்லாம் லெட்டர் பேடுகளை இந்த துறையிலேயே பிரின்ட் செய்து கொடுத்து விட்டால் மிகவும் நன்றாக இருக்கும் என்று நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அதோடு இந்த Compensatory Allowance, ஈட்டுத் தொகை என்று தான் இப்போது கொடுக்கிறார்கள். தொகுதியில் சுற்றுப் பயணம் செய்வதற்கு Constituency Allowance என்று கிட்டத்தட்ட இப்போது எல்லா மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு குறிப்பிட்டத் தொகையை கொடுத்து வருகிறார்கள். அண்மையில் கூட பஞ்சாபில் 1,100 ரூபாய் Constituency Allowance என்று கொடுத்து இருக்கிறார்கள். அந்த அளவுக்கு கொடுங்கள் என்று நான் கேட்கவில்லை. மற்ற மாநிலங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து கொடுத்து இருக்கிறார்கள். அதை இங்கே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஒரு வேளை இல்லை என்றால், தொகுதியை சுற்றிப் பார்க்க மாதம் ஒரு முறை 50 லிட்டர் பெட்ரோல் கொடுக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களில் எல்லாம் இப்போது சேர்மென் வந்து விட்ட காரணத்தால் அந்த ஜீப்புகள் பெரும்பகுதி நல்ல நிலையில் இருப்பது இல்லை. அப்படி இருந்தாலும் அது சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைப்பது இல்லை. ஆக இந்த 50 லிட்டர் பெட்ரோலை உபயோகம் செய்ய முடியாமல் அந்த நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொந்த செலவில் வண்டிகளை எடுத்து அங்கே பயணம் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. எனவே இந்த Constituency Allowance கொடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அந்த 50 லிட்டர் பெட்ரோலுக்கு உண்டான தொகையை சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தோடு சேர்த்துக் கொடுப்பீர்களானால் அவரவர்கள் வசதிக்கு ஏற்ற வகையில் வண்டிகளை ஏற்பாடு செய்து தொகுதியில் சுற்றுப் பயணம் செய்கிற ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து இந்த சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், கோடை காலத்தில் இங்கே இருக்கிற பேன் காற்றில் கீழே உட்கார முடியவில்லை. ஏர் கண்டிஷன் என்பது இப்போது பெரிய லக்சுரி கிடையாது. It is a necessity என்ற அளவில் இப்போதுயஉள்ள பருவ சூழ்நிலையில், பருவ காலங்கள் மாறி வருகிற சூழ்நிலையில் இங்கே ஏ.சி. செய்ய வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். எவ்வளவோ செலவுகள் அரசாங்கத்தில் ஏற்படுகிறபோது மக்களுக்கு பணியாற்றுகின்ற, தொண்டு ஆற்றுகின்றவர்கள் இருக்கிற இடத்தில் ஓரளவுக்கு நல்ல சூழ்நிலையில் இருந்தால்தான் மனநிலையும் அதற்கு ஏற்ற வகையில் அமைகின்ற காரணத்தால் இதை மாண்புமிகு நாவலர் அவர்கள் பெருமனது வைத்து இந்த வளாகத்தையும், முடிந்த வரை அமைச்சர்கள் அறைகளையும், இவைகளை எல்லாம் சேர்த்து Centralised Air-Condition என்ற முறையில், பாராளுமன்றத்தில் இருப்பதை போல் இதையும் Centralised Air-Condition செய்ய வேண்டும் என்றும், அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் புதிய சட்டமன்றம் கட்டுவதற்கு இன்னும் கொஞ்சம் காலம் ஆகும். அதுவரை இந்த வெயிலில் துடிப்பதை விட, வேதனைப்படுவதை விட கொஞ்சம் இந்த ஏ. சி. வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மற்ற மாநிலங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் House-site. Building இவைகளை எல்லாம் பிரையாரிட்டியில் கொடுக்கிறார்கள்.

அவற்றிற்கு 2 லட்ச ரூபாய் லோன் கொடுக்கிறார்கள். Interest Free Loan கொடுக்கிறார்கள். வெகிக்கிள் வாங்குவதற்கு, வீடுகள் கட்டுவதற்கு 2 லட்ச ரூபாய் அவர்கள்Interest Free Loan கொடுக்கிறார்கள். பிரையாட்டியிலும் கொடுக்கிறார்கள். இந்த இரண்டும் இங்கே இல்லை. எனவே இந்த இரண்டையும் இங்கே நடைமுறையில் கொண்டு வருவதற்கு மாண்புமிகு நாவலர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து தொலைபேசி. விடுதிகளில் இருக்கின்ற தொலைபேசிகள் சரியாக வேலை செய்வதில்லை. அப்படி வேலை செய்தாலும் கூட, அதற்காகக் கட்டவேண்டிய கட்டணத்திற்கு, சம்பளம் போய்விடுகிறது. ப்ரீ கால்கள் கொடுக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் வீடுகளிலுள்ள தொலைபேசிகளுக்கும் ப்ரீ கால்கள் கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் கொடுத்திருக்கின்ற தொலைபேசிக்கான கட்டணத்தை செலுத்துவதில் சம்பளம் முழுவதும் போய் விடுகிறது. சாதாரண லோக்கல் கால்களுக்கு, விடுதியிலிருந்து செய்யப்பட்டாலும், வீடுகளிலிருந்து செய்யப்பட்டாலும், இரண்டிற்கும் ப்ரீ கால் கொடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இக்கோரிக்கைகளை சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக, அவர்களுடைய ஒட்டு மொத்த உணர்வாக இதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டத்துறையிலே பணியாற்றுபவர்கள், சட்டத்துறை சம்பந்தப்பட்டவர்கள், சட்டக் கல்லூரியில் படிப்பதற்கு சட்டத்துறையைச் சார்ந்தவர்களும், சட்டமன்றப் பணியாளர் களும், சட்டக்கல்லூரியில் இடம் தருகின்ற வகையில் அவர் களுக்கென, 5 சதவீதம், அல்லது 10 சதவீதக் கோட்டாவை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பார்ட் டைம், அதாவது பகுதி நேர சட்டக் கல்லூரியில் படிப்பதற்கு வழிவகைகளை உருவாக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஏராளமாக இங்கே என்னிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் பேசுமாறு. ஏற்கனவே நம்முடைய அவை முன்னவர் அவர்கள் மிகவும்





கோபமாக இருப்பார்கள். ஏராளமான கோரிக்கைகளை அவருடைய பரிசீலனைக்கு வைத்திருக்கிறேன். பெரும்பாலான வற்றை ஏற்றுக்கொள்வார்கள், ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பில் சமர்ப்பித்து அமர்கிறேன், வணக்கம்.

**திரு. கி. மனோகரன்** : அன்புள்ள துணைத் தலைவர் அவர்களே, (ஒரு குரல் — பேரவைத் தலைவர் உட்கார்ந்திருக்கிறார்) திடீர் திடீர் என்று ஆள் மாறாட்டம் செய்வதினால் வருகின்ற கோளாறு என்பதைத்தான் நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றப்பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சட்டமன்றம் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும், உறு பினர்கள் பற்றியும், மாவட்ட அதிகாரிகளைப் பற்றியும், பல்வகைச் செலவுகள் பற்றியுமான கோரிக்கைகள் மீது, மானியங்களின் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

முதல் முதலாக நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்பு கிறேன் என்னுடைய பணியைக் குறைக்கின்ற அளவிற்கு எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எது எது தேவை என்பதைப் பற்றி விளக்கமாக தெரிவித்திருக்கிறார்கள். சட்ட மன்றம் என்பது ஆங்கிலத்திலே சொல்லப் போனால், It is a place where the will of the people is expressed and heart-beats of the Nation are recorded. மக்களின் இதயத் துடிப்புகளை எதிரொலிப்பது அல்ல. அவர்களுடைய தீர்மானங்களைப் பதிவு செய்கின்ற இடங்கள் தான் சட்டமன்றம், நாடாட்சி மன்றம் என்பதை இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தெளிவாக உணர்வார்கள் என்று நான் மனதார விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் பொதுவாக சில பிரச்சினைகளைப் பற்றி மட்டும் சொல்லி, ஒரு மணிக்குள் விவாதத்தை முடித்துவிட வேண்டுமென்று கத்தி விழும் என்ற அச்சத்தின் காரணமாக நான் எனது கருத்துக்களை சுருக்கமாகச் சொல்லி விடைபெற விரும்புகிறேன்.

முதலில் நான் தெரிவிக்க விரும்புவது, சட்டமன்ற உறுப் பினர்கள் சட்டசபை எப்படி இயங்க வேண்டுமென்பதைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர்களே மிகத் தெளிவாக தெரிந்திருக்

கிறார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால், ஜனநாயக நிறுவனத்தைக் கட்டிக் காப்பாற்றுகின்ற அமைப்புகளில் ஒன்று எக்சிகியூடிவ், மற்றொன்று லெஜிஸ்லேச்சர், இன்னொன்று ஜுடிசியரி. கடைசியாக ஃபோர்த் எஸ்டேட் என்று கருதப் படுகின்ற பத்திரிகை.

(முற்பகல் 11-00)

இவைகள் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட்டால் தான், இவைகளுக்கென்று வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை மீறி ஒன்றையொன்று மோதல் ஏற்படாமல் இருந்தால்தான் நிச்சயமாக ஜனநாயகம் பிழைக்கும், தழைக்கும் என்பதை நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாக இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, அமைச்சர்களைப் பற்றிக் குறிப்பாக சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். நான் பொதுவாக அமைச்சர்களைப் பற்றிச் சொல்கிறேனே தவிர, இங்கே இருக்கின்ற அமைச்சர்களைப் பற்றி மட்டும் அல்ல என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு உண்மையை நீங்கள் மறந்துவிட மாட்டீர்கள் என்ற காரணத் திற்காக நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஜனநாயகம் இல்லாத நாடுகள் இயங்க முடியும். ஆனால் எதிர்க்கட்சி இல்லாத ஜனநாயகம் இயங்க முடியாது என்பதை அருள்கூர்ந்து மறந்து விடக்கூடாது

இங்கே இருக்கின்ற பிரச்சினை—சபாநாயகர் அவர்கள் வருத்தப்படக்கூடாது. எதிர்க்கட்சியின் சார்பாக தரப்படுகின்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அல்லது ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அல்லது கேட்க வேண்டும் என்று விரும்புகிற கேள்விகளுக்குத் தருகின்ற வாய்ப்புகள் பெரும் அளவுக்கு மறுக்கப்படுகின்றன என்ற உண்மையை நான் சொல்கிறபோது, சபாநாயகர் அவர்கள் மேற்கொண்டு எந்த அளவுக்கு எதிர்க் கட்சிகளுக்கு உதவிகரமாக இருக்க முடியுமோ அந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதற்காக நான் இந்தக் கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். என்னிடம் பல நண்பர்களே அதைப் பற்றி வருத்தத்தோடு சொன்னார்கள். சபாநாயகர் அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஓரபட்சமாக இருக்கக்கூடாது.



நம்மைப் பொறுத்தவரையில், நமக்குக் கிடைத்திருக்கின்ற சபாநாயகர் அவர்கள்—நிச்சயமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன் ஓரவஞ்சனையாக நடக்கமாட்டார் நடக்க விரும்ப மாட்டார். அவர் சட்டசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட நேரத்தில் பெருமகிழ்ச்சி அடைந்தவன் நான் என்ற முறையில் இந்தக் கருத்தை அவருக்குச் சொல்லி, நீங்கள் பலகீனமாக இருக்கிற அல்லது ஆள் எண்ணிக்கை குறைவாக இருக்கிற எதிர்க்கட்சிக்கு அதிக முக்கியத்துவம் தருவதன் மூலமாக, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு உதவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் அவரவர்கள் தங்களது கடமைகளை ஆற்றுகிறார்கள். ஆனால் அவர்கள் தவறிழைக்கின்ற நேரத்தில் தவறுகள் தெளிவாகத் தெரிகின்ற நேரத்தில் அந்தத் தவறுகள் அவர்கள் வகிக்கின்ற பொறுப்புக்கு களங்கத்தை, மாசைக் கற்பிக்கின்ற அளவில் அமைந்தால், அந்த உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்த உறுப்பினரை வெளியேற்றுகின்ற பொறுப்பு சபாநாயகருக்கு உண்டு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். 1951-வது ஆண்டு 'புரொவிஷனல் கவர்ன்மென்டில் அங்கத்தினராக இருந்த முட்கல்' என்ற நண்பர் சில வியாபார நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு, அந்த வியாபார நிறுவனங்கள் எழுதிக் கொடுக்கின்ற கேள்விகளை நாடாளுமன்றத்திலே வைத்து, நாடாளுமன்றத்திலே கிடைக்கின்ற பதில்களை அந்த 'பிஸினஸ்' நிறுவனங்களுக்குத் தந்து அதன்மூலம் பெறவேண்டியதைப் பெற்று அதற்குப் பிறகு உச்சக்கட்டத்தில், அந்த 'முட்கல்' என்ற உறுப்பினர் நாடாளுமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களை தனக்கு சாதகமாக அதற்கு உதவவேண்டும் என்று கோஷ்டி சேர்க்க ஆரம்பித்தது, பெருமதிப்பிற்குரிய காலம் சென்ற நேரு அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. சபையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 1951-வது ஆண்டு 'முட்கல்' என்ற அந்த நபர் நாடாளுமன்றத்திலே இருந்து நிரந்தரமாக வெளி யேற்றப்பட்டார் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, அமைச்சர்களைப் பற்றி நான் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், இந்த நாடு விடுதலை பெற்று ஏறத்தாழ 35 ஆண்டுகள் ஆனதற்குப் பிறகு எத்தனை கமிஷன்கள் அமைக்கப்பட்டன என்ற விவரம் முழுமையாக என்னிடம் இல்லாவிட்டாலும் நான் சிலவற்றை மட்டும் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

முதன் முதலாக அமைக்கப்பட்ட கமிஷன்

(1) S. R. Das Commission. சுட்டுக் கொல்லப்பட்ட கெய்ரோன் அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டை விசாரிப்பதற்கு, பிறகு,

(2) Ayyangar Commission.
(3) Mulla Commission.
(4) Iyenkar & Mudalkar Commission.
(5) Sarjoo Commission.
(6) Mitter Commission.
(7) Khanna Commission.
(8) Chagla Commission.
(9) Commission on Biju Patnaik.
(10) Pillai Commission.

நான் தமிழகத்திற்கு வருகிறேன்.

(1) Venkatesan Commission.
(2) Sarkaria Commission.
(3) Paul Commission.
(4) Venkatadri Commission.
(5) Ramaprasad Commission.
(6) Ismail Commission.
(7) Diraviam Commission.
(8) Bharathi Commission.
(9) Sadasivam Commission. நியமிக்கப்பட்டு இப்பொழுது ஒரு ஆண்டு நீட்டிப்பு கொடுத்திருப்பதாக தகவலை நான் பத்திரிகையிலே பார்த்தேன். Nanjappa Commission.

இப்படிப் பல கமிஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அமைக்கப்



பட்டு இருக்கின்ற இந்த கமிஷன்களிலேயிருந்து, காஷ்மீரிலேயிருந்து கன்னியாகுமரி வரை முதலமைச்சரவர்கள்மேல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டு, அவர் இலஞ்சம் வாங்கினார் என்றும், முறையாக நடந்துகொள்ளவில்லை என்றும், தனது பதவியை அவர் துஷ்பிரயோகம் செய்தார் என்றும் இந்தக் காரணத்திற்காக அமைக்கப்பட்ட அந்தக் கமிஷன்கள் தந்த தீர்ப்புகள் ஒன்றுகூட செயல் வடிவம் பெற்றதா என்பதைப்பற்றி எனக்கு இதுவரை நினைவு இல்லை என்பதை மாமன்றத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். 1948 ஆம் ஆண்டு பெருமதிப்பிற்குரிய காலஞ்சென்ற மகாத்மா காந்தி அவர்கள் டெல்லி டயரி என்ற புத்தகத்தில் 256-வது பக்கத்தில் எழுதிய கருத்தை அவையின் கவனத்திற்கு நான் வைக்க விரும்புகிறேன்.

*Delhi Dairy:* M. K. GANDHI: I hear from many trustworthy sources that it (corruption) is on the increase.

இது 1948-இல்.

"Will everyone be for himself and none for India"

என்று வேதனையோடு கேட்டு இருக்கிறார்கள். இப்பொழுது கரப்ஷன் அல்லது இலஞ்சலாவண்யம் மலிந்து கொண்டு இருக்கிறது, வளர்ந்து கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு தனி மனிதனும் தனக்காக இருக்கிறானா அல்லது இந்தியாவுக்காக இருக்கிறானா என்ற கேள்வியை அவர் கேட்டார். அதோடு இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். மகாத்மா காந்தியடிகளின் வயதுக்கொப்ப அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்ட, மகாத்மா காந்தி என்ன நினைக்கிறாரோ அதையே நினைக்கின்ற அளவிற்கு மனவளம் பெற்ற, ஒன்றிப்போன, கருத்தோடு ஊறிப்போன, கொண்டா வெங்கடப்பாகாரு 1948 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி அவர்களுக்கு எழுதிய கடிதத்தை நான் இங்கே படித்துக் காட்டுவது பலன் உள்ளதாக இருக்கும் என்ற நம்பிக்கை.

"The one great problem, apart from many other political and economic issues of very complicated nature, is the moral degradation into which the men in Congress circles have fallen. I cannot say much about other provinces, but in my province the conditions are deplorable. The taste of political power has turned their heads. Several of the M.L.As. and M.L.Cs. are following the policy of

'Make hay while the sun shines'. Making money by the use of influence, even to the extent of obstructing the administration of justice in the criminal courts presided over by Magistrates. Even the District Collectors and other revenue officials do not feel free in the discharge of their duties on account of the frequent interference by the M.L.As, and M.L.Cs. on behalf of their parties. As strict and honest officer cannot hold his position for false reports are carried against him to the Ministers who easily lend their ears to these unprincipled self-seekers.

The factions in the Congress circles, the money making activities of several of the M.L.As. and M.L.Cs. and the weakness of the Ministers have been creating a rebellious spirit amongst the people at large. The people have begun to say that the British Government was much better and they are even cursing the Congress." Konda Venkatappa Garu.

இந்தக் கருத்துக்களை கொண்டா வெங்கடப்பாகாரு 1948-இல் தெரிவித்து இருக்கிறார்கள். நான் ஆங்கிலத்திலே படித்த அந்தக் கருத்து அவையிலே இருக்கின்ற உங்கள் அனைவருக்கும் புரிந்திருக்கும் என்ற காரணத்தினால் நான் மொழி பெயர்த்து என்னுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை, அல்லது, வீணாக்கிக்கொள்ள விரும்பவில்லையென்பதை இங்கே குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

அமைச்சர்களைப் பற்றி மகாத்மா காந்தி அடிகள் சொன்ன கருத்தை மேலும் ஒரு முறை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அவர்கள் தெரிவிக்கும்போது குறிப்பிட்டார்கள், சீசரின் மனைவியைப் போல சந்தேகத்திற்கு இடம் அற்றவர்களாக அமைச்சர்கள் இருந்தால்தான், அமைச்சர்களை ஒட்டி, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருப்பார்கள் என்றும் அந்த நிலை இப்பொழுது இல்லை என்பதை எண்ணி எண்ணி நான் கவலைப்படுகிறேன் என்றும் கருத்தை தெரிவித்ததை இந்த மாமன்றத்திற்கு நான் வைக்க விரும்புகிறேன்.

அதோடு, அமைச்சர்களைப் பொறுத்தவரை, இலஞ்சக் குற்றச்சாட்டுகள் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. அது நமது மாநிலத்திலேயும் வந்து கொண்டிருக்கிறது. சில குற்றச்சாட்டுகளில் அடிப்படை இருக்கக்கூடும். சில குற்றச்சாட்டுகள் பரிசீலனைக்கு உட்பட்டவைகளாக இருக்கக்கூடும்.





அவற்றையெல்லாம் எடுத்துச் சொல்கிற பொழுது, ஆத்திரப்படுவதை விட்டுவிட்டு, களங்கம் கற்பிக்கிற ஒரே நோக்கத்தோடு தான் அவர்கள் செய்கிறார்கள் என்ற உணர்வை உருவாக்கிக் கொள்ளாமல், இருப்பது நல்லது என்று நான் சொல்வதற்குக் காரணம், ரூ. 1½ கோடி எனது மாண்புமிகு அருமை நண்பர் பொன்னையன் அவர்களுடைய வீட்டிலிருந்து இன்கம்டாக்ஸ் அதிகாரிகளும், சி.பி.ஐ. அதிகாரிகளும் வந்து எடுத்துச் சென்றதாக செய்தி வந்தது. ஆனால், வந்தவுடன் அமைச்சர் அதை மறுக்கவில்லை. இரண்டாவது நாள் மறுக்கவில்லை. ஒரு வார காலம் அதை மறுக்கவில்லை. ஆனால், நேற்றைக்கு இந்த அவையில் அவர் அதை மறுத்திருக்கிறார். மறுத்தவரை எனக்கு மகிழ்ச்சி. ஆனால், இத்தனை நாட்கள் கழித்து அதை மறுத்திருக்கிறாரே, அத்தனை நாட்களும் மக்கள் மத்தியில் சந்தேகம் இருப்பதற்கு வாய்ப்பு உண்டா, இல்லையா, என்பதை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மனசாட்சிப்படி உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், நேற்று முன்தினம் மாலைமுரசு பத்திரிகையில் செய்தியைப் படித்த பிறகுதான் எனக்கு அதைப் பற்றி தெரியும் என்ற உண்மையை மனச்சாட்சியோடு சொல்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** பத்திரிகையிலே வருவதையெல்லாம் எடுத்துக் கொண்டு பேசுவது கூடாது என்று சொல்வதும் நீங்கள்தான். பத்திரிகையிலே வந்ததற்குப் பிறகு, அந்தப் பத்திரிகையிலே வந்ததைப் பற்றி நான் என்ன செய்யமுடியும்? நாங்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்பவரும் நீங்கள் தான். ஆனால், பொதுவாக, உங்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, அப்படிப்பட்ட சந்தேகங்கள் களையப்பட வேண்டுமானால், அந்தச் சந்தேகத்தைப் போக்குகின்ற பெரும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால், அமைச்சர்களைப் பற்றி ஒருவர் சொன்ன கருத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதுவும் ஆங்கிலத்தில்—இரண்டு மொழிக் கொள்கையை நாம் பின்பற்றுகிறோம் என்பதற்கிணங்க. அந்த திட்டத்தின் கீழ் ஒன்றை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

A Minister is a hyphen that joins and the buckle that fastens the administrative and legislative arms of the Government and he belongs to that committee of the Legislature which leads the Legislature and at the same time presides over the administrative and executive deliberations of his Ministry and participates in those pertaining to the Government as a whole.
அமைச்சர்களாக இருப்பவர்கள், மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்பவர்களாக hypen அதே போல், இறக்கம் உள்ளவர்களாக buckle இருக்க வேண்டுமென்றும் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களாக ஆக்கப்பட்டதற்குப் பிறகு, மக்களை மதிக்கின்ற மனப்பான்மையைப் பெறாமல் மக்களை விட்டுவிட்டு, தனக்கு வேண்டியவர்களை மட்டும் அழைத்து வைத்துப் பேசுகின்ற போக்கு எவ்வளவு வேதனையான போக்கு என்பதை மிகத் தெளிவாக அதிலே தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் கருத்தையும் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். அமைச்சர்கள் எல்லோரும் அப்படி நடக்கிறார்கள் என்று நான் குற்றம் சாட்டவில்லை.

அவை முன்னவரைப் பொறுத்தவரை நீண்ட நெடுங்காலமாக அமைச்சராக இருக்கிறார். எந்த அமைச்சராக ஆனாலும் அவர் அமைச்சராக இருக்கத் தகுதி பெற்றவர். அவர் அமைச்சராக இருக்கிறார். அவரைப் பற்றி எனக்குக் கிடைத்த தகவல் எல்லாம், அதிகமாகவும் நெருக்கமாகவும் கட்சி உறுப்பினர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள வில்லையென்றும் ஏதாவது கோரிக்கைகளை முன் வைத்தால், அந்தக் கோரிக்கைகளை எடுக்கின்ற அளவுக்கு அவர் இல்லையென்றும் எனக்குக் கிடைத்த தகவல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் கட்சிப் பொதுக் குழு பார்க்க வேண்டிய வேலை.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையினால்தான் நான் இந்த கருத்தைச் சொன்னேன். அமைச்சர் அவர்களை களங்கப்படுத்துவதற்கு அல்ல. உங்கள் எல்லோரையும்விட நாவலர் அவர்களை எனக்கு நன்றாகத் தெரியும். நீண்ட நெடுங்காலமாக, இன்னும் சொல்லப் போனால் இளம் தாடி நெடுஞ்செழியனாக அவர் இருந்த



நேரத்தில் அவருடைய பேச்சிலே கவரப்பட்டு இந்த இயக்கத்திற்கு வந்தவன் நான் என்ற முறையில் அந்த அடிப்படையில் பேசுகின்றேன் என்பதையும், நேற்று வந்தவர்களும், மற்றவர்களும் அதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

* * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்ட்டி விஷயத்தை பற்றி பேச வேண்டாம். It is not the concern of the House. அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

(முற்பகல் 11-20)

**திரு. கி. மனோகரன்:** அவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது வேறு ஒன்றும் இல்லை.

* * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அவைக் குறிப்பிலே இருந்து நான் நீக்கி விட்டேன். எனவே அதைத் திரும்பச் சொல்ல வேண்டியதில்லை.

**திரு. கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

* * * *

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது, அங்கே தெரிவிக்கப் பட்ட. . . . (குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்).

**திரு. செ. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம் அவர்கள் தயவுசெய்து அமரவேண்டும். கட்சி விவகாரங்களைப் பற்றி இங்கே வந்து பேச வேண்டியதில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்குப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1986 மே 8

பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். திரு. மனோகரன் அவர்கள் இதற்குப் பதில் சொல்கிற திறமை படைத்தவர்கள். எனவே இடையிலே திரு. ஆறுமுகம் அவர்கள் எழவேண்டிய அவசியம் இல்லை.

* * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவையெல்லாம் அவைக் குறிப்பில் வேண்டாம். ஏற்கெனவே அவை நீக்கப்பட்டு விட்டன.

**திரு. கி. மனோகரன் :** மதிப்பிற்குரிய மன்றத்தின் தலைவர் அவர்களே, நான் பொதுப்படையாகச் சில கருத்துக்களைச் சொன்னேனே தவிர மற்றபடி இல்லை என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொண்டு இரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி நான் விடைபெற விரும்புகிறேன். ஒன்று, பொதுவாகப் பேசப்படுகிற செய்தியைச் சொல்கிறேன். அமைச்சர்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுகிறபோது அதிகாரிகளின் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறதென்றும், அவர்கள் ஆதிக்கத்திற்கு அடிபணிவதைத் தவிர அமைச்சர்களுக்கு வேறு வழியில்லாமல் சென்று விடுகிறது என்றும் அந்தக் கருத்து பத்திரிகையில் வந்த போது நான் வேதனைப் பட்டேன். இங்கேயிருக்கிற பெரும்பான்மையான உறுப்பினர்கள் தொலைக் காட்சியில் காட்டப்பட்ட Yes Minister என்ற சிரிப்பு படத்தை பார்த்திருக்கக் கூடுமென்று நினைக்கிறேன். அதிலே அமைச்சருக்கு அந்தரங்க செயலாளராக ஹம்ப்ரி என்று ஒருவர் இருந்தார். மக்கள் மத்தியிலிருந்து ஏராளமான கடிதங்கள் அமைச்சருக்கு வந்து கொண்டிருந்தன. அந்தக் கடிதங்களுக்கு என்ன பதில் எழுதுவது என்று கேட்ட பொழுது, அந்த அதிகாரி அமைச்சருக்குச் சொல்கிறார். அந்த அதிகாரி அமைச்சரை எப்படி எடைபோட்டு வைத்திருக்கிறார் என்பதற்காகச் சொல்கிறேன். உங்களிடமிருந்து கடிதம் வந்தது, நன்றி என்று எழுதுகிறேன் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அது போதாது என்று சொல்ல, அதிகாரி சொன்னார். வேண்டுமானால் இன்னுமொன்றையும் சொல்கிறேன் என்று சொல்லி விட்டு 'Your suggestion is under consideration

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது



1986 மே 8] [திரு. கி. மனோகரன்]

என்று சொன்னார்கள். அதோடு அமைச்சர் திருப்தி பட்டாரோ, என்னவோ என்று கருதி, வேண்டுமானால் நீங்கள் விரும்பினால் இன்னொன்றையும் சொல்கிறேன் என்கிறார். 'Your suggestion is under active consideration' என்று குறிப்பிட்டார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். "What is the difference between 'under consideration' and 'under active consideration'"?

அதற்கு அந்தச் செயலாளர் சொன்னார்.

"Under consideration means the file is lost. Under active consideration means the file is being traced" அப்படிப்பட்ட ஒரு அதிகாரி எப்படி ஆட்டி வைக்கிறார் அமைச்சரை என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். அப்படி அதிகாரிகளால் ஆட்டிப்படைக்கத்தக்க அமைச்சர்கள் இந்த அமைச்சரவையில் இல்லை. நிச்சயமாக இருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். இருக்கக்கூடாது என்று பெரிதும் விரும்புகிறேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே இருக்கிற விடுதியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நான் இன்னொரு விடுதியைப் பற்றி கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். டெல்லியில் இருக்கிற தமிழகத்திற்குச் சொந்தமான தங்குகிற விடுதி. அந்த விடுதியில் என்ன நடக்கிறது என்பது ஆராய்ச்சிக்குரியது. அந்த விடுதியில் ரிசப்ஷன் ஆபீசராகப் பணியாற்றுகிற ** என்பவர் எட்டு ஆண்டுக்காலமாக அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் செய்யாத குற்றங்கள் இல்லையென்று அனைவரும் என்னிடம் வந்து சொல்கிறார்கள். இதை கவனத்திற்காகவும், பரிசீலனைக்காகவும் அவை முன்னவர் மத்தியில் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு கிடைத்த சோகமயமான நிகழ்ச்சியை பற்றி தெரிவிக்க விரும்புகிறேன். நான் டெல்லி வருகிறேன் என்று திரு. யு. எஸ். நடராசன் அவர்கள் மூலம் ஒரு கடிதம் எனது அந்தரங்க நேர்முகச் செயலாளரை அனுப்பி வாங்கி வைத்து, அந்தக் கடிதத்தை அனுப்பி வைத்தேன். நீங்கள் விரும்புகிறீர்களோ இல்லையோ, மதிக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது

கிறீர்களோ இல்லையோ, எனக்கு அதுபற்றி கவலையில்லை. நானும் ஒரு அமைச்சராக இருந்தவன். எனக்கு ஒரு அறை ஒதுக்குங்கள் என்று கேட்டேன். குறிப்பிட்ட அறையை ஒதுக்குங்கள் என்று கூட கேட்கவில்லை. அவர்கள் வி.ஐ.பி.-க்கு ஒதுக்குகிற அறையை முதலில் ஒதுக்கிவிட்டு, அதற்கு பிறகு நான் டெல்லி சென்று விமான நிலையத்தில் கேள்விப்பட்டபோது, எனக்குக் கிடைத்த தகவல், அது தரமுடியாது என்று மறுக்கப்பட்டு, வேறு ஒரு சாதாரண அறை எனக்காக ஒதுக்கப்பட்டது என்று தெரிவித்தார்கள். நான் இன்றைக்கு தலை நிமிர்ந்து சொல்கிறேன். 'ஆணவத்தோடு சொல்கிறேன் என்று கருதாதீர்கள். 20 ஆண்டுக்காலமாக டெல்லியில் பணியாற்றிய எனக்கு தங்குகிற ஒரு இடமில்லை என்று இந்த அரசு கருமானால், இந்த அரசு எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை நான் எடை போட்டுக் கொள்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்று. பல மாநிலங்களில் லைப்ரரி கமிட்டி என்றும், பெட்டிஷன்ஸ் கமிட்டி என்றும் வைத்திருக்கிறார்கள். இங்கே லைப்ரரி இருக்கிறது. அதற்கென்று ஒரு கமிட்டி இல்லை. ஏராளமான, அற்புதமான புத்தகங்கள் இருக்கின்றன. படிப்பவர்களும் இன்றைக்கு பெருகிக் கொண்டே வருகிறார்கள். படிக்காதவர்களும் அந்த அலுவலகத்திற்குச் சென்று, லைப்ரரிக்குச் சென்று படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கிருக்கிற கடப்பாடு காரணமாகவும், உரிமை காரணமாகவும் நான் இதைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு பிறகு ஒன்றே ஒன்று. அதோடு நிறுத்தாவிட்டால் சபாநாயகர் அவர்கள் மணியடிக்கக் கூடும். தலைமைச் செயலக ஊழியர்களைப் பற்றி எனக்கு இங்கே ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

அவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டது உண்மை. போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் கிட்டத்தட்ட 1,880 பேர்களிடம் அந்த அதிகாரிகள் எல்லாம் 'நான் வருந்துகிறேன், இனிமேல் ஈடுபடமாட்டேன்' என்று சொல்லிவிட்டு ஏறக்குறைய 35 பேர்களை மட்டும், அவர்களை வருத்தம் தெரிவிக்கச் சொன்னார்கள். மேலும் அந்த அசோசியேசன் ரெகக்னிசன்



ரத்து செய்யப்பட்டு இருக்கிறது. அதிலே 11 பேர்கள் வருத்தம் தெரிவித்ததால் பணியில் சேர்க்கப்பட்டும், மீதி இருக்கின்ற 24 பேர்கள் வருத்தம் தெரிவிக்காமையால் பணியிலே சேர்க்கப் படவில்லை என்று தகவல் எனக்கு இங்கே தரப்பட்டு இருக்கிறது. தாய்மை உள்ளத்தோடு இதை நோக்க வேண்டும் என்று நான் அவைமுன்னவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்க அலுவலர்கள், அரசு வேலைகளைச் செய்தால் அவர்கள் அரசாங்க அலுவலர்கள், அவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டால் போராட்ட வீரர்கள் என்று அவர் விளக்கம் சொல்லக் கூடும். அந்த விளக்கம் உங்களது தகுதிக்கு அப்பாற்பட்டது என்று நான் கருதுகிறேன். எனவே தயவுசெய்து தாய்மை உள்ளத்தோடு நீங்கள் அவர்களைப் பார்க்க வேண்டும் என்றும், 35 நாட்களுக்கு மேல் அவர்கள் சிறைச்சாலையில் இருந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைமை செயலக சங்கத்தின் அங்கீகாரத்தை ரத்து செய்து இருக்கிறீர்கள். அந்த அங்கீகாரத்தை திருப்பி வழங்க வேண்டும் என்றும்—6 மாதம் காலம் ஆகியும் வழங்கப்படவில்லை, ஆகையினாலே நீங்கள் அதை வழங்க வேண்டும். தற்காலிக வேலை நீக்கத்தை எதிர்த்து அவர்கள் வழக்கு போடவில்லை என்பதையும் உங்களுக்குச் சொல்லி, இப்படிப்பட்ட பண்பாடு காட்டிய அவர்களிடம் நீங்கள் கொஞ்சம் நேசம் காட்ட வேண்டும், அல்லது அனுதாபம் காட்ட வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு சட்டப் பேரவை துறையில் தற்காலிகமாக பணிபுரியும் ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டும், நிரந்தரமாக்க வேண்டும் என்று அதுவும் 10 ஆண்டுக் காலமாக தொடர்ந்து செயலாற்றுபவர்களை நான் நிரந்தரம் ஆக்குவேன் என்று நமது அவை முன்னவர் நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையில் உறுதி அளித்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு நீங்கள் உதவ வேண்டும், நிரந்தரமாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்னொன்றையும் நான் இணைந்தே தெரிவிக்க விரும்புகிறேன். நான் நிதியமைச்சராக இருந்த நேரத்திலே ஒரு அஷ்யூரன்ஸ் கொடுத்த ஞாபகம் எனக்கு இருக்கிறது. என்ன என்றால், இப்படி அலுவலர்களாக பணியாற்றுகிற அவர்களுக்கு

பஸ் பாஸ் தரப்படும் என்ற உறுதியை நான் அவர்களுக்கு வழங்கினேன். ஆனால் என்ன காரணத்தினாலோ எனக்குத் தெரியவில்லை. நான் வழங்கிய உறுதியின் அடிப்படையில் ஜி.ஓ. போடப்பட்டது. அதற்குப் பிறகு ஜி.ஓ. ரத்து செய்யப்பட்டு, தினக்கூலிகளாக அவர்கள் நடத்தப்பட்டு கால்நடைகளாக அல்ல— தினக்கூலிகளாக அவர்கள் நடத்தப்பட்டு, 4 ரூபாய் பெறுபவர்களுக்கு 2 ரூபாய் ஏற்றி, ஆக 6 ரூபாய், 6 ரூபாய் பெறுபவர்களுக்கு 2 ரூபாய் ஏற்றி, 8; 8 ரூபாய் பெறுபவர்களுக்கு 2 ரூபாய் ஏற்றி, 10; என்று இப்படிக் கொடுக்கிற காரணத்தால், இதைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று இங்கே அஷ்யூரன்ஸ் கமிட்டி சார்பிலே வெளியிட்டு இருக்கிற 2-வது அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

நான் அவை முன்னவர் அவர்களுக்கு கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லி, விடைபெறலாம் என்று விரும்புகிறேன். அஷ்யூரன்ஸ் கமிட்டி 1977-லேயிருந்து 1985 வரை அளிக்கப் பெற்ற உறுதிமொழிகள் எத்தனை என்பதையும், வருடக் கணக்குப் போட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டுமானால் சொல்கிறேன், அது இருக்கிறது. ஆனால் இன்றைக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படமுடியாமல், நிலுவையில் உள்ளது என்பதை மட்டும் சொல்லி, அப்படி இருப்பது 1,238 வாக்குறுதிகள் இருக்கின்றன என்பதை அவை முன்னவர் அவர்களின் கவனத்திற்கு நான் வைக்க விரும்புகிறேன். அருள்கூர்ந்து இவைகளை எல்லாம் அவர்கள் செய்ய வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

மிக அதிகமாகப் பேச விரும்பவில்லை. கடைசியாக, இதை அவை முன்னவர் அவர்களுக்கும், அவை உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, அதே நேரத்தில் சபாநாயகர் அவர்களே, உங்களைப் பற்றி நான் விமர்சிக்கக் கூடாது, உங்களிடம் அளவு கடந்த அன்பு உள்ளவன், அதனாலே நீங்கள் அதிக நேரம் தரவேண்டும் என்று யாசகம் செய்யவில்லை, அந்தக் காரணத்தாலேதான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் துடிப்புள்ள இளைஞர், படிப்புள்ள இளைஞர், கொள்கைப் பிடிப்புள்ள இளைஞர், நான் மதிக்கிறேன், வரவேற்கிறேன். ஆனால் நீங்கள் கொஞ்சம அதிகமாக கோபப்பட்டு, எதைச் சொல்ல விரும்புகிறீர்களோ அது வெளியே வராமல், வேறுவிதமாக அந்தக் கருத்துக்கள் வெளியே விளையாடவிடப்பட்டு, அதன் மூலம் சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டுக் கொண்டு இருக்கிற நிலைமையை நீங்கள் மாற்ற வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஒன்றும் என்னை அண்ணன் நாஞ்சிலார் என்று அழைக்க வேண்டியதில்லை. நான் ஒன்றும் தம்பி பாண்டியன் எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்கிற அளவுக்கு பாரம்பரியம் தெரியாதவன் அல்ல, நாடாளுமன்ற முறை தெரியாதவன் அல்ல; அதை உங்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு இறுதியாக





'In whatever manner and whatever field a Minister has to function, he has to be conscious throughout that in the first and ultimate analysis he is a servant of the people'.

நாம் அனைவரும் மக்களின் சேவகர்கள் என்ற உணர்வோடு, அமைச்சர்களும், அங்கு இருக்கின்ற உறுப்பினர்களும், இங்கு இருக்கின்ற உறுப்பினர்களும், நாம் அனைவரும் நடந்து வருவதன் மூலம் சட்டசபையின் மரபைக் காப்போம், காப்போம் என்று கூறி, இவ்வளவு நேரம் அளித்த உங்களுக்கு எனது நன்றியை நவின்று அமைகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் பேசும்போது 'தமிழ்நாடு ஹவுஸ்'லே பணியாற்றக் கூடிய அதிகாரி பற்றிக் குறிப்பிட்டார்கள். அவருடைய பெயர் இருக்கத் தேவையில்லை. அதிகாரி என்று இருக்கட்டும். என்னைப் பற்றி சொல்கின்ற காரணத்தால் நான் சொல்கிறேன். அவையில் சில சமயங்களில் திடீரென்று எல்லோரும் ஒன்றாக எழுகின்ற காரணத்தாலும், இல்லாவிட்டால் ஏதாவது ஒரு பிரச்சனை எழும்போது பிரச்சனைகள் உருவாகின்றன. எல்லோரும் சுமுகமாக இருந்தால் ஒரு பிரச்சனையும் எழாது.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற அந்த அதிகாரியின் பெயரை ஏன் சொல்லக்கூடாது என்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. அதிகாரிகள் மீது குற்றச்சாட்டை கொடுக்க வேண்டுமேயானால் 'நோட்டீஸ்' கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது; அதனால்தான் சொன்னேன்; வேறு ஒன்றும் இல்லை.

*திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்களால் சட்ட மன்றத்தில் வைக்கப் பட்டிருக்கின்ற பல்வகை செலவுகள் பற்றிய மானியத்தின் மீதும், சட்டமன்றம் பற்றிய மானியத்தின் மீதும், ஓய்வூதியம் பற்றிய மானியத்தின் மீதும் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு தந்தமைக்கு முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4½ கோடி தமிழ் சமுதாயத்தின் மக்களுக்கு தொண்டு செய்கின்ற அவர்களின் உள்ள உணர்ச்சிகளை, உள்ளக் கிடக்குகளை பிரதிபலிக்கின்ற, சேவை செய்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்காக அவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகள் என்னென்ன என்பதைப்பற்றியெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாக, தங்கத்தில் வைரம் பதித்ததைப்போல், தஞ்சையில் நஞ்சை கொழிப்பதுபோல் தெள்ளத்தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளிலே பயணங்கள் செல்கின்றபோதும் சரி, அங்கே தொகுதி மக்களின் குறைகளைக் கேட்கின்றபோதும் சரி, அரசு அலுவலர்களின் கோரிக்கைகளை, மக்களின் கோரிகைகளை எடுத்துச்சொல்கின்ற போதும் சரி, அவர்களுக்கு ஒரு உதவியாளர் கட்டாயமாகத் தேவைப்படுகின்ற காரணத்தால் அங்கே கடிதங்களையோ அல்லது மனுக்களையோ டைப் செய்வதற்கு ஆட்கள் தேவைப்படுகின்ற காரணத்தால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சார்ட்ஹேண்ட் தெரிந்த—டைப்பிஸ்ட்களை நியமிக்க அவை முன்னவர் அவர்கள் அருள் கூர்ந்து உத்தரவிட்டு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.





அதைப்போல் பர்ந்து விரிந்த தொகுதிகளை பார்க்கின்ற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வதற்கு, இங்கே ஜீப் வசதிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். மீண்டும் நானும் அதே கருத்தை வலியுறுத்திக் கூறிட ஆசைப்படுகிறேன். உள்ளாட்சித் தேர்தல் நடக்காததற்கு முன்னால், வாரத்திற்கு இரண்டு நாள் வாகன வசதி செய்து கொடுப்பது ஆணையாளர்களுக்கு பெரும் சிரமமாக இருந்த சூழ்நிலையில் 50 லிட்டர் பெட்ரோல் என்று ஒதுக்கி இருக்கிறார்கள். அது போதாது என்கின்ற காரணத்தினால் அதை 100 லிட்டர் பெட்ரோல் என்ற வகையிலே கொடுத்து, தொகுதி மக்களுக்கு நல்ல சேவைகளைச் செய்வதற்கு, பரந்து சுற்றி வருவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவிட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உதவிடவேண்டுமென்று உங்கள் மூலமாக அவர்களை அருள்கூர்ந்து அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட மன்றத்திலே இன்னொன்றையும் நான் கோடிட்டுக் கூறிட ஆசைப்படுகிறேன். பல்வேறு சட்ட மன்றங்களில் இருக்கின்ற அரசு கொறடாக்களுக்கு அதிகப் படியான சலுகைகள், அமைச்சர் அந்தஸ்து வழங்கப் பட்டிருக்கிறது. ஆனால் தமிழக சட்ட மன்றத்தில் இருக்கின்ற அரசு கொறடாய என்ற பொறுப்பிலே இருக்கின்றவருக்கு சலுகைகள் மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற வீடுகளும் மிகச் சாதாரணமான வீடுகள். அவர்களுக்கு சரியாக சலுகைகளை வழங்க வேண்டும். மற்ற மாநில கொறடாக்களுக்கு கொடுக்கிற சலுகைகளை கருத்தில் கொண்டு இவர்களுக்கும் அந்தச் சலுகைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-40)

அதேபோல் இங்கே தொலைபேசியைப் பற்றி சொன்னார்கள். தொலைபேசிக் கட்டணம் பற்றி சொல்லும்போது உறுப்பினர்கள் இன்றையதினம் சென்னையில் இருக்கின்ற நேரத்தில் பல்வேறு அரசு அலுவலர்களுக்கு, உள்ளூர் தொலைபேசி, வெளியூர் தொலைபேசி மூலம் பேச வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது,

[திரு. ப. ந. இராமச்சந்திரன்] [1986 மே 8

பொதுமக்களின் தேவைக்காக, சேவைக்காக. அதை கருத்தில் கொண்டு தொலைபேசி கட்டணத்திற்கு இன்றையதினம் இருக்கிற தொகை போதாத காரணத்தால் வழங்குகிற சம்பளம் சென்னையில் தொலைபேசி கட்டணத்திலேயே தீர்ந்து விடுகிற காரணத்தால் அதை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்னும் ஒரு கோரிக்கையை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் ரயில்வே கூப்பன்களை வழங்குகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியத் திருநாடு எங்கும் சென்று வருவதற்கு இலவசமாக ரயிலில் முதல் வகுப்பில் இடம் அளிக்கப்படுகிறது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இன்றையதினம் தமிழகத்தில் மட்டுமாவது செல்வதற்கு அந்த வரம்பை நிர்ணயித்து இவ்வளவு தொகைதான் என்று நிர்ணயிக்காமல் அவர்கள் எந்த நேரத்திலும் செல்லலாம், எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் செல்லலாம், எவ்வளவு தொகைக்கு வேண்டுமானாலும் பயணம் செய்யலாம் என்ற நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அந்த ரயில்வே ரிசர்வேஷன் செய்கிற ஒரு கவுண்டரை சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குள் அமைத்துத் தர வேண்டும் என்று அன்போடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து இங்கே இருக்கின்ற நூலகம் மிகவும் வசதி குறைவாக இருக்கிறது. மரியாதைக்குரிய நாஞ்சிலார் அவர்கள் கூட பேசுகிறபோது எடுத்துச் சொன்னார்கள், நூலகத்திற்கு செல்லுங்கள், செல்லுங்கள் என்று சொன்னார்கள். மூத்த உறுப்பினராகிய அவர்கள் இந்த சபையில் பன்னெடுங் காலம் பணியாற்றியிருக்கிறார்கள். ஆனால் இந்த நூலகம் தான் இன்னும் வசதி செய்யப்படவில்லை. ஆகவே அந்த நூலகத்திற்கு வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னும் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள், 'அறிஞர் தம் இதய ஓடை, ஆழநீர் தன்னை மொண்டு, செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றி குருகிய செயல்கள் தீர்த்து குவலயம் ஓங்கச் செய்வாய், நறுமண



1986 மே 8] [திரு. ப. ந. இராமச்சந்திரன்]

இதழ் பெண்ணே உன் நலம் காணாரர் ஞாலம் காணார்' என்று. மிகத் தெளிவாக பாரதிதாசன் அவர்கள் சொன்னார்கள். அப்படிப் பட்ட பத்திரிகை நிருபர்கள் இன்றையதினம் நாம் இங்கே சட்ட மன்றத்திலே சொல்லுகிறோமோ அறிவில்சான்ற ஆன்றோர்களான அனைத்து உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லுகிறோமே விற்கணையின் வேகத்தினை தன்னுடைய சொற்கணையின் வாதத்தினால் மிஞ்சுகின்ற அளவுக்கு அவர்கள் அடுக்குகின்ற சொற்சிலம்ப வாதங்களை மாமணக்கும் சொல்லெடுத்து மலர்கள் ஆக்கி, சரம் தொடுத்து அதை மாலையிலும் மறுநாள் காலையிலும் ஏடுகளில் தருவிக்கிறார்களே அந்த சாதனைகளை சொல்லு கிறார்களே அந்த பத்திரிகை நிருபர்கள் அவர்கள் இன்றையதினம் செல்லுவதற்கு பஸ் பாஸ் வேண்டும் என்று கோரிக்கை கொடுத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலும், பேரறிஞர் அண்ணா போக்குவரத்துக் கழகத்திலும், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலும் செல்ல, அவர்கள் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை அரசு போக்குவரத்துக் கழகத்திலும் குறைந்தபட்சம் சட்டமன்றத்தில் பணியாற்றுகின்ற அந்த பத்திரிகை நிருபர்கள் செல்வதற்கு வழி வகை செய்வோம் ஆனால் இந்த சட்ட மன்றத்தில் பல்வேறுபட்ட புகழ்களை நாம் இங்கே அடுக்குகின்ற கை சிலம்பு, சொற்சிலம்பு அத்தனையையும் எடுத்துச் சொல்லு வதற்கு அவர்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் நாவலர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து ஒரு கருத்தை நான் இங்கே சொல்ல ஆசைப்படு கிறேன். ஓய்வு ஊதியங்கள் பற்றி மாண்புமிகு நாவலர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். நான் கூறிக்கொள்ள ஆசைப்படுவது எல்லாம் ஓய்வு ஊதியம் பெறுகின்ற அந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் மாநில அரசு கொடுக்கும் என்று மத்திய அரசு புறக்கணித்து விடுகிறது. மத்திய அரசின் லிஸ்ட்டில் இருக்கிறது என்று மாநில அரசு புறக்கணித்து விடுகிறது. இப்படி அவர்களுடைய நிலைமை கொள்கை பேசி, கொடி ஏந்தி, குருதி சிந்தி இந்த நாட்டின் விடுதலைக்காக இன்றையதினம் நாம் பார்க்கிறோமே, பாரதி தாசன் அவர்கள் சொன்னார்களே, "அக்கா, அக்கா என்று அழைத்தாய் அக்கா வந்துகொடுக்க சுக்கா, மிளகா, சுதந்திரம்

[திரு. ப. ந. இராமச்சந்திரன்] [1986 மே 8

கிளியே" என்று அப்படிப்பட்ட சுதந்திரத்தை பெற்றுத் தந்த விடுதலை தியாகிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம், ஓய்வு ஊதியம் முறைப்படி சென்று சேரவில்லை. ஆகவே நானும் ஒரு விடுதலைப்போராட்ட வீரனுடைய மகன் என்கிற உரிமையோடு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை மெத்த பணிவன்போடு நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அருள் கூர்ந்து ஒரு குழுவை நியமித்து, எந்தெந்த மாவட்டங்களில், யார் யாருக்குக் கொடுக்கப்படுகின்றது, எந்தெந்த வகையில் பணங்கள் கொடுக்கப்படுகிறது என்பதை பரிசீலனை செய்து, அதை அவசியம் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மாநில அரசும் மத்திய அரசும் கொடுக்கின்ற பணங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, பாதி தொகையைத் தான் மாநில அரசு கொடுக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தரவேண்டு மென்று இந்த இனியநேரத்தில் கேட்டுக் கொள்வது என்னுடைய தலையாய கடமையாகும்.

அடுத்து ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மரியாதைக்குரிய முன்னாள் நிதியமைச்சராக இருந்த நாஞ்சிலார் அவர்கள், தனக்கே உரிய பாணியில் சொற் சிலம்பு ஆடினார்கள். நாங்களும் மகிழ்ச்சியாக இருந்தோம். பல்வேறுபட்ட பிரச்சினைகள் பற்றி எல்லாம் சொன்னார்கள்.

தமிழகத்திலுள்ள 4½ கோடி மக்களின் பிரச்சினைகளை தொடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள், அவர்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்டமன்றத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டார்கள்.

இன்றையதினம் இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொல்லியிருக்கிறார்கள். இந்த மாமன்றத்தில் உள்ள தி.மு.க. உறுப்பினர்கள் அதை மறந்திருக்கின்ற காரணத்தினால், இந்த மானியம் அகதிகள் மறுவாழ்வு பற்றிய மானியம் என்கிற காரணத்தினால் என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.



1986 மே 8] [திரு. ப. ந. இராமச்சந்திரன்]

"அடுப்பிலிட்ட கட்டை போல அவர்கள் அனைவரும் தேய்வதா?

அணைத்திடல் வேண்டாமா? அன்டை அயலார்களே

ஆவன செய்திடல் தேவைதான் இல்லையா"

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடி களம் கண்டு தாயகத்திற்கு அகதிகளாகத் திரும்பியவர்களுக்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, இந்த மானியக் கோரிக்கைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக, அவை முன்னவர் அவர்கள் மூலமாக, அமைச்சர் அவர்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், இப்போது இலங்கையிலிருந்து அன்புச் சகோதரர்களாக தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்களே, அவர்களைப் பற்றி, அருள்கூர்ந்து, மானியங்களிலே நாம் நிதிகளை ஒதுக்கு வதை விட்டுவிட்டு, அவர்களுக்கு நிரந்தரப் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசியல் சட்டப்படி, எக்சிகியூடிவ், ஜுடிசியரி அண்டு லெஜிஸ்லேச்சர் என்பது கான்ஸ்டிட்யூஷனுடைய மூன்று காம்பொனென்ட் பார்ட்ஸ்-ஆக வைக்கப்பட் டிருக்கிறது. இவை மூன்றும் இன்டிபெண்டன்ட் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஒன்று மற்றொன்றுக்கு சுப்ரீம் அல்ல என்பதையும் நாம் எல்லோரும் அறிவோம். அடுத்து சமீப காலத்தில், இந்த ஜுடிசியரி பெரிதா, அல்லது லெஜிஸ்லேச்சர் பெரிதா அல்லது எக்சிகியூடிவ் பெரிதா என்ற முறையில்கூட சில சர்ச்சைகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் நாம் ஒரு விஷயத்தைப் பொறுத்தவரையில், மக்களுடைய நலனை பாதுகாத்துக் கொள்வதற்கு அமைக்கப்பட்டிருக்கக் கூடிய இந்த மூன்று அமைப்புகளும் ஒன்றுக்கொன்று நல்ல முறையில் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்ற

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 மே 8

முறையில், இந்த மூன்று காம்பொனென்ட் பார்ட்ஸ்ஸும் செயலாற்றக் கூடிய முறையில் விஷயங்களை 'மோல்ட்' பண்ண வேண்டிய தேவை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஜூடிசியரியைப் பொறுத்தவரையில், ஜூடிசியரி என்பது மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எப்படி எக்சிக்கியூடிவ்விடம் போகப் படுகிறதோ, அல்லது லெஜிஸ்லேச்சரிடம் போகப்படுகிறதோ அதுபோல் ஜூடிசியரியிலும் போகப் படுகிறது. எப்படி எக்சிகியூடிவ் பற்றி விவாதிப்பதற்கு நிலைமை இருக்கிறதோ, அதுபோன்று லெஜிஸ்லேச்சரிலும் அதைப் பற்றி பேசுவதற்கு இடம் இருக்கிறதோ, அதுபோன்று ஜூடிசியரி பற்றி மக்கள் சார்புடைய பிரச்சினைகள், கஷ்டங்கள் பற்றி பேசுவதற்கு, ரெவ்யூ பண்ணுவதற்கு எல்லாம் அந்த வாய்ப்பு இன்று மக்களுடைய பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கும் நிச்சயம் இருக்க வேண்டும். அதற்குத் தகுந்த அளவில் அரசியல் சட்டத்தில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படுத்த வேண்டுமோ, அந்த மாறுதல்களை ஏற்படுத்து வதற்காக நிச்சயமாக இந்த அரசு முன்வரவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் இன்று ஜூடிசியரி ரெவ்யூ பொறுத்தவரையில், இன்று ஜூடிசியல் பற்றி எது பேசினாலும், அது 'கன்டெம்ப்ட் ஆப் தி கோர்ட்' என்ற முறையில் வியாக்யானப்படுத்துகின்ற நிலைதான் ஏற்பட்டிருக் கிறது.

(முற்பகல் 11-50)

ஆகவே, ஒன்றுக்கொன்று சுப்ரீம் என்பது அல்ல என்ற இந்த அம்சங்களை ஏற்றுக் கொண்டு, 3 கருவிகளுடைய முக்கியத்துவத்தையும், தனித் தன்மைகளையும் உணர்ந்து கொண்டு, அதை நிலைநாட்டக்கூடிய அதே முறையில், அந்த மூன்று அம்சங்களைப் பொறுத்தவரையிலும், மக்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கும், மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதற்கு எந்த முறையிலே அதை அமைத்துக் கொள்ள வேண்டுமோ அந்த முறையில் அமைத்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 மே 8] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இந்த நேரத்தில் 'லெஜிஸ்லேச்சரைப்' பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மக்களுடைய பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறவர்களுக்கு மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி சொல்வதற்கு கிடைக்கக் கூடிய வாய்ப்பு இங்கு மிகக் கம்மியாக உள்ளது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு மிகவும் கம்மி.

இன்று நம்முடைய லெஜிஸ்லேச்சரைப் பொறுத்தவரையில் ஒரு நேரத்திலே ஏறத்தாழ 60 நாட்கள்தான் கூட்டப்படுகிறது. இப்படிப்பட்ட நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆவரேஜாக ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு மணி நேரத்திற்கு அதிகமாக மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு உள்ள வாய்ப்பு கூட கிடைக்கவில்லை. இந்த நிலைமை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். 'அஃபிஷியல் பிஸினஸுக்கு' முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், 'அஃபிஷியல் பிஸினஸ்' மட்டும் நடத்தக் கூடிய முறையில் இன்று சட்டமன்றத்தினுடைய விவாதங்களை அமைத்துக் கொள்வது சரியல்ல.

இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கனவே 'கால் அட்டென்ஷன்' வந்தால் சட்டத்திலே கூட ஒரு உறுப்பினருக்கு இரண்டு கேள்விகள் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. அது இங்கே சுருக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அது ஒரு கட்சியிலே ஒருவர்தான் என்ற முறைக்கு வந்திருக்கிறது. ஏற்கனவே எத்தனை உறுப்பினர்கள் கொடுத்தாலும், சென்ற சட்ட மன்றத்திலே எல்லாம் அவர்களுக்கு, உறுப்பினர்களுக்கு கேள்வி கேட்பதற்கான வாய்ப்பு இருந்தது. இப்போது அது 5 ஆக சுருக்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் நடைமுறையில் பார்ப்பது என்னவென்றால், கட்சிக்கு ஒருவர் என்று சுருக்கப் பட்டிருக்கிறது.

இன்றைக்கு நாடாளுமன்றத்திலே என்ன பார்க்கிறோம் என்றால், கால் அட்டென்ஷன் மேல் விவாதம் கூட நடத்தப் படுகிறது.

ஆகவே, மக்களுடைய பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், எடுத்துச் சொல்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு வழி 'கால் அட்டென்ஷன்' ஆகும். அதற்குத் தக்க அளவிலே உறுப்பினர்களுடைய வாய்ப்பினைச் சுருக்காமல், எந்த முறையில் ஏற்கனவே பாதுகாக்கப் பட்டிருந்ததோ, அந்த முறையில் பாதுகாக்க வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குத் தகுந்த அளவில் சட்ட மன்ற விதிகளிலே ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமானால் அது செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குள்ள வாய்ப்பு மிகவும் கம்மியாக இருக்கிறது. சட்டமன்றமோ 60 நாட்கள்தான் கூட்டப்படுகிறது. எனவே, பேசுவதற்கான வாய்ப்பும் கம்மி. ஆகவே, என்ன செய்ய விரும்புகிறோம் என்றால், நாடாளுமன்றத்திலே அமைக்கப் பட்டிருப்பது போல், 'கன்சல்டேட்டிவ் கமிட்டிகள்' அமைத்தால், மக்கள் பிரச்சினைகள் பற்றி அமைச்சர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும், அமைச்சர்கள் வழியாக பிரச்சினை களுக்குத் தீர்வு காண வாய்ப்பும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கும். ஆகவே, இன்று ஒரு சில மாநிலங்களிலே ஏற்படுத்தப்பட்டிருப்பது போல், 'சப்ஜெக்ட் கமிட்டிகள்', கன்சல்டேட்டிவ் கமிட்டிகள் நிச்சயமாக அமைககப்பட வேண்டும். மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, அப்படி அமைத்து, 'இன்வால்வ்மென்ட் ஆஃப் எம்.எல்.ஏ.-க்கள்' என்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். அந்த முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, 'நான்-அஃபிஷியல் டே' என்று விதிகளில் இருக்கிறது. ஆனால், இந்த வருடத்திலே 'நான்-அஃபிஷியல் டே' என்பதே இல்லாமல் இப்போது கடைசியில் நாளைக்கு 'நான்-அஃபிஷியல் டே' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இன்று சட்டமன்ற விதிகளின்படி உள்ள உரிமையை கூட பாதுகாக்க முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் யாரையும் குறை சொல்வதற்காகக் கூறவில்லை. இன்றைக்கு நம்முடைய லைப்ரரியைப் பொறுத்தவரையில் விஸ்தரிப்பதற்கான



நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அமைச்சர்களுக்கு பல நேரங்களில் கடிதங்கள் எழுதினால், அதற்கு பதில் வருவதில்லை. குறிப்பாக, காவல் துறை சம்பந்தமாக கேள்விகள் கேட்டால் அந்தக் கேள்விகள் வருவதில்லை. அந்தக் கேள்விகளைப் பொறுத்தவரையில், ஒரு வருட காலமானதற்குப் பிறகு கூட, கேள்விகளுக்கு பதில் கொடுக்கப்படாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

கேட்டால், பதில்கள் வரவில்லை என்கிறார்கள். 40 நாளைக்குள் பதில் கொடுக்கப்பட வேண்டும். அது கொடுக்கப் படவில்லை என்றால், அந்தக் கேள்விகளைக் கட்டாயமாகப் போட வேண்டிய முறையில் நாடாளுமன்றத்தில் இருக்கிறமாதிரி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், சட்டமன்ற விடுதியிலேயானாலும் சரி, சட்ட மன்றத்திலேயானாலும் சரி, பணியாளர்களைப் பொறுத்த வரையில் இன்று பத்து வருஷ காலம் ஆனதற்குப் பிறகும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். ஏற்கனவே 30-1-1986-லே 92-வது ஜீ.ஓ. போட்டு, இன்றைக்கு செக்ரட்டேரியட்டில் 56 ஆட்களை நிரந்தரப்படுத்தப்பட்டது. இங்கே சட்டமன்றத் துறையிலே 18 பேரை அதே நேரத்திலே எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலேயிருந்து — மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் சென்ற சட்டமன்றத் தொடரிலே கொடுக்கப்பட்ட அந்த வாக்குறுதிக்கு மாறுபட்ட முறையிலே, எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலேயிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், இன்றைக்குச் சட்ட மன்றத் துறையிலே பணியாற்றக் கூடியவர்களுக்கு 10 வருஷ கால சர்வீஸ் இருந்தால் அல்லது 5 வருஷ காலத்திற்கு மேலே இருக்கக் கூடியவர்களுக்கு மற்ற துறைகளிலே என்ன வாய்ப்பு கொடுக்கப் படுகிறதோ அதையும் இங்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் சீக்கிரம் முடித்துக் கொண்டால்தான், நிதியமைச்சரவர்கள் ஏதாவது சொல்ல முடியும். உறுப்பினர்களே அதிக நேரம் எடுத்துக் கொண்டால் அமைச்சரவர்கள் ஒன்றும் அறிவிக்க முடியாமல் போய்விடும்.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிகப்பு முக்கோணம் என்பது அதிகம் பெறாதே, அவதிப்படாதே என்பதைக் குறிக்கிறது. இந்த சிகப்பு விளக்கு பகுதி என்பது ஆசையை வளர்த்து, அவதிப்பட்டு, அலைக்கழிந்து ஆபத்திலே மூடியக்கூடிய பகுதியாக இருக்கிறது. ஆனால் இங்கே சிகப்பு விளக்கு என்பது செய்தியை இந்த உலகத்திற்கு எடுத்துச் சொல்லக்கூடிய நிகழ்ச்சியாக இருக்கிறது. இங்கே பொத்தானை அழுத்தினால், சிகப்பு விளக்கு எரிந்தால்தான் மைக் வேலை செய்கிறது, பேச்சு ஒலிபரப்பாகிறது, அது அங்கே பதிவாகிறது. ஆகவே, ஒரு மிகப் பெரிய, உலக செய்திகளை எடுத்துச் சொல்லி, தமிழகத்தினுடைய தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய ஒரு பகுதியாக இந்தச் சட்டமன்றம் இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

இங்கே அரசியல்வாதிகளைப் பற்றிச் சொல்லும்பொழுது ஒன்றைச் சொல்ல வேண்டும். பொது நல வாதிகளைப் பற்றிச் சொல்லும்பொழுது இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒன்றைச் சொன்னார்கள். ஆப்பரேஷன் செய்வதற்கு முன்பாக எப்படித் தன்னுடைய கையைச் சுத்தப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டுமோ அதைப்போல பொதுநலத் துறையிலே ஈடுபடுவதற்கு முன்பாக, இந்த வகையிலே இருக்க வேண்டுமென்று இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்கள் உபதேசம் செய்திருக்கிறார்கள்.

நான் ஒன்றை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாணயமில்லாத வியாபாரி, ஒழுக்கமில்லாத சமூக நல ஊழியன், இலட்சியமில்லாத அரசியல்வாதி, கட்டுப்பாடில்லாத ஜனநாயகம் பாழ்பட்டுப்போகும் என்று சொல்வார்கள்.

இங்கே இருக்கக்கூடிய சட்டமன்றத்திலே நாம் எடுத்து வைக்கக்கூடிய கருத்துக்கள், எண்ணங்கள், இந்த நாட்டின் தேவைக்காக, இந்த நாட்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலே இருக்க வேண்டும். சட்டமன்றம் எப்படி இயங்குகிறது, மக்களுக்காக எப்படிப் போராடுகிறார்கள், வாதாடுகிறார்கள், என்னென்ன பிரச்சினைகளை, எந்தெந்த



வகைகளிலே எடுத்துச் சொல்கிறார்கள், அதை ஆளுகின்ற அரசு, மக்களுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சி பீடத்திலே இருக்கின்ற அரசு, எந்த வகையிலே பரிசீலிக்கிறது, அதை நடத்துகிறது, அதை நியாயப்படுத்துகிறது, வரவேற்கிறது என்பவைகளையெல்லாம் நாட்டு மக்கள் அறியக்கூடிய வகையிலே, இதுபோன்ற சட்டமன்ற நிகழ்ச்சிகளை டி.வி.யிலே அவ்வப்பொழுது ரிலே செய்ய வேண்டும்: ஒளி பரப்ப வேண்டும், ரேடியோவிலே ஒலிபரப்ப வேண்டும். அப்படிச் செய்யக்கூடிய ஒரு நிலை வந்தால்தான் இங்கே எதிர்முகாமிலே இருந்து கொண்டுகூட, இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரிலானும் கெடும் என்று சொல்கிறார்கள், அப்படித் தங்களை வரையறுத்துக்கொள்ள முடியும்.

பல்வேறு விளக்கங்களை எடுத்துச்சொல்கின்றபொழுது இங்கேகூட முன்னாள் அமைச்சராக இருந்த ஒருவர் தன்னுடைய அனுபவத்தையெல்லாம் சொன்னார்கள், எப்படி எப்படி என்று. அவர் சில கொட்டேஷன்களைச் சொன்னார்கள், அவர் அமைச்சராக இருக்கின்றபொழுது, அவர் அதிகாரிகளுக்கு என்னென்ன கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார், இவர் எப்படி நடைமுறைப்படுத்தியிருப்பார் என்று அதையெல்லாம் அனுபவ பூர்வமாக, யாரோ சொன்னதைப்போல சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். வாதங்கள் எல்லாம் நியாயங்கள் அல்ல. ஆனால், எப்படிப்பட்ட நியாயங்களையும் வாதத்திற்கு உட்படுத்தலாம். திறமையிருந்தால், தகுதியிருந்தால். அந்த அடிப்படையிலேதான் இங்கே இந்தப் பிரச்சினைகள் வருகின்றன.

சட்டமன்றங்கள் என்று வருகின்றபொழுது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், ஒரு அரசு, ஒரு ஆட்சி, கட்சி என்பது மக்களுக்கு என்ன உத்தரவாதம் கொடுக்கிறதோ அதை நிலைநிறுத்த வேண்டிய, கடைப்பிடிக்க வேண்டிய, செய்து முடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலாவது அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா என்றால் இல்லை. நாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கே சட்டமன்றத்திற்கு வந்து மக்களுக்கு என்ன உத்தரவாதங்களைச் சொன்னோமோ, அதை நிறைவேற்றினால், ஒன்று, சட்டமன்றத்திலே நிறைவேற்றக் கூடிய ஒன்று டெல்லியிலே தடுக்கப்படுகிறது, கையெழுத்து ஆகாமற்போகிறது அல்லது நீதிமன்றத்திலே ஒருவகையிலே அதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. இயங்க முடியாமல் போகிறது.

பல்வேறு பிரச்சினைகளிலே இந்தச் சட்டமன்றத்திலேயிருந்து டெல்லிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது கையெழுத்து பெறுவதற்காக. ஆனால் இன்னும் நில உச்சவரம்பு கையெழுத்தாகவில்லை. தொழில் பெருக்கம் இன்னும் வரவில்லை. கோயில் நிலங்களை கையகப்படுத்துதல் முடியவில்லை இங்கே கிருஷ்ணா நதித் திட்டம், சேது சமுத்திரத் திட்டம், காவிரி நீர்ப் பிரச்னை முடியவில்லை. ஆனால் மக்களாட்சித் தத்துவத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்; இந்திய ஒருமைப்பாடு என்று பேசிக் கொண்டு இருக்கிறோம், நாம் இதைவிடப் பெரிய ஜனநாயக நாடு உலகத்திலே இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்த அளவிலே இருக்கக்கூடிய நாம் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். இங்கே நாம் சொல்லக்கூடிய திட்டங்கள், நிறைவேற்றக்கூடிய திட்டங்கள், நிறைவேற்றக்கூடிய சட்டங்கள் அமுலுக்கு வருவதற்குப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

ஆந்திராவிலே இருக்கிற முதல் அமைச்சர் என்.டி.ஆர். அவர்கள் ஆப்பரேஷன் என்று வெளிநாடு சென்று திரும்பி வருவதற்குள்ளாக ஆட்சி மாறி விடுகிறது; பாஸ்கர் ராவ் முதல் அமைச்சராகி இருக்கிறார்; காஷ்மீரிலே இருக்கக் கூடிய முதல் அமைச்சர் ஃபரூக் அப்துல்லா இங்கே கூட்டத்திற்கு வந்து திரும்பும்போது அவர் முதல் அமைச்சராக இல்லை; வேறு ஒரு ஷா முதல்வர் என்று சொல்கிறார்கள். இப்படி இந்தியாவிலே, பல்வேறு வகையிலே இருக்கிற மாநிலப் பிரச்னைகளுக்கு முடிவு



கட்டத் தவறினால், ஒருமைப்பாடு உருக்குலைந்து போகும். எந்தக் கட்சி ஆட்சியாக இருந்தாலும், சட்ட மன்றத்திலே வரக் கூடிய யாராக இருந்தாலும், சொல்வதை நிறைவேற்றக்கூடிய வகையிலே, போராடக் கூடிய வகையிலே, வாதாடக் கூடிய வகையிலே இருக்க வேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட சேலத்திலே இரும்பாலை வேண்டுமென்று ஆட்சியிலே இருக்கிறபொழுது எழுச்சி நாள் கொண்டாடி, இரும்பாலைக்கு பதிலாக, உருட்டாலை வந்திருக் கிறது. அவர் போராடினார். அப்படிப் போராடித்தான் பெற வேண்டுமென்ற சூழ்நிலை மாறி, மத்திய, மாநில புதிய உறவுபற்றி கமிஷன் கொடுக்கும் அறிக்கை மிக நல்லமுறையிலே, முன்னேற்றம் அடையக்கூடிய முறையிலே, ஒருமைப்பாடு உருக்குலையாமல் இருப்பதற்கு நாம் பல்வேறு முயற்சிகளைக் காண வேண்டும். இங்கே ஒருமனதாக நிறைவேற்றக்கூடிய திட்டங்களே தோல்வியடைகிறது என்றால், அமுலுக்கு வரவில்லையென்றால், இந்த ஜனநாயகம் வாழுமா, வீழுமா? இது சர்ச்சைக்குரிய ஒரு பிரச்னையாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, காஷ்மீரிலிருந்து, கன்னியாகுமரி வரை, கொத்தடிமை என்கிறார்கள். தமிழ்நாட்டிலே மட்டும் 36,000 பான் புரோக்கர்கள் இருக்கிறார்கள். காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை, இந்தக் கொத்தடிமைகள் எல்லா மாநிலத்திலும் இருக்கக் கூடிய நிலையில், தொழிலாளர்களை, மத்திய தர வகுப்பினரை, நடுத்தர வகுப்பினரை, ஏழைகளை, எளியவர்களை, பல்வேறு வகையிலே உறிஞ்சக்கூடிய அட்டைகளாக, மூட்டைப் பூச்சிகளாக இருக்கக்கூடிய அந்த அமைப்பு முறையை அடியோடு அகற்றியாக வேண்டும். அப்பொழுதுதான் நாம் பரிபூரண சுதந்திரம் பெற்றவர்கள் ஆவோம். யாருக்காகச் சுதந்திரம் பெற்றோமோ அவர்களுக்கு அந்தச் சுதந்திரத்தைக் கொடுக்கக்கூடிய நிலைமை உருவாகும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, தேர்தலைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே நடந்த உள்ளாட்சித் தேர்தலிலே, மாண்புமிகு அமைச்சர்களுக்கே வாக்கு இல்லை, மாண்புமிகு முத்துசாமி அவர்களுக்கு ஓட்டுச் சீட்டு இல்லை, மாண்புமிகு நல்லுசாமி

அவர்களுக்கு ஓட்டுச் சீட்டு இல்லை என்றெல்லாம் வந்தது. வாக்காளர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பதிவுசெய்யப்பட்டு, போட்டோ சிஸ்டம் இருக்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் ஐடென்டிபிகேஷன் கார்டு இருக்கவேண்டும். அது வாக்காளர்களுக்கு என்பதற்காக அல்ல; இந்த நாட்டினுடைய குடிமகன் என்று உலகத்திற்குத் தெரிவிப்பதற்காக அவனுடைய பிறந்த தேதியைக் குறிப்பிட்டு, புகைப்படம் வைத்து கொடுத்து விட்டால், அவனுக்கு ஓட்டு இல்லையென்று சொல்வதற்கு வழியில்லை. ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு காலத்திலும் ஒரு தேர்தல் வருகின்றபொழுது, அவ்வப்பொழுது இவர்கள் எல்லாம் வாக்காளர்கள் என்று பதிவு செய்யும்போது, இந்த நிரந்தரமான நோயும் மருந்தும் இருந்து கொண்டிருக்கிறது என்ற சூழ்நிலை உருவாகும்போது, அப்படிச் செய்வது நிலையான ஒரு சுதந்திரத்தை தரக்கூடிய வகையிலே, சுபிட்சமான ஒரு நிலையை உருவாக்குவதாகும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிலைமையிலே, அந்த ஐடென்டிடி கார்டு முறையை இங்கே கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சட்டமன்றத்திற்கு இப்பொழுது புதிதாக வேறு கட்டிடங்கள் கட்டுவதற்குக் கூட முயற்சி செய்கிறார்கள் என்று கருதுகிறேன். பார்வையாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசு அலுவலர்கள் அமர இடம் முக்கியம். இங்கே பார்த்தால் மாத்தடி மகாராஜா நியாயம் மாதிரி இருக்கிறது. இங்கேயிருந்து பார்க்கின்றபொழுது ** சில நேரங்களிலே காட்சி அளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** என்பதை நீக்க உத்தரவிடுகிறேன்.

டாக்டர் கே. சமரசம்: அந்த நிலைமை மாற வேண்டும். இவ்வளவு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு இடவசதி இருக்கிறதா? பார்வையாளர்கள் நிலைமை என்ன? பத்திரிகையாளர்கள் முழுமையாக உட்கார்ந்து என்ன சொல்கிறார்கள் என்பதைக் கவனித்து, கேட்டு, எழுதி, அதைச் செய்தியாகக் கொடுக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்களா

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



என்றால், இல்லை. இருக்கிறவர்களுக்கு இடம் இல்லாத காரணத்தால், எடுத்தவர்களிடத்திலே கேட்கின்ற சூழ்நிலை எல்லாம் உருவாகிறது. ஆகவே, அதற்குத் தகுந்த அளவு நிலைமையை உருவாக்க வேண்டும்.

இங்கே 3 கமிட்டிகள் போட வேண்டுமென்று அரசாங்கம் கூட எப்போதோ ஒத்துக்கொண்டது, ரூல்ஸ் கூட அமென்ட் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டிகளை உருவாக்க வேண்டும்.

இங்கே சட்டமன்றம் என்று சொன்னால், எப்படி இருக்கிறது? ஏற்கனவே, இராஜராஜ சோழன் இருக்கக்கூடிய காலத்தில், சங்க காலத்தில், தமிழகத்தில் ஐவர் குழு என்றும், பேராயக் குழு என்றும் அமைத்திருக்கிறார்கள். அதுபோன்ற முறைகளைப் பின்பற்றுவது, நம்மை வழிநடத்திச் செல்வதற்கு உதவிகரமாய் இருக்கும். ஆகவே, அந்த அடிப்படையிலே, அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இது போன்ற நல்ல திட்டங்களை உருவாக்குவதற்கு இந்தச் சட்டமன்றத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பல்வேறு கோரிக்கைகள் எல்லாம் இருக்கின்றன. அவையெல்லாம் பற்றிச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தாலும், மற்ற நண்பர்கள் பேசிவிட்ட காரணத்தாலும், மேலும் பலர் பேச இருப்பதாலும், அவர்களுக்கு வழிவிட்டு அமர்கிறேன், வணக்கம்.

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சமரசம் அவர்கள் எப்பொழுது பேசினாலும் மத்திய அரசினுடைய பட்டியலிலே ஒரு வரி படித்துவிடுகிறார். நாங்கள் அதைப் பாராட்டுகிறோம். அந்தப் பட்டியலை நாங்கள் எல்லாம் எங்கள் கருத்திலே படிக்க ஆரம்பித்தால் அவர் சொன்ன அந்த ஒற்றுமை, ஒருமைப்பாடு அவையெல்லாம் இங்கே சரியாக வந்துவிடுமா? ஆக அரசு என்பது பல்லாயிரக்கணக்கான [illegible]வைகளுக்கு தடையாக உள்ளது என்று சொன்னார்கள். இங்கே அந்த மாதிரி எந்த மனையும் தடையில்லையா என்பதை மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் விளக்க வேண்டும்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறைகள் எங்கிருந்தாலும் களையப்பட வேண்டும் குற்றங்கள் எங்கிருந்தாலும் தண்டனைக்கு உட்படுத்த வேண்டும், நியாயங்கள் எங்கிருந்தாலும் வாழ வேண்டும், வளர வேண்டும், அதைக் காப்பாற்ற வேண்டும் என்பதிலே அக்கறை உள்ளது இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. தமிழகத்தின் தனித்தன்மை கெடாமல், திராவிடத்தின் கலாச்சாரம் பாழ்படாமல் இந்திய தேசிய ஒருமைப்பாடு உருக்குலையாமல் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கருத்து. அந்த வழியில் எங்கள் கருத்து இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று மாநில சட்டமன்றம், தேர்தல்கள், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், இன்னும் பல்வேறு துறைகளில் உள்ள 8 மானியக் கோரிக்கைகளைப் பற்றி நாம் பேசவிருக்கிறோம். ஆனால் எங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள நேரம் 7 நிமிடங்கள் தான். அதற்குள் அமைச்சர் அவர்களைப் பற்றியும், தலைமைப் பணியாளர்கள் பற்றியும் சொல்லச் சொல்லி இருக்கிறீர்கள். எல்லாம் சொல்வதற்கு 7 நிமிடங்கள் எப்படி போதும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களைப் பற்றியும் நாங்கள் இந்த மானியத்திலே சொல்லியாக வேண்டும். கொஞ்சம் அதிகமாக மாண்புமிகு துணைத் தலைவர் நேரம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புதிய சட்டமன்ற விடுதியில் வானொலி செயல்படவில்லை. அது சரியான நேரத்திற்கு செயல்படுவதில்லை. அங்கு காடுகளாகவும், புதர்கள் அதிகமாகவும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சீர்செய்து பூங்கா அமைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சற்று இளைப்பாறுவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அங்கு மின் விளக்கு வசதிகள் இல்லை. மிகக் குறைவாக, நடைபாதை இருட்டாக இருக்கிறது. அங்கு காவலர்கள் இருக்கிறார்களா என்றே எங்களுக்குத் தெரியவில்லை. காவலர்களைப் பார்ப்பதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் இல்லை. அங்கு உணவு விடுதிகள் தரமாக இல்லை. அங்கு இரண்டு வகையான உணவு விடுதிகள் இருக்கின்றன. அவற்றை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்





கிறேன். எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற செயலகத்திற்கு தொலைபேசி இணைப்பு இல்லை. உள்ளூர் கால் பேசுவதற்கு தொலைபேசி வசதியை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். எங்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சி செயலாளருக்கு பஸ் பாஸ் கொடுக்க வேண்டும். விடுதி அறையில் மின் விசிறி இரண்டு போட வேண்டும். மற்ற மாநிலங்களில் இருப்பது போல் இரண்டு அறையாகக் கட்டிக் கொடுக்க வேண்டும். தொலைபேசி கட்டணத்தை வசூலிக்கக்கூடாது என்பது எங்கள் கருத்து. தொலைபேசிக் கட்டணத்தை கட்டுவதிலே எங்களுடைய சம்பளம் அதற்கே சரியாக போய்விடுகிறது. அதை செய்வதற்கு முடியவில்லையென்றால் ஒரு குறைந்தபட்ச சலுகையாவது தொலைபேசிக் கட்டணத்தில் கொடுக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம், தினப்படி மிகக் குறைவாக இருக்கிறது. அதையெல்லாம் அதிகப்படுத்த வேண்டும். சட்டமன்ற விடுதியில் அழைப்பு மணி இல்லாமல் இருக்கிறது. ஒவ்வொரு விடுதியிலும் அழைப்பு மணி வைக்க வேண்டும். அந்த அழைப்பு மணியை கேட்டு பணியாளர் வருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். 6 ஃபிளாட் இருக்கின்றன. ஒவ்வொரு ஃபிளாட்டிற்கும் 3 பணியாளர்களை நியமிக்க வேண்டும். மின் தூக்கி 4 இருப்பதில் ஒன்றுதான் செயல்படுகிறது. மற்ற மின் தூக்கிகள் பழுதடைந்திருக்கின்றன. அதை சரியாக இயக்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு மின் தூக்கிக்கு ஜெனரேட்டர் வசதி செய்து கொடுக்க வேண்டும். 6 மாடி ஏறி நடந்து செல்வது எங்களுக்கு சிரமமாக இருக்கிறது. அதைப்போல் பத்திரிகை ஒன்றுக்கு 10 காசு கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. அது என் என்று தெரியவில்லை. 10 காசு கூடுதலாக கொடுத்து வாங்குவது மிகவும் கொடுமை. இதையெல்லாம் அரசு சரி செய்ய வேண்டும். டாக்சிகளையும், ஆட்டோக்களையும் கூப்பிட்டால் கூப்பிட்ட இடத்திற்கு வருவதில்லை. எக்மோர், சென்ட்ரல், பேருந்து நிலையம் செல்ல வேண்டுமென்றால் அவர்கள் கேட்ட தொகையை கொடுக்க வேண்டியிருக்கிறது. டாக்சிகள், ஆட்டோக்கள் காம்பவுண்டு சுவருக்கு வெளியே இருக்கிறது. அதை மற்ற இடங்களில் இருப்பதுபோல் உள்ளே நிறுத்தி எங்கு செல்வதாக இருந்தாலும் உடனே செல்வதற்கு வசதி செய்து தரவேண்டும். திருவள்ளுவர் போக்குவரத்தில் வி.ஐ.பி. சீட்கள் புறப்படுகின்ற இடத்தில் M.L.A க்கள் வராவிட்டால் மற்றவர்களை

ஏற்றுகிறார்கள். இடையில் இருக்கின்ற ஊர்களில் **M.L.A.** க்களுக்கு இடம் கிடைப்பது இல்லை. எனவே வி.ஐ.பி. சீட்களில் எம்.எல்.ஏக்கள் ஏறாவிட்டால் இரண்டு சீட்களை காலியாகக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களின் அறைக்கு தினசரி வாடகை என்று வசூலிக்கப்படுகிறது. இது தேவைதானா? இதை நீக்க வேண்டும். சட்டம் இதற்கு இடம் கொடுக்காவிட்டால் மாதம் ஒரு ரூபாயாவது வசூலித்து சட்டத்தை சரி செய்ய வேண்டும்.

(பிற்பகல் 12-10)

அடுத்து ஸ்க்ரீன் அங்கே அதிகமாக இல்லை. ஸ்க்ரீனை மாற்ற வேண்டும் என்றால் ஏற்கெனவே இருக்கின்ற ஸ்க்ரீனை எடுத்துக் கொண்டு போய் சலவை செய்துவிட்டு பிறகு கொண்டு வந்து மாட்டுகின்ற நிலைமை இருக்கிறது. அதுவரையில் ஒன்றிரண்டு நாட்கள் ஸ்க்ரீன் இல்லாமல் சிரமமாக இருக்கிறது. அவற்றை அடிக்கடி மாற்றிக் கொடுக்கின்ற ஏற்பாட்டைச் செய்து அதிகமான ஸ்க்ரீன் அங்கே இருப்பதற்கான ஏற்பாட்டையும் செய்யவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து இரயில்வே கட்டணம் 12½ சதவீதம் உயர்த்தப் பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு நீங்களும் எங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தொகையை உயர்த்திக் கொடுப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். மேலும் 300 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் இருந்து வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகப்படியான தொகைக்கு கூப்பன் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காவலர்கள் ஓய்வில் செல்லும்போது அவர்களுக்கு வேண்டிய ஓய்வூதியத் தொகையை உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலே தாமதம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உடனே கொடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற தலைவர்கள் படங்களில் தேசப் பிதா காந்திஜி அவர்களுடைய படத்திற்குக் கீழே சத்தியம், அகிம்சை என்று எழுதி வைக்கப்பட வேண்டும்.





அடுத்து தலைவர்களின் படத்திற்குக் கீழே அவர்களுடைய பெயர்கள் எழுதப்படவில்லை. முன்னாள் முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் பெயர் மட்டும் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. ஒன்று, எல்லோருடைய பெயரும் எழுதி வைக்கப்பட வேண்டும் அல்லது அந்தப் பெயரை எடுத்து விடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசி சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் பார்க்கும்போது ஆறேமுக்கால் மணிக்கு தேசியக் கொடியை இறக்குவதைப் பார்த்தேன். 6 மணிக்கு இறக்கப்பட வேண்டும் என்று கடுமையான சட்டம் இருக்கிறது. அது சரியாக செயல்படுத்தப்படுவதற்கு உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தலைமையிடப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் 35 பேர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த சஸ்பென்ஷன் உத்தரவை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றத்திலிருந்து முதல்வர் வெளியே செல்லும்போது எங்களுக்காக வந்திருக்கின்ற பேருந்துகளை எல்லாம் வெளியே நிறுத்தி வைத்துவிடுகிறார்கள். அதன் காரணத்தால் நாங்கள் நடந்துபோய் ஏறவேண்டி இருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டும்.

அடுத்து அமைச்சர்கள் சிலவற்றைத் தொடங்கி வைக்கும் போது, அடிக்கல் நாட்டுகிறபோது எல்லாம் அவை கிராமங்களில் நடத்தப்பட வேண்டும் என்றால் அங்கே நடத்தப்படாமல் பக்கத்திலே இருக்கின்ற நகரங்களுக்கு அந்த அடிக்கற்கள் நடந்து செல்கின்றன. அங்கே தான் அந்த விழாக்கள் நடத்தப் படுகின்றன. எனவே கிராமங்களிலேயே அந்த விழாக்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விருதுநகர் தொகுதியில் அமைச்சர் மாண்புமிகு திரு. சாத்தூர் இராமச்சந்திரன் அரிசன தொகுப்பு வீடுகளையும் சந்தனவு கட்டிடத்தையும் கால்நடை மருத்துவமனையையும்

திறந்து வைப்பதற்கு, அந்தத் திறப்பு விழாவிற்கு 22—8—1985 அன்று வருவதாகத் தேதி கொடுத்தார். அவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார். தான் தலைமை வகிப்பதாகவும், நீங்கள் முன்னிலை வகியுங்கள் எனறும் சொன்னார். அந்த விழாவிற்கு மூன்று நாள் இருக்கும்போது அமைச்சர் கொடுத்திருந்த அந்தத் தேதியை ரத்து செய்துவிட்டார். மறுபடியும் பல தடவை கேட்டும், அதுபற்றிச் சொல்லியும், இன்னும் தேதி கிடைக்கவில்லை. பதிப்பதற்கான கற்கள் எல்லாம் தயாராக இருக்கின்றன. ஒருவேளை எதிர்க்கட்சி உறுப்பினர் பெயர் அந்தக் கல்லிலே வந்துவிடும் என்பதால் இன்னும் தேதி கொடுக்கப்படவில்லையோ என்னவோ தெரியவில்லை. எனது தொகுதியில் ஒன்றரை வருட காலமாக எந்தத் திறப்பு விழாவும் செய்யப்படவில்லை. இதனை நான் குறிப்பிட்டு ஒரு குறையாகச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு முடித்துக் கொள்ள விரும்புகிறேன். * *

* *என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * என்பதை அவைக் குறிப்பிலே இருந்து நான் நீக்குகிறேன்.

* **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மானியக் கோரிக்கைமீது எனக்கு முன்பாகப் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பல உணர்வுகளைச் சொல்லி சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றியும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான வசதிகளைப்பற்றியும், சட்டமன்றப் பேரவை விடுதி பற்றியும் பல்வேறு உணர்வுகளை விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்து வைத்து இருக்கிறார்கள். காலத்தின் தன்மை கருதி ஒருசில உணர்வுகளை மட்டும் சுருக்கமாகச் சொல்லி விடைபெறலாம் என்று நான் கருதுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





சட்டமன்ற அலுவலகம் கட்டவேண்டும் என்ற செயற்குறிப்பு பலமுறை பரிசீலிக்கப்பட்டும் இன்னும் அந்த நடவடிக்கை வரவில்லை. அந்தப் பணியை விரைந்து எடுக்கவேண்டும். எனது தொகுதியில் பல இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்களில் ஏதாவது ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து சட்டமன்ற அலுவலகம் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய அனைத்து உறுப்பினர்களும் எல்லாவிதமான உணர்வுகளையும் எடுத்துச் சொல்லிவிட்ட காரணத்தால் தேர்தலைப் பற்றி நான் ஒரு கருத்தைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

நடந்து முடிந்த ஆசிரியர்கள் தொகுதி தேர்தல், பட்டதாரிகள் தொகுதி தேர்தல். இந்த இரண்டு தேர்தல்களிலும் வாக்கு பதிவு செய்யப்படுகிற முறையை மாற்றியமைக்க வேண்டுமென்பதை நான் இந்த மாமன்றத்தில் நினைவுபடுத்தி, அதற்கு உரிய நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள் என்ற விவரம் தலைமைக் கல்வியதிகாரி அவர்களிடத்தில் இருக்கிறது. தலைமைக் கல்வி அதிகாரி மற்றும் தலைமை ஆசிரியர்கள் வாயிலாக ஆசிரியர்கள் வாயிலாக ஆசிரியர்கள் எவ்வளவு பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதை அறிந்து, அவர்கள் அத்தனை பேர்களும் வாக்களிக்க தகுதி பெறுகிற முறையில் செய்து, பட்டதாரி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களானாலும் சரி தங்கள் வாக்குகளை பதிவு செய்து கொள்ளலாம். அதை விடுத்து இவர்கள் தனியாக வீட்டு முகவரி போட்டு பதிவு செய்து, வாக்குப் பதிவு என்று தனியாக வைத்து செய்வதால் ஏற்படுகிற செலவினங்களைக் குறைக்கவும், அதனால் அரசுக்கு ஏற்படுகிற சிரமங்களைக் குறைக்கவும், அந்தந்தப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள் பள்ளி வேலை நாட்களில் ஒரு நாள் தங்கள் வாக்குகளை பதிவு செய்கிற முறையைக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும். அரசுக்கும் செலவு மிச்சம், போட்டியிடுகிற வேட்பாளர்களுக்கும் செலவு மிச்சம், மேலும் எந்தவிதமான முறைகேடுகளும் அதில் நடைபெறாது என்ற காரணத்தால் இப்போது இருக்கும் முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பட்டதாரி ஆசிரியர்கள் தேர்தல். யார் வேண்டுமானாலும், 22 வயது இருந்தால், ஏன் 18 வயதுள்ளவர்கள் கூட பட்டதாரி வாக்காளர் தொகுதியில் வாக்களிக்கிறார்கள். இது என்ன முறை? கேலிக் கூத்தாக இருக்கிறது. ஆகவே இந்த முறையை மாற்றவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 18 வயதில் எப்படி பட்டதாரியாக முடியும்?

**திரு. சைதை சா. துரைசாமி:** தலைவர் அவர்களே, அவர்களும் வாக்களிக்கிறார்கள். கள்ள ஓட்டு போடுகிறார்கள். திருட்டுத்தனமாக போட்டிருக்கிறார்கள். தவறாக போடப்படுகிறது. ஆகவே அந்த முறையை மாற்றவேண்டும். பட்டதாரிகள் குறித்து யூனிவர்சிட்டியில் கேட்டால், எத்தனை பேர்கள் பட்டம் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரம் தெரியும். மருத்துவத் துறையாக இருந்தாலும், கால்நடை துறையாக இருந்தாலும், தமிழ்த் துறையாக இருந்தாலும் எந்தத் துறையாக இருந்தாலும் பட்டம் பெற்றவர்களுடைய பட்டியல் அவர்களிடத்தில் இருக்கிறது. அந்தப் பட்டியலை வைத்து தகுதியுள்ளவர்கள் அல்லது தகுதியில்லாதவர்கள் என்ற அந்த விவரத்தை சேகரித்து நாம் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க முடியும். தவிர இடது கையையும், வலது கையையும் மாற்றி மாற்றி கையெழுத்துப் போட்டு, நான் எம். காம், நான் பி. காம் என்று சொல்லி தகுதியில்லாதவர்களை எல்லாம் வாக்காளர்களாக சேர்க்கக் கொள்வதன் விளைவுதான் கடந்த தேர்தலில்கூட எதிரொலித்தது என்பதை எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உணர்ந்ததால் அந்த முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பட்டதாரி தொகுதி தேர்தல் ஆனாலும், ஆசிரியர்கள் தொகுதி தேர்தலானாலும் அந்த முறையை நாம் கட்டாயமாக மாற்றியமைக்க வேண்டும். அப்போது தான் உண்மையான பட்டதாரிகள், உண்மையான ஆசிரியர்கள் வாக்களிக்க முடியும்

அதுமட்டுமல்லாமல் பட்டதாரிகள் தொகுதியில் கள்ள வாக்குகளைப் போடுகிறார்கள். அங்கே எந்தவிதமான அடையாளச் சீட்டும் கிடையாது. எந்தவிதமான சான்றிதழும் கிடையாது.



அவர்கள் சென்று சொன்னால் வாக்களிக்க அனுமதிக்கப் பெறுகிறார்கள். ஆகவே பட்டதாரிகள், ஆசிரியர்கள் தொகுதி தேர்தல்களில் நாம் மாறுதலைச் செய்ய வேண்டும்.

**திரு. சு. பாலன்:** தலைவர் அவர்களே, பட்டதாரிகள், ஆசிரியர்கள் தொகுதி தேர்தலைப் பற்றி பேசுகிறார்களே, அதற்கும் நம்முடைய மானியக் கோரிக்கைக்கும் என்ன சம்பந்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேர்தல்கள் என்ற மானியத்தில் உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை தெரிவிக்கிறார்.

**திரு. சைதை சா. துரைசாமி:** தலைவர் அவர்களே, தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் பேசிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் குறிப்புகளை படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட முறையில் நாம் தேர்தல்களில் மாற்றம் செய்ய வேண்டும்.

அடுத்து சட்டமன்றங்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் நாம் தேர்தல்களை எப்படி நடத்திக் கொண்டிருக்கிறோம்? இன்றைக்கு ஒரு வரம்பு வைத்திருக்கிறார்கள். சட்டமன்ற தொகுதி தேர்தலுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்றும் நாடாளுமன்றத் தொகுதிக்கு 1½ லட்சம் ரூபாய் என்றும் செலவில் வரம்பு வைத்திருக்கிறார்கள். இங்கே வந்திருக்கிற அத்தனை பேர்களும் நெஞ்சில் கையை வைத்துச் சொல்லுங்கள். 50 ஆயிரம் ரூபாய் தான் செலவு செய்தோமா? என்ன முறை? ஆகவே அந்த முறையை மாற்ற வேண்டும். அந்தச் செலவுகளை அந்தந்த வேட்பாளர்கள் செய்யக் கூடாது. 50 ஆயிரம் ரூபாய் என்றால் அதனை அரசிடம் கொடுங்கள். அரசு என்னென்ன வகையில் எப்படி செய்ய வேண்டுமென்று நிர்ணயிக்கிறதோ அந்த வகையில் செலவு செய்ய வேண்டும். அதிகமாக விளம்பரங்களை, சுவரொட்டிகளை ஆங்காங்கு ஏற்படுத்தி, சுவற்றையெல்லாம் கெடுத்து. இதன்மூலம் பொதுமக்களுக்கு தொல்லை தருகிறோம். அதுமட்டுமல்லாமல் ஆங்காங்கு ஒலிபெருக்கியை வைத்து அதன் மூலம் மக்கள் சிரமப்படுகிறார்கள். அனுபவரீதியாக சொல்கிறேன். பொதுமக்கள் இவைகளை எல்லாம் குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே அந்த

வகையில் தேர்தல் முறையில் ஒரு மாற்றம் கொண்டு வர வேண்டும். குறிப்பிட்ட இலக்குகளைத் தவிர வேறு எந்த விதமான செலவுகளையும் செய்யக் கூடாது என்பதற்கு கட்டுப்பாடு கொண்டு வர வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு வாக்கு அளிக்கும்போது பொதுமக்களுக்கு சிரமமான சூழ்நிலை ஏற்படுகிறது. இன்றைக்கு ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பூத் உள்ள பகுதிக்குச் செல்வதற்கு குறைந்தது ஒரு கிலோ மீட்டர் என்று

(பிற்பகல் 12-20)

சொல்கிறார்கள். 3 அல்லது 4 கிலோ மீட்டர் தூரத்தில் கூட அந்த வாக்குச் சாவடிகள் அமைந்து விடுகின்றன. ஆகவே அந்தந்தத் தெருவிலே வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட வேண்டும். எல்லோரும் தாராளமாக எந்தவிதமான வாகன வசதியும் இல்லாமல் பொதுமக்கள் வந்து வாக்களிக்க வேண்டும். அச்சுறுத்தல், மிரட்டல் போன்ற அந்தக் காரியங்களில் இருந்து விடுபட்டு பொதுமக்கள் சுயமாக எந்தவிதமான அச்சுறுத்தலுக்கும் மிரட்டலுக்கும் ஆட்படாமல் வாக்களிக்க வேண்டும் என்றால், அந்தந்தப் பகுதியிலே வாக்குச் சாவடிகள் இருந்தாக வேண்டும். ஆகவே அப்படிப்பட்ட ஒரு நிலைமையில் நாம் இந்தத் தேர்தல்களை நடத்தினால்தான் அது முறையாக இருக்கும். பல பேர்கள் இன்றைக்கு அதாவும் குறிப்பாக சென்னை, கோவை, மதுரை, திருச்சி சேலம் போன்ற நகர்ப்புறங்களில் கள்ள வாக்குகளைப் பதிவு செய்துவிடுகிறார்கள். நகர்ப்புறங்களில் வாக்காளர்களை அடையாளம் தெரிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால் கிராமப்புறங்களில் அது முடியாது. நகர்ப்புறங்களில் யார் வேண்டுமானாலும் ஓட்டுப் போடலாம். அடுத்த வீட்டுக்காரனுக்கு எதிர்த்த வீட்டிலே இருப்பவர்கள் யார் என்று தெரியவில்லை, எதிர்த்த வீட்டிலே இருப்பவர்களுக்கு பக்கத்து வீட்டுக்காரர்கள் யார் என்று தெரியவில்லை. எனவே இப்படி ஒரு நிலைமை இருக்கிற காரணத்தால், வாக்காளர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. இதிலே திறமையுள்ள, எப்போதுமே ஆள் மாறாட்டம் செய்வதில் அல்லது ஏமாற்றுவதில், திறமையுள்ள சில பேர்கள் இன்றைக்கு உண்மையான வாக்காளர்களை ஏமாற்றிவிட்டு, வாக்களிப்பதினுடைய விளைவாக பல சிரமங்கள்



ஏற்படுகின்றன. நான் கூட இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கவே முடியாது. அப்படிப்பட்ட அபாயத்திலேயிருந்து மீண்டு வந்ததினுடைய விளைவாக சொல்கிறேன். கள்ள ஓட்டு வாக்குகளினால் பாதிக்கப்பட்டவன் என்கிற காரணத்தால் சொல்கிறேன். நகர்ப்புறங்களில் இருக்கிற வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். இன்றைக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரேசன் அட்டைகள் வழங்கப்பட்டு இருப்பதைப் போல, வாக்காளர்களுக்கும் ஏதாவது முறையில், அடையாள அட்டைகள் கொடுக்க வேண்டும். அடையாள போட்டோ கொடுக்கலாம், அதற்கு அதிகமாக செலவாகும் என்றால், அடையாள அட்டைகள் கொடுத்து, ஏதாவது ஒரு வகையில் இதற்கு ஒரு மாறுதலைக் கண்டுபிடித்தாக வேண்டும். எங்கு செய்கிறீர்களோ இல்லையோ சென்னை மாநகரத்திற்கு கட்டாயம் செய்ய வேண்டும். இங்கே உண்மையான வாக்காளர்கள் வாக்களிக்க முடியாமல் போய்விடுகிறது. இரண்டு மணிக்கு சென்று வாக்களிக்கலாம் என்று இருந்தால், அதற்குள்ளாகவே காலையிலே போட்டு விடுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு நிலையில் இந்த முறையை மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றி கூட அன்பிற்குரிய எங்களது முன்னாள் நிதியமைச்சர், இன்னாள் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கிற அருமை அண்ணன் நாஞ்சிலார் அவர்கள் சொன்னார்கள். சொல்லக் கூடாத விஷயங்களைக் கூடச் சொன்னார்கள், அவருடைய தகுதிக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டு, அவர்கள் பேசக்கூடாததை எல்லாம் பேசினார்கள். இருந்தாலும் பரவாயில்லை. குறிப்பாக சபாநாயகர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு அதிகமாக உரிமைகளைக் கொடுப்பதில்லை என்று. ஆனால் எங்களது குறை எல்லாம், சபாநாயகர் அவர்கள் எங்களுக்குத் தான் மணி அடித்து, எங்களுக்குத் தான் வாய்ப்பு கொடுக்காமல், அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டு எல்லோருக்கும் அனுமதி வழங்குகிறார்கள் என்று குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகவே உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பதைப் போல, சபாநாயகர் அவர்கள் விளங்கிக் கொண்டு

இருக்கிறார்கள். ஆகவே சபாநாயகர் அவர்கள் இன்னும் கொஞ்சம் எங்களுக்கு தாராளமாக நேரத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னை மாநகரத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களைத் தவிர, கிராமப்புறங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 50 லிட்டர் பெட்ரோல் வழங்குகிறார்கள். சென்னை மாநகரத்தில் உள்ள நாங்கள் என்ன பாவம் செய்தோம். ஏன் இந்த புறக்கணிப்பு? எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிற வசதிப் படிகளை, எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகின்ற அந்த உரிமைகளை எங்களுக்கும் வழங்குங்கள் என்று சொல்லி, இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய மானியக் கோரிக்கைகள் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்தக் கேள்விகள் கேட்கிறபோது, அதற்கு முன்பாக 5 பேர்கள் கேள்வியைக் கேட்டால், ஒவ்வொருவருக்கும் இரண்டு இரண்டு துணைக் கேள்விகளைக் கேட்பதற்கு அனுமதி கொடுப்பார்கள். ஆனால் இப்போது 5 பேர்கள் கேட்டிருந்தால், ஒரு கேள்விதான் அனுமதிக்கிறார்கள். எனவே இதை மாற்றி, இரண்டு இரண்டு கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தால், அநேகமாக பெரும்பகுதி தள்ளுபடியாகிவிடுகிறது. ஒரு 10 சதவிதம்தான் வருகிறது. கேட்டால் மானியக் கோரிக்கையிலே பேசலாம் என்று சொல்கிறார்கள். மானியக் கோரிக்கையிலே பேசினால், எல்லாவற்றுக்கும் பதில் கிடைப்பதில்லை. கவன ஈர்ப்புத் தீர்மானம் சிலவற்றிற்குத்தான் எங்களுக்கு பதில் கிடைக்கிறது. எனவே எல்லாவற்றையும் நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல் ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலேயும், பட்ஜெட்டிலேயும் பேசுகிறபோது, பேரவைத் தலைவர் அவர்கள், —எங்களுக்கு குறைந்த நேரம் கொடுக்கிறார்கள், அல்லது கொடுக்கவில்லை என்ற வருத்தத்திலே நான் சொல்ல வரவில்லை— கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது, ஆளும் கட்சியிலே உள்ள நீங்கள், எதிர்க்கட்சியினருக்கு அதிகமாகக் கொடுக்கிறார்கள் என்று வம்பு பண்ணாமல், எதிர்க்கட்சியிலே இருப்பவர்களுடைய கருத்துக்களை ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அதிகமாகக் கேட்க வேண்டும் என்ற அந்தக் கருத்தை ஏற்று, எதிர்க்கட்சியினர் எண்ணிக்கையைப் பார்க்காமல், ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலேயும் அல்லது பட்ஜெட்டிலேயும் கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் இந்தக் கமிட்டிகள் போடுகிறபோது, 6 கட்சி இருந்தால் 4 பேர்கள்தான் போடலாம் என்று சொல்கிறார்கள். அந்தமாதிரி இல்லாமல் இருக்கிற கட்சிகளுக்கு மட்டும், அதிகாரம் பெற்ற 4 கமிட்டிகளிலே கட்சிக்கு ஒருவராக போடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு காவலரைப் போட்டிருக்கிறோம். 6 மணி நேரம் அப்படியே நிற்கிறார். நான் கேரளத்திலே பார்த்திருக்கிறேன்; அங்கே இப்படி கிடையாது. அங்கே சபாநாயகருக்குப் பின்புறம் ஒரு நாற்காலி போட்டு உட்கார வைக்கிறார்கள். அந்த மாதிரி உட்கார வைக்க வேண்டும். அதைப் போலத்தான் அமைச்சர்களுடைய பணியாளர்களுக்கும். நான் அந்தக் காலத்திலே பார்த்தால், பண்ணையார் வீட்டிலே 6 மணி நேரம், 8 மணி நேரம், 10 மணி நேரம் பண்ணையிலே நின்று கொண்டிருப்பார்கள். நான் பண்ணை கிராமத்தில் உள்ளவன். இப்போது நம்து பணியாளர்களைப் பார்க்கிறபோது 8 மணி நேரம், 7 மணி நேரம் அப்படியே நிற்கிறார்கள். நான் தயவுசெய்து கேட்டுக் கொள்வதெல்லாம் அமைச்சர்களுடைய பணியாளர்களுக்கு இரண்டு பக்கமும் பென்ச் போட்டு அவர்களை உட்கார வைத்து வேலைவாங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்காகத்தான் லவுன்ச்சிலே யாரும் வரக்கூடாது என்று லவுன்ச்சையே கிளியர் பண்ணிவிட்டேன்.

திரு. பொ. உத்திராபதி: நான் கேரளத்துக்குச் சென்றிருந்த பொழுது இதையெல்லாம் பார்த்திருக்கிறேன்.

அப்புறம், சட்டசபையிலேயும், தலைமைச் செயலகத்திலேயும் தற்காலிகமாக, 4 வருஷம், 5 வருஷம் பணிபுரிகின்றவர்கள் பர்மனென்ட் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் பர்மனென்ட் செய்ய வேண்டும். இன்று எம்ப்ளாய் மெண்ட் மூலம் வந்து 10 வருஷம், 8 வருஷம் சர்வீஸ் ஆனவர்கள், சர்வீஸிலிருந்து வீட்டுக்குச் செல்லக்கூடிய ஒரு அபாயம் இருக்கிறது. புதிதாக எடுக்கின்றவர்களை நீங்கள் எம்ப்ளாய் மெண்ட் மூலமாக எடுங்கள். 10 வருஷம், 8 வருஷம் சர்விஸ் பண்ணியவர்களை அப்படியே பர்மனென்ட் ஆக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல் அமைச்சர்களுக்கு கோரிக்கைகளை வைத்து பல கடிதங்கள் போடுகிறோம். இப்போது மத்திய அரசுக்கு, கடிதம் அனுப்புகிறோம் என்று சொன்னால் 15 நாள் 20 நாளுக்குள் உடனடியாக பதில் வந்து விடுகிறது. ஆனால் நம்முடைய அமைச்சர்களுக்கு அனுப்பும் கடிதம் 2 மாதம், 3 மாதம், 4 மாதம் ஆகின்றது. அதைக் காலந்தாழ்த்தாமல் ஒரு குறிப்பிட்ட—15—தினங்களுக்குள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விவரங்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, இப்போது சட்டமன்ற விடுதியிலே, பொதுப்பணித் துறை மூலமாக தண்ணீர் சப்ளை செய்வது போன்ற மற்ற காரியங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் எவ்வளவுதான் சொன்னாலும், சட்டமன்றத்திலிருந்து சொன்னாலும் பொதுப் பணித் துறையினர் அசைவதே கிடையாது. சில நாட்களுக்கு தண்ணீர் இல்லாமலே போய்விட்டது. அதுபற்றி சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டால், அவர்கள் 24 மணி நேரமும் தண்ணீர் சப்ளை செய்யவேண்டுமா என்று கேட்கிறார்கள். ஆக, ஒரு துறைக்கு ஒரு துறை கவனிக்க முடியாத நிலை இருக்கிறது.



ஆக, சட்டமன்ற விடுதி, மற்றும் சட்டமன்றத்திற்கு உட்பட்ட அத்தனையும், சட்டமன்றத் துறைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப்போல போன் 2 நாட்கள் தொடர்ந்து புகார் செய்தாலும் கிடைக்காத நிலை; அவைகள் சரிவர இயங்காத நிலை இருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப்போல் யூனியன்களிலிருந்து ஜீப்பை எங்களுக்கு 2 நாட்களுக்கு வழங்கியிருக்கிறீர்கள். பெரும்பாலும் ஜீப் எங்களுக்குக் கிடைப்பதில்லை. நாங்கள் கேட்டால் ஆபீஸுக்கு சென்றுவிட்டது என்கிறார்கள். ரிப்பேருக்கு போய்விட்டது என்கிறார்கள். இப்போதுகூட கடிதம் எழுதிக் கேட்டதற்கு பி.டி.ஓ.க்கு, 1 வாரத்திற்கு சென்றுவிட்டது என்று சொல்கிறார்கள். ஆகவே, அதற்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால், பெட்ரோல் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப்போல், பத்திரிகை நிருபர்களில் ஒரு சிலருக்குத்தான் போக்குவரத்துத் துறையிலே பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கேட்கக் கூடிய கோரிக்கையை நாங்கள் சொல்கிறோம். அரசு மூலமாக எத்தனை துறைகள் இருக்கிறதோ அத்தனை துறைகளுக்கும் அவர்கள் சென்று வருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப்போல் தலைமைச் செயலக ஊழியர்கள் போராடினார்கள். இன்னமும் 24 பேர் வேலை நீக்கத்தில் இருக்கிறார்கள். இன்னமும் அவர்களுக்கு சோதனை அளிக்காமல் பெரிய மனசு வைத்து அந்த 24 பேர்களுக்கும் வேலை கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அதைப்போல் சங்கம் வைத்துக்கொள்வதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. சங்கத்தை மட்டும் முடமாக்கக்கூடாது. நீங்கள் தலைமை செயலகத்தில் இருக்கிற சங்கத்தை ரத்து செய்ததை மாற்றி மீண்டும் அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல செயலக பணியாளர்களுக்கு 23—7—1980-லே இந்தச் சட்டமன்றம் நடக்கிறபோது, சட்டப் பேரவை பணியாளர்களுக்கு இலவச பாஸ் வழங்க வேண்டுமென்று சொல்லி, அது சட்டசபையிலே அறிவிக்கப்பட்டு 23—9—1981-லே ஜி.ஓ. 1004-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளாக அவர்களுக்கு அதை நிறைவேற்றிக் கொடுக்கவில்லை. உடனடியாக அவர்களுக்கு அந்த பாஸ் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(பிற்பகல் 12-30)

அதைப்போல் Papers laid on the table Committee, Petitions Committee, Library Committee இவைகளைப் போடுவதாக அறிவிக்கப்பட்டாயிற்று. அவைகள் இன்னும் போடப்படவில்லை. அவைகளை உடனடியாக அமைச்சர் அவர்கள் இப்போதே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கமிட்டிகளைப் போட்டால், இன்னும் அதிகமான கமிட்டிகள் போடப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது; அந்தக் குறைபாடுகள் நீங்கும். இந்த அமைப்பு முறைகள் நல்ல முறையில் செயல்படுவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கும். இதை நிறைவேற்றுகிறபோது அக்குழுக்கள் செவ்வனே செயல்பட வேண்டுமென்று சொன்னால், சார்புச் செயலாளர், துணைச் செயலாளர் ஆகிய பதவிகளை உருவாக்கி கிடைப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாக இருக்கும். கடைசியாக இந்த இலங்கை தமிழர்கள் அகதிகளாக நிறைய வந்து இருக்கிறார்கள். தற்போது மத்திய அரசு அதிகமாக உதவி செய்கிறார்கள். மாநில அரசும் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள். இன்றைக்கு அவர்களை கொடைக்கானலில் 40 குடும்பத்திற்கு மேல் ஒரு பெரிய காண்டிராக்டர் மூலம் கொண்டுபோய் பல்வேறு சலுகைகள் தருகிறேன் என்று அறிவித்து, அவர்களை அடிமைகளாக்கி இருக்கிறார்கள். இறுதியாக அவர்கள் அங்கே இருக்கக்கூடிய ஆர்.டி.ஓ. மூலமாக புகார் மனு கொடுத்து அவர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளத்திலே கூட பாதியை கொடுத்து, பாதியை கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று சுப்ரீம் கோர்ட்டுக்கு போய் சுப்ரீம் கோர்ட் ஆணையிட்டும் கூட இன்னும் அந்த சலுகைகள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். யாரோ ஒரு பெரிய பிரமுகர் அவர்களுக்கு



செய்ததாக நான் கேள்விப்படுகிறேன். ஆகவே இந்த இலங்கை தமிழர்களுக்கு அங்கே பாதுகாப்பு இல்லை என்று இங்கே வந்து தமிழகத்தில் பாதுகாப்பு கொடுக்கிற நேரத்தில் இங்கே சுரண்டக் கூடியவர்கள் அவர்களை அடிமைகளாக ஆக்கி, அவர்களை சுரண்டக் கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த நிலையை போக்கவேண்டும்.

இறுதியாக இன்றைக்கு சட்டமன்ற விடுதிகளில் இருக்கக்கூடிய குறைபாடுகள் அதிகமாக இருக்கின்றன. அந்த குறைபாடுகளை எதிர் காலத்தில் நீக்கி, அந்த சட்டமன்ற விடுதி, சட்டமன்ற விடுதியாக இருக்க வேண்டும். அதேபோல் தலைமை செயலகத்தில் பணியாற்றக் கூடிய ஊழியர்களுக்கு கிடைக்கக்கூடிய அந்த சலுகைகள் வழங்கி இந்தச் சட்ட மன்றம் சிறப்பாக செயல் படுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவண செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வந்து இருக்கிற மாநிலச் சட்ட மன்றம், தேர்தல்கள், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும், எழுதுபொருள்-அச்சுத் துறை ஆகிய மானிய கோரிக்கைகள் மீது நான் சார்ந்து இருக்கிற காந்தி காமராஜ் தேசியகாங்கிரஸ் கட்சியின்சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ரயிலில் பிரயாணம் செய்வதற்கு டிக்கெட் வாங்குவது மிகவும் சிரமமாக இருக்கிறது. அதை தடுப்பதற்கு வாய்ப்பாக புதிய சட்டமன்ற விடுதியில் ரயில்வே ரிசர்வேஷன் கவுண்ட்டர் ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள். எனவே மக்கள் தரும் மகஜர்கள், மனுக்கள் ஆகியவற்றை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக் கிறது. மேலும் தொகுதி மக்களின் தேவைகளை அதிகாரி

களுக்கு தெரிவிக்கவும் கடமை உண்டு. இதற்கு அரசு தபால் வில்லைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் தொகுதி மக்களின் தேவைகளை நிறைவு செய்ய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாக ஒரு உதவியாளர் கண்டிப்பாக தேவை. அவர் பதவி காலம் முழுவதும் ஒரு உதவியாளரை நியமித்துக் கொள்ள அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு தொகுதியிலும் மக்களுடன் தொடர்புகொள்ள வசதியாக அலுவலக கட்டிடம் ஒன்று அரசின் மூலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் உள்ளாட்சி ஒன்றிய அலுவலகத்தில் தனியாக ஒரு அறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறையினால் எங்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை. எனவே தனியாக உறுப்பினர்களுக்கு ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற விடுதியில் தங்கி இருக்கும உறுப்பினர்களுக்கு உணவு எடுத்து வருவதற்கு வசதியாக கேரியர்கள் இல்லாமல் இருக்கிறது. அங்கே 4 கேரியர்கள் தான் இருப்பதாக சொல்லப்படுகிறது. கேரியர்களை கூடுதலாக வாங்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் படி இந்த கால நிலையில் போதுமானதாக இல்லை. ஆகவே படிகளை கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற விடுதியில் பணியாற்றும் தற்காலிக ஊழியர்கள் மிகவும் குறைந்த ஊதியத்தில் அதிகமான நேரம் பணியாற்றுகிறார்கள். 12 மணி நேரம் பணி ஆற்ற பணிப்பது முறை அல்ல. அவர்கள் பணி நேரத்தை 8 மணி நேரமாக குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் 5 ஆண்டுகளாக தற்காலிகமாக பணியாற்றுகிறவர்களை நிரந்தரப் பணியில் நியமிக்க வேண்டும் அவர்களுக்கு பணி பாதுகாப்பு மற்றும் அரசு சலுகைகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தேர்தலைப் பொறுத்தவரையில் தேர்தலில் போட்டியிட்டு ஜாமீன் தொகை இழந்தவர்கள் மீண்டும் 6 ஆண்டு காலம் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று சட்டம் கொண்டு வர வேண்டும். அடையாள அட்டைகள் வழங்குவதன் மூலம்



கள்ள வோட்டு போடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கும். ஆகவே ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் சமயத்தில் சில வோட்டு சாவடிகள் மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டு இப்போது நடைபெற்ற பஞ்சாயத்து யூனியன் தேர்தலிலே பல கிராம மக்கள் வோட்டு போடாத நிலை இருந்து வந்தது. இதுபோன்ற ஒரு வசதி இல்லாமல் இருக்கும் இடங்களில் தேர்தல் வருவதற்கு 3 மாதங்களுக்கு முன்பாக ஓட்டுச் சாவடிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று ஜாதிச் சான்றிதழ் பெறுவதில் ஒவ்வொரு முறையும கிராம அதிகாரியிலிருந்து தாசில்தார் வரை செல்ல வேண்டிய நிலை உள்ளது. அதற்குப் பதிலாக எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தில் உள்ள காபியை ஜெராக்ஸ் எடுத்துக்கொள்ளலாம் என்று அரசு அறிவிக்க வேண்டும் அல்லது எஸ்.எஸ்.எல்.சி. புக்கைப் பார்த்து தாசில்தார் கையெழுத்து போட உத்தரவிட வேண்டும்.

அதேபோன்று ஊராட்சி மன்றங்களில் பணிபுரிகிறவர்கள் ஓய்வூதியம் இல்லாமல் இன்று நடுத்தெருவிலே இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது)

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் சென்ற ஆண்டு உலகத்தாராலே போற்றிப் புகழப் பெற்ற அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய திருவுருவப் படத்தை வைப்பதாக நாம் சொல்லியிருக்கிறோம். ஆனால் இதுவரையில் அது வைக்கப்படவில்லை. எனவே அவருடைய படத்தையும், ஆசிய ஜோதியாக விளங்கிய பத்தர மாற்றுத் தங்கம் பண்டித ஜவஹர்லால் நேருவினுடைய படத்தையும் இந்த மாமன்றத்தில் வைக்க வேண்டுமென்று நான் மிகவும் அன்போடு, பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே தலைமைச் செயலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிற பணியாளர்கள், 1,888 பேர்கள் வெளியே இருந்தார்கள். எல்லோரையும் எடுத்துக் கொள்ளவில்லை. 34 பேர்களை மட்டும் ஏனோ எடுக்காமல் இருக்கிறார்கள். தயவுசெய்து அவர்களையும் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு இங்கே வேலை செய்கிற போலீஸ்காரர்கள் 5 மணி நேரம் வேலை செய்கிறார்கள்—இங்கே நம்மால் உட்காருவதற்கே முடியவில்லை—அவர்களுக்கு, ரூ. 6 தான் படியாகக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு இந்த ரூ. 6-ஐ தயவு செய்து உயர்த்தி ரூ. 10 ஆகக் கொடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு 14 நாள் தான் விடுப்பு வழங்கப்படுகிறது. அதையும் 30 நாட்களாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்னொன்று. அவர்கள் ஓய்வு கால க்ராஜுவிட்டியிலிருந்து கடன் கேட்கிறார்கள். அந்தப் பணம் கிடைப்பதற்கு 6, 7 மாதமாகிறது என்றால் அவர்களுக்கு சிரமமாக இருக்கிறது. அவர்கள் மிகவும் சாதாரண ஏழைகள். அவர்களுக்கு 15 நாட்களுக்குள்ளாக அந்த லோன் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சட்டமன்றத்திலே பணிபுரிகின்றார்களே தொண்டர்கள், ஊழியர்கள், அவர்கள் 10 ஆண்டுகளாக, இன்னும் நிரந்தரமாக்கப் படாமல் இருந்து கொண்டிருப்பது, அதுவும் பெண்கள், இன்னும் நிரந்தரமாக்கப்படாமல், வைத்துக் கொண்டிருப்பது நல்லதல்ல. அவர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க வேண்டுமென்று அவர்களின் சார்பிலே என்னுடைய பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

இங்கே நாம் பல கேள்விகளைப் போடுகின்றோம். இங்கே கேள்விகளுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல முறையிலே பதில் அளித்தாலும் கூட—நடைமுறையிலே அஷ்யூரன்ஸ் கமிட்டி என்று வைத்திருக்கிறார்கள்—அந்த கமிட்டியிலே கூட அமைச்சரவர்கள் சொல்லக் கூடிய உறுதிமொழிகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று





நாங்கள் எல்லோரும் அறிகிறோம். எனவே அமைச்சரவர்கள் சொல்லக்கூடிய உறுதிமொழிகள் எந்தக் காரணத்தை முன்னிட்டும், ஒத்திப் போடாமல் அதற்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

இங்கே பேசுவதற்கு எல்லோருக்கும் உண்மையிலேயே வாய்ப்பு கிடைக்க வேண்டும். அவரவர்களுடைய தொகுதியிலுள்ள அவசர நிலைமைகள் வரும்போது பேச வேண்டுமென்ற அக்கறை வருகிறது. தற்போது சட்ட மன்றம் 60 நாட்கள் கூடுவதாகச் சொன்னீர்கள். 100 நாட்கள் இந்த சட்டமன்றம் கூடுகின்ற நிலைமையை உருவாக்கினால், எல்லோருக்கும் பேசுவதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரிடம் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாயத்து போர்டுகளிலே தேர்தல் வந்து அவர்களுக்கு எந்தவித அதிகாரத்தையும் கொடுக்கவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் மத்திய அரசாங்கம் இம்மன்றத்திற்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திடம் அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறோம். பல விவரங்களைச் சொல்லலாம். அவர்களும் பொறுமையாக எடுத்துக் கொள்கிறார்கள். அதற்காகத் தான் மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இங்கே யூனியன்களில் சேர்மன்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். 50 லிட்டர் பெட்ரோல் கொடுத்து, அவர்கள் ஜீப்பை எடுத்துக் கொள்ளலாம் என்று இதுவரை இருந்தது. ஆனால் இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மன் வந்துவிட்ட காரணத்தினால், எம்.எல்.ஏ.க்கள் சில தொகுதிகளில் வேலை செய்கிறார்கள், சில தொகுதிகளில் அந்த நிலைமை இல்லை. அப்படி வரக் கூடிய நிலையிலே இன்றைக்கு எம்.எல்.ஏ.க்களைக் கண்டாலே ஒரு வெறுப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் நான் எப்படியோ சமாளித்துக் கொள்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். இருந்தாலும் கூட, இளைஞர்களாக இருக்கக் கூடிய எம்.எல்.ஏ.-க்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குள் போட்டா போட்டி என்று வந்துவிட்டால், அங்கே அடிதடி என்ற நிலைமை வரக்கூடாது.

ஆகையால் அந்த ஜீப்பை 2, 3 நாட்களுக்காவது—நான் பணமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லத் தயாராக இல்லை. அது நல்லதல்ல. 'இட் இஸ் மை பர்சனல் ஒப்பீனியன்'. அது நல்லதாக எனக்குப் படவில்லை. ஜீப்பிற்கு பெட்ரோல் போட்டு, 3 நாட்களுக்காவது அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. கேட்டால், அவர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்ற சட்டத்தை அங்கே போடுவார்களேயானால், அது அரசுக்கும், எல்லோருக்கும் மரியாதை கொடுக்கக் கூடியதாக அமையும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாதிரி எனக்குப் பிடிக்காத ஒருவர் வந்து இருப்பார். 'பிடிக்காத' என்றால் வேறு கட்சியைச் சேர்ந்தவர் வந்திருப்பார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நான் போகிறேன் என்றால்—ஈ.ஓ.பி. கூட வரவேண்டும். கிராம சேவக் கூட வர வேண்டும், பிறகு பி.டி.ஓ. வரவேண்டும் என்று எல்லாம் இதுவரைக்கும் இருந்தது. அதுபோலவே இப்போதும் எம்.எல்.ஏக்கள் அங்கு போகும்போது, அவர்களும் உடன் வரக்கூடிய நிலைமைகளை உருவாக்கினால் நன்றாக இருக்கும். கிராமங்களுக்குச் செல்லும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வந்தால்தான் வேலைகளைச் சுலபமாகச் செய்ய முடியும்.

(பிற்பகல் 12-40).

நான் தங்களுக்குக் காட்ட வேண்டும் என்றுதான் தபால்களைக் கொண்டு வந்தேன். ஒரு நாளைக்கு தபால் எழுதுவதே உண்மையிலேயே ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. சென்ற முறை கூட சொன்னேன். எப்படியாவது நீங்கள் ஒரு கிளார்க் கொடுங்கள். அரசாங்கம் பாதி சம்பளம் கொடுங்கள், யார் யாருக்குத் தேவையோ, அவர்கள், பாதி சம்பளம் கொடுத்து ஒரு கிளார்க்கை வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னேன். இது மிகவும் பரிதாபத்துக்குரிய நிலை. எங்களை மாதிரி உள்ளவர்கள் இரவு 10 மணி, 11 மணி வரை உட்கார்ந்து எழுதிவிடுகிறோம். தபால் சார்ஜே, ஒரு நாள் 17 ரூபாய் வருகிறது, ஒரு நாள் 19 ரூபாய் வருகிறது, இவைகளை எல்லாம் பார்த்துவிட்டு பத்திரிகைக்காரர்கள் சிரிக்கிறார்கள். 'என்ன அக்கா, இவ்வளவா எழுதுகிறீர்கள்?' என்று.





அந்த அளவுக்கு தொகுதியில் வேலை செய்ய வேண்டும் என்றால் எம்.எல்.ஏ.க்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு கொடுக்கிறீர்கள் அல்லவா? அவர்களுக்கு 'பியூன்' கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் பியூன் கேட்கவில்லை. ஒரு கிளார்க்காவது எங்களுக்கு, எம்.எல்.ஏ.க்களுக்கு ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். கிளார்க் போஸ்ட் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரம் அல்லாமல், தபாலுக்கு பணம் கொடுங்கள் என்று கேட்க எனக்குப் பிடிக்கவில்லை. ஸ்டாம்ப்—எம்.எல்.ஏ.க்கள் தொகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு அனுப்பக்கூடிய தபாலுக்கு நாங்களே ஒட்டிப் போட்டுக் கொள்கிறோம். அதிகாரிகளுக்கு, அமைச்சர்களுக்கு, செக்ரட்டரிகளுக்கு அனுப்பக்கூடிய தபால்களுக்கு எல்லாம் ஏதாவது ஒரு ஸ்டாம்ப் கொடுத்து, இந்த 'ஸ்டாம்பை' குத்தினால் போதும் என்று சொன்னால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு, மாண்புமிகு அமைச்சர் அவை முன்னவர் அவர்களுக்கே தெரியும். பழைய காலத்தில், காங்கிரஸ் காலத்திலே ஒரு மாதம், இரண்டு மாதம் சட்டமன்றம் நடைபெறுகிறபோது, அந்த சட்டமன்ற உறுப்பினர்களை 'நெய்வேலியிலே' தொழில் செய்து கொண்டிருக்கிறோம் என்று, பஸ் கொடுத்து, பஸ்ஸிலே அங்கே கொண்டு போய், சாப்பாடு போட்டு, காட்டுவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட வந்திருக்கிறார்கள். எதிர்க் கட்சியிலே இருக்கிற திரு. அன்பழகன் கூட வந்து இருக்கிறார்கள். ஏதாவது ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அவர்களை அழைத்துக் கொண்டு போய் காட்ட வேண்டும். அந்த நிலைமையில் சட்டமன்றம் நடக்கும்போது, இப்போது இரண்டு மாதம் நடக்கும்போது கூட, ஏதாவது இரண்டு இடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போய், காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தபோது இருந்த நிலை மாதிரி உருவாக்க வழிவகை செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். (மணியடிக்கப் பெற்றது).

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1986 மே 8

ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடிக்கிறேன். தியாகிகள் தியாகம் பண்ணியதால்தான் நாம் எல்லாம் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறோம். அவர்களுக்கு உங்களுடைய கருணையால் 250 ரூபாய் பென்ஷன் கொடுக்கிறீர்கள். அதை 300 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். பெண் உறுப்பினர்கள் நாங்கள் இருக்கிறோம். பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் திறமையாக இருக்கிறார்கள். அதற்காக ஆண் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் குறை கூறவில்லை. பெண்களுக்கு, தொழில் செய்ய வேண்டுமென்றால் எங்களுக்கு பணம் போட்டு, வெளியே போக முடியாது. ஜப்பானில் நிறைய குடிசைத் தொழில்கள் இருக்கின்றன. ஜெர்மனியில் நிறைய குடிசைத் தொழில்கள் இருக்கின்றன. பெண் அமைச்சர்கள், பெண் அங்கத்தினர்கள், அனுபவம் வாய்ந்த பெண் அமைச்சர்கள், பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இவர்களை எல்லாம் ஒரு குழுவாகப் போட்டு. ஜப்பான் போன்ற, ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைத்தால் தொழில் செய்வதற்கான நல்ல வாய்ப்பை உண்டாக்கலாம்.

'தம்பிகள்' என்று சொன்னால் 'அன்பார்லியமென்டரி வோர்டு'. ஆகவே, அங்கத்தினர்கள் எல்லாம் வீடுகள் கட்டுவதற்கும், கார் வாங்குவதற்கும் பணம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். யார், யார் சொந்தமாக வீடு கட்ட வேண்டும் என்று நினைக்கிறார்களோ, யார், யார் சொந்தமாக கார் வாங்க வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் அளவுக்கு கடனாக கொடுத்து, அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிற வரை சம்பளத்தில் மாதம் 500 ரூபாய் பிடித்துக் கொள்ளலாம். அவர்கள் தோற்றுப் போய், உறுப்பினர்களாக இல்லாமல் போனால் கூட, பென்ஷன் கொடுக்கிறோம். அதிலே பிடித்துக் கொண்டு, கார், வீடு வாங்க விரும்புகிறவர்கள் அதை வாங்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 மே 8] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

''மெடிக்கல் பில் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுப்பதிலே 'ஆப்பரேஷனுக்கு எல்லாம் இல்லை' என்று சொல்லப்படுகிறது. நாங்கள் உங்களைக் கேட்கவில்லை. நீங்களாகவே அந்த உதவியைச் செய்தீர்கள். காங்கிரஸ் காலத்திலே கை நீட்டி போய் நின்று, பஸ் ஏறுவோம். 'எம்.எல்.ஏ.-க்கள் என்று எழுதியா இருக்கிறது' என்று கூட சொல்வார்கள். அப்போது கஷ்டப்பட்டோம். இப்போது அது இல்லை. அதற்காக நன்றி சொல்ல வேண்டும். பஸ் பாஸ் கொடுத்து உபகாரம் செய்கிறீர்கள். கூப்பன் கொடுத்து உபகாரம் செய்திருக்கிறீர்கள். கூப்பனைக் கொடுத்து டிக்கெட் வாங்கக் கொடுத்தால், அந்த ஆட்கள் ரொம்ப கோபப்படுகிறார்கள். ஏனென்றால் 50 பைசா கூப்பன் எல்லாம் இருக்கிறது. எனவே, பணமாக வேண்டாம். எம்.பி.க்களுக்கு பாஸ் கொடுப்பதைப் போல, ரூபாய் 4 ஆயிரம் வரைக்கு பாஸ் கொடுக்கலாமா என்று பார்த்து பாஸ் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். (மணியடிக்கப்பட்டது). தலைவர் அவர்கள் வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி. ஒரே ஒரு விஷயம். மெடிக்கல் சம்பந்தமாக, அந்த ஆப்பரேஷன் கேஸ்களுக்கு இல்லை என்று இருக்கிறது. ரீ-இம்பர்ஸ்மென்ட் சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அது எந்த அளவுக்கு சாத்தியப்படும் என்பதான வகையில், லோக்கல் டாக்டர்களே கொடுத்தால் போதுமா என்று பார்த்து, ஆப்பரேஷன் கேஸ்களுக்கும் பணத்தைக் கொடுக்கும் நல்ல வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களின் கருத்தைத் தெரிந்து கொள்வதற்காக, உதவுவதற்காக நான் தெரிந்து கொள்ள விரும்புவது, காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் ஸ்டேட் டெவலப்மென்ட் கவுன்சில் என்ற ஒரு அமைப்பை அவர்கள் உருவாக்கியிருந்தார்கள். காலப் போக்கில் அது மரணப் படுக்கையில் படுத்து விட்டது. நான் நிதியமைச்சராக இருந்த நேரத்தில் அதற்கு உயிர் கொடுத்தேன். ஸ்டேட் டெவலப்மென்ட் கவுன்சில் கூடிற்று. எதற்காக அது தேவை என்றால், பத்து நாட்களுக்கு முன்பு வேளாண்மைத் துறையைப் பற்றிய ஒரு பிரச்சினை வந்த நேரத்தில், நமது நாவலர் அவர்கள், இது எனக்குத் தெரியாது,

என்னிடம் கேட்காதீர்கள், வேளாண்மைத் துறை அமைச்சரிடம் கேளுங்கள் என்றார்கள். எஸ்.டி.சி. இருந்தால்—இங்கே உட்கார்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கும் தெரியும்; மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களுக்கும் தெரியும்—அந்த எஸ்.டி.சி.யைக் கூட்டுகின்ற உத்தேசம் உண்டா? கூட்டியிருக்கிறீர்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன், தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் இருக்கும்பொழுது இன்னொரு கருத்தையும் முதலமைச்சரிடம் தெரிவித்தேன். நவீன வசதியோடு கூடிய ஒரு சட்ட மன்றத்தைக் கட்டுவதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொண்டேன். அது குறித்து உங்களுடைய கருத்து என்ன? கட்டப்படுமா? கட்டப்படுவதற்கான ஆரம்ப பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். சிவராமன் :** தலைவரவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரமில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் சொன்னதற்கே பதில் சொல்வதற்கு நேரமிருக்காது (குறுக்கீடு) அனௌன்ஸ்மெண்ட் ஒன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு மானியக் கோரிக்கைகளின் சார்பாக ரூபாய் 626 கோடியே 1 இலட்சத்து 77 ஆயிரத்திற்கு மேற்படாத தொகையை இந்த அவை ஒரு 15 நிமிட விளக்கத்திற்குள்ளாகவே தருகின்ற ஒரு பெருந்தன்மையைக் கொண்டிருக்கிறது என்பதிலே எனக்குப் பெருமகிழ்ச்சி. ஆகவே, இந்த 15 நிமிட விளக்கத்திற்குள்ளாகவே ஒரு பெருந்தொகையை வழங்குகின்ற ஒரு சூழ்நிலையைப் பெற்றிருப்பதை நான் கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மானியக் கோரிக்கைகள் பலவற்றைப் பற்றிப் பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பலரும் எடுத்துத் தெரிவித்தார்கள். அதுபற்றிய கருத்துக்களுக்கு சில





பல விளக்கங்களை மட்டும் கூறி, இருக்கின்ற நேரத்தில் சொல்வதற்கு முன்னாலே ஒரு விளக்கத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

நேற்று மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சுவாமிமலை யானையைப பற்றி ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். ஏனென்றால் அதுபற்றிப் பத்திரிகையிலே பரவலாக வந்துவிட்டது. வானொலியிலும் அதுபற்றி வந்துவிட்டதன் காரணமாக, நிலைமையை விளக்குவது பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

சுவாமிமலை கோயிலுக்கு அப்படியொரு யானையே இல்லை என்றும், 1977 ஆவது ஆண்டு அந்த யானை இருந்தது என்றும், அப்பொழுது அது பகிரங்க ஏலத்திலே விடப்பட்டது என்றும், அதற்குப் பிறகு அந்தக் கோயிலுக்கு யானை வாங்கப்படவில்லை என்றும் அங்கிருந்து கருத்து உடனே தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலேயும் ஆறு கோயில்களுக்குத்தான் யானைகள் இருக்கின்றன என்றும், அந்த யானைகளெல்லாம் பத்திரமாக இருக்கின்றன என்றும் இங்கே கணக்குகள் வந்திருக்கின்றன என்பதை மட்டும் விளக்க விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் இராசாராமன் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்ட மனுவிலே, சுவாமிமலைக்கு என்று ஒரு யானை இருக்கிறது, அந்த யானை காணாமல் போய்விட்டது என்று கொடுத்திருக்கிறார்கள்.

இன்னொன்று. அமைச்சரவர்கள் புதிய தகவலைச் சொல்கிறார்கள். ஏலம் விடப்பட்டது என்று சொல்கிறார்கள். போது ஏலம் எப்பொழுது விடப்பட்டது? டெண்டர் கால்பார் பண்ணப்பட்டதா என்ற விவரங்களையும் சொன்னால் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்கு நான் பதில் சொன்னேனே தவிர அந்தக் கருத்து

எங்கிருந்து, யாருக்கு வந்தது, யாரிடத்திலேயிருந்து யாருக்கு வந்து இறுதியாக ரகுமான்கான் அவர்களிடத்திலே எப்படி வந்தது என்பதைப் பற்றி விளக்கம் இல்லை. இருக்கின்ற நிலைமைகளை அவர்கள் உணர வேண்டுமென்பதற்காகத்தான 1977 ஆவது ஆண்டு அங்கே அதற்கு முன்னால் இருந்த யானை ஏலத்தில் விடப்பட்டது என்றும், அதற்குப் பின் அங்கே யானை வாங்கப்படவில்லை என்றும் கூறப்பட்டு இருக்கிறது. அதுபற்றிய முழு விளக்கங்கள் தேவை என்றால், அதற்குப் பிறகு தனிக் கேள்வி போட்டால் அறநிலையத் துறை அமைச்சர். . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு நம்முடைய சட்டமன்ற மானியம்.

**திரு. அ. ரகுமான்கான்:** எப்பொழுது ஏலம் விடப்பட்டது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்தப் பிரச்சினை இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கு அறநிலையப் பாதுகாப்புத் துறை அமைச்சர் விளக்கமாக எடுத்துச் சொல்வார். யானை விவகாரம் முக்கியம அல்ல.

(பிற்பகல் 12-50)

**திரு. அ. ரகுமான்கான்:** எவ்வளவு பணத்திற்கு ஏலம் போனது, எப்படி விடப்பட்டது, யார் எடுத்தார்கள் என்பதைப் பற்றி எல்லாம் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ரூ. 626 கோடியில் அதிக கவனம் செலுத்த வேண்டுமே தவிர, யானை, பானை, பூனை பற்றி அதிகக் கவனம் செலுத்த வேண்டாம் என்பதுதான் என்னுடைய நோக்கமாகும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சட்டமன்ற உறுப்பினர்களின் வசதி வாய்ப்புகளைப் பெருக்க வேண்டுமென்பதற்கான காரண காரிய விளக்கங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய தேவைகளைப் பற்றிய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.





சட்டமன்றத்தை, சிறப்பான வகைகளிலே, போதுமான வசதி வாய்ப்புகளோடு அமைக்க வேண்டுமென்கிற செய்திக்குறிப்பு 4, 5 ஆண்டு காலமாக ஆராயப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்காக வரைபடங்கள் எல்லாம் கூட உருவாக்கப்பட்டு, வருகின்றது. இந்தியா முழுவதுமே நாம் விளம்பரப்படுத்தி, சிறந்த சிற்பிகளைக் கொண்டு வரைபடங்களை உருவாக்கி, தேர்ந்தெடுத்து, அதிலே 3 பரிசுகள் கூட வழங்கி வைத்திருக்கிறோம். அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதிலே இன்னும் பொருத்தமான அளவில் இடம் சரியாக அமையவில்லை. கோட்டைக்கு எதிரிலே அமைக்கலாமா என்கிற ஒரு நிலையும் இருக்கிறது. அது நீட்டிவாக்கிலே இருக்கிறது. போதுமான அளவு வசதிகள் இல்லாமல் அமைந்திருக்கிறது என்றும் கார்கள் நிறுத்த வசதி இல்லையென்றும் ஒரு கருத்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசினர் தோட்டத்திலேயே அமைக்கலாமா என்கின்ற அளவுக்கு இடம் பார்க்கப்பட்டிருக்கிறது. அல்லது கிண்டியிலேயிருக்கிற இராஜ் பவனுடைய இடத்திலே வைக்கலாமா என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு புதுக் கருத்தும் வந்திருக்கிறது இப்பொழுது. குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்டதன் காரணமாக, இப்பொழுது அந்தத் திடலையே பயன்படுத்தலாமா என்ற ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். பல்வேறு வசதிகளை, வாய்ப்புகளை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். அப்படிப் புதியதொரு சட்டமன்றம் கட்டப்பட வேண்டுமென்றும், அதிலே எல்லா வசதிகளும் பொருந்திய அளவுக்கும் குழுக்கள் கூடுகின்ற அளவுக்கும் அங்கே சிறிய மகாநாடுகள் கூட்டுகின்ற அளவுக்கும் தனித்தனியாக, கட்சிகள் தங்குவதற்கான இட வசதிகள், மற்றவைகள் எல்லாம், பல்வேறு சட்டமன்ற, பாராளுமன்ற அமைப்புகளிலே எப்படியெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்த அளவுக்கு அமைய வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் அந்த வரைபடங்கள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன.

அதோடு சேர்த்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க, இப்பொழுது இருக்கிற விடுதி, உள்ளபடியே, இந்தியாவில் இருக்கிற பிற மாநிலங்களில் இருக்கிற விடுதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், உறுப்பினர்கள் தங்குவதற்கேற்ற வசதி வாய்ப்புகள் இல்லை என்பதை அரசு

நன்றாக உணர்கிறது. ஆகவே, டெல்லியிலே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பது போன்று, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பேரவை—மேலவை உறுப்பினர்களுக்கும் தனி தனி வீடுகளாக அமையத் தக்க அளவு பிளாக்குகளாகக் கட்டி விடுகின்ற ஒரு செயற்குறிப்பும் இருக்கிறது. அதற்காக தனி இடமும் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட வீடுகளாக ஒதுக்கித் தந்து விடுவோமானால் பல்வேறு பிரச்னைகள் தீரும் என்ற ஒரு எண்ணமும் இருக்கிறது அதற்கேற்றாற்போல், இடங்களைத் தேடுகின்ற முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ரெயில்வே இடம் பெறுவதிலே, ஒதுக்கிடம் பெறுவதிலே, பல இடர்ப்பாடுகள் எல்லாம் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்தார்கள். ஆகவே, ரெயில்வேயோடு மாண்புமிகு பேரவைத் தலைவரும் தொடர்பு கொண்டார்கள். அண்மையிலே அலுவல் ஆய்வுக் குழுவிலே இதுபற்றி பேசியதனுடைய விளைவாக, மத்திய அமைச்சருக்கும் கடிதம் எழுதி, இங்கே ஒரு கவுன்டர் ஏற்படுத்த வேண்டுமென்றும், இங்கே உறுப்பினர்கள் பதிவு செய்வதன் மூலமாக, இட ஒதுக்கீடுகள் செய்ய வேண்டுமென்று உறுப்பினர்களை எல்லாம் ரெயில்வே நிலையங்களில் அலைய விடுகின்ற அவதிக்கு உள்ளாகக் கூடாது என்றும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். விரைவிலே, இங்கேயே ஒரு கவுண்டர் ஏற்படுத்துவதற்கும் அதற்கு என்ன, என்ன வசதிகள் ஏற்படுத்தித் தர இயலுமோ, அதை ஏற்படுத்தித் தருவதற்கும் அரசு முயலும் என்றும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்துச் சொல்லும்போது, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், ஆளும் தன்மையிலே இருப்பவர்கள் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்பதற்கான இலக்கணங்களை, பெரியவர்கள், அறிஞர் பெருமக்கள், வல்லுநர்கள் பலர், பல வாய்ப்புகளில் எடுத்துக் கூறிய கருத்துக்களை எல்லாம் இங்கே நினைவுபடுத்திக் காட்டினார்கள். அவையெல்லாம் ஒப்புக் கொண்ட கருத்துக்கள்தான். அவற்றிற்கெல்லாம் உரியவர்களாக நாம் அனைவரும் சேர்ந்து நம்மை நாமே ஆளாக்கிக் கொள்கிற அளவுக்கு, எல்லோரும் சேர்ந்து முயல்வோமாக என்று ஒரே





வரியில் அதற்கு நான் பதிலைச் சொல்லி, எல்லோரும் முயற்சி செய்வோமாக என்றும் எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று, இங்கே பல்வேறு வாய்ப்பு வசதிகளைப் பெற வேண்டுமென்று சொன்னார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக, அரசுக்கே அப்படிப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் சொல்வதன் மூலம் அரசுக்கு நல்லதொரு விளைவு ஏற்பட வேண்டுமென்றுதான் கருதுகிறேன். நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய, பல்வேறு பகுதிகளுக்குத் தெரிவிக்க வேண்டிய உணர்வுகளையும், அத்தகைய பல கருத்துக்களையும் தெளிவுபட திட்டமாக உணர்த்துவதற்கும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்புகின்ற பிரச்னைகளுக்குப் பதில் அளிக்கின்றபொழுது இந்தச் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அதற்கு நாம் நாள் ஒன்றுக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானம் தான் எழுப்ப வேண்டுமென்றும், காலத்தின் அருமை கருதி, அலுவல் ஆய்வுக் குழுவிலே ஏற்கனவே முடிவு செய்ததற்கு இணங்க நாம் வகுத்து கொண்டு வருகிறோம். சென்ற ஆண்டு 127 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இந்த அவையிலே கொண்டு வரப்பட்டு பதிலுரைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் மனோகரன் எடுத்து தெரிவித்ததற்கிணங்க இதிலே எதிர்கட்சிகளுக்கு வாய்ப்பு கூடுதலாக அளிக்கப்பட்டிருக்கிறது. 127 கவன ஈர்ப்புத் தீர்மானங்களில் 97 கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எதிர் கட்சியைச் சார்ந்தவர்கள் அதிலே கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். 30 பேர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஈர்த்திருக்கிறார்கள். இருந்தாலும் கூட கவனத்தை ஈர்க்கின்ற அளவுக்கு அதிலே பொதுப்படையாக ஒரு நிலைமை விளக்கப்படுகிறது. துணைக் கேள்வி மூலமாக நல்ல சூழ்நிலையை விளக்கிக் காட்டவே முடிகிறது. உறுப்பினர் மனோகரன் அவர்கள் இங்கே நூலகக் குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குழு அமைப்பதிலே ஒன்றும் ஆட்சேபணை இல்லை என்று சென்ற ஆண்டும் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கருத்தரு சென்ற ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தக் குழு அமைக்கப்படவில்லை. விரைவிலே அதற்கென்று ஒரு தனி குழு அமைந்துவிடும். நூல்

நிலையத்தை சிறப்பாக பயன்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கம் என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு பிரச்சனைகளை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே எடுத்து தெரிவித்திருக்கிறார்கள் என்றாலும் கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போது அவற்றிற்கெல்லாம் விரிவான விளக்கமான பதில்களை எடுத்துச் சொல்ல முடியும். அவர்கள் சிறந்த நிலைகளை பெறுவதற்குமான சூழ்நிலையை ஏற்படுத்தித் தர முடியும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். எதிர்காலத்திலே வினாக்கள் மூலமாக கொண்டு வர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விடுக்கின்ற வினாக்களுக்கு பதில் வரவில்லை என்று சொன்னார்கள். அந்த வினாக்கள் எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதலை பெற்று பேரவைத் தலைவர் அனுப்பி வைப்பார்களானால் அவர்களுக்கு பதிலாக இந்த அவையிலே எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதற்கான முயற்சியையும் பேரவைத் தலைவர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்து தெரிவித்ததற்கிணங்க ரெயில்வே கூப்பனை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். 20,000 கிலோ மீட்டர் அளவுக்கு ஒவ்வொருவருக்கும் நாம் இரயில்வே கூப்பன் கொடுத்து வருகின்றோம். அந்த கூப்பனுடைய அளவுக்கு ஏற்கனவே இருந்த இரயில்வே கட்டணத்தினுடைய தன்மையை நாம் ஆராய்ந்து பார்த்த அளவிலே ஏற்கனவே ரூ. 4,000 பெறுமானமாகிறது என்று கருதி 4,000 ரூபாய்க்கு இரயில்வே கூப்பன் வாங்கி ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு ஆண்டுக்கு என்று நாம் தந்தோம். இப்போது கட்டணத்தையும் இந்த ஆண்டு உயர்த்தியிருப்பதன் காரணமாக அந்த அளவுக்கு கூப்பனுடைய அளவையும் உயர்த்த வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்தார்கள். அந்த வகையிலே 20,000 கிலோ மீட்டர் என்று இப்போதுள்ள கட்டண விகிதப்படி 4,600 ரூபாய்க்கு வருகிறது. ஆக இந்த ஆண்டு ஏற்கனவே கூப்பன் கொடுக்கப்பட்டதால்





மேற்கொண்டு 600 ரூபாய்க்கு கூப்பன் வழங்கப்படும் என்பதைத தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு ஏற்கனவே கூப்பன் வாங்கிவிட்டதன் காரணமாக—ஏற்கனவே நான் எண்ணிக் கொண்டிருந்தேன். இனிமேல் கூப்பனே வாங்கித் தராத அளவுக்கு இதைத் தொகையாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தந்துவிடலாம் என்றும் நான் எண்ணிக் கொண்டிருந்தேன்—இப்போது கூப்பனாக கொடுத்து விடுகிறோம். இப்போது கூப்பனை திருப்பி கொடுத்துவிட்டால் என்ன என்று கேட்டேன். அதிலே 10 சதவீதம் கழிவு ஏற்படும் என்பதனால் பெரும் இழப்பு ஏற்படும் என்பதனால், அடுத்த ஆண்டிலிருந்து நாம் கூப்பன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. இரண்டு தடவையாக பிரித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்தத் தொகை தொகையாகவே அளிக்கப்படும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். (மேசையை தட்டுதல்).

ஆக அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பல்வேறு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னோம். மேலும் உறுப்பினர்களும் மற்றைய மாநிலங்களில் வசதிகள் இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அதற்கெல்லாம் எனக்கு நேரம் இல்லாததால் அவற்றை எல்லாம் நான் விடுகிறேன். இங்கே சாதாரணமாக மாண்புமிகு உறுப்பினர் எல்லோருக்கும் ஏதாவது ஊக்கம் தரவேண்டுமென்றால் ஒன்றை நாம் நன்கு உணர வேண்டும். 365 நாட்களில் 60 நாட்கள் தான் சட்டமன்றம் நடைபெறுகின்றது. இந்த 60 நாட்களிலும் இந்த ஆண்டு 44 நாட்கள். சென்ற ஆண்டு 60 நாட்கள் நடைபெற்றது. இந்த 60 நாட்களில் கூட ஒழுங்காக சட்ட மன்றத்திற்கு வரமுடியாத உறுப்பினர்கள் இருக்கிறார்களே என்ற வருத்தம் இருக்கிறது. வந்தாலும் கையெழுத்து போட்டுவிட்டு போய்விடுகிறார்கள் என்ற வருத்தமும் இருக்கிறது. கடைசி வரையிலும் இருக்க மறுக்கிறார்கள் என்ற வருத்தமும் நமக்கெல்லாமும், நாட்டிற்கும், வந்து பார்க்கின்றவர்களுக்கும் இருக்கின்றது. அந்த வகையிலே தான் ஏதாவது ஊக்கம் தரவேண்டுமென்றால் 100-க்கு 100 நாட்கள் வந்ததற்கு ஏதாவது பரிசுகள் தரலாமா என்று நான் எண்ணியிருக்கிறேன். வராதவர்களுக்கும் சேர்த்து தருவதைவிட அப்படிப்பட்ட ஊக்கம் தந்தால் அடுத்த தடவையாவது வர மாட்டார்களா என்று பார்க்கின்றபோது, 60 நாட்கள் சென்ற ஆண்டு 100-க்கு 100 வந்தவர்கள் மொத்தம் 13 பேர்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 8

(பிற்பகல் 1-00)

நூற்றுக்கு நூறு சதவித நாட்கள் வந்தவர்கள் 13 பேர்கள் வருகிறார்கள். அந்த 13 பேர்களின் பெயரைப் படிக்க நேரம் இல்லை. அவர்களுக்கு முதல் பரிசு என்ற முறையில் அவர்களை ஊக்குவிப்பதற்காக 300 ரூபாய் பெறுமானம் உள்ள பரிசு சிறப்பான விழாவில் தரப்படும். அடுத்ததாக 88 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையில் வந்தவர்கள் 75 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டாவது பரிசு வழங்கப்படும். 75 சதவீதத்திலிருந்து 87 சதவீதம் வரையில் வந்தவர்கள் 70 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மூன்றாவது பரிசு வழங்கப்படும். இப்படி முதல் பரிசு 300 ரூபாய் பரிசும், இரண்டாவது பரிசு 88 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் நாட்கள் வந்தவர்களுக்கும், அதாவது 200 ரூபாய் பரிசும், மூன்றாவது பரிசாக 100 ரூபாய் பரிசும் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வகையில் ஊக்கம் தந்தாலாவது வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நேரம் ஒரு மணி ஒரு நிமிடம். விவாதம் முடிவுற்றது. வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம்.**

திருவாளர்கள் எஸ். என். இராமசாமி, எ. எஸ். ஏ. ஆறுமுகம், சு. பாலன் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,81,26,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



1986 மே 8]

**கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.**

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், சு. பாலன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 57,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.**

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், சு. பாலன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 34,98,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.**

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், எஸ். என். இராமசாமி, சு. பாலன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 74,94,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 43—பல்வகை.**

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், சு. பாலன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,04,41,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச் செலவு.**

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,04,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.**

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,01,22,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 44—எழுதுபொருள்-அச்சுத் துறை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,95,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

" தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார். "

6. அரசினர் சட்டமுன்வடிவு.

நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (9—5—1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.07 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

84. பூதான வாரியத்தின் தனி அலுவலரை எஸ்டேட் அதிகாரியாக நியமனம் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 3—2—1986 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகச் (அனுமதியின்றி குடியிருப்போரை வெளியேற்றல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

85. தமிழ்நாடு ஊர்க்காவல் படை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 20—9—1985 ஆம் நாளிட்ட 2377 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு ஊர்க்காவல் படைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1963) 15 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

86. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் 9—12—1983 முதல் 31—3—1985 வரையிலான முதலாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 17/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

174. கோரிக்கை எண் 8—தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

175. கோரிக்கை எண் 9—நிறுவன நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

176. கோரிக்கை எண் 42—ஓய்வூதியம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

177. கோரிக்கை எண் 43—பல்வகை அகதிகள், தாயகம் திரும்பியோர், குடிபெயர்ந்தோர் துயர் தணிப்பும் மறுவாழ்வும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

178. சிறுசேமிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

[1986 மே 8

179. கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986—87 (தமிழ், ஆங்கிலம்)

180. மறுவாழ்வுத் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

181. கோரிக்கை எண் 44—எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

182. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (பதின்மூன்றாவது பட்டியல்).



1986 மே 8]

## இணைப்பு I

[572-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 7 (2588)-க்கான விடையைக் காண்க.]

மதுரை நகரில் கொசு ஒழிப்புத் திட்டம் 17—9—1959-ல் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் 1969-ல் திருத்தி அமைக்கப்பட்டு தற்போது அமுலாக்கப்பட்டு வருகிறது. மதுரை நகரில் கொசு ஒழிப்புத் திட்டப்பணிகளை செய்வதற்கு கீழ்கண்ட பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. துப்புரவு ஆய்வாளர்கள்—3.

2. கூடுதல் துப்புரவு ஆய்வாளர்கள்—3.

3. களப்பணி உதவியாளர்கள்—4 (ஒரு பணியிடம் காலியாக உள்ளது.

4. ஸ்ப்ரே மஸ்தூர்கள்—60.

மதுரை நகரம் மூன்று பகுதிகளாக (3 Zones) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் 6 நாட் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் இரண்டு துப்புரவு ஆய்வாளர்கள், ஒரு களப்பணி உதவியாளர், 20 ஸ்ப்ரே மஸ்தூர்கள் பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொரு உட்பகுதியிலும் வாரம் ஒரு நாள் கொசு புழுக்கொல்லி எண்ணெய் தெளிக்கப்படுகிறது. இவ்வாறு வாரத்தில் ஞாயிறு நீங்கலாக இதர 6 நாட்களில் நகரில் உள்ள அனைத்து கழிவுநீர், தேக்கங்களிலும் மருந்து தெளிக்கப்படுகிறது. நகரில் கீழ்க்கண்டவாறு கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்கள் உள்ளன :—

| | |
|---|---|
| 1. கழிவுநீர்த் தொட்டிகள் | 2,719 |
| 2. திறவைச் சாக்கடைகள் | 1,12,304 |
| 3. மண் சாக்கடைகள் | 41,193 |
| 4. பாலங்கள் | 337 |
| 5. நீர்த் தேக்கங்கள் | 179 |
| 6. செப்டிக்டாங்க் | 12,,696 |
| 7. தீ வாரிகள் | 575 |

| | |
|---|---|
| 8. கிணறுகள் | 13,414 |
| 9. மேல்நிலை நீர்த் தொட்டிகள் | 2,604 |
| 10. சிமெண்ட் தொட்டிகள் | 1,321 |
| 11. விவசாய நிலங்கள் | 373 ஏக்கர். |
| 12. விவசாய வாய்க்கால்கள் | 42,470 மீட்டர்கள். |

இந்த கொசுப்புழுவை அழிக்க 'ஆரோமாக்ஸ்' ஆயில் மிருதுவான சோப்புடன் கலந்து தெளிக்கப்படுகிறது. 'பேடக்ஸ்' என்ற எண்ணெயும் தெளிக்கப்படுகிறது. இதனால் கொசுப்புழு அழிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணி வாரத்தில் ஒரு நாள் வீதம் கீழ்க்கண்ட செயல் திட்டத்தின்படி மதுரை நகரில் எல்லாப் பகுதிகளிலும் செய்யப்படுகிறது.

கொசு ஒழிப்பு மஸ்தூர்களை மூன்று நபர்கள் கொண்ட ஒரு பிரிவாக அமைத்து ஒவ்வொரு பிரிவு மஸ்தூர்களும் சம்பந்தப் பட்ட ஒரு கோட்ட துப்புரவு ஆய்வாளர் அல்லது இளநிலை துப்புரவு ஆய்வாளர் அல்லது துப்புரவுப்பணி மேற்பார்வை யாளரின் நேரடி மேற்பார்வையில் கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களில் பூச்சிக்கொல்லி எண்ணெய் தெளித்து வருகிறார்கள். கொசு ஒழிப்புத் திட்ட துப்புரவு ஆய்வாளர்களும் தங்களது பகுதிகளில் தினசரி ஒரு பிரிவு மஸ்தூர்களை மேற்பார்வை செய்து வருகிறார்கள். 1981-ம் வருடம் அக்டோபர் மாதம் ஆரம் பிக்கப்பட்ட இந்தப் புதிய ஏற்பாட்டின்படி கொசு ஒழிப்புத் திட்ட மஸ்தூர்கள் கொசுப்புழு உற்பத்ியாகும் எந்த நீர்த் தேக்கத்தையும் விட்டுவிடாமல் பூச்சிக் கொல்லி எண்ணெய் தெளித்து வருகிறார்கள். இந்த ஏற்பாட்டின்படி ஒரு தினசரி வேலைத் திட்டம் (Daily spray programme) மாநகராட்சி சுகாதார அதிகாரி அவர்களால் தயாரிக்கப்பட்டு பணி நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மதுரை மாநகரில் மலேரியா நோய் கண்டுள்ள பகுதிகளில் அவ்வப்போது மலேரியா நோய் கண்டுள்ள வீடுகளைச் சுற்றிலும் சுமார் 300 மீட்டர் தூரத்திற்கு வீடுகளிலும் மாட்டுக் கொட்டடங்களிலும் மற்றும் உள்ள கட்டடங்களிலும் கொசுவைக் கொல்லும் பி.எச்.சி. மருந்து தெளிக்கப்படுகிறது. கொசுத் தொல்லையை மேலும் போக்குவதற்காக நான்கு 'வான்பாக்'





மெஷின்கள் (Van Fog machines) வாங்கப்பட்டு இந்த மெஷின்கள் மூலம் தொகுதி வாரியாக தினசரி கொசுவைக் கொல்லும் புகை இரவு நேரங்களில் தெருக்களில் பரப்பப்பட்டு வருகிறது.

நகரத்தில் வீட்டு வசதி வாரிய வீடுகளில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளில் கொசுப் புழு உற்பத்தியை தடுப்பதற்காக தண்ணீர் முழுவதும் வாரத்திற்கு ஒருமுறை வடியச் செய்யப் பட்டு மறுபடியும் தண்ணீர் நிரப்பப்படுகிறது. கொசுப் புழுவைத் தின்னும் கப்பி மீன்கள் நகரில் உள்ள கிணறுகளில் போடப்படுகிறது. இவ்வாறு சுத்தமான தண்ணீர் நிலை களிலும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மதுரை நகரில் கொசுக்களின் தொல்லையும் மலேரியா நோய் ஏற்படுதலும் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருந்து வருகிறது.

[1986 மே 8

## இணைப்பு II.

**588-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 34 (5644)-க்கான விடையைக் காண்க.]**

தஞ்சை மாவட்டத்தில் தற்பொழுது யானைக்கால் வியாதி விகிதம் 2.8 சதவிகிதம் ஆக உள்ளது. யானைக்கால் நோய் விகிதம் (Endemicity Rates) 1977-ல் 5.1 சத விகிதம் ஆக இருந்தது. தற்பொழுது 1953-ல் 2.8 சதவிகிதம் ஆக குறைந்துள்ளது.

2. தஞ்சை மாவட்டததில் கீழ்க்கண்ட இடங்களில் 7 யானைக்கால் தடுப்புப் பிரிவுகளும் 6 யானைக்கால் சிகிச்சைப் பிரிவுகளும் தேசிய யானைக்கால் தடுப்பு திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன.

**யானைக்கால் தடுப்புப் பிரிவு எண்ணிக்கை.**

| இடங்கள். | எண்ணிக்கை. |
|---|---|
| கும்பகோணம் | 1 |
| தஞ்சாவூர் | 1 |
| நாகப்பட்டினம் | 1 |
| மயிலாடுதுறை | 1 |
| திருவிடைமருதூர் | 1 |
| மன்னார்குடி | 1 |
| திருவாரூர் | 1 |
| மொத்தம் | 7 |

**சிகிச்சைப் பிரிவுகள்.**

| இடங்கள். | எண்ணிக்கை. |
|---|---|
| கும்பகோணம் | 2 |
| தஞ்சாவூர் | 2 |
| நாகப்பட்டினம் | 1 |
| சீர்காழி | 1 |
| மொத்தம் | 6 |



1986 மே 8]

3. கொசுப்புழுக்களை கொல்வதற்கு, கொசுப்புழுக்கொல்லி எண்ணெய் (எம். எல். ஓ.) பேடக்ஸ் ஆகிய ரசாயனப்பொருள்கள் தெளித்து கொசுப்புழுத்தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4. மேலும் இரவு சிகிச்சைப்பிரிவுகளின் வாயிலாக ரத்தத் தடவல்கள் எடுக்கப்பட்டு பரிசோதித்து, நோய் கண்டவர்களுக்கு டி.இ.சி. மாத்திரைகள் வழங்கப்பட்டு சிகிச்சையளிக்கப் படுகிறது.

5. மேலும், தஞ்சை மாவட்டத்தில் யானைக்கால் நோய்த் தடுப்பு நடவடிக்கை கிழ்க்கண்ட 8 நகராட்சிகளிலும் மற்றும் 22 நகர ஒன்றியங்களிலும் நிறைவேற்றப்பட்டு 1/3-ல் பங்குத் தொகையும், மாநில அரசு மான்யமாக வழங்கப்பட்டு வருகிறது.

**யானைக்கால் நோய்த்தடுப்பு திட்டத்திற்காக அரசு மானியம் 1/8 பங்குத்தொகை பெறும் இடங்கள்.**

| தொடர் எண் மற்றும் நகராட்சிகள். | பேரூராட்சிகளின் பெயர். |
|---|---|
| 1 தஞ்சாவூர். | 1 கூத்தநல்லூர். |
| 2 கும்பகோணம். | 2 வைத்தீஸ்வரன்கோவில். |
| 3 நாகப்பட்டினம். | 3 மெலிட்டூர். |
| 4 மயிலாடுதுறை. | 4 திருவையாறு. |
| 5 மன்னார்குடி. | 5 சுவாமிமலை. |
| 6 திருவாரூர். | 6 திருப்பனந்தாள். |
| 7 சீர்காழி. | 7 ஆடுதுறை. |
| 8 பட்டுக்கோட்டை. | 8 ஐயம்பேட்டை. |
| | 9 நன்னிலம். |
| | 10 நீடாமங்கலம். |
| | 11 வலங்கைமான். |
| | 12 திருகாட்டுப்பள்ளி. |
| | 13 தரங்கம்பாடி. |
| | 14 குத்தாலம். |

**யானைக் கால் நோய் தடுப்பு திட்டத்திற்காக அரசு மானியம் 1/3 பங்குத் தொகை பெறும் இடங்கள்—தொடர்ச்சி.**

| தொடர் எண் மற்றும் நகராட்சிகள். | தொடர் எண் மற்றும் பேரூராட்சிகளின் பெயர். |
|---|---|
| | 16 பண்டாரவாடை. |
| | 17. ராஜகிரி. |
| | 18. வேதாரண்யம். |
| | 19 கொடவாசல். |
| | 20 அம்மாப்பேட்டை. |
| | 21 பாபநாசம். |
| | 22 ஒரத்தநாடு |

தற்போது டி.இ.சி. மாத்திரையும், அதனால் ஏற்படும் ஒவ்வாமை இருப்பின், அதற்கு டெட்டோ சைக்ளின் பாராகி டாமல், அவில், எபிசி போன்ற மாத்திரைகளும் விநியோகிக்கப் படுகின்றன.





## இணைப்பு III

615 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண். 8—தேர்தல்கள் வரைவு உரை.

பேரவைத் தலைவர் அவர்களே,

மானியக் கோரிக்கை எண். 8 தேர்தல்கள் என்பதன்கீழ் 1986-87 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ. 57,86,000 அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம்மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்படும் நிதி பெரும்பாலும் முறையான தேர்தல் அமைப்பில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் சம்பளம், பயணப்படிச்செலவுகளுக்கும், தேர்தல் நிர்வாகத்தின் சீரான நடைமுறைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

2. 1984-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நாடாளுமன்றத்திற்கும் தமிழக சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் அடுத்த பொதுத் தேர்தல் 1989-ஆம் ஆண்டில்தான் நடைபெற வேண்டும்.

3. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், 12 உள்ளாட்சித் தொகுதிகளுக்கான 21 இடங்கள் தற்போது காலியாக உள்ளன. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கான தேர்தல் இன்னும் நடைபெறவில்லை. தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு சென்னை-உள்ளாட்சி தொகுதி மதுரை-அண்ணா உள்ளாட்சி தொகுதி மற்றும் கோயம்புத்தூர், பெரியார்-நீலகிரி உள்ளாட்சி தொகுதிகள் நீங்கலாக மற்ற உள்ளாட்சி தொகுதி களுக்கு தேர்தல் நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரல் தேர்தல் ஆணைக்குழுவின் பரிசீலனையில் உள்ளது. சென்னை மாநகராட்சி தேர்தல் நடைபெற்ற பிறகுதான், சென்னை உள்ளாட்சித் தொகுதியிலிருந்து சட்டமன்ற மேலவைக்குத் தேர்தல் நடத்த முடியும். மாநகராட்சி தேர்தலைப் பொறுத்த வரை தமிழ்நாட்டிலுள்ள 3 மாநகராட்சிகளும் (மதுரை, கோவை, சென்னை மாநகராட்சிகள்) அவற்றின் அமைப்பு மற்றும் பணிகள் பற்றி மூன்று நகராட்சிகளுக்கும் பொருந்தும் வகையில்

பொதுவான சட்டம் ஒன்றை தயாரித்து சட்டமன்றத்தில் நிறைவேற்றி அமுலுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4. மேலும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் சட்டமன்ற மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு உறுப்பினர் களின் பதவிகாலம் 26—6—1986 அன்றும், மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களின் பதவிக்காலம் 29—6—1986 அன்றும் முடிவடைவதால், இந்த காலியிடங்களை நிரப்புவதற்கு, தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கும், மாநிலங் களவைக்கும் தேர்தல் ஜூன் மாதம் 21-ம் தேதி நடைபெறும்.

5. தேர்தல் மானியக் கோரிக்கையைப்பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் சுருக்கத்தைத் தந்துள்ளேன். இதனை யேற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**1986-87-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் — கோரிக்கை எண். 8**

**கொள்கை விளக்கக் குறிப்பு—தேர்தல்கள்.**

"**மானியக் கோரிக்கை எண். 8 — தேர்தல்கள்**" என்பதின்கீழ் 1986-87-ம் ஆண்டில் கீழ்குறித்த இனங்களுக்குச் செலவிடத் தேவைப்படும் தொகை ரூ. 57,86,000 (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

| 215-எ. தேர்தல்கள் (திட்டத்தில் சேராதது). | ரூபாய். |
|---|---|
| (எஎ) தேர்தல் அதிகாரிகள் எஎ சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் | 54,91,000 |
| (எபி) மேலவைத் தொகுதிகள் | 30,000 |
| (எபி) வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அச்சிடுதல்: | |
| (எஎ) சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் | 52,000 |
| (எசி) மேலவைத் தொகுதிகள் | 10,000 |
| (எசி) நாடாளுமன்ற மக்கள் அவைக்கும் மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் அவற்றை நடத்துவதற்கான செலவுகள் | 1,13,000 |



| | |
|---|---|
| (எடி) நாடாளுமன்றத்துக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு ஆகும் செலவுகள்: | |
| (எஎ) இடைத் தேர்தல்கள் | 13,000 |
| (எபி) நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல் | 13,000 |
| (எஇ) மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்: | |
| (எஎ) மாநில சட்டமன்றப் பேரவை | 53,000 |
| (எபி) சட்டமன்ற மேலவை | 11,000 |
| மொத்தம் | 57,86,000 |

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப் படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது:—

எஎ. தேர்தல் அதிகாரிகள்:

**எஎ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள்: மதிப்பீடு ரூ. 54,91,000.**

தலைமைச் செயலகத்தில், பொதுத் (தேர்தல்கள்) துறைக்குத் தலைமை தேர்தல் அதிகாரியும், துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியும் (துணைச் செயலாளர்) பொறுப்பு வகிக்கின்றனர். அவர்களுக்கு உதவும் பொருட்டு பிரிவு அலுவலர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், இன்னும் மற்ற ஊழியர்களும் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளியூர் பகுதிகளில் எல்லா மாவட்ட (சென்னை நீங்கலாக) ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள், வட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தேர்தல் பதிவு அதிகாரிகளாகப் பொறுப்பு வகிக்கும் வருவாய் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள், சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் மற்றும் கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிப்பதற்கென நிலையான அடிப்படையில் ஓர் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையர்

[1986 மே 8

அலுவலகத்தில், வட்ட ஆட்சியர் ஒருவர், உதவியாளர் இருவர், தட்டச்சர் ஒருவர், இளநிலை உதவியாளர் ஒருவர், சிற்றெழுத்தர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்சமயம் ஓராண்டுக் காலத்துக்கு மட்டும் ஒரு துணை ஆட்சியரும் மாநகராட்சி ஆணையருக்கு உதவியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலே குறிப்பிட்ட நிலையான அலுவலர்கள், ஊழியர்களின் சம்பளச் செலவுகள் தவிர, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் பதிவு அதிகாரிகள், உதவித் தேர்தல் பதிவு அதிகாரிகள் ஆகியோரின் பயணச் செலவுகளும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். அவர்களின் அலுவலகச் செலவுகள் எதிர்பாராத செலவினங்கள், தபால், தந்தி, தொலைபேசிக் கட்டணங்கள் தேர்தல் சார்பான சிறப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவையும் இக்கணக்குத் தலைப்பின்கீழ் அடங்கும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள — செலவினங்களுக்காக நிதி ஒதுக்கம் தேவை. எனவே, மேற்குறித்த அளவில் செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில், ஐம்பது விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்ளுகிறது. எஎ. தேர்தல் அதிகாரிகள்.

எபி. மேலவைத் தொகுதிகள்:

மதிப்பீடு: ரூ. 30,000.

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தி அமைக்கும் பணிக்காக அவ்வப்போது நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் போன்றவை இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

சென்னை மாவட்டத்திலுள்ள மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் சம்பந்தமான பணிகளைக் கவனிக்க, சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் ஓர் உதவியாளர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் சம்பளம், படிகள் முதலியனவற்றிற்காகவும் இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது.

எசி. வாக்காளர் பட்டியல்களை தயாரித்து அச்சிடுதல்:

மதிப்பீடு: ரூ. 62,000.



1986 மே 8]

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லா விதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காகத் தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்களின் சம்பளம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

1986-87-ம் நிதியாண்டில் வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் நடைபெறுவது பற்றி தகவல் இல்லை. எனினும், சென்னை ஆவணக்காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைக் காப்பதற்காக நிலையாக நியமிக்கப்பட்டுள்ள ஓர் உதவியாளர், ஒரு சிற்றெழுத்தர் ஆகியோரின் சம்பளச் செலவுகளுக்காக மேலே குறித்த அளவில் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது.

இச்செலவினங்களை மாநில அரசும் மைய அரசும் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன.

எ.பி. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்:

எ. சி. மேலவைத் தொகுதிகள்:

மதிப்பீடு: ரூ. 10,000.

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை அச்சிடுவதற்கான செலவுகள் மட்டும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். இதற்கான மொத்தச் செலவுகளையும் மாநில அரசே மேற்கொள்ளுகிறது. உள்ளாட்சி தொகுதிகளிலிருந்து தமிழ்நாடு சட்டமேலவைக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்க மேற்குறித்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஏசி. நாடாளுமன்ற மக்கள் அவைக்கும், மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் இவற்றை நடத்துவதற்கான செலவுகள் மதிப்பீடு ரூ. 1,13,000.

நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றப்பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன்கீழ் அடங்கும். 1984-ம் ஆண்டில்தான் நாடாளுமன்றத்திற்கும் தமிழ்நாடு சட்டப்பேரவைக்கும் ஒரே

சமயத்தில் பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, நாடாளுமன்றத்திற்கும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக்கும், வரும் 1989-ம் ஆண்டில்தான் அடுத்த பொதுத்தேர்தல்கள் நடைபெறும். ஆனால் மாவட்டங்களில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டடங்களுக்கான வாடகை, அதற்கான காவலாளர்களின் சம்பளம், வாக்குப்பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், பொதுத் (தேர்தல்) துறையில் உள்ள மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு பெட்ரோல் செலவுகள் போன்ற ஆண்டு தோறும் ஏற்படக்கூடிய செலவினங்கள் இதன்கீழ் அடங்கும். மேற்குறித்த செலவினங்களுக்காக இத்தலைப்பின்கீழ் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்ளுகிறது.

**எடி: நாடாளுமன்றத்தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:**

**ஏஏ. இடைத்தேர்தல்கள்:**

**மதிப்பீடு : ரூ. 13,000.**

நாடாளுமன்றத்தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடைபெற்றால், அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். தற்சமயம், நாடாளுமன்றத்தொகுதிகள் ஏதும் இம்மாநிலத்தில் காலியாக இல்லை. எனவே, இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதிஒதுக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுகிறது.

**எடி: நாடாளுமன்றத்தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்**

**எபி: நாடாளுமன்றத்தேர்ல்கள்:**

**மதிப்பீடு : ரூ. 13,000.**

நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத்தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று பின்னர் மைய அரசினால் திருப்பித்தரப்படும்.



1984 டிசம்பர் திங்களில் நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்றப்பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, 1986—87-ல் நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத்தேர்தல்கள் நடப்பதற்கு வாய்பேதுமில்லை. எனவே, இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மத்திய அரசே மேற்கொள்ளுகிறது.

**எஇ. மாநில சட்டமன்றத்தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்:**

**ஏஏ. மாநிலச் சட்டமன்றப்பேரவை:**

**மதிப்பீடு : ரூ. 53,000.**

தனியாக மாநிலச் சட்டமன்றப்பேரவைக்குப் பொதுத்தேர்தலோ இடைத்தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் அடங்கும்.

1984 டிசம்பர் திங்களில், நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்றப்பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, சட்டமன்றப்பேரவைக்குத்தனியே பொதுத்தேர்தல்கள் நடப்பதற்கு வாய்ப்பேதுமில்லை. 1986-87-ல் பொதுத்தேர்தல் துறையில் தலைமைச் செயலகத்துறைகளின் தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் ப்ளெயின்பேப்பர் காப்பியர்கள் இரண்டு கொள்முதல் செய்யப்பட உள்ளது. ஆகவே, இத்தலைப்பின்கீழ் மேற்கண்ட நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசே மேற்கொள்ளுகிறது.

**எஇ. மாநில சட்டமன்றத்தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்:**

**எபி. சட்டமன்ற மேலவை:**

**மதிப்பீடு: ரூ. 11,000**

மேலவைத் தொகுதிகளுக்கு தேர்தல் நடக்கும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படுகின்றன.

2. மாநில சட்டமன்ற மேலவை கலைக்கப்படுவதில்லை. ஆனால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் 172 (2) வது பிரிவின்படி அவையின் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டாண்டிற்கு ஒரு முறை பதவி ஓய்வு பெறுவர். தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 12 உள்ளாட்சி தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 21 உறுப்பினர் இடங்களும் காலியாக உள்ளன. தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு சென்னை—உள்ளாட்சித்தொகுதி, மதுரை—அண்ணா உள்ளாட்சி தொகுதி மற்றும் கோயம்புத்தூர்—பெரியார்—நீலகிரி உள்ளாட்சித் தொகுதிகள் நீங்கலாக மற்ற 9 உள்ளாட்சி தொகுதிகளுக்கு மட்டும் தேர்தல் நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரல் தேர்தல் ஆணைக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. மதுரை—அண்ணா உள்ளாட்சித்தொகுதி மற்றும் கோயம்புத்தூர்—பெரியார்—நீலகிரி உள்ளாட்சித் தொகுதிகளிலிருந்தும் சட்டமன்ற மேலவைக்குத் தேர்தல்கள் நடத்தமுடியுமா என்பது தேர்தல் ஆணைக் குழுவோடு கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சி தேர்தல்கள் நடைபெற்ற பிறகுதான், சென்னை உள்ளாட்சித் தொகுதியிலிருந்து சட்டமன்ற மேலவைக்குத் தேர்தல் நடத்த முடியும்.

3. மாநகராட்சி தேர்தல்களைப் பொறுத்தவரை இந்த மூன்று நகராட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய ஒருங்கிணைந்த பொது சட்டத்தைத் தொகுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி சட்டம் சட்டமன்றத்தால் நிறைவேற்றப் பட்டதும், இந்த மூன்று நகராட்சிகளுக்கும் வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு மாநகராட்சி தேர்தல்கள் நடத்தப் படும்.

4. மேலும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுப்பினர்களால் சட்டமன்ற மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு உறுப்பினர்களின் பதவிகாலம் 26—6—1986 அன்றும், மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களின் பதவிக்காலம் 29—6—1986 அன்றும் முடிவடைகிறது. மாநிலங்களவைக்கு தேர்தல் ஜூன்மாதம் 21-ம் தேதி நடைபெறும். சட்டமன்ற மேலவைத்தேர்தலும் 21—6—1986-ல் நடைபெறும். அவ்வேலைகளுக்கான செலவுகளுக்காக மேற்சொன்ன அளவில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

5. மாநில அரசே இதன் மொத்தச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ளுகிறது.





## இணைப்பு IV

(615-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

## நிறுவன நிதித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு.

## 1986-87.

முன்னுரை:

வங்கிகள், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கின்றன. பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களில் இரு அம்சங்கள் இணைந்துள்ளன; ஒன்று அரசுத் துறைகள் அளிக்கும் மானியம், பிறிதொன்று வங்கிகள் அளிக்கும் கடனுதவி. அரசுக்கும் வங்கிகளுக்குமிடையே சிறந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்குத் தலைமைச் செயலகத்தில் 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவன நிதித்துறை ஏற்படுத்தப்பட்டது. முதன்மை வங்கிகள் மாவட்டங்களுக்கும் மாநில முழுவதற்கும் நீண்டகாலக் கடன், ஆண்டுக் கடன் வழங்கும் திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்தும் பணியை இத்துறை கண்காணிக்கின்றது. சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு உதவுவதற்காக வங்கிக் கடன்களைத் திரட்டுவதில் இத்துறை உறுதுணையாக உள்ளது.

வங்கிக் கிளைகளை ஏற்படுத்துதல்:

வங்கிக் கடனுதவியுடன் வளர்ச்சித் திட்டங்களை உரிய முறையில் செயற்படுத்துவதற்கு மாநிலம் முழுவதும் வங்கி வசதிகள் கிடைக்கச் செய்வது அவசியமாகும். வங்கிகளில்லாத பகுதிகளில் கிளைகளைத் தொடங்குவதன் அவசியம் பற்றி இத்துறை ஆய்ந்து வங்கிக் கிளைகளைப் புதிதாகத் தொடங்குவதற்கு ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கின்றது. நம் மாநிலத்தில் ஒவ்வொரு 12,500 மக்களுக்கும் வங்கிக் கிளை உள்ளது. தற்போது தேசிய அளவில் சுமார் 15,500 பேர் கொண்ட பகுதிக்கு ஒரு வங்கி என்றிருப்பதுடன் ஒப்பிடும்போது இது பாராட்டிக்குரியதாகும். இம்மாநிலத்தில் 1983 ஆம் ஆண்டில், 3,386 வணிக வங்கிகள் இருந்தன. 1985 ஜூனில் இவ்வங்கிகளின் எண்ணிக்கை 3,892 ஆக உயர்ந்தது. இத்துடன் 447 கூட்டுறவு வங்கிக் கிளைகள் உள்ளன.

இந்திய ரிசர்வ் வங்கி 1985—90 ஆம் ஆண்டுக்கான கிளை வங்கிகளுக்கு உரிமம் வழங்கும் கொள்கையை அறிவித்துள்ளது. இக்கொள்கை அறிவிப்பில், வளர்ச்சி வட்டாரம் (கிளை வங்கிகளுக்கு உரிமம் வழங்குவதற்குரிய) ஓர் அலகாக கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அக்கொள்கை அறிவிப்பில் இம்மாநிலத்தில் கிளை வங்கிகள் திறப்பதற்கென குறிப்பிடப்பட்ட 175 வளர்ச்சி வட்டாரங்கள், வங்கி வசதிகள் மேம்படுத்த வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

வட்டாரக் கிராம வங்கி :

கிராமப் பகுதிகளில் வேளாண்மை கிராமத் தொழில்களுக்கும், வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கும், ஏனைய உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் குறிப்பாக சிறு உழவர்களுக்கும், சொற்ப நில உழவர்களுக்கும் உழவுத் தொழிலாளர்களுக்கும், கைத்தறித் தொழிலாளர்களுக்கும், சிறு தொழில் முனைவோருக்கும் கடன் வசதிகளையும் செய்து கொடுக்க நாட்டின் வட்டார கிராம வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த கிராம வங்கிகள், கூட்டுறவுக் கடன் வழங்கு நிறுவனங்கள், வணிக வங்கிகள் ஆகியவற்றின் அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளன. அவை சாதாரணமாக அரசுத் துறை வணிக வங்கிகள் ஆதரவு பெற்றவையாகும்.

சாத்தூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாண்டியன் கிராம வங்கியே முதல் முதலில் ஏற்படுத்தப்பட்ட வட்டார கிராம வங்கியாகும். காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமப்புற மக்களின் தேவையை அது நிறைவு செய்து வருகிறது. இந்த மாவட்டங்களில் இந்த வங்கிக்கு 150 கிளைகள் இருக்கின்றன. இம்மாநிலத்தில் இரண்டாவது வட்டார கிராம வங்கியான அதியமான் கிராம வங்கி தருமபுரியில் அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மற்றொரு வட்டார கிராம வங்கியை ஏற்படுத்துவதற்கு அரசு இசைவளித்துள்ளது.

வைப்புத் தொகைகளும், முன் பணங்களும் :

1985 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் உள்ளவாறு, வணிக வங்கிகளின் மொத்த வைப்புத் தொகை ரூ. 5,013 கோடியாகும். மொத்த முன்பணத் தொகை ரூ. 4,409 கோடியாகும். 1984 ஆம்



ஆண்டு ஜூன் திங்களிலிருந்த தொகையுடன் ஒப்பிடுகையில், வங்கியின் வைப்புத் தொகையும், முன் பணமும் சுமார் 23 சதவீதம் அதிகரித்துள்ளது.

முன்னுரிமைத் துறைகளுக்கான கடன்கள் :

1985 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் மாநிலத்திலுள்ள முன்னுரிமைத் துறைகளுக்கு வணிக வங்கிகள் கொடுத்த கடன் தொகையில் வரவேண்டிய தொகை ரூ. 1,902 கோடியாக இருந்தது. இது 1984 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் இருந்ததைக் காட்டிலும் 32 சதவீதம் அதிகரித்ததாகத் தெரிகிறது. இதில் வேளாண்மைத் துறைக்கு நேரடியாக வழங்கியது ரூ. 238 கோடியாகும். நலிந்த பிரிவினருக்கு வழங்கியது சுமார் ரூ. 471 கோடியாகும். 1985 ஜூன் இறுதியில் மாறுபட்ட வட்டிவீத திட்டத்தின் கீழ் வரவேண்டிய தொகை சுமார் ரூ. 38 கோடியாகும். இதில் பயனடைந்தவர்கள் 4 இலட்சம் பேராவர்.

இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்த வரையறைகள் :

முன்னுரிமைத் துறைகளுக்கும், நலிந்த பிரிவினர்களுக்கும் போதிய கடன் வசதி கிடைக்கச் செய்வதற்கு அனைத்து வணிக வங்கிகளுக்கும் இந்திய ரிசர்வ் வங்கி சில வரையறைகளை விதித்திருக்கிறது. அந்த வரையறைகளை நம் மாநில அரசு மிஞ்சியுள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| | வரையறைகள். | 1985 ஜூனில் கணக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கொடுக்கப்பட்ட மொத்த கடனுடன் ஒப்பிடும்போது முன்னுரிமைத் துறைகளுக்கு கொடுக்கப்பட்ட கடன் சதவீதம் .. .. .. | 40 | 43.1 |
| கொடுக்கப்பட்ட மொத்த கடனுடன் ஒப்பிடும்போது வேளாண்மைக்கு நேரடியாக கொடுக்கப்பட்ட கடன் சதவீதம்.. .. .. | 15 | 16.7 |
| கொடுக்கப்பட்ட மொத்த கடனுடன் ஒப்பிடும்போது நலிந்த பிரிவினருக்குக் கொடுக்கப்பட்ட கடன் சதவீதம் .. .. .. .. | 10 | 10.67 |
| முந்தைய ஆண்டில் கொடுக்கப்பட்ட மொத்த கடனில் மாறுபட்ட வட்டிவீதத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட கடன் சதவீதம் | 1 | 1 |

[1986 மே 8

**முதன்மை வங்கித் திட்டம் :**

ஒவ்வொரு மாவட்டத்திலும் கிடைக்கக்கூடிய வங்கிக் கடன் வசதியை ஒருங்கிணைப்பதற்காக 1978 இல் முதன்மை வங்கித் திட்டம் தொடங்கப்பட்டது. நம்மாநிலத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி ஆகிய வங்கிகள் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் முதன்மை வங்கிகளாகும். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மாநில வங்கிகள் குழுவின் அமைப்பாளராகவும் உள்ளது.

**மாவட்டக் கடன் வழங்கு திட்டங்களும், ஆண்டுச் செயல் திட்டங்களும் :**

வளர்ச்சிப் பணிகளில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வணிக கூட்டுறவு வங்கிகள் அனைத்தின் திட்டங்களைப் பிரதிபலிக்கக் கூடிய மாவட்டக் கடன் வழங்கு திட்டங்களைத் தயாரிக்கும் திட்டப்பணி, 1978 ஆம் ஆண்டிலிருந்தே செயற்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டம் பெருநகர் பகுதியாக இருப்பதால் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. கடன் வழங்குத் திட்டம் நீண்ட காலத்திற்குத் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுச் செயல் திட்டம் ஒவ்வோராண்டும் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுச் செயல் திட்டத்தின் கீழ் வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் செயல் திறன் பாராட்டத்தக்க வகையிலுள்ளது. நிதி ஒதுக்கீடுகள் ஆண்டிற்காண்டு அதிகரித்துள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| துறை. | ஆண்டுச் செயல்திட்ட ஒதுக்கீடுகள், 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | |
| வேளாண்மைத் துறை .. .. | 401 | 484 | 611 |
| தொழில் துறை .. .. .. | 93 | 150 | 188 |
| பணிவசதிகள் துறை .. .. | 72 | 116 | 165 |
| மொத்தம் .. | 566 | 750 | 964 |



1986 மே 8]

1985 ஆம் ஆண்டு திட்ட இலக்கு விஞ்சப்பட்டது. மேலும் முன்னுரிமை துறைகளுக்கு 1,025 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது 1986 ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டம் 1985 ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டத்தைவிட கணிசமாக உயர்ந்துள்ளது. 1986 ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டத்தின் திட்ட வாரியான, மாவட்ட வாரியான புள்ளி விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திற்கான கடன் வழங்குத் திட்டம், ஆண்டுச் செயல் திட்டம் ஆகியவை முடிவு செய்யப்பட்டு, அம்மாவட்டத்திலுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் கண்காணிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் இக்குழுவின் தலைவர் ஆவார். இக் குழுவில் அம்மாவட்டத்திலுள்ள பெரிய வங்கிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும், வங்கிக் கடன் தொடர்பான திட்டங்களைச் செயற்படுத்தும் மாவட்ட அதிகாரியும் உள்ளனர். இப்பணியில், மாவட்ட ஆட்சியாளருக்கு மாவட்ட கிராம வளர்ச்சி முகவரமைப்பின் திட்ட அலுவலரும், மாவட்டத்தின் முதன்மை வங்கி மேலாளரும் உதவி புரிகின்றனர். மாவட்ட கிராம முகவரமைப்பின் திட்ட அலுவலர் நிறுவன நிதித்துறை திட்ட அலுவலராக பதவி வகிப்பார். ஆண்டுச் செயல் திட்டம் செயல்பட்டுவருவதை தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் இயங்கும். இம்மாநிலத்தைச் சேர்ந்த பல்வேறு மாவட்டங்களிலும் ஒருங்கிணைப்புக் குழு ஆய்வு செய்கிறது. பல்வேறு வளர்ச்சித் துறைகளுக்குக் கடன் வழங்குவதை உன்னிப்பாக கண்காணிப்பதற்காக, வேளாண்மை, வேளாண்மை தொடர்பான பணிகள், தொழில், பணிவசதிகள் ஆகிய துறைகளுக்கு தனித்தனியே நான்கு நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன்கள் :**

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணைகளில் கடன் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவும் பொறுப்பு, வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வங்கி வழங்கும் மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 10 சதவீதமாவது சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி விதிமுறை நியதியினை

வகுத்துள்ளது. வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 1 சதவீதக் கடன் தொகையாவது குறைந்த வட்டி வீதத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடப் பழங்குடியினருக்கும் கிராமப் பகுதிகளில் ஆண்டு வருமானம் 2,000 ரூபாய்க்கும், நகர்ப் பகுதிகளில் 3,000 ரூபாய்க்கும் குறைவான வருமானம் பெறும் ஏனைய நலிந்த பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது மற்றொரு விதிமுறை நியதியாகும். அவ்விதம் ஒதுக்கப்பட்ட கடன்தொகை பொருத்தமானவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்ய கடன் தேவைப்படும் நபர்கள் யார் என்று கண்டறிந்து, வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கு உதவ வேண்டியது அவசியமாகும். இது நிறுவன நிதித்துறையின் முக்கியப் பணியாகும். இப்பணி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியருக்கு மாவட்ட கிராம வளர்ச்சி முகவரமைப்பின் திட்ட அலுவலர்கள் உதவி புரிகின்றனர்.

சென்னை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக நியமிக்கப் (நிதி நிறுவனங்கள்) பட்டுள்ள துணை ஆட்சியர் மாவட்ட ஆட்சியருக்கு உதவியாகப் பணிபுரிகிறார். சென்னை மாநகராட்சி ஆணையரும், குடிசை மாற்று வாரியமும், சமூக நலத்துறை இயக்குநரும் வங்கிக் கடன் பெறுவதற்குத் தகுதியானவர்களைக் கண்டறிவதில் உதவி புரிகின்றனர். நகரில் அதிக அளவில் மக்களுக்கு உதவும் வங்கியின் கிளைகளின் பணி அரசினால் நியமிக்கப்படும் நகர வங்கிக் குழுவினால் ஒருங்கிணைக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் இக்குழுவின் தலைவராவார். இக்குழு 20 உட்குழுக்களின் மூலம் பணிகளைச் செய்து வருகிறது. ஒவ்வொரு குழுவும் நகர மாவட்டத்தின் ஒரு பிர்க்காவினைக் கவனிக்கிறது. இதில் சுமார் 25 வங்கிக் கிளைகள் அடங்கும். நிதி நிறுவனங்கள் துறை பொருத்தமான பொருளாதார நடவடிக்கைகள் மூலம் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் வாழ்க்கையில் முன்னேற இயலும் வகையில் அவர்கள் வங்கிக் கடன்களைப் பெறுவதில் உதவி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்தின் மக்கள் தொகைக் கணக்கு, வங்கி வசதிகள் ஆகிய வற்றிற்கேற்ப, இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தகுதி வாய்ந்த நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு வணிக வங்கிகளின் மூலம் கடன் வழங்க மாவட்ட ஆட்சியர்கள் ஏற்பாடு செய்து



வருகின்றனர். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், உழவர்களுக்கான பெருந் திட்டம் (படித்து வேலையற்ற இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டம்) சமூக நலன், ஆதி திராவிடர் நலன், பின் தங்கிய வகுப்பினர் நலன் முதலிய துறைகளின் திட்டங்கள் போன்ற பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் நிதியுதவி பெறும் கடன் திட்டங்களும் இதில் அடங்கும். இத்துடன் நலிந்த பிரிவினருக்கு கடன் வழங்கும் வங்கித் திட்டத்தின் கீழ் மேற்சொன்ன திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்ற பகுதிக்கு வெளியேயுள்ள நபர்களுக்கும் கடன் தொகை வழங்கப்படுகின்றது.

1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில், இத்துறை கடன் வழங்க எண்ணற்ற விரைவுத் திட்டங்களைச் செயற்படுத்தியது. 1984-85 ஆம் ஆண்டு சமுதாயத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த சுமார் ஆறு இலட்சம் பேர்களுக்கு கடன் உதவி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கும் கூடுதலாக 8 இலட்சம் பேருக்கு கடன் உதவி அளிக்கப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டில் 8.67 இலட்சம் பேருக்குக் கடன் உதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 9.35 லட்சம் நபர்களுக்கு ரூ. 294 கோடிக்கு அதிகமான தொகை வழங்கப்பட்டு இவ்வாண்டின் இலக்கு விஞ்சப்பட்டது.

**சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல் குறித்து மதிப்பாய்வு :**

கடன் வழங்குவதற்காகப் பின்பற்றப்படும் நடைமுறைகளில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைவதற்காக, கடன் வழங்கும் திட்டம் செயல்படுவதைச் சோதனையிட வேண்டியது அவசியமாகும். கடன் வழங்கும் திட்டத்தில் ஏற்படக் கூடிய இடர்ப்பாடுகளையும் தடைகளையும் கண்டறியவும் அவற்றைக் களையவும் தேவையான நடவடிக்கைகளை நிறுவன நிதித் துறை மேற்கொண்டுள்ளது. இத்துறையின் அரசுத் துணைச் செயலாளர் மூவரிடம் மேற்சொன்ன மதிப்பாய்வு பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துணைச் செயலாளரிடமும் (மதிப்பாய்வு) 5 அல்லது 6 மாவட்டங்களை மதிப்பாய்வு செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. துணைச் செயலாளர்கள் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, இடர்ப்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றைக் களைவதற்கான நடவடிக்கைகளை

மேற்கொள்கின்றனர். அவர்கள் மாவட்ட ஆலோசனைக் குழுவில் பங்கேற்றுக் கொள்வதோடு மாவட்ட அளவில் நடைபெறும் மறு ஆய்வுக் கூட்டங்களிலும் கலந்து கொள்கின்றனர். ஆண்டுச் செயல் திட்டத்தின் மூலம் பல்வேறு துறைகளில் எய்தப்பட்ட சாதனைகளைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை அவர்கள் ஆய்வு செய்வதோடு குறைபாடுகளைக் கண்டறிந்து அத்தகைய குறைபாடுகளைக் களைந்து திட்டத்தை மேம்படுத்துவதற்காக, முதன்மை வங்கிகள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

**வெள்ள நிவாரணம் :**

1985 ஆம் ஆண்டில் பெய்த பெருமழை காரணமாகச் சென்னை மாநகரின் பெரும்பாலான பகுதிகள் கடுமையான சேதத்திற்கு உள்ளாயின. கடற்கரை மாவட்டங்களான செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் ஆகியவையும் பாதிக்கப்பட்டன. சென்னை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நலிவுற்ற பிரிவினருக்கு உதவுவதற்காகவும், அவர்கள் மீண்டும் அவர்களது பணியைத் தொடங்கி மறுவாழ்வு பெறவும் நகரிலுள்ள அனைத்து பொதுத் துறை நிறுவனங்களும் கடன் உதவி அளித்துள்ளன. 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 24,003 பேருக்கு ரூ. 2.44 கோடி கடன் உதவி அளிக்கப்பட்டது.

**கடன் வசூல் முகாம்கள் :**

கடன் கொடுப்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல அத் தொகையைத் திருப்பி வசூல் செய்வதும் முக்கியமாகும். கடன் பெற்றவர்கள் வங்கிகளிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தினாலொழிய பெரும்பான்மையான மக்களுக்கு வங்கிகளால் நிதி உதவி அளிக்க இயலாது. உரிய காலத்தில் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான பொறுப்பினை கடன் பெற்றோர் அறியும்படிச் செய்ய வேண்டும். மேற்சொன்ன நோக்கத்தை எய்துவதற்காக மாவட்ட ஆட்சியர்கள் வங்கிகளுடன் ஒருங்கிணைந்து மாவட்டங்களில் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கடன் வசூல் முகாம்களை நடத்துகின்றனர்.



**பொருட்காட்சியும் விளம்பரமும் :**

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் பெரும்பான்மையானவர்களுக்கு உதவி செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். வங்கிகளில் கிடைக்கக் கூடிய வசதிகள் பற்றி விளக்கவும், வங்கி நிதி உதவி பெற மேற்கொள்ள வேண்டிய நடைமுறை பற்றி நலிந்த பிரிவினர் அறிந்து கொள்ளவும் இத்துறை ஒவ்வோர் ஆண்டும் சென்னை மற்றும் மாவட்டங்களில் நடைபெறும் அனைத்திந்திய சுற்றுலா வர்த்தகத் தொழிற் பொருட்காட்சியில் அரங்குகளை அமைத்து வருகிறது. பல்வேறு கடன் உதவித் திட்டங்கள் குறித்த விதிகள் குறித்து விளக்குவதற்காக ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் ஒரு நாள் முகாம் ஒன்றினை நடத்த துறை உத்தேசித்துள்ளது. பல்வேறு திட்டங்கள் குறித்து தகவல்களைத் தெரிவிப்பதற்காகவும், கடன் தொகைகளைத் திரும்ப வசூலிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தவும் நாளேடுகள், வீடியோ, வானொலி ஆகிய மக்கள் தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**முடிவுரை :**

வேளாண்மை, அதனைச் சார்ந்த நடவடிக்கைகள், சிறு தொழில்கள்-பணிகள் துறைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக அளிக்கப்படுகின்ற வங்கிக் கடன் மிகவும் முக்கியமானதாகும். இது சமுதாயத்தின் நலிந்த பிரிவுகளுக்கு உதவுவதில் ஒரு மிகப் பெரிய சாதனமாகவும் இருக்கிறது. சமுதாயத்தின் நலிந்த பிரிவுகளுக்கு உதவுவதிலும் முன்னுரிமைப் பிரிவுகளை மேம்படுத்துவதிலும் அரசுத் துறைகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் இடையில் ஒரு முழுமையான ஒத்துழைப்பைப் பெறுவதற்கு நிறுவன நிதித் துறை முயன்று வருகிறது.

## தமிழ்நாட்டின் வங்கிப்பணிகள் குறித்த புள்ளி விவரங்கள்.

(1985 ஆம் ஆண்டு ஜூன் இறுதியில் இருந்தவாறு நிலுவைகள்)

(தொகை ரூபாய் கோடியில்.)

(கணக்குகளின் எண்ணிக்கை நூறில்.)

| வங்கி தொகுதி. | கிளைகளின் எண்ணிக்கை. | மொத்த வைப்பீட்டுத் தொகை. | மொத்த முன்பணங்கள். | கடன் வைப்பீட்டுத் தொகை வீதம். | விவசாயத்திற்கு நேரடி முன் பணங்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை. | மொத்த முன் பணத்தின் சதவீதம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| இந்திய ஸ்டேட் வங்கியும் அதனைச் சார்ந்தவைகளும். | 595 | 1,266 | 1,257 | 99.3 | 203 | 16.15 |
| தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் | 2,055 | 2,929 | 2,473 | 84.4 | 467 | 18.88 |
| தனியார் வங்கிகள் .. .. | 1,071 | 706 | 475 | 67.3 | 48 | 10.11 |
| வட்டார ஊரக வங்கிகள் .. | 150 | 16 | 27 | 171.2 | 19 | 70.37 |
| வெளிநாட்டு வங்கிகள் .. .. | 11 | 96 | 177 | 184.2 | 1 | 0.56 |
| மொத்தம் .. .. .. | 3,882 | 5,013 | 4,409 | 87.9 | 738 | 16.74 |
| கூட்டுறவு வங்கிகள் .. .. | 447 | 408 | 506 | 123.9 | 180 | 35.57 |
| பெரு மொத்தம் .. .. | 4,329 | 5,421 | 4,915 | 90.7 | 918 | 18.68 |



## தமிழ்நாட்டின் வங்கிப்பணிகள் குறித்த புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

(1985ஆம் ஆண்டு ஜூன் இறுதியில் இருந்தவாறு நிலுவைகள்)—தொடர்ச்சி.

(தொகை ரூபாய் கோடியில்.)

(கணக்குகளின் எண்ணிக்கை நூறில்.)

| வங்கி தொகுதி. | முன்னுரிமைத் துறைக்கான முன்பணங்கள். | | நலிந்த பிரிவுக்கான முன்பணங்கள். | | மாறுபட்ட வட்டி வித்தியாசத் தொகை முன்பணங்கள். | | ஆதிதிராவிடப் பழங்குடியினர் பயன்பாடுகளுக்கு முன்பணங்கள். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை. | மொத்த முன் பணத்தின் சதவீதம். | தொகை. | மொத்த முன் பணத்தின் சதவீதம். | தொகை. | முந்தைய ஆண்டின் மொத்த முன்பணங்கள். | எண்ணிக்கை. | தொகை. |
| | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| இந்திய ஸ்டேட் வங்கியும் அதனைச் சார்ந்தவைகளும். | 549 | 43.7 | 118 | 9.4 | 12.7 | 1.4 | 916 | 15 |
| தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள். | 1,144 | 46.2 | 311 | 12.6 | 24.3 | 1.2 | 2,954 | 50 |
| தனியார் வங்கிகள் .. | 169 | 35.6 | 21 | 4.4 | 0.8 | 0.2 | 118 | 2 |
| வட்டார ஊரக வங்கிகள் | 24 | 87.5 | 21 | 77.8 | 0.1 | 0.4 | 349 | 5 |
| வெளிநாட்டு வங்கிகள் | 16 | 9.2 | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. .. | 1,902 | 43.1 | 471 | 10.7 | 37.9 | 1.0 | 4,347 | 72 |
| கூட்டுறவு வங்கிகள் .. | 309 | 60.9 | 106 | 20.9 | 3.2 | 0.6 | 1,118 | 10 |
| பெரு மொத்தம் .. | 2,211 | 45 | 577 | 11.7 | 41.1 | 0.8 | 5,465 | 82 |

1985ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளன்றுள்ளவாறு தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட வாரியாக வணிக வங்கிகளின் வங்கிப் பணிகள் குறித்த புள்ளி விவரங்கள்.

(தொகை ரூபாய் கோடியில்.)
[கணக்குகளின் எண்ணிக்கை நூறில்.]

| மாவட்டம். | கிளைகளின் எண்ணிக்கை. | *ஒவ்வொரு கிளைக்கும் உரிய மக்கள் தொகை (எண்ணிக்கை ஆயிரத்தில்.) | மொத்த வைப்பீட்டுத் தொகை. | மொத்த முன் பணங்கள். | கடன் வைப்பீட்டுத் தொகை. விதம். | முன்னுரிமைத்துறை முன் பணங்கள். தொகை | முன்னுரிமைத்துறை முன் பணங்கள். மொத்த பணத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| செங்கல்பட்டு .. .. .. | 217 | 16.8 | 212 | 220 | 103.6 | 136 | 61.8 |
| கோயம்புத்தூர் .. .. .. | 287 | 10.7 | 471 | 522 | 110.7 | 208 | 39.8 |
| தருமபுரி .. .. .. .. | 118 | 17.0 | 52 | 63 | 120.9 | 52 | 81.7 |
| காமராசர் .. .. .. | 94 | 14.2 | 73 | 103 | 141.4 | 62 | 59.8 |
| கன்னியாகுமரி .. .. .. | 116 | 12.3 | 87 | 53 | 61.0 | 36 | 67.1 |
| சென்னை .. .. .. .. | 552 | 5.9 | 1,999 | 1,882 | 84.1 | 411 | 21.8 |
| மதுரை .. .. .. .. | 341 | 13.3 | 295 | 303 | 102.5 | 168 | 55.5 |
| நீலகிரி .. .. .. .. | 63 | 10.1 | 88 | 88 | 99.9 | 34 | 39.1 |
| வட ஆற்காடு .. .. .. | 280 | 15.8 | 177 | 139 | 78.3 | 103 | 74.1 |
| பசும்பொன் முத்துராமலிங்கம் .. | 102 | 9.5 | 72 | 38 | 53.5 | 26 | 67.9 |
| பெரியார் .. .. .. | 172 | 12.1 | 195 | 142 | 73.2 | 96 | 67.4 |
| புதுக்கோட்டை .. .. .. | 72 | 16.2 | 42 | 31 | 74.3 | 21 | 67.9 |
| இராமநாதபுரம் .. .. .. | 65 | 15.7 | 36 | 21 | 58.1 | 15 | 71.3 |
| [illegible] .. .. .. .. | 240 | 14.4 | 242 | 198 | 81.9 | 129 | 65.1 |
| தென் ஆற்காடு .. .. .. | 263 | 16.0 | 171 | 111 | 65.0 | 83 | 75.1 |
| தஞ்சாவூர் .. .. .. | 203 | 13.9 | 274 | 152 | 55.3 | 105 | 69.5 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 297 | 12.2 | 285 | 190 | 69.0 | 124 | 63.4 |
| திருநெல்வேலி .. .. .. | 310 | 11.6 | 242 | 153 | 63.3 | 93 | 60.8 |
| மொத்தம் .. | 3,882 | 12.5 | 5,013 | 4,409 | 87.9 | 1,902 | 43.1 |

(*1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில்.)

**1985 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாளன்றுள்ளவாறு தமிழ் நாட்டிலுள்ள மாவட்ட வாரியாக வணிக வங்கிகளின் வங்கிப் பணிகள் குறித்த புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.**

(தொகை ரூபாய் கோடியில்).
(கணக்குகளின் எண்ணிக்கை நூறில்.)

| மாவட்டம். | விவசாயிகளுக்கு நேரடி முன் பணங்கள். தொகை. | விவசாயிகளுக்கு நேரடி முன் பணங்கள். மொத்த பணத்தின் சதவீதம். | நலிந்த பிரிவினருக்கான மொத்த முன் பணங்கள். தொகை. | நலிந்த பிரிவினருக்கான மொத்த முன் பணங்கள். மொத்த பணத்தின் சதவீதம். | வட்டி வித்தியாசத் தொகை முன் பணங்கள். தொகை. | வட்டி வித்தியாசத் தொகை முன் பணங்கள். முந்தைய ஆண்டின் மொத்த முன் பணத்திற்கான சதவீதம். | ஆதிதிராவிடப் பழங்குடியினர். பயன்பாடுகள். எண்ணிக்கை | ஆதிதிராவிடப் பழங்குடியினர். பயன்பாடுகள். தொகை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) |
| செங்கல்பட்டு .. | 54 | 24.55 | 31 | 14.10 | 4.1 | 2.4 | 418 | 8.0 |
| கோயம்புத்தூர் .. | 52 | 9.96 | 27 | 5.17 | 2.1 | 0.5 | 189 | 2.6 |
| தருமபுரி .. .. | 29 | 46.03 | 24 | 38.10 | 1.5 | 3.1 | 169 | 3.5 |
| காமராசர் .. .. | 13 | 12.62 | 13 | 12.62 | 0.4 | 0.4 | 128 | 2.5 |
| கன்னியாகுமரி .. | 21 | 39.62 | 12 | 22.64 | 1.2 | 2.4 | 59 | 0.8 |
| சென்னை .. .. | 17 | 0.90 | 8 | 0.43 | 5.2 | 0.3 | 323 | 4.2 |
| மதுரை .. .. | 95 | 31.35 | 52 | 17.16 | 3.7 | 1.5 | 381 | 6.8 |
| நீலகிரி .. .. | 19 | 21.59 | 8 | 9.09 | 0.5 | 0.8 | 73 | 1.4 |
| வட ஆற்காடு .. | 56 | 40.29 | 56 | 40.29 | 2.9 | 2.3 | 509 | 7.8 |
| பசும்பொன் முத்துராமலிங்கம். | 15 | 39.47 | 9 | 23.68 | 0.6 | 1.7 | 129 | 1.9 |
| பெரியார் .. .. | 47 | 33.10 | 28 | 19.72 | 1.2 | 1.1 | 119 | 1.4 |
| புதுக்கோட்டை .. | 11 | 35.48 | 9 | 29.03 | 0.7 | 2.9 | 60 | 1.9 |
| இராமநாதபுரம் .. | 11 | 52.38 | 7 | 33.33 | 0.5 | 2.2 | 112 | 1.5 |
| சேலம் .... .. | 55 | 27.78 | 29 | 14.65 | 2.0 | 1.3 | 226 | 3.3 |
| தென் ஆற்காடு .. | 59 | 53.15 | 41 | 36.94 | 2.0 | 2.1 | 337 | 6.6 |
| தஞ்சாவூர் .. .. | 71 | 46.71 | 38 | 25.00 | 4.0 | 3.1 | 378 | 5.8 |
| திருச்சிராப்பள்ளி .. | 66 | 34.74 | 39 | 20.53 | 2.9 | 1.8 | 334 | 5.8 |
| திருநெல்வேலி .. | 47 | 30.72 | 40 | 26.14 | 2.4 | 1.9 | 403 | 6.1 |
| மொத்தம் | 738 | 16.74 | 471 | 10.68 | 37.9 | 1.1 | 4,347 | 71.9 |

1986–90 ஆம் ஆண்டுகளில் கூடுதலாக வங்கி கிளைகள் திறப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள மாவட்டவாரியாக ஒன்றியங்களின் எண்ணிக்கை.

| தொடர் எண். | மாவட்டம். | ஒன்றியங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | வட ஆர்க்காடு .. .. .. .. | 16 |
| 2 | சேலம் .. .. .. .. .. | 21 |
| 3 | தென் ஆர்க்காடு .. .. .. | 31 |
| 4 | பெரியார் .. .. .. .. | 10 |
| 5 | புதுக்கோட்டை .. .. .. .. | 8 |
| 6 | தஞ்சாவூர் .. .. .. .. | 16 |
| 7 | செங்கல்பட்டு .. .. .. .. | 14 |
| 8 | கன்னியாகுமரி .. .. .. .. | 2 |
| 9 | திருநெல்வேலி .. .. .. .. | 9 |
| 10 | கோயம்புத்தூர் .. .. .. .. | 13 |
| 11 | இராமநாதபுரம் .. .. .. .. | 3 |
| 12 | காமராஜர் .. .. .. .. | 2 |
| 13 | திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 6 |
| 14 | மதுரை .. .. .. .. .. | 8 |
| 15 | அண்ணா .. .. .. .. | 4 |
| 16 | தருமபுரி .. .. .. .. | 12 |
| | மொத்தம் .. | 175 |



தமிழ்நாட்டில் 1986 ஆம் ஆண்டு ஆண்டுச் செயல் திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக ஒதுக்கீடு.

| மாவட்டத்தின் பெயர். | வேளாண் சேம. | தொழில். | பணிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1 செங்கல்பட்டு .. | 34,08 | 17,57 | 8,73 | 60,38 |
| 2 வடஆர்க்காடு | 41,58 | 18,16 | 12,81 | 72,55 |
| 3 தென்ஆர்க்காடு | 61,14 | 5,14 | 10,72 | 77,00 |
| 4 தருமபுரி .. | 30,10 | 8,80 | 7,60 | 46,50 |
| 5 சேலம் .. .. | 50,15 | 12,52 | 25,04 | 87,71 |
| 6 பெரியார் .. | 44,64 | 21,53 | 10,35 | 76,52 |
| 7 கோயம்புத்தூர் .. | 44,92 | 28,57 | 19,03 | 92,52 |
| 8 நீலகிரி .. .. | 11,36 | 2,42 | 3,53 | 17,31 |
| 9 மதுரை .. | 43,96 | 15,59 | 16,15 | 75,70 |
| 10 அண்ணா .. | 31,97 | 11,15 | 8,88 | 52,00 |
| 11 திருச்சிராப்பள்ளி.. | 48,81 | 7,35 | 6,96 | 63,12 |
| 12 தஞ்சாவூர் .. | 55,00 | 7,50 | 8,50 | 71,00 |
| 13 புதுக்கோட்டை | 16·02 | 4,40 | 2,51 | 22,93 |
| 14 இராமநாதபுரம் | 8,76 | 2,83 | 1,57 | 13,16 |
| 15 பசும்பொன்முத்துராமலிங்கம். | 12,97 | 3,60 | 2,89 | 19,46 |
| 16 காமராஜர் .. | 15,49 | 10,72 | 3,15 | 29,36 |
| 17 திருநெல்வேலி .. | 39,75 | 8,00 | 10,32 | 58,07 |
| 18 கன்னியாகுமரி .. | 19,93 | 2,38 | 5,91 | 28,22 |
| மொத்தம் .. | 6,10,63 | 1,88,23 | 1,64,65 | 9,63,51 |

தமிழ்நாட்டில் 1986 ஆம் ஆண்டு ஆண்டுச் செயல்திட்டத்தின் கீழ் திட்ட வாரியாக ஒதுக்கீடு.

| தொடர் எண்ணும் திட்டமும். | (ரூபாய் இலட்சத்தில்) தொகை. |
|---|---|
| (1) | (2) |
| 1. அ. வேளாண்மை— | |
| 1 பயிர்க் கடன்கள் .. .. .. .. | 4,07,01 |
| 2 பாசனவசதி கடன்கள் .. .. .. | 42,60 |
| 3 விவசாய கருவிகள் .. .. .. .. | 40,49 |
| 4 உழவு மாடுகள் .. .. .. .. | 8,93 |
| 5 நில மேம்பாடு .. .. .. .. | 14,23 |
| மொத்தம் .. | 5,18,26 |
| ஆ. துணைப் பணிகள்— | |
| 1. பால்பண்ணை .. .. .. .. | 33,16 |
| 2 கோழி வளர்ப்பு .. .. .. .. | 5,36 |
| 3 செம்மறியாடு வளர்ப்பு .. .. .. | 15,09 |
| 4 மீனளம் .. ... .. .. .. | 1,50 |
| 5 சாண எரிவாயு .. .. .. .. | 21,96 |
| 6 பட்டுப்புழு வளர்ப்பு .. .. .. | 2,49 |
| 7 ஏனையவை .. .. .. .. | 12,81 |
| மொத்தம் .. | 92,37 |
| மொத்த வேளாண்மை .. .. .. | 6,10,63 |
| இ. குடிசைத் தொழில் .. .. .. | 38,81 |
| ஈ. சிறு தொழில் .. .. .. .. | 1,49,42 |
| மொத்தம் .. | 1,88,23 |
| உ. பணிகள்— | |
| 1 டிரக்குகள்/பேருந்துகள்/டாக்ஸி/ஆட்டோ/ சைக்கிள் ரிக்ஷா ஏனையவை. | 60,36 |
| 2 சிறு வியாபாரம்/சில்லரை வணிகம் .. | 60,03 |
| 3 தொழில் செய்வோர்/கயவேலை செய்வோர் | 34,94 |
| 4 ஏனையவை .. .. .. .. | 3,68 |
| 5 கல்வி .. .. .. .. .. | 1,53 |
| 6 வீட்டு வசதி .. .. .. .. | 3,08 |
| 7 நுகர் பயன் .. .. .. .. | 1,03 |
| மொத்தம் .. | 1,64,65 |
| பெரு மொத்தம் .. | 9,63,51 |



| முதன்மை வங்கி. | மாவட்டங்கள். |
|---|---|
| (1) | (2) |
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி .. | தஞ்சாவூர். |
| | திருச்சிராப்பள்ளி |
| | புதுக்கோட்டை |
| | இராமநாதபுரம் |
| | காமராஜர் |
| | பசும்பொன் முத்துராமலிங்கம் |
| | திருநெல்வேலி |
| | கன்னியாகுமரி. |
| இந்தியன் வங்கி .. | செங்கல்பட்டு |
| | தென் ஆர்க்காடு |
| | வட ஆர்க்காடு |
| | சேலம். |
| | தருமபுரி |
| கனரா வங்கி .. | மதுரை |
| | அண்ணா |
| | பெரியார் |
| | கோயம்புத்தூர் |
| | நீலகிரி. |

**நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன் விவரங்கள்.**

(ரூபாய் இலட்சத்தில்.)

| தொடர் எண்ணும் மாவட்டமும். | பயன் பெற்றோர். | | மொத்த நிதி உதவி. | |
|---|---|---|---|---|
| | ஆண்டு இலக்கு. | சாதனை. | ஆண்டு இலக்கு. | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 சென்னை .. .. .. | 60,000 | 63,291 | 600 | 529.82 |
| 2 செங்கல்பட்டு .. .. .. | 65,000 | 65,448 | 2,050 | 2,334.72 |
| 3 வட ஆர்க்காடு .. .. | 65,000 | 8,262 | 2,050 | 2,260.00 |
| 4 சேலம் .. .. .. | 65,000 | 1,07,104 | 2,050 | 3,686.33 |
| 5 தர்மபுரி .. .. .. | 22,500 | 14,603 | 650 | 625.96 |
| 6 பெரியார் .. .. .. | 30,000 | 1,02,454 | 950 | 1,486.91 |
| 7 கோயம்புத்தூர் .. .. | 80,000 | 80,400 | 2,500 | 2,854.95 |
| 8 நீலகிரி .. .. .. | 20,000 | 30,010 | 625 | 716.32 |
| 9 தென்னாற்காடு .. .. | 60,000 | 46,950 | 1,875 | 1,391.00 |
| 10 தஞ்சாவூர் .. .. .. | 60,000 | 79,316 | 1,875 | 1,933.06 |
| 11 திருச்சிராப்பள்ளி .. .. | 65,000 | 41,703 | 2,050 | 2,009.36 |
| 12 புதுக்கோட்டை .. .. | 22,500 | 27,680 | 650 | 587.95 |
| 13 மதுரை .. .. .. | 75,000 | 80,997 | 2,344 | 2,556.81 |
| 14 அண்ணா .. .. .. | 25,000 | 12,707 | 781 | 625.00 |
| 15 பசும்பொன் முத்துராமலிங்கம் .. | 22,500 | 40,315 | 650 | 1,080.53 |
| 16 இராமநாதபுரம் .. .. | 20,000 | 26,654 | 600 | 956.14 |
| 17 காமராஜர் .. .. | 25,000 | 26,447 | 700 | 779.05 |
| 18 திருநெல்வேலி .. .. | 65,000 | 77,886 | 2,050 | 2,887.93 |
| 19 கன்னியாகுமரி .. .. | 20,000 | 3,396 | 625 | 106.00 |
| மொத்தம் .. .. | 8,67,000 | 9,35,623 | 25,675 | 29,412.34 அல்லது (294.12 கோடியில்.) |

1985 ஆம் ஆண்டு ஆண்டுச் செயல் திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக/திட்டவாரியாக இலக்கும் சாதனையும்.

(ஜனவரி 1985 முதல் டிசம்பர் 1985 முடிய).

(ரூபாய் இலட்சத்தில்.)

| தொடர் எண்ணும் மாவட்டமும். | ஒதுக்கீடு. | | | |
|---|---|---|---|---|
| | வேளாண்மை. | தொழில். | பணிகள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 செங்கல்பட்டு .. .. .. | 3,212.15 | 1,580.70 | 593.85 | 5,386.70 |
| 2 வட ஆர்க்காடு .. .. .. | 3,637.36 | 1,701.83 | 1,164.81 | 6,504.00 |
| 3 தென் ஆர்க்காடு .. .. | 4,810.00 | 330.00 | 560.00 | 5,700.00 |
| 4 தர்மபுரி .. .. .. | 2,320.00 | 630.00 | 675.00 | 3,625.00 |
| 5 சேலம் .. .. .. | 4,059.09 | 1,037.09 | 1,137.24 | 6,233.42 |
| 6 பெரியார் .. .. .. | 3,277.89 | 1,593.31 | 807.67 | 5,678.87 |
| 7 கோயம்புத்தூர் .. .. .. | 3,190.21 | 2,353.99 | 1,607.38 | 7,151.58 |
| 8 நீலகிரி .. .. .. | 1,020.41 | 113.65 | 229.62 | 1,363.68 |
| 9 மதுரை .. .. .. | 4,309.78 | 2,134.62 | 2,542.45 | 8,986.85 |
| 10 திருச்சிராப்பள்ளி .. .. | 4,375.79 | 639.52 | 509.80 | 5,525.15 |
| 11 தஞ்சாவூர் .. .. .. | 4,797.70 | 321.22 | 506.45 | 5,625.37 |
| 12 புதுக்கோட்டை .. .. | 1,551.21 | 360.95 | 146.77 | 2,058.93 |
| 13 இராமநாதபுரம் .. .. | 792.02 | 176.72 | 143.70 | 1,112.44 |
| 14 பசும்பொன் முத்துராமலிங்கம் .. | 1,149.28 | 314.86 | 171.66 | 1,635.80 |
| 15 காமராஜர் .. .. .. | 1,122.30 | 709.71 | 179.38 | 2,011.39 |
| 16 திருநெல்வேலி .. .. .. | 3,488.43 | 585.37 | 303.86 | 4,377.66 |
| 17 கன்னியாகுமரி .. .. | 1,281.65 | 468.75 | 291.17 | 2,041.57 |
| மொத்தம் .. | 48,395.27 | 15,052.29 | 11,570.81 | 75,018.37 |

(ரூபாய் இலட்சத்தில்)

| தொடர் எண்ணும் மாவட்டமும். | சாதனை. | | | |
|---|---|---|---|---|
| | வேளாண்மை. | தொழில். | பணிகள். | மொத்தம். |
| (1) | (6) | (7) | (8) | (9) |
| 1 செங்கல்பட்டு .. .. .. | 2,497.84 | 881.49 | 958.81 | 4,337.64 |
| 2 வட ஆர்க்காடு .. .. | 4,729.01 | 1,067.60 | 2,273.54 | 8,070.15 |
| 3 தென் ஆர்க்காடு .. .. | 5,249.40 | 369.40 | 1,254.10 | 6,872.90 |
| 4 தர்மபுரி .. .. .. | 2,975.86 | 1,394.70 | 935.98 | 5,306.54 |
| 5 சேலம் .. .. .. .. | 6,856.98 | 2,721.18 | 4,745.56 | 14,323.72 |
| 6 பெரியார் .. .. .. | 4,872.94 | 2,916.35 | 978.01 | 8,767.30 |
| 7 கோயம்புத்தூர் .. .. | 4,707.35 | 3,091.39 | 1,416.59 | 9,215.33 |
| 8 நீலகிரி .. .. .. | 1,278.79 | 136.53 | 478.86 | 1,894.18 |
| 9 மதுரை .. .. .. | 7,355.16 | 1,339.67 | 1,452.59 | 10,147.42 |
| 10 திருச்சிராப்பள்ளி .. .. | 6,025.13 | 2,172.14 | 1,822.05 | 10,019.32 |
| 11 தஞ்சாவூர் .. .. .. | 5,059.07 | 286.88 | 1,074.48 | 6,420.43 |
| 12 புதுக்கோட்டை .. .. | 1,221.93 | 366.83 | 303.32 | 1,892.08 |
| 13 இராமநாதபுரம் .. .. | 913.44 | 111.16 | 157.58 | 1,182.18 |
| 14 பசும்பொன்முத்துராமலிங்கம் .. | 1,057.50 | 210.63 | 330.35 | 1,598.48 |
| 15 காமராஜர் .. .. .. | 1,830.82 | 796.49 | 309.62 | 2,936.93 |
| 16 திருநெல்வேலி .. .. | 3,791.52 | 612.44 | 870.02 | 5,273.98 |
| 17 கன்னியாகுமரி .. .. .. | 2,211.04 | 1,102.74 | 893.24 | 4,207.02 |
| மொத்தம் .. | 62,633.78 | 19,577.62 | 20,254.20 | 1,02,465.60 |

[1986 மே 8

## இணைப்பு V.

(615-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு அரசு.

### நிதி (ஓய்வூதியம்) துறை.

கோரிக்கை 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு :—

இக்கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:—

| | ரூ. |
|---|---|
| 266. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 69,49,59,000 |
| 268. சமூகப் பாதுகாப்பு நலனும் சமூகப் பாதுகாப்பு குறித்த ஏனைய திட்டங்களும் | 1,61,24,000 |
| | 71,10,83,000 |

அரசுப் பணியாளர்கள், மான்யம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள், நகராட்சி பணியாளர்கள் முதலியோர் தொடர்பாக ஓய்வூதியத்தின் ஒரு பகுதியினை மொத்தத் தொகையாக்குதல் உட்பட ஓய்வூதியங்கள், பணிக் கொடைகள், வருங்கால வைப்பு நிதிக்கான பங்குத் தொகை அல்லது அவர்களுடைய குடும்பங்கள் தொடர்பாக குடும்ப ஓய்வூதியம் முதலியவை குறித்த செலவுகளை செய்வதற்காக இக்கோரிக்கை ஏற்பட்டுள்ளது.

**ஓய்வூதியம், இறப்பு ஓய்வூதியம், பணிக்கொடை :**

தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் 1—7—1960 முதல் செயலுக்கு வந்தன. இந்த விதிகளின்படி 1—10—1979 வரை அரசுப் பணியாளர் ஒருவர் 25 ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது சராசரி ஊதியத்தில் 30/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் பெற்றார். 25 ஆண்டுகளுக்கு மேல் அவர் தகுதிப்பணி புரிந்திருந்தால், சில



1986 மே 8]

நிபந்தனைகளுக்குட்பட்டு சராசரி ஊதியத்தில் 33/80 வரை அதிக ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நடைமுறைக்கேற்ப ஓய்வூதியம் கணக்கிடும் நடைமுறையை 1—10—1979 முதல் அரசு பின்வருமாறு மாற்றி அமைத்துள்ளது:—

| | |
|---|---|
| 1. ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் முதல் 1,000 ரூபாய் வரை. | மாதாந்திர ஓய்வூதியம் சராசரி ஊதியத்தில் 50 சதவீதம். |
| 2. ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி கிடப்படும் சராசரி ஊதியத்தில் அடுத்த 500 ரூபாய் வரை. | மாதாந்திர ஓய்வூதியம் சராசரி ஊதியத்தில் 45 சதவீதம். |
| 3. ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் எஞ்சிய தொகைக்கு. | சராசரி ஊதியத்தில் 40 சதவீதம். |

ஓய்வு பெறும் வயது 55 ஆண்டுகள் என்பதிலிருந்து 58 ஆண்டுகள் என்று உயர்த்தப்பட்டதைக் கருத்தில் கொண்டு, மேற்சொன்னபடி நிலைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் ஓய்வூதியம், உயர்ந்த அளவு பணிக்கால அளவான 33 ஆண்டுக்குத் தொடர்புடையதாயிருக்கும். ஓய்வூதியத்தின் உச்ச வரம்பான ரூபாய் 1,500-ம் நீக்கப்பட்டிருக்கிறது.

இருபது ஆண்டுகளே பணி புரிந்திருந்தாலும் ஓய்வுக்கால கூடுதல் நன்மைகளுடன் அரசுப் பணியாளர்கள் தாங்களாகவே ஓய்வு பெற அரசு அனுமதி வழங்கியுள்ளது. உயரளவு ஐந்து ஆண்டுகள் வரையில் ஓய்வூதியக் கணக்கில் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறாக, அரசுப் பணியாளர்கள் 20 ஆண்டுகள் பணி புரிந்து தாமாகவே ஓய்வு பெற்றால் அவர்களும் நிதித் துறையின் (ஓய்வூதியம்) 2—2—1980 நாளிட்ட 57 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்ட வீதங்களில் ஓய்வூதியம் பெறுவர். இத்துடன், முடிவு பெற்ற ஒவ்வோர் ஆறு மாதப் பணிக்கும் ஊதியத்தில் 1/4 பங்கு என்ற வீதத்தில் இறப்பு ஓய்வூதியப் பணிக்கொடையும் அனுமதிக்கப்படுகிறது. இது

[1986 மே 8

ஊதியத்தில் 16 ½ மடங்கு என்ற உயரளவிற்கு உட்பட்டதாகும். உயரளவு பணிக்கொடை 31—3—1985 முதல் ரூபாய் 36,000-லிருந்து ரூபாய் 50,000 ஆக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

1—10—1979-க்கு முன்னர் ஓய்வு பெற்ற எல்லா அரசு ஊழியர்களுக்கும் தளர்த்தப்பட்ட ஓய்வூதியத்தின் பயன்கள் நீட்டிக்கப் பட்டுள்ளன.

1—4—1978-க்கு முன்னர் ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர் ஒருவரின் குறைந்த அளவு ஓய்வூதியம், மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயாக இருந்தது. தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழு செய்த பரிவுரைகளின் அடிப்படையில் 1—4—1978 முதல் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. பின்னர் 1—4—1982 முதல் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் 125 ரூபாயாக உயர்த்தப்பட்டு இது தமிழ்நாடு நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்படி 1—10—1984 முதல் மேலும் ரூபாய் 235 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரையின் படி ஓய்வூதிய தாரர்களுக்கு பணியாளர்களுக்கு வழங்கும் அகவிலைப்படியைப் போலவே வழங்கப்பட்டு உள்ளது.

ஓய்வுதியத் தொகை மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால், அத்தொகை பண அஞ்சல் மூலமாக அரசுச் செலவில் அனுப்பப்படுகிறது. மேற்படி தொகை 300 ரூபாய்க்கு மேற்பட்டால், அவரவர் விரும்புகிற வங்கி மூலமாக அனுப்பப்படு கிறது.

ஓய்வூதியம் பெறுபவர்கள் சில மருத்துவச் சலுகைகள் பெறவும் தகுதி உடையவர் ஆவர். இது ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் என்ற உயரளவிற்குட்பட்ட ஆண்டு ஓய்வூதியத்தில் 10 சதவீதமாகும்.

மாதம் ஒன்றுக்கு 700 ரூபாய் வரை ஓய்வூதியம் பெறுபவர்கள் பண்டிகை முன்பணம் ஒரு மாத ஓய்வூதியம் அல்லது ரூபாய் 100 இதில் எது குறைவோ அதைப் பெறத் தகுதியுடையவர் ஆவர்.



1986 மே 8]

28—2—1978 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரை, தங்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுக்க வேண்டும் என அவர்கள் ஓய்வு பெற்ற நாளிலிருந்து ஓராண்டுக் குள் விண்ணப்பித்துக் கொண்டால், மருத்துவச் சோதனை இன்றியே அவர்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதி அவர்களுக்கு மொத்தமாக்கிக் கொடுப்பது அனுமதிக்கப்பட்டு வருகிறது. தாமாகவே முன்வந்து ஓய்வு பெற்று, தங்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென தாம் ஓய்வு பெற்ற நாளிலிருந்து ஓராண்டுக்கால அளவிற்குள் விண்ணப்பித்துக் கொண்டால், அவர்களுக்கும் இச்சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது 1—4—1981 முதல் ஓய்வூதியம் பெறும் அரசு அலுவலர்களுக்கு அவர்கள் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகள் நிறைவு பெற்றவுடன் அவர்கள் ஓய்வூதியத் தொகையில் முன்பு ஒரு பகுதியை மொத்தமாகப் பெற்றுக் கொண்டதை முழுமையாக்கி முழு ஓய்வூதியம் பெற ஆணை பிறப்பித்துள்ளது.

நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி இடைக்கால நிவாரணமாக ரூபாய் 20 எல்லா ஓய்வூதியக்காரர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் 1—10—1984 முதல் அடிப்படை ஓய்வூதியத்தில் 7-லிருந்து 30 சதவிதம் வரை உயர்வு அளிக்கப் பட்டுள்ளது. 1—1—1984 முதல், ஓய்வூதியத்திற்கு தகுதியுடைய பணிக்காலத்தைத் தீர்மானம் செய்ய, 3 மாதங்களுக்கும் அதற்கு மேலும் சமமாக உள்ள ஒரு வருடத்தின் பகுதி ஒரு முழு அரையாண்டாக கருதப்பட்டு கணக்கிடப்படுகிறது.

குடும்ப ஓய்வூதியம்:

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வு பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஆனால், அவர் இறக்கும்போது ஓராண்டு காலமாவது பணியாற்றியிருக்க வேண்டும். அலுவலர் இறக்கும்போது அல்லது பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அவர் பெற்று வந்த சம்பளத்தின் அடிப்படையில் இந்த குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இறந்த அலுவலரின் மனைவிக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். அவர் இறந்த பிறகு கூட உரிய வயதடையாத அவரது குழந்தைகளுக்கு அந்த ஓய்வூதியம் வழங்கப்படும். 1—4—1979-க்கு முன்னர் குடும்ப

ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வராத குடும்பங்கள் அனைத்திற்கும் 1—4—1979-லிருந்து அத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. குடும்ப ஓய்வூதியம் கணக்கிடும் அளவை, அலுவலர் ஓய்வு பெறும் நாளில் கடைசியாக பெற்று வந்த சம்பளத்தில் 30 சதவிகிதமாக மேலே குறிப்பிட்ட நாளிலிருந்து மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இந்த குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 125 ஆக 1—4—1982 முதல் உயர்த்தப்பட்டு, மேலும் அதை ரூ. 235 ஆக 1—10—1984 முதல் தமிழ்நாடு நான்காவது சம்பளக்குழுவின் பரிந்துரைப்படி உயர்த்தப்பட்டு உள்ளது. தற்போதுள்ள விதிகளின்படி, தொடர்ந்து ஏழாண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றியுள்ள அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும் போது இறக்க நேரிடின் அவருடைய குடும்பத்திற்கு, அவர் இறந்த பிறகு ஏழாண்டுக் காலம் அவர் உயிருடன் இருந்திருந்தால் ஆண்டு முதிர்வு காரணமாக அவர் ஓய்வு பெற்றிருக்கலாகும் நாள் இவற்றில் எது குறைவோ அக்காலம் வரையில் அதிக வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும். அரசுப் பணியாளர் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதம் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி அனுமதிக்கத்தக்க குடும்ப ஓய்வூதியத்தைப் போல் இரு மடங்கு இவற்றில் எது குறைவோ அத்தொகை குடும்ப ஓய்வூதியத் தொகையாக இருக்கும். முன்பு உயர்த்தப்பட்ட உயரளவு குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 300 ஆகும். தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழு பரிந்துரைத்த அடிப்படையில் 1—4—1979-லிருந்து அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 500 என்னும் வரம்புக்குட்பட்டு பணியாளர் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 50 சதவீதமாக இருக்கிறது. உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம், பணியிலிருக்கும் போது இறந்த நாளுக்குப் பிறகு ஏழாண்டுக்கால அளவு ஆண்டு முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றிருக்கலாகும் நாள் இவற்றுள் எது குறைவோ அதுவரையில் அனுமதிக்கப்படும். தமிழ்நாடு நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் குடும்ப ஓய்வூதியத்தின் வரம்பு ரூபாய் 800 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டின் மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின்படி மாநிலங்கள் பிரிக்கப்படாமலிருந்த சென்னை மாநிலத்தில் எந்த இடத்திலிருந்தும் ஓய்வு பெற்ற இறந்த அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு 1—4—1979 முதல் ஓய்வூதியம் பெறத்





தகுதியுடையவர் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அத்தீர்ப்பின்படி, முன்பு பிரிக்கப்படாத சென்னை மாநிலத்திலிருந்து ஓய்வு பெற்று பின்னர் இறந்த பின்னர் அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கும் ஓய்வூதியம் பெற அரசு வகை செய்துள்ளது.

குடும்ப ஓய்வூதியம் தொடர்ந்து அளிக்கும் சலுகை, அரசுப் பணியாளரின் மகன்கள், திருமணமாகாத மகள்கள் முறையே 18, 21 வயது அடைகின்ற வரையில் என்பதற்குப் பதிலாக, 21, 24 வயது அடைகின்ற வரையில் அவர்களுக்கு அளிக்கப்படலாமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்:—

தனியார் (மான்யம் பெறும், உள்ளாட்சி மன்றம்) பள்ளிகளிலிருந்து 1—6—1970-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் மான்யம் பெறும் பள்ளிகளிலிருந்து 1—4—1972-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும், மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்துகிற தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் பொருந்தும். குறிப்பிட்ட பல்வேறு தேதிகளுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மாநில அரசுப் பணியாளர்களுக்கு நிகராக ஓய்வூதியம், பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை அவர்கள் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கு இறுதி அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால், தற்காலிக ஓய்வூதியம், பணிக்கொடையும் பெற அவர்களுக்குத் தகுதியுண்டு.

தனியார் (உள்ளாட்சிமன்றத் தனிப்பட்ட) கல்வி நிறுவனப் பணியாளர்களுக்குக் குறிப்பிட்ட பல்வேறு தேதியிலிருந்து குடும்ப ஓய்வூதிய நன்மைகள் அனுமதிக்கப்பட்டன. அதாவது தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு 1—4—1962-லிருந்தும், தனியார் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1—4—1972-லிருந்தும் இந்த நன்மைகள் வழங்கப்பட்டன. குடும்ப ஓய்வூதியம் குறித்த நிர்ணயிக்கப்பட்ட தேதிகளுக்கு முற்பட்ட நேர்வுகளிலும் குடும்ப ஓய்வூதிய நன்மைகள் வழங்குவதற்கு 13—3—1980-ல் அரசு ஆணை பிறப்பித்தது.

**நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் :—**

14—1—1970-க்கு முன்னர் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 தனி ஓய்வூதியம் பெற்று வந்தனர். இந்த ஓய்வூதியத்தை அரசு 16—4—1980-லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 100 ஆக உயர்த்தியுள்ளது. இது மேலும் 1—4—1982 முதல் 125 ரூபாயாக உயர்த்தப்பட்டிருந்தது. நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி மறுபடியும் இக் குறைந்த அளவு ஓய்வூதியத்தினை ரூபாய் 235 ஆக 1—10—1984 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்பட்டு வரும் அகவிலைப் படியினையும் வழங்கப்பட்டு வருகிறது.



## இணைப்பு VI

(615-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கொள்கைக் குறிப்பு.

### அகதிகள் தாயகம் திரும்பியோர் குடிபெயர்ந்தோர் துயர்தணிப்பும் மறுவாழ்வும்.

இனக் கலவரத்தினால் இலங்கையிலிருந்து 1985 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 5 ஆம் நாள் முதல் எதிர்பாராத அளவில் தொடங்கிய தமிழ் அகதிகளின் வருகை 1985-86 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தது. இலங்கை, பர்மா, வியட்நாம் நாட்டிலிருந்து தாயகம் திரும்பியோரை வரவேற்று குடியமர்த்தும் பொறுப்பினை ஏற்றிருந்த மறுவாழ்வுத்துறை, அகதிகளையும் வரவேற்று, இடவசதியளித்து உடனடி உதவிகளைச் செய்யும் பெரும் பொறுப்பையும் ஏற்க வேண்டியிருந்தது. 1983 ஆம் வருடம் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையே நடைபெற்று வந்த கப்பல் போக்குவரத்து, 1985-86 ஆண்டிலும் மீண்டும் தொடங்கப் பெறாததின் காரணமாக இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரின் வருகை மிகவும் குறைவாக இருந்தது. எனவே மறுவாழ்வுத்துறை அகதிகள் பற்றிய தனிப்பொறுப்பில் முழு கவனத்தையும் செலுத்த முடிந்தது.

**அகதிகள் மற்றும் தாயகம் திரும்புவோர்கள் :**

இலங்கையிலிருந்து வரும் அகதிகள் இலங்கை குடியுரிமை பெற்றவர்கள் ஆவார்கள். அவர்கள் இலங்கை குடிமக்கள், 1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து இலங்கை இராணுவம் எடுத்த பயங்கர நடவடிக்கைகளின் காரணமாக அவர்களுடைய உயிர் மற்றும் உடைமைகள் ஆபத்துக்குள்ளாயின. இதனால் அவர்கள் கடல்கடந்து இந்தியாவிற்கு வரவேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாயினர். இந்திய அரசும் தமிழ் நாடு அரசும் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி, அவர்கள் மீண்டும் இலங்கைக்குத் திரும்பும்வரை தற்காலிகமாக அகதி முகாம்களில் குடியமர்த்தி அடிப்படைத் தேவைகளை அவர்களுக்கு அளித்து வருகின்றன.

ஆனால் தாயகம் திரும்பியோர் (                ) 1986 ஆம் வருட

சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படியும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் வருபவர்கள்: பிரிட்டிஷ் இந்திய அரசு இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு சென்று மலைத் தோட்டங்களில் பணியமர்த்தப்பட்டவர்கள், அல்லது அவர்களின் வம்சாவழியினர் ஆவர். இவர்கள் இந்த ஒப்பந்தங்களின்படி இந்தியக் குடியுரிமை தரப்பட்டு திரும்பி வருபவர்கள், கடந்த நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களிலிருந்து இலங்கையிலுள்ள காப்பி, தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிய தெரிந்தெடுக்கப்பட்ட இந்த இந்திய வம்சா வழியினர் இலங்கை விடுதலை பெற்ற பின்னர் அவ்வரசினால் 1948 ஆம் ஆண்டில் குடியுரிமை மறுக்கப்பெற்று 9.75 இலட்சம் மக்களும் நாடற்றவர்களாயினர். மேற்சொன்ன ஒப்பந்தங்களின்படி அவர்களில் ஆறு இலட்சம் நபர்களுக்கு இந்திய அரசு குடியுரிமை வழங்கவும், மீதியுள்ள 3.75 இலட்ச நபர்களுக்கு இலங்கை அரசு குடியுரிமை வழங்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்வாறு இந்திய குடியுரிமை வழங்கப்பட்ட நபர்களே தாயகம் திரும்புவோர் ஆவர்.

1—6—1963 முதல் இதுவரை மொத்தம் 1,44,305 தமிழர்கள் பர்மாவிருந்து இந்தியாவிற்குக் திரும்பி வந்துள்ளனர். 1974-க்குப் பிறகு கப்பல் மூலம் இவர்கள் வருகை நின்றுவிட்டது. ஆனால் விமானம் மூலம் சிலர் இன்னும் வந்து கொண்டிருக்கின்றனர். இவர்களில் 49,946 குடும்பங்களுக்குப் பிரதான மறுவாழ்வு உதவியாக வணிகக்கடன், வேலை வாய்ப்பு மற்றும் விவசாயத் திட்டங்களில் குடியமர்த்தல் முதலிய திட்டங்கள் மூலம் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

1975 முதல் 1981 வரை வியட்நாமிலிருந்து இந்தியாவிற்கு 501 குடும்பங்களைச் சேர்ந்த 2,055 நபர்கள் வந்துள்ளனர். இவர்களில் 416 குடும்பங்களுக்கு வணிகக் கடன் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரில் 28—2—1986-ல் நிலைத்தபடி மொத்தம் 4,59,410 நபர்கள் இந்தியாவிற்கு வந்துவிட்டனர். இவர்களில் 3,33,843 நபர்கள் ஒப்பந்தக் கணக்கிலும்



மீதமுள்ள 1,25,567 நபர்கள் அவர்களது மக்கள் என்ற கணக்கில் ஏற்படும் கூடுதல் கணக்கிலும் அடங்குவர். இவர்கள் மொத்தம் 1,15,438 குடும்பத்திலும் அடங்குவர். இவ்வாறு தாயகம் திரும்பியோர் மலைத் தோட்டங்கள், விவசாயம், தொழில்துறை நிறுவனங்கள், சுயவேலை வாய்ப்பு மற்றும் வணிகக் கடன் வழங்குவது போன்ற பல்வேறு திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதுவரை 95,953 குடும்பங்களுக்கு இவ்வாறு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

தாயகம் திரும்புவோர் இராமேஸ்வரத்தில் வந்து இறங்கியவுடன் அவர்களுக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது. பிறகு இவர்கள் சுங்கத்துறை மற்றும் குடிபுகல் சட்டம் போன்ற சோதனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். வீட்டுப்பயன் பொருள்கள் மற்றும் நகைகள் அல்லாமல் ரூ. 5,000-க்கு மேற்படாமல் இதர சொத்துக்களைக் கொண்டு வரும் குடும்பங்கள் முகாம்களில் அனுமதிக்கப்படுகின்றனர். மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்படும் வரை இம்முகாம்களில் அவர்களுக்கு நடைமுறைச் செலவுக்காக மொத்த தொகையும், கிலோ ஒன்றுக்கு 57 பைசா என்ற மலிவு விலையில் அரிசியும் வழங்கப்படுகின்றன. இதேபோன்று வீட்டு பொருள்கள் நகைகள் அல்லாமல், ரூ. 10,000 மதிப்பிற்கு மேற்படாமல் இதர சொத்துக்களைக் கொண்டு வரும் குடும்பங்களுக்கு நிவாரண உதவி நீக்கி மறுவாழ்வு உதவிகள் மட்டும் அளிக்கப்படுகின்றன.

இலங்கை அரசு ஏற்கனவே இலங்கைக் குடியுரிமைக்கு ஒப்புக்கொண்ட 3.75 இலட்சம் பேரோடு கூடுதலாக 94,000 நாடற்றவர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்க ஒப்புக்கொண்டு இந்தியாவும் இலங்கையும் மற்றும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன என்று தெரிய வருகிறது. இதன்படி இந்தியா ஏற்கனவே குடியுரிமை வழங்க ஒப்புக்கொண்டுள்ள மொத்த எண்ணிக்கை ஆறு இலட்சம் நபர்களிலிருந்து 5.06 இலட்சமாக குறையும், கடந்த 20 ஆண்டுகளில் 3.33 இலட்சம் நபர்கள் (சந்ததியினர் தவிர) இந்தியாவிற்கு திரும்ப ஏற்றுக்கொள்ளப்பட்டனர். இதே போக்கில் மீதமுள்ள 1.73 இலட்சம் நபர்களை (சந்ததியினர் தவிர) இந்தியாவிற்கு ஏற்றுக்கொண்டு குடியமர்த்தும் பணி முடிவுற சுமார் பத்து ஆண்டுகள் பிடிக்கலாம். இதுபற்றி மைய அரசுக்கும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இலங்கையிலிருந்து வன்செயலில் பாதிக்கப்பட்டு வந்து இந்தியாவில் தங்கியுள்ள அகதிகள் இலங்கையில் நிலைமை சீரானவுடன் பாதுகாப்புடனும் கௌரவமாகவும் இலங்கைக்குத் திரும்பிய பிறகுதான் ஒப்பந்தப்படி தாயகம் திரும்ப வேண்டிய குடும்பங்களை ஏற்றுக்கொள்ள இயலும் என அண்மையில் நமது மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

**இலங்கை அகதிகள் :**

1983 ஜூலைத் திங்கள் ஏற்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்து அகதிகள் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வரத் தொடங்கினர். 5—2—1985 முதல் இராமேஸ்வரத்தில் இவர்களின் வருகை பெருமளவில் அதிகரித்து எப்ரல் மாதத்துக்குப் பின் இது சற்றுக் குறைந்தது. எனினும் 1985 ஆகஸ்ட் திங்கள் முதல் அகதிகள் தஞ்சை மாவட்ட கடற்கரைப் பகுதிகளிலும் வரத் தொடங்கியது பெரும் கவலை தருவதாய் அமைந்தது. பின்னர் நிலைமை சற்றுத் தெளிந்துள்ளது. வருகை சற்றுக் குறைந்துள்ளது. 28—2—1986 முடிய மொத்தம் 1,25,582 நபர்கள் அகதிகளாக வந்துள்ளனர். இவர்களில் 31,417 நபர்கள் ஆதரவற்ற நிலையில் உள்ளதால் அரசு முகாம்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

துவக்கக் கட்டத்தில் இவ்வகதிகள் மண்டபம், கொட்டப்பட்டு முகாம்களில் அனுமதிக்கப்பட்டனர். இந்த முகாம்கள் பொதுவாக இலங்கையிலிருந்து ஒப்பந்தத்தின்படி இந்தியாவிற்குத் திரும்பும் தாயகம் திரும்புவோர் வேறு நிலையான இடங்களுக்குச் செல்லுமுன் தற்காலிகமாக தங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டவை. ஆனால் பல்லாயிரக்கணக்கில் வந்துள்ள அகதிகள் அனைவருக்கும் இந்த முகாம்களில் உள்ள இட வசதி போதுமானதாக இல்லை என்பதால், இவர்கள் பல்வேறு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக முகாம்களுக்கு மாற்றப்பட்டனர். இவ்வாறு மொத்தம் 171 தற்காலிக முகாம்கள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

புயல் பாதுகாப்பு இல்லங்கள், திருமண மண்டபங்கள், சத்திரங்கள் மற்றும் பொதுப் பணித் துறையைச் சேர்ந்த நீர்த் தேக்கத் திட்ட பொதுப்பணித் துறைக் குடியிருப்புகள் போன்ற கட்டிடங்களில் இம்முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.



இட நெருக்கடியைச் சமாளிக்க மைய அரசு, மண்டபம் முகாமில் 200 தற்காலிக குடியிருப்புகளும், 1,200 நிலையான குடியிருப்புகளும் கட்ட நிதியுதவி அனுமதி அளித்தது. கொட்டப்பட்டு, தூத்துக்குடி ஆகிய இரண்டு இடங்களிலும் ஒவ்வொரு இடத்திலும் 100 நிரந்தரக் குடியிருப்புகள் கட்ட அனுமதி அளித்துள்ளது. இதில் மண்டபம் முகாமில் 200 தற்காலிக வீடுகளும், 500 நிரந்தர வீடுகளும் மற்றும் கொட்டப்பட்டு, தூத்துக்குடி ஆகிய இடங்களில் தலா 100 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மண்டபம் முகாமில் இரண்டாவது தவணையாக அனுமதிக்கப்பட்ட 700 வீடுகளின் கட்டுமானப் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. முகாம்களில் அகதிகளுக்குக் கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்படுகின்றன :—

1. இலவச தங்குமிடம் (இருப்பிடம், குடிநீர், மின்சாரம் உட்பட) ;

2. திங்கள் ஒன்றுக்கு வயது வந்தவர்களுக்குத் தலா ரூ. 110 மற்றும் குழந்தைகளுக்குத் தலா ரூ. 55 என்ற விகிதத்தில் செலவுத் தொகை, ரொக்கப் பட்டுவாடா ;

3. நாள் ஒன்றுக்கு வயது வந்தவர்களுக்கு தலா 400 கிராம் மற்றும் குழந்தைகளுக்கு தலா 200 கிராம் என்ற அளவில் கிலோ ஒன்றுக்கு 57 பைசா என்ற மலிவு விலையில் அரிசி ;

4. சராசரியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏறத்தாழ ரூ. 540 மதிப்பிற்கு உடைகள், சமையல் பாத்திரங்கள், பாய்கள் மற்றும் போர்வைகள் ;

5. இத்துடன் இலவச மருத்துவ உதவி, சிறார்களுக்கு இலவசக் கல்வி மற்றும் விடுமுறை கால பயிற்சி ஆகியவை.

**தாயகம் திரும்புவோருக்கு அளிக்கப்படும் நிவாரண உதவிகள்**

**விவசாய குடியமைப்புத் திட்டங்கள் :**

பர்மா மற்றும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்களில் சொந்த நிலம் இல்லாமலும் உழைக்கும் திறன் கொண்ட இரண்டு நபர்களாவது உள்ள குடும்பங்கள் விவசாயத் திட்டங்களில் குடியமர்த்தப்படுகின்றனர். இத்திட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரசு/புறம்போக்கு நிலங்கள் மூன்று ஏக்கர் வரை இலவசமாக பட்டா செய்து கொடுக்கப்படுகிறது.

விவசாயம் செய்யவும், கிணறு வெட்டவும், மாடுகள், உழவு கருவிகள், விதைகள் முதலியவை வாங்குவதற்கும் ரூ. 6,850 வரை கடன் தரப்படுகிறது. விவசாயத்திலிருந்து வருமானம் கிடைக்கும் காலம் வரையான முதல் 21 மாதங்களுக்கு குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மாதம் ஒன்றுக்கு ரூ. 40 முதல் ரூ. 150 என்ற விகிதத்தில் குடும்பப் பராமரிப்பு ரொக்கத் தொகை வழங்கப்படுகிறது. இதில் முதல் ஒன்பது மாதங்களுக்கு முழு மானியமாகவும் பிறகு உள்ள 12 மாதங்களுக்குப் பாதி தொகை மட்டும் கடனாகவும் தரப்படுகிறது. இவர்களுக்கு வீடு கட்டுவதற்கு வீட்டுக் கடனும் ஆடு, மாடு, கோழி வளர்ப்பு மற்றும் காய்கறி பயிரிடுவது போன்ற உபத் தொழில்கள் செய்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும் தேவையான கடனும் வழங்கப்படுகிறது. இத் திட்டத்திற்கு வழங்கப்படும் எல்லா கடன்களும் எட்டு ஆண்டு தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படுகின்றன. இதுவரை இத்திட்டங்களில் 2,161 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

**தனியாரிடமிருந்து விவசாய நிலம் வாங்கிக் குடியமர்த்தும் திட்டம்:**

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரில் சொந்த நிலம் இல்லாமலும் ஆனால் உழவுத் தொழிலில் ஈடுபட விரும்பும் குடும்பங்களில் ரூ. 5,000-க்கு அதிகப்படாமல் மதிப்புள்ள பொருள்கள் கொண்டு வரும் குடும்பங்களுக்கு தனியாரிடமிருந்து விவசாய நிலங்கள் வாங்கி உழவுத் தொழிலில் ஈடுபட கடன் வழங்கப்படுகிறது. ஓர் ஏக்கர் ரூ. 2,000 என்ற மதிப்பீட்டில் மூன்று ஏக்கருக்கு மேற்படாத அளவுக்கு நிலம் வாங்கக் கடன் வழங்கப்படுகிறது. விவசாயக் குடியமர்த்தும் திட்டங்களில் அமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே இவர்களுக்கும் விவசாயக் கடன் குடும்ப பராமரிப்புத் தொகை, வீட்டு வசதிக் கடன், மற்றும் உப தொழில்கள் செய்ய கடன் போன்றவை வழங்கப்படுகின்றன.



**மலைத் தோட்டத் திட்டங்கள்:**

தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியம் (டான்டீ) நீலகிரி மாவட்டத்தில் 2,413 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் ஒன்று நிறுவியுள்ளது. இதில் 4,652 தாயகம் திரும்பியோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு ரப்பர் தோட்டங்களில் 285 தாயகம் திரும்பிய குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதேபோல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறையில் உள்ள சின்கோனா தோட்டத்தில் 125 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

**தொழில் துறை மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள்:**

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் 1979-80 ஆம் ஆண்டிலிருந்து பால் பண்ணை அமைத்தல், விசை சைக்கிள் ரிக்ஷா முதலிய சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் வணிகக் கடனாக ரூ. 7,500-ம் மற்றும் வாணிபம் நடத்தும் இடத்திற்காக வழங்கப்படும் கடனும் (நகரப்புறங்களில் ரூ. 2,500-ம் கிராமப் புறங்களில் ரூ. 1,000-ம்) பெறுபவர்கள் இத்திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுபோல் இதுவரை இத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

| திட்டத்தின் பெயர். | குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| சேலம் மாவட்டம்— | |
| 1. சிக்கம்பட்டி பால் பண்ணைத் திட்டம் | 44 |
| 2. கைலாசம்பாளையம் பால் பண்ணைத் திட்டம் | 60 |
| 3. தம்மநாயக்கன்பட்டி பால் பண்ணைத் திட்டம் | 52 |

| திட்டத்தின் பெயர் | குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| **பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்—** | |
| 4. குன்றக்குடி பால் பண்ணைத் திட்டம் | 20 |
| **காமராஜர் மாவட்டம்—** | |
| 5. சாத்தூர் பால் பண்ணைத் திட்டம் | 77 |
| **தஞ்சாவூர் மாவட்டம்—** | |
| 6. மாத்தூர் பால் பண்ணைத் திட்டம் | 26 |
| **திருநெல்வேலி மாவட்டம்—** | |
| 7. கோவில்பட்டியில் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பயிற்சியும், வேலை வாய்ப்பும் | 23 |
| **சென்னை மாநகரம்—** | |
| 8. விசை எந்திரம் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா திட்டம் | 50 |

மதுரை மாவட்டத்தில் 400 குடும்பங்களையும் திருச்சி மாவட்டத்தில் கரூரில் 30 குடும்பங்களையும் விசை சைக்கிள் ரிக்ஷா திட்டத்தில் குடியமர்த்த மைய அரசு இந்த ஆண்டில் ஒப்புதல் அளித்துள்ளது.

**தொழில் துறை திட்டங்கள்:**

தமிழகத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவது, தாயகம் திரும்பியோரைக் குடியமர்த்தும் பணியில் முதன்மையானதாகும். இதுவரை பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளில் 3,864 இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர், குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதற்காக கூட்டுறவு நூற்பாலையில் குடியமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஈடாக ரூ. 20,000 என்ற விகிதத்தில் பங்கு முதலீடு செய்ய மாநில அரசுக்கு மைய அரசு நேரடிக் கடன் வழங்குகின்றது. நடப்பாண்டில் கீழ்க்கண்ட கூட்டுறவு நூற்பாலைகளிலும், தமிழ்நாடு நெசவாலைத் கழகத்திலும்



மொத்தம் 140 தாயகம் திரும்பும் குடும்பங்களை குடியமர்த்த ரூ. 28 லட்சம் நேரடிக் கடனாக மாநில அரசிற்கு வழங்க மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது:—

| தொழில் திட்டம் பெயர். | செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்தின் தொகை. | குடியமர்த்தப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | இலட்சம். | |
| ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலை, ஸ்ரீவில்லிப்புத்தூர். | 10 | 50 |
| மதுரை திருநகரில உள்ள மிசிரேயர் கூட்டுறவு நூற்பாலை | 10 | 50 |
| தமிழ்நாடு நெசவாலைக் கழகம், கோயம்புத்தூர். | 8 | 40 |
| குன்றக்குடியிலுள்ள பெரியார் முந்திரி தொழிற் கூட்டுறவுக் கழகத்தின் விரிவாக்கம் | 6 | 30 |

**வணிகக் கடன் திட்டம்:**

வணிகக் கடன் வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டு வரும் குடும்பங்களுக்குப் பெட்டிக் கடை மற்றும் சிறிய அளவில் வாணிபம் செய்ய ரூ. 7,500 கடனாக வழங்கப்படுகின்றது.

**வீட்டு வசதித் திட்டம்:**

தனி நபர் குடும்பங்கள் நீங்கலாக, முதன்மை மறுவாழ்வு உதவி பெறும் எல்லா தாயகம் திரும்பும் குடும்பங்களுக்கும் வீட்டு வசதிக்காக நகர்ப்புறங்களில் ரூ. 10,000 மற்றும் கிராமப்புறங்களில்

ரூ. 6,000 என்ற அளவில் வீட்டு வசதிக் கடன் வழங்கப்படுகிறது. இந்த வீட்டுக் கடன், வருவாய்த் துறை கோட்ட ஆட்சியாளர்களால் அல்லது தனித் துணை ஆட்சியாளர்களால் கட்டுமானப் பணியின் முன்னேற்றத்திற்கு நான்கு தவணைகளில் வழங்கப்படுகின்றது. இச்சலுகைகளை பர்மாவிலிருந்து தாயகம் திரும்புவோரும் பெற்று வருகிறார்கள்.

**1986-87 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் :**

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்கள் குடியமர்த்தப்படுவதற்காக 1986-87 ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் வரைநிலையில் உள்ளன.

**தொழிற்துறை திட்டங்கள் :**

1. குன்றக்குடி, பாரதி குளோரைடு தொழில் கூட்டுறவு சொசைட்டியின் விரிவாக்கம்.
2. இராமநாதபுரத்தில் ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலை நிறுவுதல்.

கீழ்க்கண்ட இடங்களில் பால்பண்ணைத் திட்டம் அமைத்தல்.

3. சிங்காரபாளையம்.
4. கொண்டப்ப நாய்க்கன்பட்டி.
5. ஆலங்குடி.
6. ஆண்டிப்பட்டி.
7. தசைவிளக்கு.
8. வலங்கைமான்.



கீழ்க்கண்ட இடங்களில் பட்டு உற்பத்தித் திட்டம் :

9. வடக்கு வள்ளியூர்.

இதர திட்டங்கள் :

10. அம்பர் சர்க்கா யூனிட், திருச்செங்கோடு.
11. நேபாளி ஓம் மையம், மேலப்பட்டி.
12. ஆடு வளர்ப்புப் பண்ணை, மேச்சேரி.
13. விசை பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா திட்டம், சேலம்.
14. ஆட்டோ ரிக்ஷா தொழிற் கூட்டுறவு சொசைட்டி, சேலம்.
15. தஞ்சாவூர் மாவட்டத்தில் காஸ் சிலிண்டர் விநியோக கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்.

## இணைப்பு VII.

(615-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

பல்வேறு நிறுவனங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் கடன்கள், முன் பணங்கள் குறித்த நிதி ஒதுக்கீடுகள் கோரிக்கை 59-ல் சேர்க்கப்பட்டுள்ளன. பல்வேறு நோக்கங்களுக்காக நிதி உதவி அளிப்பதற்குரிய பொது கோட்பாடு பல்வேறு துறைகளுக்கான வருவாய் செலவுக் கோரிக்கைகளை வைக்கையில் விளக்கப்பட்டுள்ளது. இம்மானியக் கோரிக்கையில் செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகளை மட்டும் இக்குறிப்பு எடுத்துக் காட்டுகிறது. பல்வேறு துறைகளும் தத்தம் பணிகளைப் பற்றிய விவரத்தையும் அளிக்கும்போது இந்த நிதி ஒதுக்கீடுகளைக் கணக்கில் கொண்டுள்ளது. துறை வாரியான செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வளர்ச்சித் துறை. | 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1985–86 திருத்த மதிப்பீடு. | 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| வேளாண்மை, சிறு பாசனம் மண் வளப் பாதுகாப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள். | 4,78.46 | 7,21.64 | 5,36.27 |
| மீனளம் .. | 6.41 | 6.65 | 8.92 |
| உணவுத் துறை .. | 30,00.00 | 55,00.00 | .. |
| கூட்டுறவு .. | 8,89.90 | 24,12.20 | 18,08.35 |
| தொழில்கள் .. | 12,46.16 | 22,22.51 | 14,21.19 |
| வீட்டுவசதி .. | 7,66.67 | 8,60.00 | 9,49.28 |
| நகர்ப்பகுதி வளர்ச்சி .. | 12,63.02 | 11,50.01 | 12,18.02 |
| மருத்துவம் .. | 0.15 | 2.65 | 0.15 |
| பொதுச் சுகாதாரம் துப்புரவு, குடிநீர் வழங்கல் | 36,15.32 | 35,37.31 | 36,90.08 |
| மின்சக்தி .. | 2,40,00.00 | 2,50,00.00 | 2,40,00.00 |
| பொதுக் கல்வி .. | 32.02 | 30.02 | 25.02 |
| தொழில் நுட்பக் கல்வி | 10.27 | 11.71 | 3.92 |
| ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்பட்ட வகுப்பினர் நலன். | 73.70 | 73.70 | 61.58 |
| மறுவாழ்வுத் திட்டங்கள் | 3,75.95 | 3,86.52 | 6,07.31 |
| சாலைகளும், பாலங்களும் | 69.75 | 1,08.75 | 1,25.01 |
| சாலைப் போக்குவரத்து-சுற்றுலா. | 0.16 | 2,90.03 | 0.18 |
| அரசுப் பணியாளர்களுக்கு வழங்கும் கடன்கள். | 45,95.59 | 54,53.40 | 49,92.60 |
| ஏனைய கடன்கள் .. | 5,97.62 | 15,87.52 | 6,75.04 |
| மொத்தம் .. | 4,10,21.15 | 4,93,54.62 | 4,01,22.92 |



2. இந்தக் கோரிக்கையின் கீழ், 1986–87 ஆம் ஆண்டிற்காகச் செய்யும் நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதி, மின்சார வாரியத்தின் மின்விசைத் திட்டங்களுக்கு அளிக்கும் நிதி உதவியாகும். இந்நோக்கத்திற்காக ரூ. 240.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக 1986–87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 36,90.08 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கியமான நிதி ஒதுக்கீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| சென்னை மாநகராட்சி— | |
| மழைநீர் வடிகால் திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம். | 250.00 |
| நகராட்சிகள்— | |
| வடிகால் திட்டங்கள் .. .. .. | 83.00 |
| குடிநீர் வழங்கு திட்டங்கள் .. .. | 1,280.10 |
| கோயம்புத்தூர் நகராட்சிக்கு சிறுவாணி குடிநீர் வழங்கு திட்டங்கள். | 0.01 |

1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| **தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம்—** | |
| வடிகால் திட்டங்களுக்கான ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க உள்ளாட்சி மன்றங்களுக்கு கடன்கள் வழங்கல். | 98.43 |
| குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த உள்ளாட்சி மன்றங்களுக்கு கடன்கள் வழங்கல். | 685.67 |
| வீராணம் திட்டம் குறித்த கடனுக்குரிய வட்டி செலுத்தக் கடன்கள். | 28.13 |
| **சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு–கழிவு நீரகற்று வாரியம்—** | |
| கழிவு நீரகற்று திட்டங்கள் .. .. | 283.82 |
| கூடுதலாக குடிநீர் வழங்கு திட்டங்கள் .. | 625.00 |
| சென்னை குடிநீர் வழங்கல் செயல் திட்டம் | 250.00 |

உள்ளாட்சி மன்றங்களுக்குக் குடிநீர் வழங்கு திட்டங்களின் செலவில் (33 1/3 சதவீதம்) மூன்றில் ஒரு பகுதிச் செலவை, குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று திட்டங்கள் குறித்து தனது கடன் உதவியாகத் தமிழ்நாடு அரசு கொடுப்பதற்கு இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்றில் இரு பகுதித் தொகை (66 2/3 சதவீதம்) இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடனுதவியாக தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டிலிருந்து பேரூராட்சிகளின் குடிநீர் வழங்கு திட்டங்களுக்குக் கிடைக்கும் நிதி உதவி, 50 சதவீதம் அரசு மானியமாகவும், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து 50 சதவீதம் கடனுதவியாகவும் கிடைக்கிறது. இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகையை மூதற்கண் மாநில அரசு கொடுத்துவிட்டு பின்னர் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வசூலித்துக் கொள்கிறது. 1986–87 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் நகராட்சி குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக ரூ. 105.83 இலட்சம் கடன் வழங்கக் கருதப்பட்டுள்ளது.





4. 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கழிவு நீரகற்று திட்டங்களுக்காக 715.26 இலட்சம் ரூபாயும், குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக 2,974.80 இலட்சம் ரூபாயும் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டங்களை தற்போது தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியமும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று வாரியமும் செயற்படுத்தி வருகின்றது. சென்னைக் குடிநீர் வழங்கு செயல் திட்டத்திற்கான 250.00 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும்.

5. தொழில் துறையில் கடன் கொடுக்க 1,421.19 இலட்சம் ரூபாய் மொத்த நிதி ஒதுக்கம் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்துறையில் முக்கிய நிதி ஒதுக்கீடுகள் பற்றிய விவரம் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம், (சிப்காட் நிறுவனம்). | 775·00 |
| தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் .. | 480.00 |

6. வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சிக்காக, 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 2,167 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்காக அரசு பணியாளர்களுக்கு ரூ. 800 இலட்சம் ரூபாயும், குறைந்த வருமானத் தொகுதியின் வீட்டுவசதித் திட்டத்திற்காக 100 இலட்சம் ரூபாயும் கடனாக வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. அரசுப் பணியாளர்களுக்குப் பல்வேறு வகை முன் பணங்கள் வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் 4,992.60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் பெரும் பகுதி, அதாவது ரூ. 2,500 இலட்சம் அரசுப் பணியாளர்களுக்குப் பண்டிகை முன்பணம் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்ட முன்பணம் வழங்க 1986–87 வரவு-செலவுத் திட்டத்தில் 1,290 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் காவலருக்கு வீடு கட்டுவதற்காக ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. மானிய உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும் வழங்கும் பல்வகை முன் பணங்களுக்காக 416.75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நகராட்சிப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1986 மே 8

9. 1986–87 ஆம் ஆண்டில் மொத்தம் 401.22 கோடி ரூபாய் வரை கடன் வழங்கப்படலாமென்று எதிர்பார்க்கையில் கடந்த ஆண்டுகளில் கொடுத்த கடன் தொகையில் 76.49 கோடி ரூபாய் வசூலாகுமென்றும் மதிப்பிடப்படுகிறது. முக்கிய நிதி ஒதுக்கீடுகளின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு.

| | 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. வேளாண்மை— | |
| மண் வளப் பாதுகாப்பு .. .. .. | 364.25 |
| 2. பால் பண்ணை— | |
| கூட்டுறவு நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்கும் கடன்கள். | 2.39 |
| 3. தொழில்கள்— | |
| தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்). .. | 775.00 |
| மாவட்டத் தொழில் மையங்கள் .. .. | 106.00 |
| தனியார் துறையில் சிறுதொழில் தொடங்குவதற்கு உதவியாகக் கடன்கள். | 10.00 |
| தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் .. | 480.00 |
| தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்) | 50.00 |
| 4. கைத்தறி— | |
| நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி | 50.00 |
| கைத்தறிகளை நவீனப்படுத்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 14.00 |
| நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 42.84 |
| கைத்தறித் துணிகளை வாங்க அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் முன்பணங்கள். | 500.00 |



1986 மே 8]

| | 1986-87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 5. கதர்— | |
| கடன் அடிப்படையில் கதர்த் துணிகளை வாங்க அரசுப் பணியாளர்களுக்கு முன்பணங்கள். | 150.00 |
| 6. வீட்டு வசதி—நகர்பகுதி வளர்ச்சி— | |
| வீடுகட்ட, அரசுப் பணியாளர்களுக்கு கடன்கள் | 1,290.00 |
| தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டங்கள். | 800.00 |
| மொத்தமாக நில எடுப்பும், நில அபிவிருத்தியும் | 150.00 |
| குடிசை மாற்றுத் திட்டங்கள்.. .. .. | 42.50 |
| துணை நகரங்கள், பிற நகர்கள் ஏற்படுத்த, சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திற்குக் கடன்கள். | 175.00 |
| கோயம்பேடு அங்காடித் தொகுதி அமைக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திற்குக் கடன்கள். | 300.00 |
| கிராம வீட்டு வசதிக்காகக் கடன்கள் .. | 300.00 |
| 7. மின் சக்தி— | |
| தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஏனைய கடன்கள். | 20,000.00 |
| தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழிவகை முன் பணங்கள். | 4,000.00 |
| 8. கல்வி, கலை, பண்பாடு— | |
| தேசிய கடன்-படிப்புதவித் திட்டங்கள் .. | 25.00 |
| நிதியுதவி பெறும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்குக் கடன்கள். | 0.01 |
| வீடுகட்ட முன்பணம் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்குக் கடன்கள். | 15.00 |

[1986 மே 8]

9. ஆதி திராவிடர் நலனும், பிற்பட்ட வகுப்பினர் நலனும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன்—

| | |
|---|---|
| சிறுதொழில் நடத்த வணிகக் கடன்கள் .. | 3.50 |
| தொழில் படிப்பு பயில அளிக்கப்படும் கடன்கள் | 50.00 |

10. மறுவாழ்வுத் திட்டங்கள்—

| | |
|---|---|
| பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர் வீட்டு வசதிக் கடன்கள். | 2.50 |

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோர்—

| | |
|---|---|
| தொழில் கடன்கள் .. .. .. .. | 200.00 |
| வீட்டு வசதிக் கடன்கள் .. .. .. | 400.00 |

11. உள்ளாட்சி மன்றங்கள் (குடிநீர் வழங்கல்-வடிகால் திட்டங்கள் அல்லாத ஏனைய திட்டங்கள்), நகராட்சிகள்—

| | |
|---|---|
| நகராட்சிச் சாலைகள் .. .. .. | 30.00 |
| சாலைகள் போடுதலும், பாலங்கள் கட்டுதலும் | 25.00 |

12. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பல்வகைக் கடன்கள்—

| | |
|---|---|
| கிடங்குகள் கட்ட, கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் .. .. .. .. | 2.72 |
| வேளாண்மைக் கடன் சமன் நிதிக்கு மேலும் நிதி சேர்க்க தமிழ்நாடு மாநில நிலவள வங்கிக்கு கடன்கள்— .. .. .. | 0.01 |

13. அரசுப் பணியாளர்களுக்கு வழங்கும் கடன்கள்—

| | |
|---|---|
| மோட்டார் வண்டிகள் வாங்கக் கடன்கள் .. | 125.00 |
| ஏனைய வண்டிகள் வாங்கக் கடன்கள் .. | 130.00 |
| பண்டிகை முன்பணங்கள் .. .. .. | 2,500.00 |
| திருமணக் கடன்கள் .. .. .. .. | 85.00 |
| கல்லூரிகள் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் உயர் கல்வி பயிலக் கடன்கள். | 68.00 |
| வெப்ப (கம்பளி) உடைகளை வாங்கக் கடன்கள் | 40.00 |

14. ஏனைய கடன்கள்—

| | |
|---|---|
| தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கடன்கள். | 0.01 |

136488
211,31 N86
N86.26

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-12.

---

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.